

ராகவேந்திர சுவாமி சரித்திரம்



ஸ்ரீ குரு இராகவேந்திர சரித்திரம்

(மந்திராலயத்தில் வாழும் முனிவர்)



ஆசிரியர் :

ஸ்ரீ குருராவ் கலம்தானி.

தமிழாக்கம் :- அறிவு கமலாபுரம்.

ஏ. எம். கறடி & சன்ஸ்

பப்ளிஷர்ஸ் அண்டு புக்செல்லர்ஸ்

ஸ்டேஷன் ரோடு, ஹுப்ளி (கர்நாடகம்)

Printed at :

Sri Selvanayagi Printing Works
4, G. A. Road, 6th Lane, Madras-600 021.

Price Rs. 6-00

Publishers : A: M. Karadi & Sons
Station Road, Hubli

பொருளடக்கம்

முதற் பதிப்பு—1981

பிற்சேர்க்கை :

தொடக்கவுரை

சமயங்கள் பலவும், முக்தி பெற எளிய வழிகளை காட்டும் வேதங்கள், ஷம்ருதங்கள், ஷிருதங்கள் தோன்றிய இந்த பாரத புண்ணிய பூமியில் கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதை, தபதி, சிந்து, காவேரி போன்ற புண்ணிய நதிகள் பல ஓடுகின்றன. தியானம் செய்தலேயே தொழிலாகக் கொண்ட முக்காலும் அறியவல்ல சக்தி படைத்த ரிஷிகள் பலர் வாழ்ந்தனர். மக்கள் நல்வழி நடந்து உயர்வடையும் பொருட்டு ஸ்ரீ ஹரிஹரர் போன்ற பல கடவுள்களும், தேவதைகளும் அவதாரம் எடுத்த இடம் இப்பாரதம்.

இப்போது நடக்கின்ற கலியுகத்தில் ஸ்ரீ ஹரி அவதாரம் எடுக்கப் போவதில்லை. அவர் மற்ற தெய்வங்களை இவ்வுலகிற்கு அனுப்பி மக்கள் நடவுள் மீது கொண்டுள்ள பயத்தையும், அடிமை தலைமையும் நீக்கி அருளுவார். அப்படி அனுப்பியவர்களுள் ஒருவர் ஸ்ரீ வாயு பகவான் அவர். இவர் பாரதம் முழுதும், என்றும் நிலைத்து நிற்கும்படியாக ஸ்ரீ ஹரியின் வல்லமையை எடுத்துரைத்த ஸ்ரீ மாதவாச்சாரியார் ஆவார். ஸ்ரீ மாதவருக்குப் பிறகு வந்த பெருமுனிவர்களில் மந்திராலயத்தை சேர்ந்த ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் ஒருவர். இவர் சத்திய லோகத்து சங்கு கர்ணனின் அவதாரமாகும். ஸ்ரீ பிரம்மாவின் சாபத்தினால் கிருதயுக யுகத்தில் ஆட்சிபுரிந்த இரணிய கசிபுவின் மகனாக ஸ்ரீ பிரகலாத ராஜாவாக பிறப்பெடுத்தார். அந்த கிருதயுக பிரகலாதன் கலியுகத்தில் ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளாக பிறவி யெடுத்துள்ளார்.

ஸ்ரீ பிரகலாதனுடைய காலம் முதல் ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் காலம் வரையில் கர்மதேவதையான சங்கு

சர்ணன் அனிஷ்ட புண்ணியங்களை அளவின்றி குவி துள்ளார். இப்புண்ணியங்கள் முக்தி பெற பலனளிக்காது உலகியல் சம்பந்தப்பட்ட, உடல் இன்பங்களுக்கு மட்டுமே பயனளிக்க வல்ல தாகையால் அவைகளை அவரை நாடிவரு பக்தர்களுக்கும், சீடர்களுக்கும் அளித்தபடி துங்கபத்ர நதிக்கரையில் ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் மடம் என் அழைக்கப்படுகிற மந்திராலயத்தில் வாழ்ந்து கொண் ருக்கிறார்.

ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் சாதிசமயங்களுக்கு அ பாற்பட்ட கருணை உள்ளம் கொண்டவர். அவரை யா சென்று வழிபடுகிறார்களோ அவர்களுக்கு, அவர்கள் எண்ணு கிற நடக்க முடியாத காரியங்கள் கூட நடைபெறும்ப அருளுவார். ஏழைகளுக்கு செல்வம், வேலையில்லா தோருக்கு வேலை, விரும்பியபடி திருமணம் ஆகியன அவை எண்ணி வழிபடுபவர்களுக்கு நிச்சயம் கிடைக்கும். இ வுலகில் யாராலும் குணப்படுத்த இயலாத எந்த நோயை யும் குணப்படுத்த வல்லவரும், ஸ்ரீ ஹரியையும், முக்தி யையும் அறிந்து கொள்ள வழிகாட்டுபவரும் அவ ஒருவரே !

இவர் முற்றும் அறிந்த முக்காலும் தெரிந்த சர்வஞான பாவமற்றவர்; தூய்மையானவர்; சாந்தமானவர் மன்னிக் முடியாத பெருங் குற்றங்களையும் மன்னிக்கவல்லவர் பக்தர்களின் பாதுகாவலர்; நான்கு புருஷோத்திரங்களையு அளிக்க வல்லவர்; எல்லா நற் குணங்களுக்கும் இருப்பிட மானவர். ஸ்ரீ தீர்த்தாச்சாரியாரின் துவைத மத சித்தாந்த களை பிரசித்தி பெறச் செய்த சாத்விகக் கடவுள்! ஸ்ரீ ஹரி வாயுவின் சிறந்த பக்தசீடர். அவரிடம் மிகுந்த பற்று கொண்டதன் காரணமாக ஸ்ரீ வாயு அவர் உள்ளத்திலும் வெளியிலும் சூழ்ந்து நிரம்பியுள்ளார். ஸ்ரீ ஹரியும் அவரு டைய எல்லா பரிவாரங்களுடன் பிருந்தாவனத்தில் வந்து தங்கியுள்ளார். என்று ஸ்ரீ வாயு தாஸர் கூறுகிறார்.

அப்படிப்பட்ட பெரும் சர்வவல்லமை பொருந்திய முனிவருடைய வாழ்க்கையையும், மகிமையையும் உலக சேற்றிலே நெளியும் இந்த அற்ப புழுவாகிய என்னால் எப்படி சிறப்பாக எழுத முடியும்? இருந்தாலும் அவருடைய சுப தரிசனம் காணும் பொருட்டு அவர் செய்த அற்புதங்களையும், அவருடைய வாழ்க்கையையும் எனக்கு தெரிந்தவரையில் அவருடைய அருளால் எழுதியுள்ளேன். பக்தர்கள் படித்து பயனடைவார்களாக.

பம்பாய்

ஜனவரி 1972. குருராவ் கலம்தானி.

முன்னுரை

சத்திய லோகத்து சங்கு கர்ணன் என்பவனே கலியுகத்தில் மந்திரலாயத்து ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகளாக அவதரித்தவர்; வேறு யாருமல்லர் என்பது நரசிம்ம புராணத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இந்த சங்கு,கர்ணன் சத்தியலோகத்து பிரம்ம கடவுளின் ஏவளால் ஆவான் ஒரு சமயம் இவன் பிரம்மக் கடவுளுக்கு செய்ய வேண்டிய பணியில் எதேச்சையாக சிறிது சோம்பல் காட்டினன். எனவே பிரம்மன் மிகுந்த கோபம் அடைந்தவராக சங்கு கர்ணனை ஓர் நாத்திகவாதியின் மகனாக பிறக்கும்படி சாப மிட்டுவிட்டார்.

அந்த சமயம் கிருதயுகம் நடந்து கொண்டிருந்தது. பெருங் கொடுங்கோலனாக இரணிய கசிபு என்பவன் இவ்வுலகம் முழுவதையும் தன் வசப்படுத்திக் கொண்டு. "தானே கடவுளுக்கு மேலானவன்; தன்னையன்றி வேறு தெய்வங்களை வழிபடலாகாது," என்று கடுமையான ஆணையுடன் ஆண்டு கொண்டிருந்தான்.

பிரம்மனுல் சபிக்கப்பட்ட சங்குகர்ணன் பூமியில் பிரகலாதன் என்ற பெயரில் இரணிய கசிபுவின் முதல் மகனுகப் பிறந்தான். இந்த பிரகலாதன் ஓர் நாத்திக குணம் கொண்ட தந்தைக்கு மகனுகப் பிறந்தாலும் தன்னளவில் பிறப்பிலேயே மகாவிஷ்ணுவின் உபாசகனுக இருந்தான். சத்திய யோகத்தில் பிரம்ம தேவனிடம் சேவகம செய்து கொண்டிருந்த காலத்தில் அவன் பெற்ற அளவிலா சக்தி காரணமாக மூர்க்க குணம் நிறைந்த தந்தையை அவனுல் சமாளிக்க முடிந்தது.

அவன் பலமுறை துணிவுடன் மகாவிஷ்ணுவின் மேன்மையையும் வலிமையையும் இரனிய கசிபுவுக்கு எடுத்துக் கூறினன் ஆயினும் அதனை ஒப்பாத இரணியனுக்கு மகா

விஷ்ணு தன் வலிமையை உணர்த்தும் பொருட்டு அவ்வரண் மனையிலிருந்த ஒரு பெருந்தூணை பிளந்து கொண்டு நரசிம்ம வடிவில் வெளிப்பட்டார்.

இதனை கண்ட இரணிய கசிபு உடனே நரசிம்மனை தாக்கினன். ஆனால் இரணிய கசிபு நரசிம்மனால் கொல்லப் பட்டான். பின் நரசிம்மன் இரணிய கசிபுவின் அரியா சனத்தில் அமர்ந்து பற்பல பாவ செயல்களால் கலங்கப்பட்ட அந்த அரியாசனத்தை புனிதப்படுத்தினர். பின்னர் பிரக லாதனை அவ்வரியாசனத்தில் அமர்த்தி நாட்டின் உரிமை மிகுந்த மன்னனாக்கி பல்லாண்டு காலம் வாழ்கவென ஆசி யருளினர்.

பிரகலாதன் மிகுந்த பக்திமானாகையால் ஸ்ரீ நரசிம்மனின் ஆணைப்படி நாட்டில் பல்லாண்டுகாலம் நல்லாட்சி நடத்தி வந்தான். அவனுடைய ஆட்சிகாலத்தில் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் மேலும் மேலும் நன்மைகளையே செய்து சாத் வீகம், அனிஷ்டம் என்ற இருவகையான புண்ணியங்களையும் மலைபோல குவித்துக் கொண்டான். ஆனால் அநிஷ்ட புண்ணி யங்களை இவ்வுலக இன்பங்களுக்காக செலவிட்டு தீர்த்தா லன்றி முக்தி பெருதல் இயலாது என்பது விதி. காரணம் இந்த அனுஷ்ட புண்ணியம் என்பது இது வாழ்க்கை (இவ்வுலகம்)யின் அற்ப சந்தோஷங்களுக்காக மட்டுமே பயன்படுமே யல்லாமல் முக்தி பெற பயன்படாது

ஆகவே, பிரகலாதன் தன்னுடைய அனுஷ்ட புண்ணி யத்தை கரைத்துக் கொள்வதற்காக துவாபர யுகத்தில் பாலிகன் என்ற அரசனாக மீண்டும் பூமியில் அவதரித்தான். இந்த பாலிக அரசன் ஸ்ரீ மன் நாராயணனின் தீவிர பக்த னாகவும், தீவிர வைஷ்ணவனாகவும் வாழ்ந்தான். அவனுடைய வாழ்நாளிலும், முன் பிறவியில் குவிந்த அனிஷ்ட புண்ணி யங்கள் தீர்வதற்கு பதிலாக மேலும் மேலும் குவிந்தது. அத்துடன் சாத்வீக புண்ணியமும் சேரலாயிற்று. பின்னொரு காலத்தில் குருஷேத்திர போரின் போது பாலிக மன்னன்

கௌரவர்களை சார்ந்திருந்த காரணத்தினால் பீமசேனனுல் கொல்லப்பட்டான். (ஸ்ரீ பாரத தபரய நிர்ணய)

பிரகலாதன் தன்னுடைய எந்த அனுஷ்ட புண்ணியத்தை களைத்துக் கொள்வதற்காக பாலிகனாகப் பிறந்தானோ அந்த புண்ணியத்தை அப்போதும் தீர்த்துக் கொள்ள முடியாமல் மேலும் குவித்துக் கொண்டதால் முக்தி கிட்டவில்லை. எனவே மீண்டும் மண்ணில் பிறக்க வேண்டியதன் அவசியமாயிற்று. அதன்படி கலியுகம் ஏப்பிரல் 22ஆம் தேதி கி. பி. 1447 ஆம் ஆண்டு பாலிகன் விஜய நகர சாம்ராஜியத்தில் வைஷியராயரின் குருக்களாக அவதரித்தார் ஸ்ரீ வைஷியாராயரின் பிறப்பு வளர்ப்பு பற்றி கீழ்கண்டவாறு குறிப்பிடப் படுகின்றன.

அப்பூர் என்ற கிராமத்தின் அருகேயிருந்த மற்றொரு சிற்றூரில் பிரமான்ய தீர்த்தர் என்ற மாபெரும் வைஷ்ணவ சன்னியாசி வாழ்ந்து வந்தார் இராமசாரியார் என்பவருக்கு பல ஆண்டுகளுக்குப் பின்னும் மகப்பேறு கிடைக்காமற் போகவே அவர் பிரம்மான்ய தீர்த்தரை அணுகி பிள்ளை பேறு கிட்டும்படி அருளிச் செய்யுமாறு வேண்டிக் கொண்டார். பிரம்மானிய தீர்த்தரும் ஆண்மகவு பிறக்க அருளுவதாகவும் ஆனால் அக் குழந்தையை உடனே அவருடைய மடத்திற்கு கொண்டுவந்து கொடுத்துவிட வேண்டும் என்றும் நிபந்தனை விதித்தார். இராமாச்சாரும் அந் நிபந்தனைக்கு இணங்கவே அவ்வாண்டின் இறுதியிலேயே முனிவரின் ஆசிபடி இராமச்சாரியாரின் மனைவியார் ஓர் அழகிய ஆண்மகவை ஈன்றெடுத்தார். உடனே அக்குழந்தை மடத்திற்கு கொண்டு வரப் பட்டு வளர்க்கப்பட்டது.

பிரம்மானந்த தீர்த்தர் அக்குழந்தையை வளர்க்கும் பொருப்பை தாமே மேற்கொண்டு, குழந்தைக்கு எத்திராஜன் என்ற பெயரையும் சூட்டினார். அக்குழந்தைக்கு ஆறு வயதானபோது உபநயனம் செய்து வைத்து, பின் எட்டு வயதான போது சந்நியாச ஆசிரமத்தை வழங்கி வியாசராயர்

'என்ற பட்டப்பெயரையும் தந்நார். பிரமான்ய தீர்த்தர் தானே வியாசராயருக்கு த்வைத்த தத்துவத்தை போதித்தார். பின்னர் வியாசராயருக்கு மேலும் கல்வி போதிக்கும் பொருட்டு மூல பகலில் வாழ்ந்துவந்த ஸ்ரீ பாத ராஜரிடம் அனுப்பி வைத்தார்.

சங்கு கர்ணனின் மறுபிறப்பு, ஓர் ஒப்பற்ற தந்தையின் பெற்றகரிய மகன், மாபெரும் முனிவராகிய பிரமான்ய தீர்த்தரால் வளர்த்து, ஸ்ரீ பாத ராஜரால் கற்பிக்கப்பட்ட மாணவச் செல்வன், என்ற இத்தகைய பல தகுதிகளை பெற்ற வியாசராயர் த்வைத்த தத்துவத்தில் மிகப் பெரிய மேதாவியாகவும், தலை சிறந்த தவ முனிவனுகவும், ஒப்பற்ற தவிருனுகவும் திகழ்ந்து விளங்கினுன்.

ஸ்ரீ பிரமான்ய தீர்த்தருக்குப் பிறகு வியாசராயர் கி. பி. 1468ஆம் ஆண்டு மடத்தின் தலைமை பதவியையும் பொருப்பையும் ஏற்றுக்கொண்டு, இந்தியா முழுவதும் பயணம் மேற்கொண்டார். அவர் தாம் சென்ற இடங்களிலெல்லாம் த்வைத்த தத்துவங்களை தெளிவாக விளக்கிக் கூறி பலரை த்வைத்த மதத்திற்கு மாற்றினுர். இதன் விளைவாக அவருக்கு சென்ற இடங்களிலெல்லாம் பற்பல பரிசு பொருட்களும், நிலபுலன்களும் பட்டங்களும் பெருமைகளும் மிகுதியாக சேர்ந்தன. அவருடைய காலத்தில்தான் அம்மடம், 'வியசராய மடம்' என்ற பெயரில் பெருமை பெறலாயிற்று.

அவர் வாழ்ந்த காலத்தில் தான் திருப்பதி ஸ்ரீ சீனுவாச பெருமானின் வழிபாட்டு முறைகளில் ஒழுங்கையும் சட்டதிட்டங்களையும் ஏற்படுத்தினுர். அவர் தீர்த்த யாத்திரையின் போது எங்கெங்கு சென்ருரோ அங்கெங்கெல்லாம் ஸ்ரீ மாருதியின் விஹ்ரகத்தை நிறுவினுர். ஸ்ரீ வியாசராயர் இவ்வாறு இந்தியாவின் பற்பல இடங்களிலும் சுமார் ஏழு நூற்று முப்பத்தி இரண்டு மாருதி விஹ்ரகங்களை பிரதிஷ்டை செய்திருக்கிருர். என்று சரித்திரம் கூறுகின்றது.

விஜய நகர சாம்ராச்சியத்தின் பேரரசாக விளங்கிய ஸ்ரீ கிருஷ்ண தேவராயருடைய அரச குருவாக அவர் இருந்த காரணத்தால் நாட்டின் அரசியலாட்சி விஷயங்களில் அவருடைய கை சற்று ஓங்கியதாக விளங்கியது. வைஷ்ணவ மதத்தின் பெருந்துறவியாக அவர் இருந்த போதிலும், விஜய நகர சாம்ராச்சியத்தின் காப்பாளராகவும் அவர் இறுதிவரை இருந்தார். தமது தொன்னூற்றிரண்டாவது வயதில் ஹம்பிக்கு அருகில் துங்கபத்திரை நதிக்கரையில் நவ பிருந்தாவனத்தில் அவர் அமைதியடைந்தார்.

அவர் தம் வாழ்வில் த்வைத்த தத்துவம் பற்றி ஏறக்குறைய பன்னிரண்டு நூல்கள் எழுதி ஸ்ரீ மத்துவரின் கருத்துக்களை அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தியுள்ளார்.

கன்னட கவிஞர்களின் மூலம் கன்னடமொழியில் தெய்வீக பாடல்களை இயற்றி பாடச் செய்தது அவருடைய பல செயல்களில் முக்கியமான ஒன்றுகும். ஸ்ரீ வியாசராயரே பிறவிக் கவிஞராகையால் கன்னட மொழியில் ஸ்ரீ ஹரி, வாயு போன்ற பற்பல கடவுள்களை பற்றி பக்திப் பாடல்களை இயற்றி பூஜைக்குப் பிறகு அவற்றை பாடியும் வந்தார். ஸ்ரீ வதிரஜர் (கன்னடக் கவிஞர் என்றும் இவரை அழைப்பர்) போன்ற பல ஹரிதாசருடைய பெருமக்களையும், மற்ற இறைவனின் அடியார்க்களையும் சந்தித்து அழைத்து „ஓர் 'தசாகூட்டம்' என்ற இறை அடியார்களின் இயக்கத்தையே ஏற்படுத்தினர்

ஸ்ரீ வியாசராயர் ச்ன்னியாசத்தை மேற்கொண்டு, எண்பத்தி ஐந்து வயது வரை இடை விடாமல் தொடர்ச்சியாக ஸ்ரீ ராமரை வழிபட்டும் அவருக்கு மனதிருப்தி ஏற்படவில்லை. அவர் தம் இறுதி காலத்தில் தாம் மீண்டும் இவ்வுலகிலேயே பிறந்து ஸ்ரீ மூலராமரை தம் மனம் நிறைய வாழ்த்தி வழிபட்டு திருப்திபெற விரும்புவதாகக் கூறினர். எனவே அவர் ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் என்ற பெயரால் கி. பி. 1598ஆம் ஆண்டு இம்மண்ணில் அவதரித்து இவ்

வுலகம் என்றுமே கண்டிராத பெரும் வாழும் முனிவராக (The Greatest Living Saint) உலகம் முழுவதும் அறிந்தவ ராக திகழ்ந்து கொண்டிருக்கிறார்.

கிருத யுகத்தில் இம்மண்ணில் அவதரித்த சங்கு கர்ணன் கலியுகம் வரை நான்கு யுகங்களாக இங்கேயே கழிக்க நேர்ந்தது. தற்போது அவரே மந்திராலயத்தில் ஸ்ரீ ராக வேந்திர சுவாமி என்ற பெயரில் அமர்ந்து கொண்டு தம்மு டைய அவதார காலங்களில் சேகரித்த அனுஷ்ட புண்ணி யத்தை கரைத்துக் கொண்டிருக்கின்றார். அவரே கூறியுள்ள படி அவர் இப்பூமியில் இந்த பிருந்தாவனத்தில் எழுநூறு ஆண்டுகள் வாழ்ந்திருந்து தாம் சேகரித்த அனுஷ்ட புண்ணி யங்களை யெல்லாம் தம்மை வழிபடுபவர்களுக் கெல்லாம் வழங்கி தீர்த்துவிட்டு இவ்வுலக துயரங்களினின்று விடுபட்டு பின்னர் வீடுபேற்றை அடைவார்.

ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் உயிருடன் பிருந்தா வனத்தில் அமர்ந்து முன்னூறு ஆண்டுகள் கழிந்துவிட்டன. மக்கள் அவ்வரை வழிபட்டு பயன் பெறுவதற்காக இன்னும் நானூறு ஆண்டுகள் நம்முன் காத்துக்கிடக்கின்றன.

எனவே, பிருந்தாவனம் சென்று அவரை வழிபட்டு தத்தம் சக்திக் கேற்ப அவருக்கு சேவைகள் செய்து அவரு டைய அருளாசிகளை பெற்று உய்வது இறைவழிபாட்டில் நம்பிக்கை கொண்ட எவ்வொருவருடைய கடமையாகும்.

2. பிறப்பு

கி. பி. 16ஆம் நூற்றாண்டிற்கு முன் ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின் பூர்விகத்தைப் பற்றி சரியாக புலப்படவில்லை ஆனால் அவருடைய குடும்பம் தோன்றிய இடம் கர்நாடக மாநிலம் என்பதும், வைஷ்ணவ பிராமண குலத்தை சேர்ந்த குடும்பம் என்பதும் தெளிவு.

பதினாறும் நூற்றாண்டின் துவக்கத்தில் (1519—1580 கி. பி.) வேதங்களையும் சாஸ்திரங்களையும் நன்கு கற்று தத்துவத்தில் ஆழ்ந்த தேர்ச்சி பெற்ற கிருஷ்ண பட்டர் என்ற பிராமண பெரியவர் வாழ்ந்து வந்தார். இவர் சிறந்த இசை மேதையும் ஆவார். வீணை மீட்டுவதில் ஈடு இணையற்ற வர். அதோடு விஜய நகர பேரரசின் ஆஸ்தான கவியாகவும் அப் பேரரசை நிறுவிய பேரரசர் கிருஷ்ண தேவராயரின் வீணை ஆசிரியராகவும் விளங்கினார்.

அவருக்குப் பிறகு அவருடைய மகனான கனக சால பட்டரும் தந்தையை போலவே இலக்கிய கவிஞராகவும், அரசவை புலவராகவும் இருந்தார். கனக சால பட்டரும் வேத வேதாந்தங்களிலும், வீணை வாசிப்பதிலும் கைதேர்ந்த வராக விளங்கினார்.

இந்த இனிமையான வாழ்க்கையின் பொழுது, அவருக்கு ஓர் அழகான ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு திம்மண்ணபட்டர் என்று பெயரிட்டனர். திம்மண்ண பட்டரும் த்வைத சித்தாந்தத்திலும், வீணை வாசிப்பதி லும், நன்கு கற்று தேர்ந்தான். இறைவனருளால் இனிமை நிறைந்த மென்மையான பாடல் பாடுதற்கு ஏற்ற குரல் வன்மையையும் பெற்றிருந்தான்

திம்மண்ண பட்டர் திருமண வயதை அடைந்த போது அவருடைய குலத்தை சேர்ந்த கோப்பம்மா என்ற அழகான

பெண்ணை மணந்துகொண்டார். சில ஆண்டுகளில் கோப் பம்மா போதிய இடைவெளிக்குப் பிறகு குருராஜ் என்ற ஆண் குழந்தையையும், வெங்கம்மா என்ற பெண் குழந்தை யையும் ஈன்றெடுத்தாள். துரதிஷ்டவசவாக முன்னோர் களைபோல் திம்மண்ண பட்டருக்கு அரசவையில் எந்தவித பதவியும் கிடைக்கவில்லை.

ஏனென்றால், அந்த சமயத்தில் இரக்ல தங்கடி என்ற முகமதியர்களுக்கும் இந்துக்களுக்கும் நடந்த பெரும் போரே காரணமாகும். அப் போரில் இந்துக்கள் மிகக் கேவலமாகத் தாக்கப்பட்டு தோற்கடிக்கப் பட்டனர் முகமதியர்கள் இரவு பகலாக தொடர்ந்து ஆறுமாதங்கள் விஜய நகரை கொள்ளை யிட்டும், விலையுயர்ந்த அழகிய மாடமாளிகைகளையும், கோயில்களையும் தீயிட்டுக் கொளுத்தியும் வந்தனர். அப் போது புல மனிதர்களை இரக்க மின்றி கொலைசெய்தனர். செல்வங்களை கொள்ளையிட்டுச் சென்றனர். கண்ணில் பட்ட பெண்களை யெல்லாம், ஏன் வயதுவரா பெண்களையும், வய தான கிழவிகளையும்கூட கற்பழித்து சித்திரவதை படுத்தினர்.

எனவே இந்துக்கள் அவர்களை காத்துக் கொள்வதற்காக மனைவி மக்களுடன் கிடைத்த செல்வங்களில் எவ்வளவு எடுத்துச் செல்லமுடியுமோ அவ்வளவையும் எடுத்துக் கொண்டு விஜய நகரை விட்டே வெளியேறினர். திம்மண்ண பட்டரும் மனைவி கோப்பம்மாவையும், குழந்தைகள் வெங் கம்மாவையும் குருராஜையும் அழைத்துக்கொண்டு தந்தை, தாத்தா ஆகியோர்களால் சேர்த்து வைக்கப்பட்ட முத் துக்கள், இரத்தினங்கள், தங்கப், விலையுயர்ந்த ஆடைகள் முதலியவைகளை எடுத்துக்கொண்டு தென்திசை சென்று இந்துக்களின் நாடாகிய தஞ்சையை அடைந்தனர்.

தஞ்சை நாட்டில் கஞ்சிபூருக்கு அருகில் புவனகிரி என்ற அழகான நல்ல கிராமம் ஒன்று உள்ளது. அங்கே குடும்பத் தோடு திம்மண்ணபட்டர் குடியேறினர். அங்கே அவர்

ற்கு அமைதியும் பாதுகாப்பும் கிடைத்தாலும் வருமானத
ந வழியில்லாமல் இருந்தது, விஜய நகரிலிருந்து கொண்டு
இருந்த பொருள்களை தினமும் கொஞ்சம் கொஞ்சமாக
வு செய்து குடும்பத்தை நடத்த வேண்டியதாயிற்று.
ல் எவ்வளவு காலத்திற்கு இப்படியே செலவு செய்து
ண்டிருக்க முடியும்? இப்படியாக பத்து ஆண்டுகள்
தன. செலவுகள் அதிகமாயிருந்தனவே தவிர வரு
க்கு வழியில்லாதிருந்தது.

மகள் வெங்கம்மா திருமண பருவத்தை எய்தியபோது
ண்ணுபட்டர் நல்ல பொருத்தமான மணமகனை தேர்ந்
த்து திருமணமும் செய்து வைத்தார். இதனாலும்
 பொருட் செலவு ஏற்பட்டது. எப்படியோ மகளுக்கு
ய வேண்டிய கடமை முடிந்தது. அவளும் கணவனு
 புக்ககம் சென்று விட்டாள். இப்போது குடும்பத்தில்
ாஜ் மட்டுமே தனித்திருந்தான்.

நாட்கள் நகர நகர வறுமையும் மெல்ல மெல்ல
கள் குடும்பத்தை கவ்விக்கொண்டது. விஜய நகரத்தி
து கொண்டு வந்திருந்த அனைத்து செல்வங்களும்
து விட்டன ஒவ்வொரு நாளையும் கழிப்பதென்பது
ம் பிரச்சனையாகிவிட்டது திம்மண்ணு பட்டருக்கு.
ண்ணு பட்டர் வீணை வாசிப்பதில் திறமை மிக்கவராத
சில மாணவர்களை தேடிப்பிடித்து வீணை ஆசிரியராக
 செய்தாலும், அதனால் கிடைத்த வருமானம் குடும்பம்
 போதுமானதாக இல்லை.

ந்த சமயத்தில், குருராஜ் வளர்ந்து பெரியவனானதும்
னம் செய்து வைத்தார். பின் கல்வி கற்கும்
ட்டு வீட்டை விட்டு குருகுலம் செல்ல வேண்டியதா
 இதனால் வீட்டில் குழந்தைகளே இல்லாமல் வெறிச்
கிடந்தது. குருராஜுக்குப் பிறகு குழந்தை ஏதும்
இல்லை. திம்மண்ணு பட்டருக்கு. எனவே கணவன்

பெண்ணை மணந்துகொண்டார். சில ஆண்டுகளில் கோப்பம்மா போதிய இடைவெளிக்குப் பிறகு குருராஜ் என்ற ஆண் குழந்தையையும், வெங்கம்மா என்ற பெண் குழந்தையையும் ஈன்றெடுத்தாள். துரதிஷ்டவசவாக முன்னோர்களைபோல் திம்மண்ணு பட்டருக்கு அரசவையில் எந்தவித பதவியும் கிடைக்கவில்லை.

ஏனென்றால், அந்த சமயத்தில் இரக்ல தங்கடி என்ற முகமதியர்களுக்கும் இந்துக்களுக்கும் நடந்த பெரும் போரே காரணமாகும். அப் போரில் இந்துக்கள் மிகக் கேவலமாகத் தாக்கப்பட்டு தோற்கடிக்கப் பட்டனர் முகமதியர்கள் இரவு பகலாக தொடர்ந்து ஆறுமாதங்கள் விஜய நகரை கொள்ளையிட்டும், விலையுயர்ந்த அழகிய மாடமாளிகைகளையும், கோயில்களையும் தீயிட்டுக் கொளுத்தியும் வந்தனர். அப்போது பல மனிதர்களை இரக்க மின்றி கொலைசெய்தனர். செல்வங்களை கொள்ளையிட்டுச் சென்றனர். கண்ணில் பட்ட பெண்களை யெல்லாம், ஏன் வயதுவரா பெண்களையும், வயதான கிழவிகளையும்கூட கற்பழித்து சித்திரவதை படுத்தினர்.

எனவே இந்துக்கள் அவர்களை காத்துக் கொள்வதற்காக மனைவி மக்களுடன் கிடைத்த செல்வங்களில் எவ்வளவு எடுத்துச் செல்லமுடியுமோ அவ்வளவையும் எடுத்துக் கொண்டு விஜய நகரை விட்டே வெளியேறினர். திம்மண்ணு பட்டரும் மனைவி கோப்பம்மாவையும், குழந்தைகள் வெங்கம்மாவையும் குருராஜையும் அழைத்துக்கொண்டு தந்தை, தாத்தா ஆகியோர்களால் சேர்த்து வைக்கப்பட்ட முத்துக்கள், இரத்தினங்கள், தங்கம், விலையுயர்ந்த ஆடைகள் முதலியவைகளை எடுத்துக்கொண்டு தென்திசை சென்று இந்துக்களின் நாடாகிய தஞ்சையை அடைந்தனர்.

தஞ்சை நாட்டில் கஞ்சிபூருக்கு அருகில் புவனகிரி என்ற அழகான நல்ல கிராமம் ஒன்று உள்ளது. அங்கே குடும்பத்தோடு திம்மண்ணுபட்டர் குடியேறினர். அங்கே அவர்

வினுக்கு அமைதியும் பாதுகாப்பும் கிடைத்தாலும் வருமானத் திற்கு வழியில்லாமல் இருந்தது, விஜய நகரிலிருந்து கொண்டு வந்திருந்த பொருள்களை தினமும் கொஞ்சம் கொஞ்சமாக செலவு செய்து குடும்பத்தை நடத்த வேண்டியதாயிற்று. ஆனால் எவ்வளவு காலத்திற்கு இப்படியே செலவு செய்து கொண்டிருக்க முடியும்? இப்படியாக பத்து ஆண்டுகள் கழிந்தன. செலவுகள் அதிகமாயிருந்தனவே தவிர வரு வாய்க்கு வழியில்லாதிருந்தது.

மகள் வெங்கம்மா திருமண பருவத்தை எய்தியபோது திம்மண்ணபட்டர் நல்ல பொருத்தமான மணமகனை தேர்ந் தெடுத்து திருமணமும் செய்து வைத்தார். இதனாலும் அதிக பொருட் செலவு ஏற்பட்டது. எப்படியோ மகளுக்கு செய்ய வேண்டிய கடமை முடிந்தது. அவளும் கணவனு டன் புக்ககம் சென்று விட்டாள். இப்போது குடும்பத்தில் குருராஜ் மட்டுமே தனித்திருந்தான்.

நாட்கள் நகர நகர வறுமையும் மெல்ல மெல்ல அவர்கள் குடும்பத்தை கவ்விக்கொண்டது. விஜய நகரத்தி லிருந்து கொண்டு வந்திருந்த அனைத்து செல்வங்களும் தீர்ந்து விட்டன ஒவ்வொரு நாளையும் கழிப்பதென்பது பெரும் பிரச்சனையாகிவிட்டது திம்மண்ண பட்டருக்கு. திம்மண்ண பட்டர் வீணை வாசிப்பதில் திறமை மிக்கவராத லால் சில மாணவர்களை தேடிப்பிடித்து வீணை ஆசிரியராக வேலை செய்தாலும், அதனால் கிடைத்த வருமானம் குடும்பம் நடத்த போதுமானதாக இல்லை.

இந்த சமயத்தில், குருராஜ் வளர்ந்து பெரியவனானதும் உபநயனம் செய்து வைத்தார். பின் கல்வி கற்கும் பொருட்டு வீட்டை விட்டு குருகுலம் செல்ல வேண்டியதா யிற்று. இதனால் வீட்டில் குழந்தைகளே இல்லாமல் வெறிச் சோடிக்கிடந்தது. குருராஜுக்குப் பிறகு குழந்தை ஏதும் பிறக்கவில்லை. திம்மண்ண பட்டருக்கு. எனவே கணவன்

மனைவி இருவருமே மிக்க கவலை கொண்டனர். இருவரும் ஓர் ஆண் குழந்தை வேண்டி ஆண்டவனை வழிபட்டனர். குருராஜ் குருகுலம் சென்றுவிட்டதால் குழந்தை ஒன்று இருந்தால் ஆறுதலாக இருக்குமல்லவா? ஆனால் பிரார்த்தனைக்கு பலனே கிட்டவில்லை. ஆகவே அவர்கள் திருப்பதி சென்று ஒரு நல்ல மகனாக ஆகக் கூடிய குழந்தைக்கு அருளவேண்டி ஸ்ரீ சீனுவாச பெருமானை வணங்கி சேவை செய்ய முடிவு செய்தனர். திம்மண்ணா பட்டர் ஏழையாதலாலும், வருமானத்திற்கு வழியின்மையாலும் மேலும் மேலும் துன்பத்தில் உழலுவதை காட்டிலும் ஒரேயடியாக புவனகிரியை விட்டு திருப்பதி போய்விடுவது என்று தீர்மானித்துக் கொண்டார். கோப்பம்மா வீட்டிலிருந்த மிச்சமீதி பொருள்களை மூட்டையாக கட்டிக்கொண்டு பயணத்திற்கு தயாரானாள்.

திம்மண்ணா பட்டர் மனைவியுடனும், மகனுடனும் திருப்பதி வந்து அங்கேயே நிரந்தரமாக குடியமர்ந்தார். உடலாலும் உள்ளத்தாலும் ஸ்ரீ சீனிவாச பெருமானுக்கு சேவை செய்தபடி இன்னொருமகன் வேண்டி தியானித்தார். கோப்பம்மாவும் கணவனைப்போலவே உடலாலும் உள்ளத்தாலும் சீனிவாச பெருமானுக்கு தொண்டு செய்தாள் என்று கூறத் தேவையில்லை.

இப்படியாக ஓராண்டு கழிந்தது ஒருநாள் முற்காலை பொழுது ஸ்ரீனிவாச பெருமான் திம்மண்ணாபட்டரின் கனவில் தோன்றி,

"ஓ! .. நல்ல பிராமணனே, உனக்கு மகன் பிறக்க அருளுகிறேன். உனக்கு பிறக்கும் அந்த மகன் ஈடு இணையில்லாத ஹரி பக்தனாகவும், தகுதிக்கு மிஞ்சிய கல்வி மானாகவும், உலகில் கற்பனை கெட்டாத மெச்சத் தக்கவனாகவும் விளங்குவான். உன்னுடைய கிராமத்திற்கு செல்வாயாக", என்று அருளிமறைந்தார்

திம்மண்ணபட்டர் உடனே விழித்துக்கொண்டு தான் கண்டது கனவு என்று உணர்ந்தார். மகிழ்ச்சியால் மனைவியை அழைத்தார். முழு கனவு பற்றி விளக்கமாக விவரித்தார். கோப்பம்மா அது கேட்டு ஆனந்த கண்ணீர் உகுத்தாள். துள்ளிக்குதித்தாள். திம்மண்ண பட்டரும் மகிழ்ச்சியால் துள்ளினார். பின் இருவரும் ஸ்ரீ சீனுவாச பெருமானுக்கு பூஜையிட்டு பல முறை வணங்கி பின் புவனகிரிக்குத் திரும்பினர்.

அதே ஆண்டில் கோப்பம்மா கருவுற்று (கி. பி. 1598 இல்) அழகான ஓர் ஆண் மகவை ஈன்றெடுத்தாள். திறமை மிக்க அந்த குழந்தையின் முகத்தை பார்த்த போதெல்லாம் திம்மண்ண பட்டருக்கு சந்தோஷம் கரை புரண்டு ஓடியது. திருப்பதி வெங்கடேசுவரர் நினைவாக, அக்குழந்தைக்கு வெங்கடேசன் என்று பெயரிட்டார் உதிக்கும் ஆதவனைபோல அக்குழந்தை பிரகாசமாக வளர்ந்து வந்தது.

நாட்கள், மாதங்கள், ஆண்டுகள் உருண்டோடின. குருராஜ் குருகுல கல்வியை முடித்துக் கொண்டு வாலிப முறுக்கோடு வீடுதிரும்பினான். திம்மண்ண பட்டர் தமது குமாரனுக்கு பொருத்தமான பெண்ணைப் பார்த்து மணம் செய்து வைத்தார்.

அதற்கு பிறகு திம்மண்ண பட்டர் சில ஆண்டுகளே வாழ்ந்தார். அவருடைய கடமைகளை முடித்துக் கொண்டு ஒருநாள் இவ்வுலகை விட்டு இறைவனடி எய்தினார். இதுவே பெரும் வேதனையை தந்தது அவர்களுடைய குடும்பத்திற்கு குருராஜோ இளைஞன், புதுமணம் புரிந்து கொண்டவன். வீட்டிலும் எதுவுமில்லை, வருமானத்திற்கான வழியும் இல்லாதிருந்தது. தாய், மனைவி, இளைய சகோதரனுடன் ஒரு வேளை சோற்றுக்கு பெரும்போராட்டமே நடத்த வேண்டியதாயிற்று. வாழவேண்டிய துணிவை இழந்தான். கொடுமை

தாங்க முடியாமல் அழுதான். முடிவாக தன்னைதானே தேற்றிக் கொண்டு எந்த கஷ்டங்களையும் எதிர் கொள்ள இதயத்தை கல்லாக்கிக்கொண்டான் இருந்தாலும் சம்பாதிக்கும் வழியை அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. இளைய சகோதரனுக்கு கல்வி கற்பிக்க வேண்டுமே என்ற கவலை அவனை சித்தரவதை செய்தது. முடிவில் மைத்துனர் லட்சுமிநர்ராயண ஆச்சர்ரியாரிடம் வேண்டிக் கேட்டு வெங்கடேசனின் படிப்புக்கு வழி செய்த விட்டார்.

ஸ்ரீ லட்சுமி நாராயணன் சிறுவன் வெங்கடேசனை தன்னுடன் தனது சொந்த ஊரான மதுரைக்கு அழைத்துச் சென்று விடுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்.

௩. கல்வி

திம்மண்ணு பட்டர் காலமான சரியான ஆண்டும் நாளும் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் வெங்கடேஷ் தம் தந்தையிட மிருந்து கன்னடத்தில் படிக்கவும் எழுதவும் அறிந்து கொண்டானென்பதும், அவர் இவனுக்கு உபநயனம் செய்து வைத்தார் என்பதும் உறுதியாகத் தெரிகிறது. இதனால் திம்மண்ணு பட்டர் காலமான போது வெங்கடேஷ னின் வயது ஏறத்தாழ ஆறு அல்லது ஏழு இருக்கக் கூடும்.

நிற்க. இலக்ஷிமி நாராயண ஆச்சாரியார் வெங்கடே சனை தம் வீட்டிற்கு அழைத்து வந்தபோது அவர் மனைவி வெங்கம்மா மிகவும் பேருவகை கொண்டாள். இலட்ஷிமி நாராயண ஆச்சாரியாரும் அவரது மனைவியும் வெங்கடே சனை தம் சொந்த குழந்தைகளுள் ஒருவனை போலவே அன்புடனும் ஆதரவுடனும் நடத்த லாயினர்.

லட்சுமி நாராயண ஆச்சாரியார் தாமாகவே ஆசிரியர் நிலையிலிருந்து வெங்கடேசனுக்கு சமஸ்கிருத அகராதி முதலாக சமஸ்கிருதத்தில் பேரிலக்கியங்கள் வரை அனைத் தையும் கற்பித்தார். நாளடைவில் வெங்கடேஷன் லட்சுமி நாராயண ஆச்சாரியாருடைய பயிற்சியின் காரணமாக இலக் கணம், காவியம், மீமாமிசை தர்க்கம், அர்த்த சாஸ்திரம் முதலியவற்றில் மிகுந்த தேர்ச்சி பெற்று விளங்கினான். அதோடு சமஸ்கிருதத்தில் உள்ள அனைத்து இலக்கியங்கள், கவிதைகள், நாடகங்கள் முதலிய வற்றையும் கற்றுத் தேர்ந்தான்.

வெங்கடேசன் மிகுந்த அறிவாளியாகவும், மேதையாக வும் எந்த பெரிய விஷயத்தையும் குறுகிய காலத்தில் புரிந்து கொள்ளும் திறமை உள்ளவனாகவும் விளங்கினான். லட்சுமி நாராயண ஆச்சாரியார் வெங்கடேசனுக்கு தமக்குத் தெரிந்த அனைத்தையும் கற்பித்த போதிலும் அவருக்கு முழுமையான

திருப்தி ஏற்படவில்லை. சிறிய பையனாக இருந்த போதி லும் மாதவ சித்தாந்தம் அதிலும் குறிப்பாக ஸ்ரீ ராமன் நியாய சுதா என்ற கல்வியும் கற்பதற்கான தகுதியும் ஆற்றலும் வெங்கடேசனுடைய பேரறிவிற்கு இருந்தது.

அக் காலத்தில் கும்பகோணத்தில் சுதீந்திர தீர்த்தர் 1614—1721 கி.பி.) என்ற வைஷ்ணவ சன்னியாசி வாழ்ந்து வந்தார். அவர் ஸ்ரீ மாதநந்த தீர்த்தரின் நேர் வழி வந்த பெரியார். ஸ்ரீ இராமன் நியாய சுதாவையும் ஸ்ரீ மாதவ சித்தாந்தங்கள் முழுவதையும் கற்பிக்கும் திறமை யுள்ளவ ராக அக்காலத்தில் அவர் மட்டுமே விளங்கினார். ஸ்ரீ லட்சுமி நாராயண ஆச்சாரியாரும் அவருடைய மைத்துனரான குரு ராஜ ஆச்சாரியாரும் தமக்குள் கலந்து ஆலோசித்து வெங் கடேசனுக்கு மேலும் சிறந்த கல்வியறிவை அளிக்கும் பொருட்டு அவனை சுதீந்திர தீர்த்தரிடம் அழைத்துச் சென்று அறிமுகம் செய்து வைத்து மடத்திலேயே தங்கி கல்வி பயில தேவையான ஏற்பாடுகளையும் செய்தனர்

ஸ்ரீ சுதீந்திர தீர்த்தர் சிறுவன் வெங்கடேசனை தலை முதல் பாதம் வரை உற்று நோக்கினார். அச்சிறுவனிடம் அவர் என்ன கண்டாரோ? அது இறைவனுக்குத் தான் தெரியும். தயக்கம் ஏதுமின்றி தமக்குத் தெரிந்த அனைத் தையும் அவனுக்குக் கற்பிப்பதாக உறுதியளித்தார். இதனை கேட்ட லட்சுமிநாராயண ஆச்சாரியார் பேருவகை கொண் டார். பின்னர் ஸ்ரீ சுதீந்திர தீர்த்தரிடமும் வெங்கடேச னிடமும் விடைபெற்றுக்கொண்டு திரும்பினார்.

அனாதையான வெங்கடேசன் ஏழ்மையிலும் ஏழ்மை யானவனாகவும், கூச்ச சுபாவம் நிறைந்த மிகுந்த அடக்க முள்ளவனாகவும் இருந்தான். இருப்பினும் அவனிடம் கல்விச் செல்வம் மிகுந்து விளங்கியதால் அவனுடைய ஆசிரியரான சுதீந்திர தீர்த்தரே அவன் மீது மிகுந்த அன்பும் மரியாதை யும் செலுத்தினார்.

ஸ்ரீ சுதீந்திர தீர்த்தரிடம் கல்வி கற்றவர்களுள் வெங் கடேசனும் ஒருவன். ஆனால் மற்ற மாணவர்கள் இவனை போல ஏழ்மையாக இல்லாமல் பெரும் பணக்காரர்களாக வும், பலர் நடுத்தர நிலையிலும் இருந்தனர். வெங்கடேசன் மட்டுமே பொருளாதார நிலையில் மிகவும் பின் தங்கியவனாக இருந்தான்.

வெங்கடேசனை தவிர மற்ற மாணவர்கள் பொழுது போக்க வகுப்பிற்குச் சென்றார்களே தவிர கல்வியறிவை பெறும் நோக்கத்திற்காக இல்லை வெங்கடேசன் மட்டுமே கல்வி கற்கும் குறிக்கோளோடு இருந்தான். அவனுடைய ஆசிரியருக்கு இவ்வுண்மை தெரியுமாதலால் வகுப்பு நேரங் களில் அவனிடம் சிறப்பான அக்கரை செலுத்தி பாடங் களை போதித்தார்.

அக்காலத்தில் மாணக்கர்கள் எந்த ஆசிரியர்களிடம் கல்வி பயிலுகிறார்களோ அவருடனேயே இருந்து கல்வி உணவு, உறையுள் அனைத்தும் பெருவது வழக்கமாக இருந்தது எனவே ஸ்ரீ சுதீந்திர தீர்த்தருடைய மடத்தில் பல மாண வர்கள் தங்கி கல்வி கற்று வந்தனர்.

வெங்கடேசன் பணக்காரனாக இல்லாததாலும் மற்ற மாணவர்களை போல மந்த புத்தி உள்ளவனாகவோ இல் லாததாலும் இயற்கையாகவே மற்ற உடன் பயிலுபவர் களுடன் நட்பு ஏற்படாமல் போயிற்று வெங்கடேசனுக்கு. மாறாக, வெங்கடேசன் கூர்மையான அறிவு பெற்றிருந்த காரணத்திற்காக மற்றவர்கள் அவனை வெறுத்தனர். இந்த காரணத்தினால் குருகுலத்து அன்றாட நடவடிக்கைகளில் மற்ற மாணவர்களுடைய தோழமையும் கூட்டும் அவனுக்குச் கிடைக்கவில்லை.

இரவு நேரங்களில் உறங்கும் போதுகூட மற்ற மாண வர்கள் அனைவரும் வெங்கடேசனை தீண்டத்தகாதவனைப் போல தனியான ஒரு பாழடைந்த மண்டபத்தில் ஒதுக்கி

திருப்தி ஏற்படவில்லை. சிறிய பையனுக இருந்த போதிலும் மாதவ சித்தாந்தம் அதிலும் குறிப்பாக ஸ்ரீ ராமன் நியாய சுதா என்ற கல்வியும் கற்பதற்கான தகுதியும் ஆற்றலும் வெங்கடேசனுடைய பேரறிவிற்கு இருந்தது.

அக் காலத்தில் கும்பகோணத்தில் சுதீந்திர தீர்த்தர் 1614—1721 கி.பி.) என்ற வைஷ்ணவ சன்னியாசி வாழ்ந்து வந்தார். அவர் ஸ்ரீ மாதநந்த தீர்த்தரின் நேர் வழி வந்த பெரியார். ஸ்ரீ இராமன் நியாய சுதாவையும் ஸ்ரீ மாதவ சித்தாந்தங்கள் முழுவதையும் கற்பிக்கும் திறமை யுள்ளவராக அக்காலத்தில் அவர் மட்டுமே விளங்கினுர். ஸ்ரீ லட்சுமி நாராயண ஆச்சாரியாரும் அவருடைய மைத்துனரான குரு ராஜ ஆச்சாரியாரும் தமக்குள் கலந்து ஆலோசித்து வெங்கடேசனுக்கு மேலும் சிறந்த கல்வியறிவை அளிக்கும் பொருட்டு அவனை சுதீந்திர தீர்த்தரிடம் அழைத்துச் சென்று அறிமுகம் செய்து வைத்து மடத்திலேயே தங்கி கல்வி பயில தேவையான ஏற்பாடுகளையும் செய்தனர்

ஸ்ரீ சுதீந்திர தீர்த்தர் சிறுவன் வெங்கடேசனை தலை முதல் பாதம் வரை உற்று நோக்கினுர். அச்சிறுவனிடம் அவர் என்ன கண்டாரோ? அது இறைவனுக்குத் தான் தெரியும். தயக்கம் ஏதுமின்றி தமக்குத் தெரிந்த அனைத்தையும் அவனுக்குக் கற்பிப்பதாக உறுதியளித்தார். இதனை கேட்ட லட்சுமிநாராயண ஆச்சாரியார் பேருவகை கொண்டார். பின்னர் ஸ்ரீ சுதீந்திர தீர்த்தரிடமும் வெங்கடேசனிடமும் விடைபெற்றுக்கொண்டு திரும்பினுர்.

அனுதையான வெங்கடேசன் ஏழ்மையிலும் ஏழ்மையானவனுகவும், கூச்ச சுபாவம் நிறைந்த மிதந்த அடக்கமுள்ளவனுகவும் இருந்தான். இருப்பினும் அவனிடம் கல்விச் செல்வம் மிகுந்து விளங்கியதால் அவனுடைய ஆசிரியரான சுதீந்திர தீர்த்தரே அவன் மீது மிகுந்த அன்பும் மரியாதையும் செலுத்தினுர்.

ஸ்ரீ சுதீந்திர தீர்த்தரிடம் கல்வி கற்றவர்களுள் வெங்கடேசனும் ஒருவன். ஆனால் மற்ற மாணவர்கள் இவனை போல ஏழ்மையாக இல்லாமல் பெரும் பணக்காரர்களாகவும், பலர் நடுத்தர நிலையிலும் இருந்தனர். வெங்கடேசன் மட்டுமே பொருளாதார நிலையில் மிகவும் பின் தங்கியவனாக இருந்தான்.

வெங்கடேசனை தவிர மற்ற மாணவர்கள் பொழுது போக்க வகுப்பிற்குச் சென்றார்களே தவிர கல்வியறிவை பெரும் நோக்கத்திற்காக இல்லை வெங்கடேசன் மட்டுமே கல்வி கற்கும் குறிக்கோளோடு இருந்தான். அவனுடைய ஆசிரியருக்கு இவ்வுண்மை தெரியுமாதலால் வகுப்பு நேரங்களில் அவனிடம் சிறப்பான அக்கரை செலுத்தி பாடங்களை போதித்தார்.

அக்காலத்தில் மாணக்கர்கள் எந்த ஆசிரியர்களிடம் கல்வி பயிலுகிறார்களோ அவருடனேயே இருந்து கல்வி உணவு, உறையுள் அனைத்தும் பெருவது வழக்கமாக இருந்தது எனவே ஸ்ரீ சுதீந்திர தீர்த்தருடைய மடத்தில் பல மாணவர்கள் தங்கி கல்வி கற்று வந்தனர்.

வெங்கடேசன் பணக்காரனாக இல்லாததாலும் மற்ற மாணவர்களை போல மந்த புத்தி உள்ளவனாகவோ இல்லாததாலும் இயற்கையாகவே மற்ற உடன் பயிலுபவர்களுடன் நட்பு ஏற்படாமல் போயிற்று வெங்கடேசனுக்கு. மாறாக, வெங்கடேசன் கூர்மையான அறிவு பெற்றிருந்த காரணத்திற்காக மற்றவர்கள் அவனை வெறுத்தனர். இந்த காரணத்தினால் குருகுலத்து அன்றாட நடவடிக்கைகளில் மற்ற மாணவர்களுடைய தோழமையும் கூட்டும் அவனுக்குக் கிடைக்கவில்லை.

இரவு நேரங்களில் உறங்கும் போதுகூட மற்ற மாணவர்கள் அனைவரும் வெங்கடேசனை தீண்டத்தகாதவனைப் போல தனியான ஒரு பாழடைந்த மண்டபத்தில் ஒதுக்கி

வைத்து விட்டு தாங்கள் மட்டும் ஓரிடத்தில் சேர்ந்து உறங்கி னர். ஆனால் வெங்கடேசனுக்கு இதுவே ஒரு வரப்பிரசாத மாயிற்று. ஏனெனில் தினமும் அனைவரும் உறங்கிய பிறகு வெங்கடேசன் மட்டும் தனியாகக் கொஞ்சம் வைக்கோல் களை சேகரித்து கொளுத்தி அதனால் உண்டாகிய வெளிச் சத்தில் அன்றன்று ஆசிரியரால் நடத்தப்பட்ட பாடங்களை குறிப்பெடுக்க அவ்வமைதியான நேரத்தை பயன்படுத்திக் கொண்டமையே இரவு எழுத்து, படிப்பு வேலை முடிந்த பிறகு உறங்கு வதற்கு ஒரு கிழிந்த பாயைத்தவிர அவனிடம் வேறேதுமிருக்கவில்லை. குளிருக்கு போர்த்திக் கொள்ள கட்டியிருந்த வேட்டியையே பயன்படுத்திக் கொண்டான். வகுப்பு நேரங்களில் வெங்கடேசன் தங்கள் முன் நிற்பதைக் கூட விரும்பாதவர்களாக அவனை பற்றி அவர்களுடைய குருவிடம் இல்லாததும் பொல்லாததையும் புனைத்துக் கோள் மூட்டுவது வழக்கமாக இருந்தது அவனுடைய சக மாண வர்களுக்கு குருக்களுக்கு வெங்கடேசனின் உண்மையான இயல்பு தெரியுமாதலால் மற்ற மாணவர்களின் பொய்யு ரைக்கு செவி மடுக்கவில்லை.

ஒரு நாள் குருக்கள் ஸ்ரீ ராமன் நியாய சுதாவை போதிப் பதற் நப் பாடமாக எடுத்துக் கொண்டார். அப்பாடம் புரிய வைப்பதற்கும், புரிந்து கொள்வதற்கும் மிகவும் கடின மான தாகையால் மற்ற பாடங்களைவிட அப் பாடத்தை புரிய வைக்க தன் முழு அறிவையும் பயன்படுத்தி பெரு முயற்சி எடுத்துக்கொண்டார்.

ஒரு நாள் ஆசிரியர் சுதாவின் செய்யுள்களுக்கு பொருள் உரைத்துக் கொண்டிருந்தபோது ஒரு பிரச்சனைக்குரிய பகுதி வந்தபோது அதற்கு சரியான விளக்கம் கொடுக்க முடியாமல் சற்றுத் திணறினார். எனவே அன்றய பாடத்தை அத்துடன் முடித்துக் கொண்டு மறுநாள் விளக்க மளிப்பதாகக் கூறிச் சென்றார்.

அன்றிரவே அவர் தம்முடைய மாணக்கர்கள் எங்கே எவ்வாறு உறங்குகின்றனர் என்பதை கண்டறிய ஆவல்

கொண்டவராய் படுக்கையை விட்டெழுந்து விளக்குடன் ஒரு வேலையாளையும் உடன் அழைத்துக் கொண்டு மாணவர்களின் இருப்பிடத்திற்கு வந்து சேர்ந்தார். எல்லா மாணவர்களும் அங்கு உறங்கிக் கொண்டிருப்பதை கண்ட போதிலும் வெங்கடேசன் மட்டும் அங்கு இல்லாததை அம் மங்கிய ஒளியிலும் அவரால் அறிய முடிந்தது. அவர் சுற்றுமுற்றும் கூர்ந்து நோக்கியபோது சற்று தொலைவில் யாரோ உறங்கிக் கொண்டிருப்பதை கண்டு அருகில் சென்று பார்த்தபோது, குளிரில் நடுங்கியபடி அப்பாழ்மண்டபத்தில் வெங்கடேசன் உறங்கிக் கொண்டிருப்பதை அவரால் அறியமுடிந்தது. அவனுடைய தலைமாட்டிற்கு அருகே வைக்கோலால் எரிக்கப் பட்ட சாம்பல் குவியலும் ஒரு சிறு குறிப்பேடும் இருக்கக் கண்டார்.

குருக்கள் அக்குறிப்பேட்டை எடுத்து அந்த மங்கிய ஒளியில் புரட்டிப் பார்த்தபோது அவை அன்றுடம் அவரால் நடத்தப்பட்ட பாடங்களின் விமர்சனக் குறிப்பாக இருக்கக் கண்டு இறுதி பக்கத்தை புரட்டி படித்துப் பார்த்தபோது அவர் பேராச்சரியமும் பேருவகையும் ஒருங்கே கொண்டார். ஏனெனில் எந்த பாடத்தை நடத்துவதற்கு அவர் அன்று காலையில் திணறினரோ அந்த பாடத்தின் மிகத்தெளிவான எளிதாகப் புரிந்து கொள்ளும்படியான விளக்க உரையாக அது இருந்தமையால் தான்.

இவ்வளவு பெரிய மேதாவி தனக்குச் சீடனாக வந்து வாய்த்துள்ளதால் உண்டான ஆனந்தத்தாலும், இச்சிறந்த ஞானி குளிரில் நடுங்கியபடி இப்பாழ்மண்டபத்தில் உறங்க நேர்ந்ததே என்ற வருத்தத்தாலும் அவர் கண்கள் நீரை சிந்தின. அவர் தாம் போர்த்தியிருந்த சால்வையை எடுத்து வெங்கடேசன் மீது மிகுந்த ஆதரவோடு போர்த்திவிட்டு அவனுடைய குறிப்பேட்டுடன் தம் படுக்கைக்கு திரும்பினர்.

மறுநாள் ஸ்ரீ சுதீந்திர தீர்த்தர் தம் வகுப்பிற்கு வந்து அமர்ந்தபோது வெங்கடேசனைத்தவிர மற்ற எல்லா மாண

வர்களும் வந்திருப்பதை கண்டார். எனவே அவர் வெங்க டேசனின் வருகைக்காக அமைதியாகக் காத்திருந்தார்.

இரவு விளக்கக் குறிப்பு எழுதியதன் காரணமாக வெகு நேரம் கழித்து உறங்கிய வெங்கடேசன் சூரியனின் செங் கதிர்கள் அவன் போர்த்தியிருந்த போர்வையினூடே புகுந்து அவனது உடம்பை சுட்ட போதுதான் விழித்தெழுந்தான். அவன் மீது தங்கச் சரிகையால் நெய்யப்பட்ட விலையுயர்ந்த கம்பளிப் போர்வை – அதுவும் அவனுடைய குருக்களினுடைய போர்வை – இருப்பதைகண்டு அதிர்ச்சிக்குள்ளானான். அம் மடத்தை விட்டு அவனை வெளியேற்றுவதற்கான நோக்கத் துடன் அவனுடைய வகுப்பு மாணவர்கள் செய்த இழிசெய லாக அவனுக்குத் தோன்றியது அது. தலையனை பக்கமிருந்த நோட்டு புத்தகமும் இல்லாமலிருக்கவே அவன் மிகுந்த வேதனைக் குள்ளானான்.

இருக்கையை விட்டெழுந்து போர்வையுடன் குருவை நோக்கி ஓடினான். அவர் முன் மண்டியிட்டு, "ஐயா நான் ஏதும் குற்றம் செய்திலேன், உங்கள் போர்வையை நான் திருடவில்லை. யாரோ துர்குணம் கொண்டவர்கள் எடுத்து வந்து என்மீது போட்டு பழிசுமத்தியிருக்கிறார்கள். எனக்கு ஒன்றுமே தெரியாதய்யா என்னுடைய குறிப்பேடு கூட காணமல் போய்விட்டது. என் மீது பழி சுமத்த எண்ணி இக் காரியத்தை செய்தவன் ஒருவேளை என் குறிப்பேட்டை யும் எடுத்துச் சென்றிருக்கலாம்...," என்று சொன்னபடி அழுகையை அடக்க முடியாமல் வாய்விட்டுக் கதறினான்.

குரு ஆதரவாக அவனை எழுந்திருக்கக் கூறினார். பின், நன்று குழந்தாய் நீ ஏதுமறியாதவனென்று யாமறிவோம்; உன்னுடைய விளக்கக் குறிப்பேடு பத்திரமாகத்தான் உள்ளது. அந்த போர்வையை இங்கே வைத்துவிட்டு காலை கடன்களை விரைவாக முடித்துக் கொண்டு வா, உனக்காக நாங்கள் காத்திருப்போம்......" என்றார்.

வெங்கடேசன் காலைக் கடன்களை விரைவாக முடித்துக் கொண்டு வந்து குருவணக்கம் செய்தான், வகுப்பு துவங்கி.

யது. குரு ஸ்ரீ சுதீந்திரதீர்த்தர் வெங்கடேசனுடைய விளக்கக் குறிப்பேட்டை எடுத்து வகுப்பு மாணவர்கள் அனை வருக்கும் காண்பித்து முதல் நாள் வகுப்பில் அரைகுறையாக முடிக்கப்பட்ட கடினமான பாடத்தின் விளக்கத்தை அக் குறிப்பேட்டிலிருந்து படித்துக்காண்பித்தார். பிறகு வகுப்பு மாணவர்களிடம்,'' இச் சிறுவனை பாருங்கள் ! இவன் அனைத் தையும் அறிந்தவனைப் போல காண்கிறான். அவன் எழுதிய சுதாவின் விளக்கங்கள் புதுமலரின் நறுமணம் போல பரிமளிக் கிறது. இந்த விளக்க உரை மிகவும் எளிமையானதாகவும் கவர்ச்சியானதாகவும் இருக்கிறது. பாடங்கள் நடக்க நடக்க இதற்கான விளக்க உரையை தொடர்ந்து எழுதும் படி இச்சிறுவனை நாம் கேட்டுக் கொள்வோம். இந்த விலை மதிப்பற்ற நூலை இன்றிலிருந்து "பரிமளம்'' என்பதாகவும் இச்சிறுவன் வெங்கடேசனை பரிமளச்சாரியார் என்றும் அழைபோமாக...., என்று கூறியவாறு அங்கு வைக்கப்பட் டிருந்த அவருடைய விலையுயர்ந்த சால்வையை எடுத்து சிறுவன் வெங்கடேசனுக்கு பெருமகிழ்ச்சியுடன் போர்த்தி னார்.

குரு ஸ்ரீ சுதீந்திரதீர்த்தர் அவருக்குத் தெரிந்த அனைத்து தத்துவங்களையும் மனப்பூர்வமாக வெங்கடேசனுக்குக் கற்றுத்தந்தார். அவனை ஒரு தலை சிறந்த த்வைத்த சித் தாந்தி யாக்கினார். குருகுலக் கல்வி முடிந்தபிறகு பரிமளாச் சாரியார் குருக்களின் ஆதரவு மிக்க ஆசிகளுடனும், அன்புப் பரிசுகளுடனும் புவனகிரிக்குச் சென்றார்.

த்வைத்த தத்துவத்தில் சிறந்தவனாகவும், குருக்களின் ஆசிகளுடன் பரிமளாச்சாரியார் என்ற பட்டப்பெயருடனும் புவனகிரியில் உள்ள அண்ணன் வீட்டிற்கு வந்தபோது குருராஜ ஆச்சாரியார் அன்புபொங்க வரவேற்று அவருக்குத் தெரிந்த வீணை கலையை வெங்கடேசனுக்குக் கற்றுத்தந்தார். மிகக்குறைந்த காலத்தில் வீணை மீட்டுவதில் தலை சிறந்த நிபுணனானான்.

வெங்கடேசன் இளமையாக இருந்தபோதிலும், திருமண வயதை எட்டியிருந்தமையால் குருராஜ ஆச்சாரியார் சீரும் சிறப்பும் மிகுந்த குடும்பத்திலிருந்து சரஸ்வதி தேவி என்கிற பெண்ணை மணம் செய்து வைத்தார் (கி. பி. 1616). வெங் கண்ணாச்சாரியார் இப்படியாக கிரகஸ்தாசரமம் என்ற நிலையை எய்தி கடமையுணர்வு மிக்க அழகான மனைவியுடன் சிலகாலம் இல்லற வாழ்க்கையை நடத்தினர்.

4. அக்னி சூத்திரம்

வெங்கண்ணாச்சாரியார் குருகுல வாழ்க்கையை முடித்துக் கொண்டு தமையனார் குருராஜ ஆச்சாரியாருடன் வாழ நேர்ந்தபோது, அவர் மிக குறைந்த வருவாயில் போதிய வசதிகளின்றி வாழ்க்கை நடத்துவதை அறிந்தார். வெங்கண்ணாச்சாரியாரும் மனைவியுடன் அவர்களுடன் வாழ நேர்ந்ததால் குடும்பக் கஷ்டம் இன்னும் மிகையானது. அச்சிறிய நகரில் வருவாய்க்கு வழியேதும் இல்லாதிருந்தது. எனவே, தமையனாரின் மனம் புண்படாதவாறு அந்த வீட்டை விட்டு, ஏன் அந் நகரை விட்டே வெளியேறி சுயமாக வாழ்க்கை நடத்த விரும்பினார் வெங்கண்ணாச்சாரியார்.

ஒருநாள் வெங்கண்ணாச்சாரியார் தமையனாரிடம் மனைவியை அழைத்துச் சென்று சுதீந்திர தீர்த்தருக்கு அறிமுகம் செய்வித்து ஆசி பெற விரும்புவதாகக் கூறினார். குருராஜ ஆச்சாரியாரும் ஒப்புதல் தந்து இருவரையும் கும்பகோணம் அனுப்பிவைத்தார்.

சுதீந்திர தீர்த்தர் வெங்கண்ணாச்சாரியாரையும் அவர் மனைவியையும் மகிழ்ச்சியுடன் வரவேற்று ஆசீர்வதித்து பின் சிறிது காலம் மடத்திலேயே தங்கியிருக்கும்படி கேட்டுக் கொண்டார். சில நாட்கள் கடந்த பிறகு, சுதீந்திர தீர்த்தர் மடத்திலிருந்த சீடர்களுடன் ஸ்தலயாத்திரை மேற்கொண்டார். வெங்கண்ணாச்சாரியாரும் மனைவியுடன் அவரை தொடர்ந்தார் என்பதை சொல்ல வேண்டியதில்லை.

அக்காலங்களில் மட அதிபதியோ, கல்வி கேள்விகளில் புலமை பெற்ற தலை சிறந்த பேரறிஞரோ யாத்திரை மேற்கொண்டு தங்குமிடங்களில், அப்பகுதியை சேர்ந்த வேறு ஒரு மதத்தையோ, சாதியையோ, அல்லது கருத்து மாறுபாடு கொண்ட அறிஞரோ அவர்களை வலிய வாதத்திற்கு அழைப்பது வழக்கமாயிருந்தது. அவ்வாறு "சுதீந்திரதீர்த்தர்

மன்னார்குடி என்ற நகரில் தங்க நேர்ந்தபோது, அந்நகரில் வசித்து வந்த இலக்கணத்தில் மிக்க தேர்ச்சி பெற்ற ஓர் அத்வைத பேரறிஞர் சுதீந்திர தீர்த்தருடைய மடத்திற்கு வந்து மகா பாஷியத்திற்கு விரிவுரை நிகழ்த்துப் படி கேட்டுக் கொண்டார். அதற்கு சுதீந்திரரும் இணக்கம் தெரிவித்தார்.

அதன்படி அந்நகரில் உள்ள ஒரு கோயில் பெரு மண்டபத்தில் கூட்டத்திற்கான ஏற்பாடும் செய்தனர். சுதீந்திரரும் அவரது சீடர்களும் ஓர் புறமும், அந்நகர் இலக்கண வாதியும் அவரை சார்ந்தவர்களும் எதிர் புறமும் அமர்ந்து விவாதத்தை துவக்கினர்.

இரு சாராருக்குமிடையே வாக்கு வாதம் கடுமையாகவும் கார சாரமாகவும் நடந்து கொண்டிருந்தது. வாதத்தினிடையே போட்டியை முன்னின்று நடத்த வாய்ப்பளிக்கும் படி வெங்கண்ணாச்சாரியார் கேட்டுக்கொண்டதன் பேரில் வெங்கண்ணாச்சாரியாரின் திறமையை நன்கு அறிந்திருந்த சுதீந்திர தீர்த்தரும் அவருடைய வேண்டுதலுக்கு அனுமதியளித்தார். இப்படிப்பட்ட சொற்போரில் கலந்து கொள்வது வெங்கண்ணாச்சாரியாருக்கு இதுவே முதல் முறையாக இருந்தாலும் மிகச் சிறந்த தெளிவான வாதத்தினால் வெகு விரைவிலேயே அவ்விலக்கண வாதியை வெற்றியும் கொண்டார்.

வெங்கண்ணாச்சாரியார் மகாபாஷியத்தை த்வைத்த முறையில் வாதிட்ட விரிவுரை மிகப் பொருத்தமானது என அந்த த்வைத்த அறிஞரும் ஒப்புக்கொண்டார். சுதீந்திர தீர்த்தரும் மகாபாஷியத்திற்கு மிகச்சரியான விமர்சனங்களைத் தந்து பிரதிவாயை மேலும் தொடர்ந்து வாதமிட முடியாமல் திணரச் செய்த வெங்கண்ணாவின் மிகச்சிறந்த வாதத் திறமையை பெரிதும் பாராட்டினார். அம்மகா சபையிலேயே அனைவர் முன்னிலையிலும் வெங்கண்ணாச்சாரியாருக்கு மகாபாஷிய ஆச்சாரியார் என்ற விருதையும் அளித்து கௌரவித்தார்.

பின்னர், சுதீந்திரர் மன்னார்குடியிலிருந்து புறப்பட்டு தஞ்சையை அடைந்தார். தஞ்சையிலும் அப்போது அத்வைத சித்தாந்தத்தில் தேர்ந்த அறிஞர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் ஸ்ரீ சுதீந்திர தீர்த்தரிடம் தாமாகவே வலிய வந்து, 'தத்துவ மசி' என்ற சூத்திரத்தின் பொருள் பற்றி த்வைத்த சித்தாந்த முறைப்படி நிருபணத்துடன் விளக்கிக் காட்ட முடியுமா? என்று சவால் விட்டதோடு மட்டுமன்றி அவரோடு விவாதிக்கவும் அழைத்தார்.

இம் முறையும் வெங்கண்ணாச்சாரியாரே குருவின் ஆசிகளோடு மிகவும் உற்சாகத்துடன் வாதிட முன் வந்தார். 'தத்துவமசி' என்ற சூத்திரத்தின் பொருள் பற்றிய அவ் விவாதம் பல நாட்கள் தொடர்ந்து நடந்தது. எதிராளியான அந்த அத்வைத அறிஞர் கல்வியறிவில் மிகச் சிறந்தவராக விளங்கிய போதிலும், அவரை வெங்கண்ணாச்சாரியார் மிகச் சூட்டிகையோடு தக்க சமயங்களிலெல்லாம் கேள்விக் கணையால் மடக்கித்திணரச் செய்வதில் வல்லவராக இருந்த காரணத்தால் அவரை எளிதில் வெல்ல முடிந்தது. இறுதியில் தோல்வி கண்ட அந்த அத்துவைத்த அறிஞர் த்வைத்த சித்தாந்த முறைப்படி தத்துவமசியின் விமர்சனம் சரியானதென்று ஒப்புக்கொண்டார்.

இந் நிகழ்ச்சிக்குப் பிறகு வெங்கண்ணாச்சாரியார் அம் மடத்திற்கு பெருநிதியம் போலவும் ஸ்ரீ சுதீந்திரரின் வலக் கையாகவும் திகழ்ந்தார். ஏறக்குறைய இதே சமயத்தில் தான் சரஸ்வதி தேவியாரும் கருவுற்றிருக்க வேண்டும். எனவேதான் வெங்கண்ணாச் சாரியார் இனியும். மடத்தில் தங்கியிருப்பது நல்லதல்ல என்று கருதியவராய், ஸ்ரீ சுதீந்திர தீர்த்தரிடம் தற்போது சென்று மனைவியின் பிரசவத்திற்குப் பின் திரும்பி வருவதாக விடை பெற்றுக் கொண்டு மடத்தை விட்டு வெளியேறினார்.

மடத்தைவிட்டு வெளியேறிய பிறகுதான் வெங்கண்ணாச் சாரியாருக்கு உண்மையான உலகத்தை அறியும் வாய்ப்பு

கிட்டியது. அதற்குப் பிறகு வெங்கண்ணுச் சாரியார் எங்கே எப்படி வாழ்க்கை நடத்தினுர் என்பது சரிவரத் தெரியவில்லை. ஆனால் கொடிய வறுமை நோயால் மிகவும் துன்பப்பட்டார் என்பது மட்டும் தெளிவு.

கல்வியின் பல துறைகளிலும் அவர் மிகச் சிறந்த ஞானியாக விளங்கிய போதிலும் அவரிடம் கல்வி கற்கவோ ஏன் வீணை கற்றுக் கொள்ளக்கூட எவரும் முன் வரவில்லை. அவர் ஒரு சாதாரண கிரகஸ்தாசரம பிராமணரைப்போல கருதப் பட்டார். எப்பொழுதேனும் அவருக்குக் கிடைத்து வந்த பிச்சை இருவரின் ஒரு வேளை உணவிற்குக் கூட போதுமானதாக இருக்கவில்லை. பத்துமாதம் நிறை வெய்தியபோது சரஸ்வதி தேவியார் பேருவகை எய்தும்படியாக ஓர் அழகிய ஆண்மகவை ஈன்றெடுத்தாள். வெங்கண்ணுச்சாரியாருக்கு இளமையில் உணவு உடை கல்வி அனைத்தையும் தந்து வளர்த்த மைத்துனரின் நினைவாக லட்சுமி நாராயணன் என்று பெயர் சூட்டினுர். குழந்தை வளர வளர அவர் களது குடும்பத்தில் வருமையும் சேர்ந்தே வளர்ந்தது.

வாரத்தில் இரண்டு மூனறு நாட்கள் உண்ண உண வின்றி நீரை மட்டுமே பருகி வாழ வேண்டியிருந்தது. குழந் தைக்கு ஒரு வேளை பால் வாங்க்க் கூட முடியாத வறுமையில் வாடினுர் இவ்வாறு சில ஆண்டுகள் கழிந்தன. "அவனுக்கு ஏன் இந்நிலை ?" இவ்வினு அன்றும் எழுந்தது. இன்றும் எழுகிறது.

வெங்கண்ணுச்சாரியர் பெருமை மிகுந்த நல்ல உயர்ந்த குடும்பத்தில் பிறந்த தூய பிராமணர். ஈடு இணையில்லாத தத்துவப்பேரறிஞர். வீணை மீட்டுவதில் வாணிக்கு நிகரான வர். தாம் கற்றதை பிறருக்குக் கற்பிப்பதில் அறிய திறமை வாய்ந்தவர். அனைத்திற்கும் மேலாக ஸ்ரீ சுதீந்திர தீர்த்த ரின் பரிவும், பாசமும், பக்க பலமும் அவருக்கு என்றும் இருந்து வந்தது. இவ்வாறு இருந்த போதிலும் வாழ்க்கை

யில் அன்றாட அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலை ஏன்?

தத்துவப்படி பார்த்தால் அவர் அவ்வாறு இருந்தது தான் சரி. புராணங்களை நாம் ஊன்றி கவனித்தால் ஓர் உண்மை புலப்படும். மகா முனிவர்களான வசிஸ்டர், கௌதமர், பரத்துவாசர் போன்றோர் வாழ்க்கையின் எல்லா உலகியல் வசதிகளையும் துறந்து, விடு தேடி வந்த அதிர்ஷ்டத்தையும் புறக்கணித்து முரட்டுத்தனமான ஆடைகளை அணிந்து பச்சையிலைகள், காய்கறிகள், பழங்கள் முதலியவற்றை உண்டு எளிய வாழ்க்கை நடத்தினார்கள் என்பது தெளிவு. அவர்களுக்கு சக்ஷாத்காரம் எனப்படும் இறைவனை உணரும் பேரின்ப நிலையே குறிக்கோளாக இருந்தமையால் இத்துன்பங்களை ஒரு பொருட்டாக் கருதவேயில்லை.

எந்த பிரகலாதனை காக்க நரசிம்ம அவதாரம் கொண்டு இறைவன் தூணை பிறந்து வந்தாரோ அந்த பிரகலாதனின் மறு அவதாரமான இந்த வெங்கண்ணாச்சாரியாரும் மேலே குறிப்பிட்ட முனிவர்களைப்போல வறுமை துன்பத்தில் உலகியல் வசதிகளை புறக்கணிக்கும் அளவிற்கு மனப்பக்குவ மடைந்தார். சுக போகத் தேவைகளைப் பற்றி கவலைப்படாமல் நரசிம்மனை வழிபட்டுக் கொண்டு தம்மை மறந்த சமாதி நிலையில் வெங்கண்ணாச்சாரியார் இருந்துவந்தார் என்பது தெளிவு.

பசியும் தாகமும் உலகம் தோன்றியதுமுதல் இன்றுவரை உயிரினங்களுக்கு எதிரிகளாக இருந்து வருகின்றன. வெங்கண்ணாச்சாரியாரின் குடும்பமும் இவ் விதிக்கு விலக்கானவர்கள் அல்லர். இவ்வாறு வாழ்க்கையில் வெறுப்படைந்த நிலையில் அவர் வாழுங்கால், அருகேயிருந்த ஒரு கிராமத்தின் மிராசுதாரர் ஒரு வாரகாலத்திற்கு தொடர்ந்து பெரிய அளவில் சமாராதனை ஒன்று நடத்த விரும்பி சுற்று முற்றும் உள்ள கிராமங்களில் வசித்து வந்த அந்தணர்களுக்குக்

கலந்து கொள்ளும்படி அழைப்பு விட்டிருப்பதாக விழுந்த அச்செய்தி வெங்கண்ணுச்சாரியாருக்குத் தேனுக இனித்தது.

மனைவியின் வற்புறுத்தலின் காரணமாக அச்சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் சமாராதனையில் கலந்து கொண்டு வயிரூர உண்டு களிக்க தீர்மானித்தார். மிராசுதாரர் நடத்திய அச் சமாராதனை உண்மையிலேயே மிகப் பெரியதுதான் ஆடவரும், பெண்டிரும் குழந்தைகளுமாக நூற்றுக்கும் மேம்பட்டவர் அங்கே திரண்டிருந்தனர். ஹோமம், ஹவனம், பூஜை முதலியன மிகவும் ஆடம்பரமாக நடந்து கொண்டிருந்தது. சமாராதனையை தலைமையேற்று நடத்திய புரோகிதர் ஒருவர் துணை புரோகிதர்களுடன் அங்குமிங்குமாக ஓடியாடியபடி நிகழ்ச்சிகளை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்தார். அப்போது, தடித்த உடம்போடு வறுமை கலை தொனிக்கும் முகத்துடன் கிழிந்த ஆடைகளை அணிந்து கொண்டிருந்த வெங்கண்ணுச்சாரியார் மனைவி மகனுடன் அப் பெரிய வீட்டின் ஒரு மூலையில் உட்கார்ந்திருப்பதை பார்த்த தலைமைப் புரோகிதர்,

"ஏ... பிரர்மணனே ; வேலையேதும் செய்யாமல் ஏனிங்கே கைகட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறுய் ? தெண்ட போஜனத்திற்காக இங்கே வந்தாய் ? இந்தா இங்கே உள்ள இந்த சந்தனக்கட்டைகளை சந்தனக் கல்லில் முடிந்த வரை அரைத்து சந்தனக் குழம்பாக்கு !", என்று அன்பும் கனிவுமில்லாமல் வேலைக்காரனை போல கட்டளையிட்டுச் சென்றுர்.

வெங்கண்ணுச்சாரியார் மிகவும் மனம் நொந்து வருந்தினுர். "கடவுளே ... இது என்ன சோதனை ? இந்தகைய சுடு சொற்களை கேட்கவும் இத்தகைய பேரவமானத்தை சந்திக்கவும் என் முன் பிறவியில் நான் என்ன பாவம் செய்தேனுே ? இன்றிருந்து நாளையழியும் இவ்வுடலின் பொருட்டு ஒரு கவளம் உணவிற்காக வந்ததற்காக இவ்வளவு பெரிய தண்டனையை அளிக்க வேண்டுமா ? நன்று... நன்று .." என்று புலம்பிய வாறு தேம்பித் தேம்பி அழுதவர், அதனுல் ஏற்

பட்ட விரக்தி காரணமாக மனதை தேற்றிக் கொண்டு அங்கு கிடந்த பெரிய சந்தனக்கட்டையை கையிலேந்தி அக்னி சூத்திரத்தை உச்சரித்தவாறு சந்தனம் முழுவதையும் அறைத்து முடித்தார். சந்தணம் வெண்ணெய்போல திரண்டு சித்தமாயிருந்தது.

ஹோமம், ஹவனம், பூஜை அனைத்தும் முடிந்தபின் உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகளும் நடைபெறலாயின. அதற்கு முன்னர் தலைமை புரோகிதர் அனைவருக்கும் தீர்த்தமும் சந்தணமும் வழங்கினார். அனைவரும் சந்தணத்தை அவரவர் உடம்பின் மீது பூசிக் கொண்ட மாத்திரத்திலேயே ஏதோ பெரும் நெருப்புப் பிழம்பிற்குள் அகப்பட்டுக் கொண்டவர்களைப் போல துடியாய் துடித்தனர். இதைக் கண்ட மிராசுதாரரும் புரோகிதரும் மிகவும் கலவரமடைந்தனர். தண்மையாய் இருக்க வேண்டிய சந்தணம் தனலாய் எரிச்சலூட்டக் காரணம் யாது? இம்மாற்றம் எவ்வாறு நிகழ்ந்திருக்கக்கூடும்? அவர்களுக்கு விளங்கவேயில்லை. சந்தணத்தை குழைத்து உடம்பில் பூசிக் கொண்டவர்களனைவரும், "அய்யோ நெருப்பு சுடுகிறதே உடம்பு எரிகிறதே..." என்று கத்தியமுவதைக் கண்ட மிரர்சுதாரர் பின்னால் நிகழயிருக்கும் ஏதோ ஒரு கெட்ட நிகழ்ச்சிக்கான கெட்ட சகுணமாக இதை கருதியதால் நடு நடுங்கிப் போனதோடு மட்டுமல்லாமல் இக் குழப்பத்திற்குத் தலைமை புரோகிதரே என்று குற்றம்சாட்டி வெகுண்டெழுந்து அவரை வாய்க்கு வந்தபடி திட்டினார்.

எந்த சந்தணத்தை உடம்பில் பூசிக்கொண்டதும் இத்தகைய அவலமும் குழப்பமும் ஏற்படலாயினவோ அச் சந்தணத்தை அறைத்த பிராமணன் தான் இதற்கெல்லாம் காரணமாயிருக்கக்கூடும் என்று அத்தலைமை புரோகிதரின் நினைவில் பொறிதட்டியதால் மிராசுதாரரை அழைத்துக் கொண்டு வெங்கண்ணாச்சாரியாரை அனுகி கைகட்டிப் பணிவாக அவரிடம் "தாங்கள் யார்? தாங்கள் யாது செய்தீர்கள்?", என்று கூறியருளுமாறு கேட்டுக் கொண்டார்

வெங்கண்ணுச்சாரியாரும் சற்று நேரத்திற்குமுன் புரோகிதர் அவருக்களித்த அவமானத்தின் விளைவுதானெனக் கூறினுர். மிரசுதாரர் உடனே வெங்கண்ணுச்சாரியரின் காலில் விழுந்து புரோகிதர் பொருட்டு தம்மை மன்னிக்கும்படிகேட்டுக்கொண்டார்.

வெங்கண்ணுச்சாரியார் இயல்பாகவே மிகவும் கருணை உள்ளம் கொண்டவராகையால் தமக்கு விளைவிக்கப்பட்ட அவமானங்களை உடனே மறந்தார். பின்னர் வருண சாத்திரத்தை உச்சரித்தவாறு அச் சந்தண நீரை அனைவரது உடல் மீதும் தெளிக்க அனைவரும் எரிச்சலியிருந்து விடுபட்டு தண்ணெனக் குளிர்ச்சியான உணர்வைப்பெற்று அமைதியடைந்தனர். சமாராதனையின் முதல் நாள் நடந்த நிகழ்ச்சியிது. அதற்குப் பின்னர் மிராசுதாரர் வெங்கண்ணுச்சாரியார் யார் என்பதை அறிந்துகொண்டு சமாராதனை முடியும் வரை அவருடனேயே தங்கியிருக்கும்படி கேட்டுக் கொண்டார். சமாராதனையின் இறுதி நாளன்று மிராசுதாரர் வெங்கண்ணுச்சாரியாருக்கும். அவர் மனைவிக்கும் குழந்தைக்கும் போதுமான அளவு தட்சணைகளை தந்து மனநிறைவு ஏற்படச் செய்து ஊருக்கு வழியனுப்பி வைத்தார்.

வெங்கண்ணுச்சாரியார் திருப்தியோடு மன அமைதி பெற்றவராக ஊர் வந்து வீட்டை அடைந்தபோது வீடு திறந்திருப்பதையும் நான்கு சுவர்களும் கூரையையும் தவிர வேறேதும் இல்லாததது கண்டு மனம் வருந்தி மனைவி சரஸ்வதி தேவியிடம், "பெண்ணே இனியும் சோதனைகளை என்னுல் தாள முடியாது. இந்த இரக்க மற்ற உலகைக் கண்டு உனக்காகவோ அல்லது என்க்காகவோ கூட நான் கவலைப்படவில்லை. இக்குழந்தை நன்கு வளர்ந்து பெரிய கல்விமானுக வேண்டுமே என்ற கவலைதான். இனியும் இங்கிருப்பது முறையல்ல, நம் மதிப்பிற்குரிய குருவின் நிழலிலேயே தங்கி வாழ்வதுதான் நல்லது. புறப்படுவாயாக !" என்று வேதனையினுடை பணித்தார்.

சரஸ்வதி தேவியாருக்குத் தெரிந்த கடமைகள் இந்த உலகத்தில் இரண்டேதான் அவளுடைய ஆத்மாவிற்குத் திருப்தி அளிக்கக் கூடியதான அவைகள் கணவனின் கட்டளைகளுக்குக் கீழ்படிதலும், அவர் எங்கெல்லாம் செல்கிருரோ அவரை நிழல்போல மறுப்பேதும் சொல்லாமல் தொடர்வதும்தான். எனவே அவள் மறுமொழியேதும் கூருமல் கணவனைத் தொடர்ந்து நடந்தாள்.

5. சன்னியாசம்

வெங்கண்ணுச்சாரியார் மடத்திற்கு வந்தபோது அ
ருடைய குருவான ஸ்ரீ சுதீந்திர தீர்த்தர் இதய பூர்வமா
மகிழ்ச்சியுடன் வரவேற்று உபசரித்தார். பிறகு கடந்
ஆண்டுகளில் வறுமையாலும் துன்பங்களாலும் மிகுந்
கஷ்டப்பட்டதை விசாரித்து அறிந்து அதற்காக மிகவு
வேதனை பட்டதோடு மட்டுமல்லாமல் அவரையும் அவர
மனைவியையும் அம்மடத்திலேயே தங்கி வாழும்படியாகவு
வேறெங்கும் செல்லலாகாது எனவும் அன்புக் கட்டளையிட
டார். வெங்கண்ணுச்சாரியாரும் அதற்கு இணக்கம் தெ
வித்தார்.

வெங்கண்ணுச்சாரியார் மனைவிமகனுடன் மிகுந்த மகிழ்
சியுடன் வாழ்ந்து வருங்காலை, மகன் லட்சுமிநாராயண
வளர்ந்து இளம் வாலிபப் பருவத்தை யடைந்தபோது அ
ருடைய ஆசிரியரின் ஆலோசனையின் பேரில் அவருடை
வாழ்த்துக்களுடன் நாட்கள் உருண்டோடின. ஒரு சமய
ஸ்ரீ சுதீந்திர தீர்த்தர் நோய்வாய் பட்டு படுத்த படுக்கையா
விட்டார். இதனுல் மடத்தின் அன்றுட செய்தே தீரவேண்
டிய சன்னியாசர நடவடிக்கைகளும், ஸ்ரீ மூலராமர் வழி
பாடும் ஒழுங்காக நடத்துவது மிகவும் கஷ்டமாகிவிட்டது
இதனுல் சுதீந்திர தீர்த்தர் ஆசரமத்தையும் அதைச்சார்ந்
அனைத்து பொருப்புக்களையும் வேருெருவரிடம் ஒப்படைக்க
தீர்மாணித்தார். இப் புனிதமான பொருப்பை குறைவின்றி
செயல்படுத்தக் கூடிய திறமையும் தகுதியும் வெங்கண்ணுச்
சாரியரிடம் மட்டுமே இருப்பதாக அவருக்குத் தோன்றிய
தால் அப் பதவியை வெங்கண்ணுச்சாரியாருக்கே தர முடிவு
செய்தார்.

எனவே ஒருநாள் சுதீந்திர தீர்த்தர் வெங்கண்ணுச்சாரி
யாரை அழைத்து ஆசிரம பொருப்புகளை ஏற்றுக்கொள்ளும்

படி கூறினார். வெங்கண்ணாச்சாரியார் குருவின் முன் கை கட்டி தலைகுனிந்து நின்றபடி, "ஐயன்மீர்... இவ்வளவு பெரிய பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளும்படி கட்டளையிட்டு எனக்கு பெரும்பயத்தை உண்டாக்குகிறீர்களே. யானோ இளமையானவன், என் மனைவி என்னைவிட இன்னும் இளமை யானவள். எதையும் துறந்து விடுமளவிற்கு என்மனம் பக்குவமடைய வில்லை. காதலும் வாழ்க்கைமேற் கொண்ட ஆசை பிடிப்பும், உலக ஆசைகளும் இன்னும் என் உள்ளத்தில் உறுதியாக நிலைத்துள்ளன. சன்னியாசி ஆவதற்கு முற்றிலும் தகுதியில்லாதவன் நான். தயவு செய்து மன்னித்தருள வேண்டும்," என்று மீண்டும் மீண்டும் தலைவணங்கி பணிவுடன் கேட்டுக் கொண்டார்.

அந்நிகழ்ச்சியின்போது ஸ்ரீ சுதீந்திர தீர்த்தருடைய தாய் வழி வந்த மிக நெருங்கிய உறவினர் ஒருவரும் உடனிருந்தார். அவர் மனைவியை இழந்த வயதானவர் வாழ்க்கையின் இன்ப துன்பங்களை அறவே வெருத்தவர். கடவுளுக்காகவும் சமயத்திற்காகவுமே தன்னை முழுவதும் அர்பணித்துக் கொண்டவர். அவர் முன்வந்து ஸ்ரீ சுதீந்திர தீர்த்தரிடம், "ஐயன்மீர்... குடும்ப வாழ்க்கையை முற்றும் வெருத்த வயதான யானிங்கிருக்கின்றேன். ஆசரமத்தை என்க்குத் தந்தருளினால் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ள சித்தமாயிருக்கிறேன்" என்று வேண்டிக் கொண்டார்.

ஸ்ரீ சுதீந்திர தீர்த்தர் அவருடைய வேண்டுதலை அறிவு பூர்வமாக சிந்தித்துப் பார்த்து, அதன் படியே ஆசரமத்தை அவருக்கு அளித்து, ஸ்ரீ யாதவேந்திர தீர்த்தர் என்ற சிறப்புப் பெயரையும் சூட்டி அருளினார்.

ஸ்ரீ யாதவேந்திர தீர்த்தர் மிகுந்த அக்கரையோடும் ஜாக்கிரதையோடும் ஸ்ரீ சுதீந்திர தீர்த்தர் நோயினின்று குணமடைந்து உடல் நலனில் தேர்ச்சிபெற மிகுந்த கவனம் செலுத்தியதால் ஸ்ரீ சுதீந்திர தீர்த்தர் மிக விரைவிலேயே குணமடைந்தார்.

ஆனால், வேலையில்லாமல் இரண்டு சன்னியாசிகள் ஒரே மடத்தில் உறைவது நன்றன்று என்பதால் சுதீந்திர தீர்த்தர் யாதவேந்திர தீர்த்தரிடம், இந்தியாவின் பல இடங்களில் உள்ள ஆண்டவன் சன்னதிகளுக்கு புனித யாத்திரை மேற்கொண்டு தரிசித்து த்வைத்த சித்தாந்தத்தை பிரச்சாரம் செய்து மக்கள் நல்வழி நடக்க வழிகாட்டும்படி ஆலோசனை கூறினார். அதோடு விக்ரக வழிபாட்டிற்கான சில புண்ணிய தலங்களையும் கூறி யாதவேந்திர தீர்த்தரின் யாத்திரை வாழ்க்கைக்கு ஆசி தந்து வழி யனுப்பியும் வைத்தார்.

தள்ளாத வயது முதிர்ந்த சுதீந்திரதீர்த்தரின் களைத்துத் தளர்ந்த உடல் மீண்டும் இரண்டாண்டுகளுக்குப் பிறகு கடும் நோய்க்குள்ளாகியது. இம்முறை பிழைத்தெழுவ தென்பது இயலாத காரியம் என்று பூரணமாக உணர்ந்தார் சுதீந்திர தீர்த்தர் அவர்கள். இருந்தாலும் மடத்தின் வழக்கமான நிகழ்ச்சிகளும், சன்னியாசரமத்தின் அன்றாட கடமைகளும் ஆண்டவனின் வழிபாடும் தவறாமல் ஒழுங்காக நடந்து கொண்டிருந்தது. சுதீந்திர தீர்த்தருக்கு இவைகளை நடத்துவது மிகவும் கடினமாக இருந்ததாலும் ஒவ்வொரு நாளையும் வெற்றிகரமாகவே கழித்து வந்தார். ஸ்ரீ யாதவேந்திர தீர்த்தருக்கு யாத்திரையை முடித்துக் கொண்டு உடனே திரும்பிவிடும்படி செய்தியனுப்ப விரும்பினார். ஆனால் ஸ்ரீ யாதவேந்திர தீர்த்தருடைய இருப்பிடம் அங்கிருந்த யாருக்குமே தெரியாததாயிருந்தது அப்படியே மிகச் சிரமப்பட்டு அவரது இடத்தை கண்டு பிடித்தாலும் காலதாமதமின்றி விரைவாக திரும்பிவந்து விட முடியுமா என்பதும் ஐயப்பாடாயிருந்தது.

எனவே ஸ்ரீ சுதீந்திர தீர்த்தர் மடாதிபதியின் தலைமையையும் பொறுப்புகளையும் வெங்கண்ணாச்சாரியாரிடம் தந்து ஏற்றுக் கொள்ளச் செய்யவேண்டும் என்றும் தீர்மானித்ததால் வெங்கண்ணாச்சாரியாரை அழைத்து, ''அன்பு குழந்தாய் வெங்கடேஷ்' அருகே வந்து என்னையும் என் இந்த நிலையை

யும் பார். இப்போது நான் படுத்த படுக்கையாகிவிட்டேன். ஸ்ரீ மூலராமர் வழிபாடும் தவருமல் நடந்தாக வேண்டும். என்ருல் இனியும் அவற்றை தொடர்ந்து செய்யமுடியாது போலத்தோன்றுகிறது. ஸ்ரீ யாதவேந்திரருக்கு செய்தி சொல்ல விரும்பினேன். ஆனால் அவரிருக்குமிடம் நம்முள் யாருக்கும் தெரியவில்லை ஆனையால் இவ் வாசிரமத்தையும் பீடாதிபதி பொறுப்பையும் மறுப்பு கூருமல் ஏற்றுக் கொள்ள வேண்டும்," என்று கேட்டுக் கொண்டார்.

குருவின் முன் பணிவாக கட்டிய கைகளுடன் நின்றிருந்த வெங்கண்ணுச்சாரியாருக்கு குருவின் இந்த வேண்டுதலுக்கு என்ன சொல்வது? எப்படி சொல்வது? என்று ஏதும் தெரியாததால் மௌனமாக நின்றிருந்தார்.

தொடர்ந்து ஆசிறியரே, "ஆச்சாரியா! ஏனிந்த வெருப்பு? ஏனிந்த பயம்?' தைரியமும் துணிவும் கொள். இந்த உலக இன்பங்கள் நிலையானதல்லவென்று. உனக்குத் தெரியாதா? மனைவி, மக்கள், மற்ற செல்வங்கள் யாவும் சாதாரண உருவப் பொருட்கள் என்று உனக்குத் தெரியாதா? உன் குழந்தையை இம்மடத்திலேயே சேர்த்துவிடு. உன் புற வாழ்வை மறந்து அகக் கண்களை திறந்து, நீ யார்? எந்த நோக்கம் கொண்டு இம் மண்ணில் வந்து அவதரித்தாய்? என்று சிந்தித்துப் பார்....." என்ருர்.

மீண்டும் சிறிது மௌனத்திற்குப் பிறகு, "ஆச்சாரியாரே... அருகே வா; உன்னை நீ தயாராக்கிக்கொள்; ஸ்ரீ ஹரி பகவானும், வாயு பகவானும் மனைவி மக்கள் மற்றும் நிலையில்லாத அற்பப் பொருள்கள் மீது ஏற்பட்டுள்ள ஆசையெனும் மாயத் திரையை கிழித்தெரிய வலிமையும் துணிவும் அளிப்பார்களாக. நீ த்வைத்த மூலத்தை காத்து உயர்த்துவதற்காக பிறந்திருக்கிருய் என்பதையும் எண்ணிப்பார் விலை மதிப்பற்ற மிகச்சிறந்த நல்ல சமய நூல்கள் பல எழுதி வருங்கால சந்ததிகளுக்கு வழிகாட்டியாக விளங்கக் கூடியவர் நீ மட்டும் தான் என்பதை உண்டு வாயாக; துறவியாகு

என்னுடைய இந்த பீடாதிபத்தியத்தின் பரிபாலனத்தை யான் உனக்களிக்க தயாராகயிருக்கிறேன். ஸ்ரீ மூலராமரும், வாயு பகவானும் நீ ஒரு மகானாகி நீண்ட நாட்கள் வாழ அருள் புரிவார்களாக ....." என்று முடித்தார் ஸ்ரீ சுதீந்திர தீர்த்தர்.

அச்சமயம் வெங்கண்ணாச்சாரியாரின் உள்ளத்தில் அபூர்வ உணர்வுகள் எழுந்த மெய்யுணர்வை தூண்டுவது போல உணர்ந்தார் அம்மாத்திரத்திலேயே ஸ்ரீ சுதீந்திர தீர்த்தரை நோக்கி, "ஐயன்மீர்! யான் இப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள தயாராக உள்ளேன். அதற்கு முன் என் மனைவியிடம் ஒரு வார்த்தை சொல்லி திரும்பிவர விழைகின்றேன்; அனுமதிப்பீர்களாக," என்று கேட்டுக்கொண்ட மறு விநாடியே அவர் தங்கியிருந்த இடத்திற்கு ஓடிச் சென்று சுருக்கமாகவும் விளக்கமாகவும் மனைவியிடம் அனைத்தையும் கூறினார்.

அது கேட்ட சரஸ்வதி தேவியார் இதயத்தை பேரிடி தாக்கியதுபோல சிறிது நேரம் ஸ்தம்பித்து நின்றுவிட்டார், பிறகு, "சுவாமி ..... தாங்கள் இதற்கு ஒருபோதும் ஒப்புக் கொள்ளக் கூடாது. நானறிந்ததெல்லாம் உங்களுக்குக் கட்டுபட்டு நடப்பதும் உங்கள் வழி தொடர்வதும் தான். உங்களைப் பற்றி எனக்கு என்ன சொல்வதென்றே தெரிய வில்லை", என்று மிகுந்த வேதனையோடு அழ ஆரம்பித்து விட்டாள்.

"நீ எனக்குக் கட்டுப்பட்டு கீழ்படிந்து நடப்பதானால் நான் ஆசரம வாழ்க்கையை ஏற்றுக்கொள்கிறேன். உன் மகனுடன் நீ புவனகிரிக்குச் சென்று விடு," என்று வெங்கண் ணாச்சாரியார் மனைவியின் புலம்பலுக்கு பதிலுரையாகக் கட்டளையிட்டார்.

"ஓ ... கருணையில்லாமல் உங்களிடமிருந்து பிரிந்து வெகுதொலைவில் சென்று வாழும்படி இப்பெருந்தண்ட

லையை எனக்குத் தருகிறீர்களே...... தாங்களை பிரிந்துதான் எப்படி இருப்பேன் ?" என்று தொடர்ந்து அழுதாள், அழுதாள்...... அழுது கொண்டேயிருந்தாள்.

வெங்கண்ணாச்சாரியார் அவருடைய முடிவு பற்றி விரிவாக அவருடைய தமையனாருக்குத் தெரிவித்து, குழந்தையையும் மனைவியையும் வந்து அழைத்துச் சென்றுவிடும்படி கேட்டுக் கொண்டார். செய்தி கேட்ட உடனேயே குருராஜ ஆச்சாரியார் வண்டிமாட்டுடன் வந்து சரஸ்வதி தேவியையும் சிறுவன் லட்சுமி நாராயணனையும் புறப்படும்படி கூறினார்.

சரஸ்வதி தேவியார் சிதைந்த உள்ளத்தோடு வெங்கண்ணாச்சாரியாரின் பாதத்தில் விழுந்து கண்ணீரால் நீராட்டினார். வெங்கண்ணாச்சாரியார் தம் கைகளால் ஆதரவாக சரஸ்வதி தேவியாரின் தோள்களை பற்றி தூக்கி சாந்தப் படுத்தியபடி தேற்றினார். ஆறுதல் பல கூறினார். எப்படி எப்படியோ முயன்றும் அவளின் சம்மதம் பெறமுடியாமல் தோல்விதான் கண்டார். முடிவாக கண்டிப்பான கட்டளையால் சென்று நலமாக வாழ வந்தனம் கூறி அனுப்பி வைத்தார்.

சரஸ்வதி தேவியார் மகனுடன் குருராஜ ஆச்சாரியாரைத் தொடர்ந்து சென்று வண்டியில் ஏறி அமர்ந்தாள். வண்டி நகர்ந்தது. வண்டிச் சக்கரத்தின் சுவடுதரையில் பதிந்து செல்வதைபோல சரஸ்வதி தேவியாரின் உள்ளத்திலும் வேதனை சுவடு பதிந்தது. வண்டியில் அழுதபடி அமர்ந்திருக்கும் அன்பு மனைவியையும், ஏதுமறியாத சிறுவனின் சோகமான முகத்தையும் பார்த்தபடியே செயலற்று நின்றுவிட்டார் வெங்கண்ணாச்சாரியார். கண்களின் பார்வையிலிருந்து வண்டி மறைந்ததும் மடத்திலுள்ள அவருடைய வரவேற்பறையை நோக்கிச் சென்று சேர்ந்தார்.

ஸ்ரீ சுதீந்திர தீர்த்தர் இறுதி காலத்தை தொட்டுக் கொண்டிருக்கிறார் என்பதும், அவருக்குபின் பரிமளாச்சாரி

யார் பீடாதிபதியாக பதியேற்கப் போகிறார் என்கிற செய்தியும் தஞ்சை அரசருடைய செவிகளுக்கு எட்டியது. உடனே தஞ்சை அரசர் அவருடைய பரிவாரங்கள் புடைசூழ, முரசம் ஒலிக்க, பரிமளாச்சாரியார் பீடாதிபதியாக பதியேற்பதை சிறப்பிக்கும் பொருட்டு மடத்திற்கு வந்து சேர்ந்தார். ருதிரோத்காரி சமஸர்ண ஆண்டு பங்குனி திங்கள் இரண்டாம் நாள் (1549 அதாவது கி.பி. 1623) பதவி யேற்புக்கான திருநாளாகக் குறிக்கப்பட்டது.

பதவியேற்பு நாளன்று வெங்கண்ணாச்சாரியார் எதிர்கால தூய துறவி என்கிற முறையில் ஆத்ம சரதம் பற்றும் அதை சார்ந்த கடமைகளையும் ஒருங்கே செய்து முடித்தார். பின்னர் முழுவதும் துறந்த துறவி என்கிற முறையில் தூய காவியுடை அணிந்து கொண்டு ஸ்ரீ சுதீந்திர தீர்த்தரை அணுகி அவருடைய திருவடிகளில் விழுந்து வணங்கினார்.

ஸ்ரீ சுதீந்திர தீர்த்தர் வெங்கண்ணாச்சாரியாரை தம் கைகளால் பற்றி எழச்செய்து அங்கே கூடியிருந்த பல நாட்டு அரசர்கள், அரசியர், அரச குலத்தைச் சார்ந்த பெருமக்கள், அந்தணர் குழாம், ஆடவர்கள், பெண்டிர் குழந்தைகள் சூழ்ந்த அனைவர் முன்னிலையிலும் ஓர் உயரிய இருக்கையில் அமரச் செய்து, புனித சால கிரமங்களையும் கடவுளரின் பற் பல விக்கரகங்களையும் அவர் சிரசின் மீது வைத்து எடுத்து பின் கனக அபிஷேகமும், நீரபிஷேகமும் தாமே முன்னின்று செய்துவைத்தார். அங்கே குழுமியிருந்த அந்தணர்கள் வேதங்களை உரக்க ஓதினார். அரண்மனையையும், மடத்தையும் சேர்ந்த பல இசைக் கருவிகள் இன்னிசையை பொழிந்தன. பற்பல வகையான முரசங்கள் ஆர்த்தன. மணிகள் முழங்கின. ஸ்ரீ சுதீந்திர தீர்த்தர் வெங்கண்ணாச்சாரியாரின் கைகளை பற்றி அழைத்துச் சென்று வேறோர் புதிய இருக்கையில் அமரச் செய்து அவருடைய திருச் செவிகளில் பிரணவ மந்திரத்தை ஓதி ஸ்ரீ ராகவேந்திர தீர்த்தர் என்ற சிறப்புப் பெயரை அனைவரது முன்னிலையிலும் சூட்டி வாழ்த்தி யருளினார்.

அங்கு குழுமியிருந்த அனைவரும் மகிழ்ச்சிப் பெருக்கால் கையொலியெழுப்பி ஆரவாரித்ததோடு மட்டுமல்லாமல், "ஸ்ரீ ராகவேந்திர தீர்த்தர் நீடுழி வாழ்க வென்றும் வாழ்த்தினர். பின் ஒருவர்பின் ஒருவராக அரசர்கள் முதல் அனைவரும் பற்பல வெகுமதிகளைதந்து வணக்கமும் மரியாதையும் செலுத்தி நிகழ்ச்சியை சிறப்பித்து கௌரவித்தனர்.

ஸ்ரீ சுதீந்திர தீர்த்தர் தம் குறிக்கோள் நிறைவேறியமைக்காக மிகவும் களிப்படைந்தார். ஆனால் அதற்குபின் அவர் அதிக நாட்கள் வாழ்ந்திருக்க வில்லை. வெங்கண்ணாச்சாரியார் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் என்ற பெயரில் ஸ்ரீ சுதீந்திர தீர்த்தரை தொடர்ந்த சன்னியாசியாகி மட அதிபதியாகிவிட்ட செய்தி புவ்னகிரிக்கு மின்னல் வேகத்தில் எட்டியது.

இச் செய்திகேட்ட சரஸ்வதி தேவியார் அதிர்ச்சிக்குள்ளானதால் அவரது உள்ளமும் உடைந்து சுக்குநூறாகச் சிதைந்தது. கணவரை பிரிந்து ஒரு நாள் கூட உயிரோடு வாழ்வதில் அர்த்தமில்லை என்று கருதிய சரஸ்வதி தேவியார் கணவனின் திருமுகத்தை தொலைவில் இருந்து கூட பார்க்க தமக்கு அனுமதிகிட்டாது என்பதை எண்ணியபோது ஏற்பட்ட வேதனை புயலை தாங்கமாட்டாதவராய் ஓர் கிணற்றில் குதித்து தம்மை மாய்த்துக்கொண்டார்.

கணவர் மீதுபற்றும் பக்தியும் அவர் நெஞ்சில் ஆழப் பதித்திருந்தமையால் உடலை அழித்துக்கொள்ள முடிந்த சரஸ்வதி தேவியாருக்கு கணவரோடு இணைந்து வாழவேண்டும் என்ற ஆசையை விடமுடியாத காரணத்தால் அவருடைய உயிர் ஓர் பேயாக மறு பிறப்பெடுத்து ஸ்ரீ இராகவேந்திரதீர்த்தர் தங்கியிருந்த அறையின் வாயிலில் தோன்றி அழத் தொடங்கியது. ஸ்ரீ ராகவேந்திர தீர்த்தர் அனைத்தையும் அரியவல்ல உயரிய ஞானத்தால் தம் அறை வாயிலில் தோன்றியழும் பேயுருவம் தம் மனைவி சரஸ்வதி தேவியே என்பதையும், அவளுக்கு ஏற்பட்ட இந்த இழிபிறவி

குறித்து பெரிதும் வருந்தினர். அவரை இப் பேயுருவிலிருந்து விடுவிப்பதுதான் தன் தலையாய முதற்கடமை என்று உணர்ந்ததால் அன்றுமுதல் மிகக் கடுமையானமுறையில் ஜபம், தவம். முதலியவைகளை மேற்கொண்டு வாயு பகவானையும் மகாவிஷ்ணுவையும் மனைவியை இந்த இழிந்த நிலையிலிருந்து விடுவிக்கச் செய்யுமாறு பிரார்த்தனைகள் செய்தார். இதன் பயனாக, சரஸ்வதி தேவியார் பேயுருவம் நீங்கி முக்தியை அடைந்தார். துறவியான பின்னர் இராகவேந்திரருக்குக் கிட்டிய மிகப் பெரிய சாதனை என்று இந் நிகழ்ச்சியை குறிப்பிடலாம். இதனால் ஸ்ரீ ராகவேந்திரர் ஆறுதல் கொண்டவராக பெரு மூச்செறிந்தார்.

வெங்கண்ணாச்சாரியார் ஸ்ரீ ராகவேந்திர தீர்த்தர் என்ற பெயரில் துறவறத்தை மேற் கொண்டுவிட்டார் என்ற செய்தி எங்கோ யாத்திரை செய்து கொண்டிருந்த ஸ்ரீ யாதவேந்திர தீர்த்தருடைய செவிகளில் விழுந்தது. இதை யறிந்த ஸ்ரீ யாதவேந்திர தீர்த்தர் பொறாமை கொண்டு வெகுண்டெழவில்லை. "தாம் குருவிடமிருந்து வெகு தொலைவில் இருந்த இச்சமயத்தில் ஸ்ரீ சுதீந்திர தீர்த்தர் நேர்வாய்பட்டிருக்கக் கூடும்; திறமை மிக்க வெங்கண்ணாச்சாரியார் மட்டுமே அவரருகில் இருந்த காரணத்தால் அவரிடம் ஆசிரமத்தையும், அவருடைய பீடாதிபதி பதவியையும் கொடுக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டிருக்கக் கூடும்", என்று தமக்குள் கருதிக்கொண்டார். எனவே யாத்திரையை முடித்துக் கொண்டு கும்பகோணத்திற்குப் புறப்பட்டார். ஸ்ரீ யாதவேந்திர தீர்த்தர் கும்பகோணத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறார் என்கிற செய்தியை கேள்விபட்ட கணத்திலேயே ஸ்ரீ ராகவேந்திர தீர்த்தர் அனைத்து மரியாதைகளுடன் வரவேற்க வேண்டிய ஏற்பாடுகளை கவனிக்க விரைவு கொண்டார். பின் அவருடைய சீடர்களுடன் ஸ்ரீ யாதவேந்திர தீர்த்தரை எதிர் கொண்டழைக்க கும்பகோண எல்லையை அடைந்து, அவர் வந்ததும் அவருடைய திருப்பாதங்களில் விழுந்து வணங்கினர்.

ஸ்ரீ யாதவேந்திர தீர்த்தர் அவரை அள்ளி அணைத்து நெஞ்சாரத் தழுவியபடி, "எனது இனிய சகோதரரே! உன்னை மீண்டும் இந்நிலையில் பார்த்ததில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்," என்றார்.

ஸ்ரீ ராகவேந்திர தீர்த்தர் சகல மரியாதைகளுடன் ஸ்ரீ யாதவேந்திர தீர்த்தரை ஊர்வலமாக அழைத்துச்சென்று ஓர் உயரிய பீடத்தில் அமரச் செய்தார். சிறிது நேரம் இருவரும் தமது நலன்களைப்பற்றி பேசி அளவளாவிய பின்னர், ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் ஸ்ரீ யாதவேந்திரரை நோக்கி, "ஐயன்மீர்! நீவிர் இம்மடத்தைப் பொருத்தவரை என்னினும் மூத்தவர் நம்முடைய குருவான ஸ்ரீ சுதீந்திர தீர்த்தர் இப்பதவியை அலங்கரிக்க முதலில் தாங்களையே தேர்ந்தெடுத்தார். ஆயின் அவரது இறுதிகாலத்தின்போது தாங்கள் இங்கிருந்து வெகு தொலைவில் இருந்ததால் இப் பதவியை எனக்கே தர வேண்டிய நிர்பந்தம் அவருக்கு ஏற் பட்டுவிட்டது. அவருடைய ஆணைக்கும் நல்லெண்ணத்திற் கும் கட்டுப்பட்டவனாக இதனை ஏற்றுக்கொண்டேன். உண் மையை கூறப்போனால் இம்மடம், இப்பதவி இம்மடத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ மூலராமரை வழிபடும் முழுஉரிமை அனைத்தும் தாங்களுக்கே உரியன. எனவே பேருளம் கொண்டு தாங்களே இவைகளை ஏற்றுக்கொண்டு என்னை இப் பெரிய சுமையிலிருந்து விடுவிப்பீர்களாக!", என்றுகேட்டுக் கொண்டார்.

இச்சொற்களைக் கேட்ட ஸ்ரீ யாதவேந்திர தீர்த்தர் மிகவும் மனம் நெகிழ்ந்து போனார், ஸ்ரீ ராகவேந்திரரின் பெருந்தன்மையையும், தன்னலமின்மையையும் கண்டு பெரிதும் வியப்படைந்ததோடு மட்டுமல்லாமல் ஆனந்தக் கண்ணீருடன் ஸ்ரீ ராகவேந்திரரை நோக்கி, "என் இனிய இளவனே! நீ மிகவும் உயர்ந்தவன்; தன்னலமற்றவன்; மேன்மை மிக்கவன்; மென்மையானவன்; நம் குருவிற்கு தொடக்க நாள் முதலாக நீ செல்லமான சீடனாக விளங்கி

ஞாய்! அவர் உன்னை சரியாகவேதான் தேர்ந்தெடுத்து இப் பெரிய பதவியையும் அளித்து அரியணையேற்றி யிருக்கிறார் எனக்கு இப்பீடமோ; மடமோ அல்லது அதைசார்ந்த ஆடம்பரங்களோ ஏதும் வேண்டா! எனக்கு உள்ள ஓர் ஒரு ஆசை நம் மடத்திலுள்ள ஸ்ரீ மூலராமரை தரிசிப்பது ஒன்றுதான். அன்பு கூர்ந்து தரிசிக்க மட்டும் எனக்கு அனு மதி யளிப்பாயானால் இறைவனை கண்குளிர கண்டு வணங்கி இவ்விடம் விட்டு அகல்வேன்,'' என்று வேண்டிக்கொண் டார்.

மறுநாள் ஸ்ரீ ராகவேந்திர தீர்த்தர் ஸ்ரீ யாதவேந்திர தீர்த்தர் வழிபடுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் முன் னின்று செய்து கொடுத்தார்.

ஸ்ரீ யாதவேந்திர தீர்த்தர் மிகுந்த மன ஒருமைபாட்டு டன் மனம், மொழி, மெய் ஆகியவைகளால் ஸ்ரீ மூலராமரை வணங்கி மிகவும் மகிழ்ச்சியும் மன திருப்தியும் அடைந்தவ ராக ஸ்ரீ ராகவேந்திர தீர்த்தரிடம் விடைபெற்றுக் கொண்டு மீண்டும் யாத்திரையை தொடர்ந்தார்.

ஸ்ரீ யாதவேந்திர தீர்த்தர் அதற்குப்பின் வாழ்நாள் முழுவதையும் தல யாத்திரையிலேயே கழித்து இறுதியாக முத்திர மலை என்னும் சிற்றூரில் இறைவனடி சேர்ந்தார். அவ்வூரில் அவருடைய பிருந்தாவனத்தை (சமாதி) இன்றும் காணலாம்.

6. யாத்திரை

ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் தன்னுடைய மடத்தை சேர்ந்த பரிவாரங்களுடன் கும்பகோணத்திலிருந்து தல யாத்திரை மேற்கொண்டு இமயம் முதல் குமரி வரை கிட்டத் தட்ட எல்லா புண்ணிய தலங்களுக்கும் சென்று ஆண்டவனை தரிசித்ததோடல்லாமல் எல்லா புண்ணிய நதிகளிலும் புனித நீராடினார். அவர் யாத்திரை மேற்கொண்ட சமயங் களில் எங்கெங்கெல்லாம் சென்று தங்குகிறாரோ அங்கெங் கெல்லாம் மக்களை கூட்டி த்வைத்திசம் புற்றி விளக்கிக் கூறி தன்வயப்படுத்தி, நல்வழி நடக்க நல்வழிகாட்டி, த்வைதத யிசக் கொள்கைகளை பரப்புவது வழக்கம்.

யாத்திரையில்லர்த சமயங்களில் நேரத்தை வீணாக் காமல் சன்னியாசிகளுடைய கடமைகளை தவறாது செய்வதி லும், நோன்பு இருப்பதிலுமாக ஒழுகி வந்தார். மாதவ சித்தாந்தங்கள் பற்றி தொடர்ந்து பல நூல்கள் எழுதினார். சன்னியாசி வாழ்க்கையை மேற்கொண்ட பிறகு ஐம்பத் தேழு ஆண்டுகள் மடத்தின் பீடாதிபதியாக இருந்தார். அவர் எழுதிய புத்தகங்களின் எண்ணிக்கையும் ஐம்பத்தேழு என்று சொல்லப்படுகிறது. அவற்றில் சிலவே இப்போது கிடைத்திருக்கிறது.

ஸ்ரீ இரர்கவேந்திர தீர்த்தர் அவருடைய ஆத்மீக செல் வாக்காலும், அருளாசி வழங்கும் சக்தியாலும் அனைவரு டைய உள்ளத்தையும் வென்று விடுவதால் பலரும் அவரி டம் வலிய சென்று அரும் பெரும் பரிசு பொருட்களாக நிலம், பணம், வெள்ளி, தங்கம் முதலியவைகளை கொடுத் துதவினர். அவர் பெற்ற அன்பளிப்புகளெல்லாம் மடத்தி னுடைய முன்னேற்றத்திற்காக மடத்தினுடைய பெயருக் காக வாங்கினாரே தவிர சொந்த பெயரில் அல்லவே அல்ல !

நிற்க, அவர் கும்பகோணத்தை விட்டு புறப்பட்டதும் நேராக பில்லாபுரி என்ற நகரில்தான் வந்து தங்கினார். அங்கே பைரவப்பட்டர், வீரபத்திரபட்டர் என்ற இரண்டு சைவ பண்டிதர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் மகானிடம் வாதம் செய்து வெற்றி பெறும்படி சவால் விட்டனர். வாதத்தின் முடிவில் விவாதத்தில் தோற்றுவிட்டால், அவர்கள் இதுவரை பல இடங்களில் பலரிடம் வாதிட்டு பெற்ற சன்மானங்களையும், சொத்துக்களையும் மகானிடம் சமர்பித்து விடுவதாகவும் பந்தயம் கட்டினார். ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் அதற்கு ஒப்புக்கொண்டு பெரிய கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார்.

சன்னியாசம் மேற்கொண்ட பிறகு அவர் எதிர்கொண்ட முதல் தாக்குதல் இதுதான். குழுமியிருந்த கூட்டத்தினர் அனைவரும் மிகுந்த உற்சாகத்தோடும் ஆவலோடும் இருந்தனர். எதிராளிகள் மிகவும் திறமை மிக்கவர்களாதலால் கடுமையான முறையில் வாதம் நடந்தது. பல நாட்கள் தொடர்ந்து நடந்த விவாதத்தின் முடிவில் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் அந்த இரண்டு அத்வைத பண்டிதர்கள் இருவரையும் தோற்கடித்து வெற்றி கண்டார். பின்னர் அத்வைத பண்டிதர்கள் இருவரும் அவர்களுக்கிருந்த பில்லாபுரி மானியங்களை வலிய மகானிடம் மடத்திற்குக் கொடுத்தனர். இந்நிகழ்ச்சி மக்களிடம் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியதோடல்லாமல் ஸ்ரீ இராகவேந்திரர் மீது பக்தியும் ஏற்பட்டதால் அவருடைய புகழ் பல இடங்களிலும் பரவலாயிற்று

பில்லாபுரியிலிருந்து ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் அவருடைய பரிவாரங்களுடன் அருணச்சலப் பிரதேசம் சங்கமுகி, மதுரை, வேதாச்சலம், ஸ்ரீ ரங்கம், நாமகிரி முதலிய இடங்களுக்கெல்லாம் சென்று கடைசியாக இந்தியாவின் தென் முனையாகிய கன்னியாகுமரி வந்தடைந்தார்; அங்கு சில காலம் தங்கி கடும் நோன்பு இருந்ததாகக் கூறப்படுகிறது.

பிறகு கன்னியா குமரியிலிருந்து மேற்குக்கடற்கரை யோரமாகவே வடக்கு நோக்கி பயணத்தை தொடர்ந்து ஸ்ரீ மாதவர் அவதரித்த உடுப்பி வந்தடைந்தார். அங்கு ஓராண்டுகாலம் தங்கி, தினமும் ஸ்ரீ மாதவ சரோவரத்தில் ஸ்நானம் செய்து, பின் ஸ்ரீ கிருஷ்ணரை வழிபாடு செய்து தும் அனந்தேஷ்வர் கோயிலுக்கு வருவது வழக்கமாகக் கொண்டிருந்தார்.

ஸ்ரீ மாதவர் உடுப்பியில் இருந்தபோது அனந்தேஷ்வர் கோயிலின் உட்பிரவாகத்தில் அமர்ந்து சமய கொள்கை கள் பற்றி பாடங்கள் நடத்துவார். அவர் அமர்ந்த இடத் திற்கு நேர் எதிராக ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தரும் அமர்ந்து கொண்டு தினமும் மாதவ சித்தாந்தங்களை சிலமணி நேரங்கள் விளக்கமாக பிரச்சாரம் செய்வார். அதன் பிறகு எழுதத் தொடங்கிவிடுவார். இங்கு இருந்தபோதுதான் சந்திரிகா, தந்திர தீபிகா போன்ற மகான் வியாசராஜரு டைய புத்தகங்களுக்கு முழு விளக்க உரை எழுதியதாகக் கூறப்படுகிறது. அவருடைய அந்த விளக்க உரைகளுக்கு முறையே பிரகாசம் நியவ முக்தவல்லி என்று அழைக்கப் படுகிறது.

ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் உடுப்பியில் இருந்தபோது தான் தன் சொந்த செலவில் நிலம் வாங்கி ஒரு மடத் தையும் கட்டுவித்தார். எட்டு மதங்களின் சன்னியாசிகளை யும் ஒன்றிணைத்து ஸ்ரீ மாதவராம் அமைக்கப்பட்ட இயக் கத்தை ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் தன்னுடைய செல் வாக்கைக் கொண்டு நன்கு வலிமையுடையதாக்கி பலரும் பயபக்தியோடு போற்றி வழிபடும்படி செய்தார். இதனால் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தரை பலரும் ஸ்ரீ வதிராஜ சன்னி யாசிக்கு அடுத்த படியாக உயர்ந்த ஸ்தானத்தில் வைத்துப் போற்றினர்.

ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தரின் ஜெபம், தவம் ஆண்ட வனை வழிபடும் முறை, பரிசுத்தமான அவருடைய வாழ்க்கை

அவர் பெற்றிருந்த கடவுள் தன்மை, த்வைத்த தத்துவங் களை விவாதிக்கும் ஆற்றல் உலகில் உள்ளவர்களை காட்டிலும் திறமை அதிகமாக பெற்றிருந்து பல பயனுள்ள புத்தகங்களை எழுதியமைபோன்ற காரணங்களால் மகானிடம் பலரும் அவர்களாகவே பணிவுடன் தங்களை அர்பணித்துக் கொண் டனர்.

பிருந்தாவனத்தில் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் அமர்ந்து விட்ட பிறகு கூட உடுப்பி மடம் அவருக்கு மரியாதை செலுத்தும் பொருட்டு உணவு உண்ணுமுன் அவர் நினைவாக சுலோகங்களை முணுமுணுப்பதை ஐதீகமாகக் கொள்ள உத்தரவிட்டது. அந்த ஐதீகமுறை இன்றும் நடைமுறையில் இருந்து வருகிறது.

மகான் ஸ்ரீ இராக்வேந்திர தீர்த்தர் உடுப்பியிலிருந்து மைசூருக்கு வந்தார். அங்கு எல்லா புண்ணிய தலங்களுக் கும் சென்று புண்ணிய நீராடினார். பின் ஹரிகர் வந்து சில காலம் தங்கினார். அங்கு தினமும் ஸ்ரீ ஹரிகரேஸ்வரரை முழுமனதோடு வழிபட்டார். அங்கு பலரும் அறிந்த தீர்க்காச்சாரியாரை (இவருடைய பிருந்தாவனம் கோல் பர்கா என்ற இடத்திற்கு அருகாமையில் உள்ள மளகேடா என்ற ஒரு கிராமத்தில் உள்ளது) பக்திப் பரவசத்தோடு தரிசித்தார். சிலகாலம் அங்கேயே தங்கியிருந்து அனுபாஷ் யம் பற்றி விளக்க உரை எழுதினார்.

தென்பகுதியில் தீர்த்தயாத்திரையை முடித்துக்கொண்டு வடக்கு நோக்கி பயணம் மேற்கொண்டார். முதலில் காசி, கயா, பிரயகா போன்ற இடங்களுக்கும், பின் நேராக பாதரிக்ஷாரம் சென்றார். அங்கு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மாதவாச் சாரியாரிடமும், சகே பதரயன் என்றழைக்கப்படும் ஞானி வேதவியாசரிடமும் தரிசனம் பெற்றார். இருவரையும் ஆழ்ந்த பக்திப் பரவசத்தோடு தொழுது அவர்களுடைய அருளாசிகளையும் பெற்றார்.

பிறகு தென் திசையிலுள்ள அயோத்திக்கு வந்து, பின் பிருந்தாவனம் சென்றடைந்தார். பிருந்தாவனத்திலிருந்து கோலாப்பூர் சென்று மகாலக்ஷ்மியை வணங்கி பின் பண்டரிபுரம் சென்றடைந்தார். அங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ விட்டல், ஸ்ரீ ருக்குமாயி என்கிற தெய்வங்களை தன்னை மறந்த ஆனந்தகளிப்புடன் தொழுதார்.

பிறகு பண்டரிபூரிலிருந்து திருப்பதிக்கு யாத்திரையை தொடர்ந்தார். வரும்வழியில் இப்போது ஆதோணி என்றழைக்கப்படும் அத்வைணி என்ற இடத்தில் தங்கினார். அவ்விடத்தின் அமைப்பையும் அமைதியான சூழ்நிலையையும் கண்ட மாத்திரத்திலேயே மந்திரத்தால் கட்டுண்டவர் போலானார். அவர் சர்வ ஞானமும் கொண்டவராதலால் அவ்விடத்தின் மேற்குப் பகுதி ஒரு புண்ணியதலம் என்பதை உணர்ந்து மறு முறை அவ்விடம் வந்து பார்க்க முடிவும் செய்தார். அப்போதுதான் அத்வைணிக்கு அருகாமையிலிருந்த ஒரு சிறிய கிராமத்திலிருந்து ஒரு சிறுவன் திடீரென்று வந்து மகானின் அருளாசியையும் பெற்றான்.

கண்டநதி என்ற சிறிய ஊர் அத்வைணிக்கு அருகாமையில உள்ளது. அங்கே வெங்கண்ணா என்ற அனாதை சிறுவன் தாய்மாமன் வீட்டில் வாழ்ந்து வந்தான். அவனுடைய மாமன் ஒரு விவசாயி ஆதலால் காளைகளும், எருமைகளும் மற்றும் பல பசுக்களும் வளர்த்துவந்தார். அவனுடைய அத்தை அவன் மீது மிகுந்த இரக்கம் கொண்டு உணவு, உடை, இருப்பிடம் அனைத்தும் தந்து மந்தை மேய்ப்பவனாக வீட்டிலேயே வைத்துக்கொண்டாள்.

ஆண்டுகள் பல உருண்டோடின. சிறுவன் வெங்கண்ணா நன்கு வளர்ந்து பெரியவனானபோது தான் அக்கிராமத்தில் மந்தை மேய்ப்பவர்களுள் அவன் மட்டுமே பிராமணன் என்பதை உணர்ந்தான். பொதுவாக எல்லா பிராமணர்களும் உபநயனம் முடிந்த பிறகு நேரே கல்வி கற்பதற்காக குரு

குலம் செல்வது வழக்கம். ஆனால் பல ஆண்டுகளுக்கு முன்பே வெங்கண்ணா உபநயனம் பெற்றிருந்தும் குருகுல கல்விக்கு போக அவனுக்கு வழியில்லாமல் போயிற்று. அவனுக்கு கல்வி கற்க வேண்டும் என்கிற ஆசை மிகுதியாகயிருந்தும் அவனுடைய அத்தையார் இந்த மாடுகளை மேய்ப்பார்கள் ?" என்று கேட்டு அதட்டி மிரட்டியதன் காரணமாக அவன் ஆசை நிராசையாகிவிட்டது. அவன் அவ்வேலையை செய்ய மறுத்தால் உண்ண உணவு இருக்க இடம், அணிய ஆடை எதுவுமே கிடைக்காமல் போய்விடுமே ! இதன் காரணமாக அவன் மிகவும் வேதனைப் பட்டான். பிராமணனாக பிறந்திருந்தும் படிக்க வழியில்லையே என்று வேதனைபட்டு பல சமயங்களில் அழுததுமுண்டு. இந்த ஏக்கம் அவனது இதயத்தை புண்ணாக்கிக் கொண்டேயிருந்தது. இருந்தாலும் பசி போக்க உணவு கிடைத்ததன் காரணமாக மனதை தேற்றிக்கொண்டான்.

தினமும் காலையில் பசுக்களையும், எருதுகளையும் மேய்ப்பதற்காக ஆற்றங்கரைக்கு ஓட்டிச் செல்வான். மாலையில் அவைகளை திரும்ப ஓட்டி வந்து தொழுவத்தில் கட்டிவிடுவான் இதுதான் அவனுடைய அன்றாட வேலை.

ஒருநாள் எப்போதும் போல மாட்டுமந்தையை மேய்ப்பதற்காக புல் மைதானம் ஓட்டிச்சென்றான். அங்கு அவனுடன் மந்தை மேய்க்கும் சிறுவர்களுடன் ஓடியாடி விளையாடி பின் உச்சி வேளையின்போது தன்னுடன் கொண்டு வந்திருந்த உணவை உண்டு முடித்துவிட்டு இளைப்பாறுதற் பொருட்டு ஒரு பெரிய மரத்தின் கீழ் படுத்தான். உண்ட களைப்பு உறக்கம் அவனை ஆட்கொண்டுவிட்டது. ஓரிரண்டு மணி நேரம் கழிந்தபோது மரத்தின் நிழல் விலகிச்சென்றதால் சூரியனின் கதிர்கள் அவனது முகத்தில் படர்ந்தது, அந்த மரத்தினடியில் ஒரு பெரிய நாகம் வாழ்ந்து வந்தது. அந்த நாகம் வெங்கண்ணாவின் நிலையை கண்டதும் ஊர்ந்து வந்து படமெடுத்து, வெங்கண்ணாவின் முகத்தில் வெயில்படாமல் மறைத்து நிழல் ஏற்படசெய்தது.

வெங்கண்ணுவுடன் மந்தை மேய்க்கும் சிறுவர்கள் இதனை கண்டதும் பயத்தால் கிராமத்தை நோக்கி ஓடிச் சென்று 'கண்டதை அவனுடைய மாமாவிடம் கூறினர். அவர்களுடைய கூற்றை கேட்ட வெங்கண்ணுவின் மாமாவும் அத்தையும் வெங்கண்ணு பாம்பு கடித்து இறந்துவிட்டிருக்கக் கூடுமென யூகித்து இருவரும் அம்மரத்தடி நோக்கி ஓடிவந்து பார்த்தனர். வெங்கண்ணுவோ எதுவுமே தெரியாதவன் போல உறக்கம் கலைந்து எழுந்து கொண்டிருந்தான்.

வெங்கண்ணு உயிருடன் இருப்பதைக் கண்டதும் அவனுடைய அத்தையும் மாமாவும் சந்தோஷத்தால் அவனை கட்டித் தழுவிக்கொண்ட தோடல்லாமல் நடந்ததை சுருங்கக் கூறி இனிமேல் அம்மரத்தடியில் படுக்கவேண்டாமென்றும் அறிவுரை கூறினர்.

இந்த நிகழ்ச்சி அக்கிராமம் முழுவதும் பரவியது. அனைவரும் வெங்கண்ணு ஆண்டவனின் அருளாசி பெற்றவன் என்றும் எதிர்காலத்தில் பெரியவனாகத் திகழ்வான் என்றும் கூறினர். அன்று முதல் அவனுடன் மந்தை மேய்க்கும் நண்பர்கள் அவனுக்கு மரியாதை தந்து பக்தியோடு வணங்கவும் செய்தனர். ஆனால் வெங்கண்ணுவிற்கு, படிப்பு இல்லாமல் எப்படி பெரியவனாக முடியும் ?, என்று ஐயம் எழுந்ததால் அவனுடைய எதிர்காலம் அவனுக்கு பெரும் பிரச்னையாகத் தோன்றியது.

ஒருநாள் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் என்கிற ஒரு பிராமண சன்னியாசி அத்வைனிக்கு வந்திருப்பதாகக் கேள்விப்பட்டான். அவர் அருளாசி வழங்குவதிலும், சபைப் பதிலும் அள்விற்கதிகமான சக்தி கொண்டவரென்றும் கேள்விப்பட்டிருந்தான் எனவே அவரை வணங்கி அருள் பெற தீர்மானித்துக் கொண்டான் வெங்கண்ணு.

அவ்வாறு தீர்மானித்த மறுநாளே, வெங்கண்ணு கண்ட நதியிலிருந்து அத்வைனிக்கு கால் நடையாக புறப்பட்டுவிட்டான் மாலையில் மகானை சந்திப்பதற்காக. மாலையில்யாரும் எதிர்பாராத விதமாக ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தரின் உள்ளறையில் புகுந்து அவர் காலடியில் விழுந்து வணங்கி பணிவுடன்கைகளை கட்டியபடி எழுந்து அவர் முன் நின்ருன் வெங்கண்ணு.

மகான் அச்சிறுவனை கண்ட மாத்திரத்தில் அதிசயித்துப் போனர். அவனுக்கு நல்ல எதிர்காலமிருப்பதை அந்த கனிவான முகத்தில் கண்டார். பின் கனிவாக "நன்று சிறுவனே... நீ யாரென்று யாம் அறிந்து கொள்ளலாமா? என்று வினவினர்,

"வணக்கத்திற்குரிய சுவாமிகளே!...... நான் ஒரு கிராமத்துச் சிறுவன்; பெயர் வெங்கண்ணு; எனக்கு தந்தையுமில்லை; தாயுமில்லை; நான் பிராமண குலத்தில் பிறந்து உபநயனம் பெற்றிருந்தும் கல்வி கற்கும் வாய்ப்பை பெருதவன்; எனக்குக் கல்வி கற்க வேண்டுமென்று தணியாத ஆசையாயிருக்கிறது. தயவு செய்து எனக்குக்கருணை காட்டுவீர்களாளுல்........."

மகான் அவ்வறியாச் சிறுவனின் கூற்றை கேட்டு புன்னகைத்து, "நன்று என் குழந்தாய்; நீ எப்போதெல்லாம் கஷ்டத்திலிருக்கிருயோ அல்லது குழப்பமான சிக்கலில் உழன்று தவிக்கிருயோ அப்போது என் பெயரை முணுமுணுப்பாயாளுல் உடனடியாக கஷ்டத்திலிருந்து விடுபடுவாய்; என்று கூறி அருளாசிவழங்கினர். அதோடு புனிதப்படுத்தப்பட்ட அரிசியில் கொஞ்சம் அவனிடம் தந்தார். வெங்கண்ணு அதை பெற்று நம்பிக்கையோடும் பய பக்தியோடும் தலையில் போட்டுக்கொண்டு கிராமத்திற்குத் திரும்பினன்.

அந்நிகழ்ச்சி நடநத மறுநாள் ஸ்ரீ ராகவேந்திர தீர்த்தர் யாத்திரையை தொடர்ந்து திருப்பதி சென்றடைந்தார்

ஸ்ரீனிவாசப் பெருமானிடம் தரிசனம் பெற்றார். தெய்வ பக்தியும், சுத்தமும், அமைதியும் நிறைந்த அவ்விடத்தை கண்டு பேரானந்தம் கொண்டார். அங்கு சில காலம் தங்கி மகிழ்ச்சியோடும் திருப்தியோடும் ஆண்டவனை வழிபட்டார். திருப்பதியில் அவருடைய சொந்த செலவில் மடம் ஒன்றை யும் கட்டுவித்தார். பின் அங்கிருந்து கலஹஸ்தி, காஞ்சி போன்ற இடங்களுக்குச் சென்றார். அதோடு இந்தியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள எல்லா புண்ணிய தலங்களுக்கும் சென்றார். கடைசியாக அவருடைய சொந்த இடமான கும்பகோணம் வந்து சில ஆண்டுகள் அங்கேயே தங்கியிருந் தார்.

அவர் அங்கு தங்கியதன் நோக்கம் அவர் எதை பற்றி யெல்லாம் எழுதத் துடித்தாரோ அதை பற்றி எழுதுவதற் காகத்தான். மொத்தமாக மகான் ஐம்பத்திஎட்டு புத்த கங்கள் எழுதியதாகக் கூறப்படுகிறது. இன்னும் சிலர் அவர் எழுதிய புத்தகங்கள் நாற்பத்தி நான்கு என்று கூறுகின்றனர். அவைகளில் தற்போது இருபத்திமூன்று புத்தகங்களே கிடைத் துள்ளன. அவற்றில் சிலவே அச்சிட்டு வெளியிடப்பட் டுள்ளன. இன்னும் பல மந்திராலய மடத்தில் உள்ள தஸ்தாவேஜுக்கள் வைக்கப்பட்டுள்ள அறையில் அப்படியே இன்னும் இருக்கின்றன.

ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் அவருடைய முயற்சியால் எழுதப்பட்ட புத்தகங்களில் தற்போது கிடைக்கக் கூடிய நூல்கள் பின் வருமாறு.

1. பரிமளம் :— இது அவர் மாணவனாக இருந்த போது எழுதியமையாகும். ஆனால் அவர் சன்னியாசம் மேற்கொண்ட பிறகு மீண்டும் முழுமையாகவும் விளக்க மாகவும் எழுதியதாகக் கூறப்படுகிறது.

2. பிரகாசம், 3. தத்துவமஞ்சரி, 4. கீதா விவ ர்த்தி, 5. சர்வ சமர்பண கதயம், 6. பாவதீபிகம்

7. தாஷ்பிரகன்ன திப்பனே, 8. தாஷ் உபநிஷ கந்தர்
நம், 9. மந்தரார்த்த மஞ்சரி, 10. பீத போதின்
11. வதவளி திப்பனே, 12. பிரத சங்கல்ப கதய
13. பருஷ சூக்த வியாக்கியனம், 14. தர்க்க தாண்ட
திப்பனே 15. அம்பரன்ஸ் சூக்த விவிரத்தி, 16. இரவி
கர்ப சூக்த வியாக்கியனம், 17. தியவ முக்தவளி, 18
தந்திர தீபிகம், 19. பிரமண பததி, 20. ராமவிருத்
சரித்திர மஞ்சரி, 21. பாவ சங்கரகம், 22. யுக்த ச
கரஹ மீமம்சம், 23. வேத த்ரய விவரத்தி.

இதோடு மட்டுமல்லாமல் நன்கு வேதங்களைபற்றி மு
ஷமையான விளக்கம் எழுதியதாகவும், அவைகள் திருட
பட்டு எடுத்துச் செல்லப்பட்டு விட்டதாகவும் கூறப்படுகிற
ஆனல் அது அயல் நாட்டில் இப்போதும் இருக்கிறது.

7. அற்புதங்கள்

பொதுவாக சாதுக்கள், சன்னியாசிகள், முனிவர்கள், மக்கள் அவர்கள் வழி நடந்து சீடர்களாக மாறவேண்டும் என்பதற்காக பல அற்புதங்கள் பலரும் அதிசயிக்கும்படியாக இருக்கலாம்; அல்லது துன்பங்களால் அவதியுரும் மக்களுடைய துன்பங்கள் போக்கி அமைதியான வாழ்வை ஏற்படுத்துவதாக இருக்கலாம்; அல்லது அவர்கள் விரும்புவதை விரைவில் கிடைக்கச் செய்வதாக இருக்கலாம். இவைகளனைத்தும் அவர்களுடைய அருளாசியினுல் நிகழ்பவைகளாகும்.

சாதுக்கள், சன்னியாசிகள், முனிவர்கள் இவர்களில் இருவகையினர் உள்ளனர். ஒரு வகையினர் தங்களுடைய சுயநலன் கருதியே அற்புதங்களை நிகழ்த்துவர். மற்றொரு வகையினர் மக்களின் நலம் கருதியும், சமய நோக்கம் கொண்டும் அற்புதங்களை நிகழ்த்துவர். முதல் வகையினைச் சார்ந்த சாதுக்களும், சன்னியாசிகளும், முனிவர்களும் சூன்யம், மெஸ்மரிசம் (மயக்கி தன்வயப்படுத்தல்) போன்ற முறைகளால் சைத்தான்களால் தூண்டிவிடப்பட்ட கெட்ட நோக்கங்கள் கொண்டு, மக்கள் புரிந்து கொள்ள முடியாத முறையில் அறியாத மக்களிடம் அற்புதங்களை நிகழ்த்தி அவர்களை பெரியவர்களாகவும், பூஜைக்கத்தக்கவர்களாகவும் நம்பும்படி செய்து பலரை அவர்களது சீடர்களாக மாற்றுவர்.

மற்றொரு வகையை சார்ந்தவர்கள் மேலே குறிப்பிடப்பட்ட தீய கலைகள் பற்றி ஏதுமறியாதவர்கள். புண்ணியங்களை சேர்ப்பதற்காக அவர்கள் உலகில் துன்பப் படுபவர்களுக்கு அருளாசி வழங்கி மகிழ்ச்சியை கொடுப்பவர்கள் உண்மையான புண்ணியவான்கள் அவர்களுடைய பக்தர்களுக்கும், சீடர்களுக்கும் அவர்கள் சேமித்த புண்ணியங்களை

தந்து, உலக துன்பங்களிலிருந்தும் வேதனைகளிலிருந்தும் விடுபட எந்தவித கைமாறும் எதிர்பார்க்காது அருளாசி வழங்கி அவர்களை சமயவழியில் நடத்தி காப்பதுவே கடமையாகக் கொண்டவர்கள்.

ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் அவர்களும் இத்தகைய வகையை சேர்ந்தவர்களுள் ஒருவராவார். அவருடைய பக்தர்களுக்கு ஆசி வழங்குவதன் மூலம் கடவுளின் சக்தியை சாதித்துக் காட்டியவர். அவர் மக்களினூடே பலரும்காணும் படி வாழ்ந்த போதும், பிருந்தாவனத்தில் நுழைந்த பிறகும் கணக்கிலா பக்தர்களுக்கு அருளாசி வழங்கியிருக்கிறார். ஏன்? இன்னும் பல ஆண்டுகளுக்கு அருளாசி வழங்கிக் கொண்டிருப்பார்.

மனித வரலாற்றில் இதுவரை இரண்டே சன்னியாசிகள் தான் வாழ்ந்தபோதும், உயிருடன் பிருந்தாவனத்தில் நுழைந்த பிறகும் பலவகைபட்ட துக்கங்களிலிருந்து அவர்களுடைய பக்தர்களை விடுவித்தவாறு இன்றும் வாழ்ந்து வருகின்றனர். முதலாமவர் ஜோதி மடத்தை சேர்ந்த ஸ்ரீ வதிராஜ தீர்த்தர் ஆவார். உடுப்பியில் உள்ள எட்டு மடங்களில் ஒன்று ஜோதிமடம். அவருடைய பிருந்தாவனம் கார்வார் மாவட்டத்தில் உள்ள சிர்ஸி என்ற இடத்திலிருந்து பதிமூன்று மைல் தொலைவில் உள்ள சோந்தா என்ற சிறிய கிராமத்தில் உள்ளது

அம் மகான் சமஸ்கிருதத்தில் மிகுந்த தேர்ச்சி பெற்றவர். கன்னடத்தில் பிறவிக் கவிஞரும்கூட. உயர்ந்த என்றும் நிலைத்திருக்கும்படியான நல்ல தெளிவான பல புத்தகங்களை சமஸ்கிருதத்தில் எழுதியுள்ளார் நூற்றுக் கணக்கான பாடல்களை கன்னடத்தில் இயற்றியுள்ளார். இவர் ஸ்ரீ மூல வாயுவின் நான்காவது அவதாரமாகும்.

அடுத்த கல்ப யுகத்தில் இவர் ஸ்ரீ வாயுவின் சிம்மாசனத்தில் அமர்ந்து கொலுவிருப்பார். "ருக்மினேஷ விஜ

யம்", என்ற அவரது புத்தகத்தில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது என்ன வென்றால், துவாபர யுகத்தில் குண்டின பரத்திலிருந்த ருக்மணி தேவியிடமிருந்து துவாரகையில் இருந்த ஸ்ரீ கிருஷ்ணனுக்கு சில மணி நேரத்தில் கடிதத்தை அவர் எடுத்துச் சென்று கொடுத்தாராம். இந்த வதிராஜ தீர்த்தர் இன்றும் அவருடைய பிருந்தாவனத்தில் வாழ்ந்து வருகிறார். அவர் பிருந்தாவனத்தில் நுழைந்த பிறகு அவர் மீது தீவிர பக்தி கொண்ட சீடர்களுக்கு பல ஆண்டுகள் இடைவேளைக்குப் பிறகு இருமுறை காட்சியளிப்பார். அவருடைய பக்தர்களுக்கு அருளாசி வழங்குதற் பொருட்டே அவர் பல்லாண்டுகள் அங்கு வாழ்ந்து கொண்டிருப்பதாக றுதியாக் கூறப்படுகிறது.

அடுத்ததாக, இன்றும் உயிருடன் வாழ்ந்தபடி அருளாசி வழங்கிக் கொண்டிருக்கும் சன்னியாசி ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தராவார். அவர் பிருந்தாவனத்தில் இருப்பதே அவருடைய பக்தர்களின் வேதனைகளையும் துன்பங்களையும் நீக்கியருளுவதற்காகத்தான். இதுவும் சாதாரண மக்களுக்கு அவர் செய்யும் அற்புதங்களில் ஒன்றெனலாம்.

இவ்விரு சன்னியாசிகளை தவிர வேறு எந்த சன்னியாசிகளும், சாதுக்களும், முனிவர்களும் வேதனைபட்டுக் கொண்டிருக்கிற மக்களை துன்பங்களிலிருந்து விடுவித்து அருளியதாகக் கூற முடியாது. ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் ஸ்ரீ மூல ராமரின் தீவிர பக்தர் ஆவார். அவர் இந்த அவதாரத்தை எடுத்ததன் நோக்கமே அவருடைய அனுஷ்ட புண்ணியங்களை பலருக்கும் கொடுத்தருளுவதற்காகத்தான். அவரிடம் உள்ள அனுஷ்ட புண்ணியங்கள் அனைத்தும் தீர்வதற்கு அவருக்கு எழுநூறு ஆண்டுகள் தேவை படுகின்றன. ஆகவே அவ்வளவு நீண்டகாலம் வரை அவர் பிருந்தாவனத்தில் தங்கியிருப்பார் என்பது உறுதி.

நன்று, கதையை தொடர்வோமாக. ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் கும்பகோணத்தில் தங்கியிருந்த அந்த சில ஆண்டு

களில் அவர் எழுத நினைத்ததனைத்தையும் எழுதி முடித்தார். அப்போது தஞ்சை மன்னர் ஸ்ரீ ரகுநாத ராயர் இறந்துவிட்டதால் அவருடைய வழித் தோன்றல்கள் ஆட்சி நடத்திவந்தனர். அவர்கள் மிகவும் பலவீனமாக இருந்தமையால் அடிக்கடி இந்துக்களுக்கும், முகமதியர்களுக்கும் தொடர்ந்து போர்கள் நிகழ்ந்த வண்ணம் இருந்தன. அதுமட்டுமல்ல; தக்காணத்திலிருந்து மராட்டிய மன்னரான சத்ரபதி சிவாஜி அவருடைய வெற்றியை நிலை நாட்டுதற் பொருட்டு தென்பகுதி நோக்கி விஜயம் செய்தார். இதனால் நாடு அமைதியிழந்திருந்தது சமய நிலையங்களும், இந்து மடங்களும் அபாயத்தில் சிக்கித் தவித்தன. ஆகவே ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் வடபகுதிக்கு சென்று எங்கேனும் நிலையாக தங்கி விட எண்ணி கும்பகோணத்தை விட்டு நீங்க தீர்மானித்தார். அப்போது அவருக்கு அத்வைணியையும் அதனை சார்ந்த பகுதிகளைவும் பார்க்க வேண்டும் என்ற யோசனை தோன்றியது.

அந்த சமயத்தில் தான் அத்வைணியில் விஜயநகர பேரரசு வீழ்ச்சியுற்று முகமதியர்களுடைய ஆட்சி உருவாகத் தொடங்கியது அதனை சார்ந்த பகுதியை நான்கு முகமதிய அரசர்கள் ஆளத்தொடங்கினர். கோல் கொண்டா அரசர் அத்வைணி, ரெய்ச்சூர், முட்கல் போன்ற இடங்களை ஒன்றிணைத்து அவருடைய ஆட்சியின் கீழ் கொண்டுவர பெருமுயற்சிகள் எடுத்துக் கொண்டிருந்தார். இந்த முக்கியமான கோட்டைகளனைத்தும் அகமது நகர் அரசருடைய எல்லையில் இருந்தன. இருந்தாலும் அந் நான்கு கோட்டைகளின் உரிமையை பெற பெரும்பாடு பட்டுக்கொண்டிருந்தார்.

கோல் கொண்டா அரசர் திறமையும் வலிமையும் நிறைந்த அஸதுல்லா கான் என்பவரை அந்த நான்கு கோட்டைகளுக்கும் கவர்னராக்கி பாதுகாப்பின் பொருட்டு ஒரு பெரும்படையையும் அவருக்குக் கீழ் இயங்கும்படி கொடுத்திருந்தார். அஸதுல்லா கான் அந்த கோட்டைகளையும் அதனைசார்ந்த பகுதிகளையும் அவரே பாதுஷாபோ

சகல உரிமையுடனும் அதிகாரத்துடனும் ஆட்சி செலுத்த லானார்.

ஒரு முறை அகமது நகர் படைகள் திடீரென்று அஸதுல்லா கானின் எல்லைக்குள் புகுந்தது. இதனால் அஸதுல்லா கான் அவருடைய பெரும்படைகளை அனுப்பி அகமது நகர் படைகளை அடித்து விரட்டும்படி கட்டளையிட்டார். அதோடு மட்டுமல்லாமல் அவரது படைகளுக்கு இன்னும் பலம் வேண்டி அவரே பல இடங்களுக்குச் சென்று போருக்குத் தேவையான ஆயுதங்கள், பொருள்கள், பணம் முதலியவைகளையும், படைவீரர்களையும் திரட்டினார். அவருடைய தலைநகரான அத்வைணியை விட்டு முரசுகள் முழங்க பேரரசர் பாதுஷா போல பட்டத்து யானைமீது அமர்ந்து கொண்டு அவருடைய ஆலோசகர்களும், அவரை சார்ந்தவர்களும் பின் தொடர பல நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் சென்றார். அவர் சென்ற இடங்களிலெல்லாம் அவருக்கு அளிக்கப்பட்ட மனம் கனிந்த வரவேற்பை ஏற்றுக் கொண்டதும் படைகளுக்கு தேவையான இளைஞர்களை தேர்ந்தெடுப்பது தான் அவருடைய வழக்கம்.

அத்வைணியிலிருந்து புறப்பட்டு ஊர்வலமாக தொடர்ந்து வந்தபோது கண்டநதி என்ற கிராமத்திற்கும் வந்தனர். அனைத்து இளைஞர்களும், முதியவர்களும் அஸதுல்லாகானுக்கு நல்வரவேற்பு அளித்தற் பொருட்டு ஊர் எல்லையில் வந்து தயாராக நின்று கொண்டிருந்தனர். முரசு முழங்க, மற்றும் ஏனைய இசைக்கருவிகள் ஒலிக்க ஆரவாரத்துடன் அஸதுல்லா கான் கண்ட நதி கிராமத்தின் எல்லையை வந்தடைந்த போது வீரனொருவன் குதிரையில் வேகமாக வந்து அஸதுல்லாகானின்முன் இறங்கி மரியாதையுடன் பணிவான வணக்கத்தை தெரிவித்ததும் முத்திரையிட்ட கடித உறை ஒன்றை அஸதுல்லா கானிடம் நீட்டினான்.

அஸதுல்லா கான் யானையின் மீது அமர்ந்த படியே அவ் வீரன் கொடுத்த முத்திரையிட்ட உறையை வாங்கி அவ

னுக்கு அருகே நின்று கொண்டிருந்தவர்களை ஒரு முறை நோட்டமிட்டான். அப்பட்டத்து யானைக்கருகில் நாகரீகமான உடையணிந்த காண்போரை எளிதில் கவரக்கூடிய புத்தி கூர்மையுள்ளவன் என்பதை பிறருக்கு தெரிவிக்கக் கூடிய அழகான பிரகாசமான கண்களுடன் கூடிய ஒரு இளைஞன் நின்று கொண்டிருந்தான். அவனை கண்ட மாத்திரத்தில் கலவரப்பட்ட அஸதுல்லா கான் பக்கத்திலிருந்த பாது காவலர்களிடம் கூறி அவனை உயரே தூக்கும்படி கட்டளையிட்டான்.

அந்த கவர்ச்சி பொருந்திய அழகிய இளைஞன் வேறு யாருமல்ல; சில ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தரால் அருளப்பெற்ற வெங்கண்ணதான். வெங்கண்ணவை யானை மீது அஸதுல்லாகானுக்கு பக்கத்தில் அமரச்செய்தனர். அஸதுல்லா கான் முத்திரையிடப்பட்ட அந்த உறையை அவனிடம் தந்து திறந்து என்ன எழுதியிருக்கிறது என்பதை படிக்கும்படி கூறினன். அஸதுல்லர்கானின் ஆணையை கேட்டதும் வெங்கண்ண பயத்தால் நடுங்கிப் போனன். பயத்தால் நடுங்கியபடியே அவனுக்கு எழுதப் படிக்க தெரியாது என்றும் கூறினன். அது கேட்ட அஸதுல்லா கான் ஆத்திரமடைந்து மிருக வெறி கொண்டு "முட்டாளே .... நீ பிராமணன் இல்லையா?" என்று கத்தினன். அவனுடைய பார்வையோ கொடூரமாக தோற்றமளித்தது.

"ஆமாம் பாதுஷா... நான் பிராமணன்தான். ஆனல்..."
"பிராமணன் என்ருல் நிச்சயம் எழுதப் படிக்கத் தெரிந்திருக்குமே? நீ மோசக்காரன்... பொய்யுரைக்கிருய்!......ம் உறையை திறந்து படி...... இல்லையேல் உன்னை இங்கிருந்து கீழே தள்ளி என்னுடைய யானையால் மிதிக்கப்பட்டு நாசமாக்கப்படுவாய்......"

வெங்கண்ணவிற்கு அவனுடைய முடிவுகாலம் அங்கே அப்போதே வந்துவிட்டது என்றுதான் தோன்றியது. அப்

போர்து ஸ்ரீ இரர்கவேந்திர தீர்த்தரின் நினைவு வந்தது அவ னுக்கு, மனதிற்குள்ளாகவே, ஓ.....ஸ்ரீ குருதேவா ? என்னை இந்த இறப்பின் பிடியிலிருந்து காத்தருளக்கூடியவர் நீங்கள் மட்டுமே... என்னுடைய தெய்வமே .. ஸ்ரீ இராகவேந்திர சுமாமிகளே ..'' என்று முனுமுனுத்தபடி உரையை திறந்து கடிதத்தை எடுத்து பிரித்தான். அவனது உடலில் அபரிமித மான சக்தி ஒன்று உருவாகுவது போன்ற உணர்வை உணர்ந்தான். அவன் ஒரு புதிய மனிதனுக மாறுவது போன்ற பிரம்மை. கடிதத்தில் எழுதப்பட்டிருந்த பார்ஷி யன் எழுத்துக்களை அவனுல் படிக்க முடிந்தது அவனையே அவனுல் நம்ப முடியாதபடி இருந்தது. கடிதத்தை முழுவ தும் படித்து முடித்ததும் அஸ்துல்லா கானிடம் அதை திரும்பத் தந்தான்.

அந்த கடிதத்தில் அஸதுல்லா கானின் படைகள் வெற்றி பெற்றுவிட்டது என்றும், மேலும் படைகளை அனுப்பத் தேவையில்லை யென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதை கேட்ட அஸதுல்லா கான் மிகவும் மகிழ்ச்சியடைந்து வெங் கண்ணுவுடன் அத்வைணிக்கு திருப்பத் தீர்மானித்தான். எனவே வெங்கண்ணுவை அவர்களுடன் தொடர்ந்து அத் வைணிக்கு வரும்படி கட்டளையிட்டான். அதன்படி வெங் கண்ணு அஸதுல்லா கானின் தர்பாருக்கு வந்து சேர்ந்தான்.

வெங்கண்ணு அவனுடைய அரசியல் திறமையாலும், சூழ்ச்சியாலும், தைரியத்தாலும் பிறகு அஸதுல்லா கானின் வலது கையாகவும், அந்தரங்க காரிய தரிசியாகவும் விளங் கினுன். இரண்டாண்டுகளுக்குப் பின் அத்வைணியின் திவானுக பதவி யேற்று "திவான் வெங்கண்ணு," என்று பலரும் போற்றிப் புகழும்படியாக விளங்கினுன். அப்போது அழகான பெண்ணை மணம் செய்து கொண்டு பல குழந்தை களுடன் பெரிய அரண்மனையில் மகிழ்ச்சியாய் வாழ்ந்து வந்தான்.

8. உயிர்த் தெழ செய்தல்

ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் யாத்திரை செய்த தல
களில் அத்வைனி என்ற இடமும் ஒன்று.

சுவாமிகள் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் அவருடைய மட
பரிபாலனத்தில் இருக்கும் அனைத்து சீடர்களுடன் கும்
கோணத்திலிருந்து மெல்ல வடதிசை நோக்கி பயணம் மே
கொண்டார். சில நாட்களுக்குப் பிறகு அவர் கருநாட
ம நிலத்தில் தார்வாருக்கு அருகே உள்ள ஹுப்
(HUBLI) க்கு வந்து சேர்ந்தார்.

இப்போது இருக்கும் பழைய ஹுப்ளிதான் ஹுபள்
(HOOBALLI) என்ற பெயருடன் அப்போது விளங்கியது
அவ்வூர் இயற்கை வனப்பு மிக்க அழகாகவும் செழுமை
யாகவும் விளங்கியதால் அப்பெயர் பெற்றது.

அவ்வூரிலும், அவ்வூரை சார்ந்த சுற்றுப்புற பிரதேசங்
களும் கண்ணை கவரும்படியான வனப்புடன் நிகழ்ந்திருந்தது.
பல சிறு சிறு ஏரிகள் வேறு அவ்வூரின் அழகுக்கு மெரு
கூட்டின. இப்போதுள்ள சித்தரூத மடமும் அப்போது,
கிருஷ்ணபூர் என்று இன்று அழைக்கப்படும் பகுதியை
சேர்ந்து இருந்தது. இந்த கிருஷ்ணபூரை சொர்க்கத்தி
லிருந்து பூமிக்கு இறங்கி வந்த ஒரு பகுதி என்றும் அழைப்
பார்கள். நவாப் ஏற்படுத்திய சவனூர் மாநிலத்தின் ஒரு
பகுதியாகத்தான் இப்போதுள்ள தார்வார் மாவட்டம் முழு
வதும் இருந்தது. (தார்வார் மாவட்ட சிறப்பிதழ்).

இந்த கிருஷ்ணபூர் கிராமத்தில் மகிழ்ச்சியாக பொழுது
போக்குதற் பொருட்டு சவனூர் நவாப் அழகிய வசந்த
மண்டபம் ஒன்றும் அதனை சுற்றி பலவகைபட்ட மரங்களும்,
பூச்செடிகளும் கொண்ட பெரிய தோட்டம் ஒன்றையும்

அமைத்திருந்தார். தோட்டத்தினிடையே ஒரு நீச்சல் குளமும் அமைக்கப்பட்டிருந்தது. கோடையில் நவாப்பும் அவருடைய மனைவி பேகமும் வந்து தங்கும் கோடை வாழிடமாகும் அது. ஒவ்வொரு வருடமும் கோடையில் சவனூரிலிருந்து நவாப் குடும்பத்தோடு வந்து தங்கிச் செல்வது வழக்கம்.

ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் ஒருமுறை கிருஷ்ணபூருக்கு விஜயம் செய்தபோது கடுங்கோடை காலம். அப்போது அவருடன் அவருடைய மடத்துப் பரிவாரங்களும் இருந்தன. அனைவரும் அந்த அழகிய தோட்டத்தை நெருங்கிக்கொண்டிருந்த சமயம் உச்ச வேளை ஆதவன் தன்னுடைய வெப்பக் கதிர்களை உதிர்த்துக் கொண்டிருந்தான். வெயில் கொடுமையை தாளமாட்டாமல் அனைவரும் ஓர் வசதியான இடம் பார்த்து தங்கிச் செல்வதென முடிவு செய்தனர். குளத்தோடு நிழல்கள் நிரம்பிய அந்த தோட்டத்தை கண்டதும் அங்கேயே தங்கி இளைப்பாற தீர்மானித்து, ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தருடன் அவருடைய கூட்டத்தார் அனைவரும் தோட்டத்திற்குள் நுழைந்தனர். அங்கிருந்த சில தோட்ட வேலைக்காரர்களும், தோட்டக்காவலாளியும் வெளிரியபயம் கலந்த முகத்தோடு அவர்களை உற்று நோக்கினார்களே தவிர யாரும் தடுக்க முன் வர வில்லை.

ஸ்ரீ இராகவேந்திரர் ஒரு பெரிய புளியமரத்தின் அடர்ந்த நிழலில் சென்றமர்ந்தார். அவருடைய சீடர்கள் பூஜைக்கும் உணவிற்குமான ஏற்பாடுகளை முனைந்து செய்து கொண்டிருந்தனர்.

தோட்டத்திலிருந்து வந்த திடீர் ஆரவாரத்தை கேட்டு வசந்த மாளிகையில் தங்கியிருந்த நவாப்பும்; பேகமும் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தனர். அங்கே, தோட்டத்தை பாழ்படுத்தாமல் ஒரு பிராமண சன்னியாசியும் அவருடைய சீடர்களும் அவர்களுடைய கடமைகளை சுருசுருப்பாக செய்து கொண்டிருப்பது தெரிந்தது.

அப்போது நவாப் அவருடைய ஒரே மகனின் திடீ
இறப்பால் துயரில் ஆழ்ந்திருந்தார். அந்நிலையில் சாது
பிராமணரை தரிசித்தால் ஆறுதலாக இருக்கும் என்று
எண்ணியவராய் வசந்தமாலை விட்டு இறங்கி வந்து ஸ்ரீ
இராகவேந்திர தீர்த்தரின் முன்னிலையில் முகமதியர்களை
போல மண்டியிட்டு அமர்ந்தவாறு அழ ஆரம்பித்தார்.

சுவாமிகள் மிகுந்த அனுதாபத்தோடு எழுந்திருக்கும்படி
கூறி அவரை பற்றியும் அவர் அழுவதற்கான காரணம் பற்றி
யும் கேட்டார்.

"ஐயா, நான் இந்த மாநிலத்தின் நவாப். எனக்கு பல
மனைவிகள் இருந்தாலும் ஒரே ஒரு மகன்தான் பிறந்தான்.
கோடை காலத்தை மகிழ்ச்சியோடு கழிக்க நான் குளுமை
யான என்னுடைய இந்த தோட்டத்திற்கு வந்தேன்.
நேற்று என்மகன் இத்தோட்டத்தில் விளையாடிக் கொண்டி
ருந்தபோது நாகபாம்பு கடித்து இறந்து போனான். இதனால்
எங்களுடைய புகழ்மிக்க குடும்பத்திற்கும், இந்த நாட்டிற்
கும் ஏற்பட்ட பேரிழப்பை எப்படி தாங்கிக்கொள்ள
முடியும்? அவன் இறப்பால் அதிர்ந்துபோன நானும்
அக் குழந்தையை பெற்றெடுத்த இந்த பேகமும் தவி
அனைவரையும் சவனூருக்கு அனுப்பிவிட்டேன். நாங்கள்
இருவரும் இங்கே தாளா வேதனையால் துடித்துக்கொண்டி
ருக்கிறோம்......" சொல்லியபடியே மீண்டும் உரக்க அழ
ஆரம்பித்து விட்டார்.

"சுவாமிகள் சிறிது நேரம் மௌனமாக சிந்தித்த
பின், "நன்று நவாப்! உன் மகன் இறக்கவில்லை என்று
தான் எனக்கு தோன்றுகிறது," என்றார்.

"உண்மை ஐயா... அவன் பாம்பு கடித்து இறந்து
போனதை நாங்கள் எல்லோருமே பார்த்தோம். அரச
மனை வைத்தியர் கூட அவன் இறந்து விட்டதாகக் கூறி
விட்டார்."

சுவாமிகள் இலேசாக புன்னகைத்து "நல்லது. எப்படி யாவது இருந்து விட்டுப் போகட்டும். நான் சொல்கிறேன் அவன் இறக்கவில்லை. உயிருடன்தான் இருக்கிறான். எங்கே அந்த உடல் ?" என்றார்.

"அவன் இறந்து விட்டான் ஐயா...... அவனை நேற்று இரவுதான் இந்த தோட்டத்தில் அடக்கம் செய்தோம். தயவு செய்து அதோ பாருங்கள். அவனுடைய சமாதி," என்று கூறிய படி அவ்விடத்தையும் சுட்டிக் காட்டினார்.

"நல்லது நவாப் .... சவக் குழியினின்று அவ்வுடலை சீக்கிரமாக என் முன் எடுத்து வாருங்கள்...... அவன் இறக்கவேயில்லை!"

நவாப் அவருடைய மனசாட்சிக்கு விரோதமாக, சுவாமி களின் சொல்லுக்குப் கட்டுப்பட்டு மிகுந்த நம்பிக்கையோடு புதைக்கப்பட்ட மகனின் உடலை சில வேலைக்காரர்களின் மூலம் சவக்குழியினின்று தோண்டி யெடுத்துவந்து ஸ்ரீ இராக வேந்திர தீர்த்தரின் முன்னிலையில் கிடத்தினார்.

ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் கருத மந்திரத்தை முணு முணுத்தபடி ஆதிசேஷக்கடவுளை வணங்கி அவருடைய கமண்டலத்தில் இருந்த நீரை எடுத்து அந்த உடல்மீது தெளித்தார். சில நிமிடங்களுக்குப் பிறகு உறக்கத்தினி லிருந்து விழித்தெழுபவனை போல விழித்தெழுந்து அனை வரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டான். நவாப் அவரு டைய தகுதியையும் மறந்து மிகுந்த சந்தோஷத்தால் மகனை கட்டித் தழுவியபடி ஆட ஆரம்பித்து விட்டார். பின் ஸ்ரீ இராகவேந்திரர் முன் பலமுறை விழுந்து வணங்கினார்.

நவாபின் மனைவி பேகம் மகன் உயிர்த்தெழுந்து விட் டதை கேள்விப்பட்டதும் வசந்தமகாலை விட்டு ஓடிவந்து ஆனந்த கண்ணீரால் கணக்கில்லா வணக்கம் செலுத்தினாள், ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் அவர்களுக்கு.

"ஐயர்... தாங்கள்எனக்கு"தந்தை போன்றவர். எனக்கு மட்டுமல்ல...... என் கணவருக்கு .. ஏன் இந்த நாட்டிற்கே தந்தையை போன்றவர்கள். தாங்கள் தான் இப்போது எனக்கு எல்லாமே...... இதற்கு நன்றிக்கடமை தாங்களுக்கு நான் எதை கொடுப்பேன்? உங்களுடைய இந்த உதவிக்கு ஈடு இணையாக கைமாறு செய்ய எங்களிடம் என்ன இருக்கிறது?'' என்று சந்தோஷத்தால் கத்தியபடி அவள் அணிந்திருந்த விலையுயர்ந்த நகைகளையெல்லாம் கழற்றி சுவாமிகளின் பாதங்களில் காணிக்கையாக சமர்ப்பித்து ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினாள்.

நவாப் என்ன செய்வது? என்ன பேசுவது? எப்படி பேசுவது என்று தெரியாமல் வேலைக்காரனைபோல ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தரின் முன்னிலையில் நின்றார். பின் பூஜைக்கு தேவையான வசதிகளையும், தேவைகளையும் அவரே முன்னின்று செய்தார். அதோடு சொந்த செலவில் பெருவிருந்து ஒன்றிற்கும் ஏற்பாடு செய்தார். நவாப் மிகுந்த உற்சாகத்துடனும் பணிவுடனும் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தரை அவருடைய சிறப்பு விருந்தினராக சிலகாலம் அவருடன் தங்கிச் செல்லும்படி வேண்டிக்கொண்டார் நவாப்பும், அவருடைய மனைவி பேகமும், மகனும் ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளுக்கு உள்ளத்தாலும், உடலாலும் உண்மையான சேவகம் செய்தார்கள். அதோடு, அவருடைய வசந்த மாளிகை உட்பட கிருஷ்ணபூர், தாளில் அதைசார்ந்த நன்கு கிராமங்களையும் அரசாங்க முத்திரை தாளில் பதிவு செய்து ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளுக்கு நன்கொடையாகத் தந்தார். பிறகு நவாப், பேகம், அவர்களுடைய மகன் அனைவரும் கட்டியனைகளுடன் பணிவாக சுவாமிகளை வணங்கி அன்புடன் வழியனுப்பிவைத்தனர்.

கிருஷ்ணபூரும், அதை சார்ந்த நான்கு கிராமங்களும் தற்போது மடத்திற்கு சொந்தமாக இல்லை. 1857 ஆம் ஆண்டிற்குப்பிறகு ஆங்கில ஆதிக்கத்தால் பறித்துக் கொள்ளப்பட்டது.

இதே போன்ற மற்றொரு நிகழ்ச்சி சிலநாட்களுக்குப் பிறகு சிர்தகிரி என்ற கிராமத்தில் (கதக் வட்டத்தில் உள்ள ஒரு கிராமம்) நிகழ்ந்தது. ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் கிருஷ்ணாபுரிலிருந்து சிர்தகிரி கிராமத்திற்கு வந்து சேர்ந்தார். அந்த கிராமத்து தேசாய் (கிராமத்தலைவர்) ஸ்ரீ மாதவரிடம் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். எனவே சுவாமிகளை உளமாற வரவேற்று அவருடைய சொந்த மாளிகையிலேயே தங்கும்படி கேட்டுக்கொண்டார்.

தேசாய் அந்த தாலுக்காவிலேயே மிகவும் பேரும் புகழும் வாய்ந்த பெரும் பணக்காரர். சுவாமிகளின் வரவை முன்னிட்டு அவர் நடத்தயிருக்கும் பூஜையில் குடும்பத்தோடு கலந்து கொண்டு விருந்துண்டு செல்லும்படி சுற்று புறங்களில் உள்ள எல்லா பிராமணர்களுக்கும் அழைப்பு கொடுத்தார். ஆகையால் சமாராதனையில் கலந்து கொள்ளும் பொருட்டு பெருங்கூட்டம் தினமும் கூடியபடி இருந்தது. அது மாம்பழங்கள் மலிவாகவும் ஏராளமாகவும் கிடைக்கும் காலம். ஒரு நாள் தேசாய் நூற்றுக் கணக்கான மாம்பழங்களை கொண்டு வந்து சாறுபிழிந்து உணவு வேளையின்போது கொடுப்பதற்காக பெரிய அண்டாவில் நிரப்பி வைத்திருந்தார்.

அன்றைய நாளில்மட்டும் உணவருந்த வந்த கூட்டம் மிகுதியாக இருந்தது. தேசாயும் அவருடைய மனைவியும் வந்து கொண்டிருந்த விருந்தினர்களையே வரவேற்று உபசரிப்பதில் மும்புறமாக இருந்தமையால் அவர்களுடைய இரண்டு வயது குழந்தையை கவனிக்க நேரமின்றி எங்காவது விளையாடிக் கொண்டிருக்கட்டும் என்று விட்டு விட்டனர். குழந்தையோ விளையாடியபடி மாம்பழச் சாறு வைத்திருந்த அறைக்குள் வந்து அண்டாவை பிடித்து எட்டி யெட்டி தாவியபோது குப்புற மாம்பழச் சாறுக்குள் விழுந்து மூழ்கி இறந்து விட்டான். இதை அங்கிருந்த யாருமே கவனிக்கவில்லை.

இரண்டு மூன்று மணிநேரம் கழிந்திருக்கும். தேசாயின் மனைவிக்கு திடீரென்று குழந்தையின் நினைவு வரவே அங்கும் இங்கும் தேடிப்பார்த்து கிடைக்காததனால் தேசாயிடம் கூறினாள். அது கேட்டு தேசாய் திடுக்கிட்டவராய் குழந்தையை பற்றி ஏதும் தெரியாது என்று கூறியபடி மனைவியுடன் சேர்ந்து கொண்டு இருவரும் தேட ஆரம்பித்தனர். எதேச்சையாக இருவரும் மாம்பழச்சாறு வைக்கப்பட்டிருந்த அறைக்கு வந்தபோது மாம்பழச் சாற்றில் ஏதோ ஒன்று மிதப்பது கண்டு ஓடிச்சென்று எடுத்துப் பார்த்தபோது அது அவர்களுடைய ஒரே ஆண் குழந்தையாய் இருக்கக் கண்டு பேச முடியாத ஊமையாகிவிட்டனர்.

தேசாயின் மனைவி சற்று நேரத்திற்குப் பிறகு ஏதோ ஒரு வழியாக துணிவை வரவழைத்துக் கொண்டு உடனே சென்று கதவை மூடிவிட்டு கணவனிடம் "நன்று .. சுவாமி, இப்போது என்ன செய்வது? பல உயர்ந்த பிராமணர்கள் குடும்பத்துடன் வந்து சேர்ந்திருக்கின்றனர். இப்போது தான் சுவாமிகளும் குளித்துமுடித்து பூஜையில் வந்து அமர்ந்திருக்கின்றார். இந்த செய்தி வெளியே தெரிந்தால் பூஜை முடிய இருக்கும் இந்த தருணத்தில் சுவாமிகளும் அரைகுறையாகவே பூஜையை முடித்தும் முடிக்காமல் அவர்களுடைய பரவார்ரங்களோடு இவ்விடத்தை விட்டு புறப்பட்டுவிடுவார். இதனால் பசியோடு பல பிராமணர்கள் திரும்பிச் சென்றுவிடுவார்கள். பின் மறுபடியும் பூஜையை செய்து விருந்தளிப்பதற்கு பல காலங்கள் ஆகிவிடும். இச்செய்தியை வெளியிட்டு ஏன் அனைவரையும் சங்கடத்தில் ஆழ்த்தவேண்டும்? பூஜை முடியும் வரை இதை இரகசியமாகக் காப்பதுதான் நலமாகப் படுகிறது...... என்ன சொல்கிறீர்கள்?" என்றாள்.

தேசாய் மனைவியின் துணிவை கண்டு அதிர்ந்து போனார். பின் வழிந்த வந்த கண்ணீரை துடைத்துக் கொண்டு, "நீ எனக்கு சாதாரண மனைவி மட்டுமல்ல... என்னுடைய குடும்பத்திற்கே கடவுள் போன்றவள். உன் சொல்லையும், செயலை

யும் தொடர்ந்து ஆதரவோடு பின்பற்றுவேன்'', என்று மனைவியின் துணிவான முடிவை மெச்சும்படி கூறினார்.

பின் இருவரும் இறந்த உடலை நீரில் கழுவி போர்வை ஒன்றால் சுருட்டி அதன் மீது ஒரு பாயையும் சுருட்டி அவ்வறையின் ஒரு மூலையில் வைத்துவிட்டு, குமஸ்தாவை அழைத்து பூஜை கடைசிவரை எந்தவித குறையுமில்லாமல் நடக்கும்படி பார்த்துக் கொள்ளும்படி கூறி விட்டு வெளியேறினர்.

பூஜையும், மற்ற எல்லா சடங்குகளும் நடந்து முடிந்தன. அன்றய பூஜைக்கு தேசாயும் அவருடைய மனைவியும் முக்கிய மாணவர்களாதலால் ஸ்ரீ இராக்வேந்திர சுவாமிகள் முதல் தீர்த்தம் அவர்களுக்கு வழங்கும் பொருட்டு அழைத்தார்.

தேசாயின் குமஸ்தா முன் வந்து ''ஐயா... தேசாய் தம்பதிகள் மிகவும் அவசர வேலையாக வெளியே போய்விட்டனர். எனவே தீர்த்தத்தையும் பிரசாதத்தையும் வந்திருக்கின்ற அனைத்து விருந்தினர்களுக்கும் கொடுத்து உணவு வழங்கவும் ஏற்பாடு செய்யுங்கள். எல்லோருடைய உணவு முடிந்ததும் தேசாய் தம்பதிகள் வந்து விடுவார்கள்......'' என்றார்.

குமஸ்தாவின் இந்த வார்த்தை சுவாமிகளுக்கு ஒரு புதுமையாகத் தோன்றியமையால் மீண்டும் அவர்களை அழைத்து வரும்படி கட்டளையிட்டார்.

''நன்று குமஸ்தா ... முதலில் தேசாய் தம்பதிகள் வந்து தீர்த்தத்தையும் பிரசாதத்தையும் ஏற்றுக் கொள்ளட்டும்......'' ''நல்லது சுவாமிகள். அவர்களுடைய பிரதிநிதியாக இங்கே நான் இருக்கிறேன். அவர்களுடைய பெயரில் நான் இதனை ஏற்றுக் கொள்கிறேன். தயவு செய்து தீர்த்தத்தை என்னிடம் தாருங்கள்......''

சுவாமிகள் தேசாய் தம்பதிகளின் இருப்பிடத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு சற்று கடிந்து கொண்டதும், அதற்குப்பிறகு ஏதும் மறுமொழி கூறுமல் குமஸ்தா தேசாய் தம்பதிகளை சென்று அழைத்து வந்தார். தேசாய் சுவாமிகளுக்கு சற்று தூரத்தில் நின்றபடியே, கொஞ்சம் நேரம் அவர்களை விட்டுவிட்டு. தீர்த்தத்தையும், பிரசாதத்தையும் காலதாமதமின்றி அனைவருக்கும் வழங்கும் படி கேட்டுக்கொண்டார். சுவாமிகள், "திடீரென்று ஏன் இப்படி புதுமாதிரியாகப் பேசுகிறீர்கள்?", என்று கேட்க அதுகேட்டு தேசாயால் அழாமலிருக்க முடியவில்லை.

"ஐயா...... என் மகன் சற்று நேரத்திற்கு முன் தான் மாம்பழச் சாற்றில் விழுந்து இறந்து விட்டான்......"

அழுதபடியே தேசாய் கூறியதை கேட்ட சுவாமிகள், "ஓ...... இதுதான் நீ இவ்விடத்திலிருந்து தூர விலகி நிற்ப தன் காரணமா? யாம் கூறுகிறேன்... அவன் இறக்கவில்லை. எங்கே?... அவனை என்முன் எடுத்து வாருங்கள்......," என்றார்.

தேசாய் வேகமாக ஓடிச்சென்று குழந்தையின் உடலை யெடுத்து வந்து ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர்களின் முன்னிலை யில் கிடத்தினார். சுவாமிகள் தன்வந்தரி மந்திரத்தை முணு முணுத்தபடி அவருடைய கமண்டலத்திலிருந்த நீரை எடுத்து அவன்மீது தெளித்தார். இரண்டு மூன்று நிமிடங்களுக்குப் பிறகு குழந்தை கைகால்களை அசைத்து மெல்ல கண்களை திறந்து பார்த்தபோது அங்கே கூடியிருந்த கூட்டமும் முழுவ தும் ஆச்சரியத்தால் அதிசயித்து நின்றனர்.

தேசாய் தம்பதிகள் சந்தோஷத்தால் அவர்களையே மறந்து குழந்தையை கட்டித்தழுவினர்.. பின் மறு பிறப்பு கொடுத்த ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தரின் பாதங்களில் அக் குழந்தையை கிடத்தி அவர்களும் அவருடைய திருவடிகளில்

விழுந்து வணங்கினர். கைமாறாக யாது கொடுப்பது என்று தெரியாமல் ஆனந்தக் கண்ணீர் உதிர்த்தபடி அவர்முன் அமைதியாக நின்றனர்.

பிறகு பிரசாதமும் தீர்த்தமும் வழங்கப்பட்டன. பின் எல்லா பிராமணர்களும் ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளை வணங்கி அவரவர்களுடைய இருப்பிடம் சென்றதும் அவரையே தெய்வமாக வழிபட்டனர்.

ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் சிலநாட்கள் கிரிதகிரியில் தேசாயோடு தங்கியிருந்து பின் பிஜப்பூர் நோக்கி பயணமானார்.

9. அட்டிகை

ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் ஒரு முறை பிஜப்பூர் சமஸ்தான நுழைவாயிலருகில் தங்க நேர்ந்தது. பிஜப்பூர் ஷா அம் மகானை பற்றி முன்னமேயே கேள்விப் பட்டிருந்தமையால் அவர் பிஜப்பூர் இராச்சியம் வந்தது குறித்து பெருமகிழ்ச்சியடைந்தார். சுவாமிகளை சிறப்பாக வரவேற்கும் படியும் அவருக்குத் தேவையான வசதிகளை செய்து தரும் படியும் அனைத்து அதிகாரிகளுக்கும் ஆணை அனுப்பினார். பிஜப்பூரை மகான் கண்டாரா? இல்லையா? என்று நம்மால் உறுதியாகக் கூறமுடியாது. ஆனால் அவர் பிஜப்பூருக்கு அருகாமையில் தங்கினார் என்பது மட்டும் உறுதி.

ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் மீது ஷாவுக்கு அளவு கடந்த மதிப்பு உண்டு. சுவாமிகளை அவர் ஒரு சாதாரண சன்னியாசியாகக் கருதவில்லை. கடவுளின் அவதாரம் என்றுதான் கருதினார். சுவாமிகள் பிஜப்பூருக்கு அருகாமையில் தங்கியுள்ளார் என்ற செய்தியை கேள்விப்பட்ட உடனேயே தன்னுடைய மரியாதையை செலுத்தும் பொருட்டு சக்கர சமாரங்களுடன் விலையுயர்ந்த பொருள்கள் பலவற்றையும் ஒட்டகத்தின் மீது ஏற்றி முரசு முழங்க தன்பிரதம அதிகாரியாகிய வஜுரை அனுப்பி வைத்தார். அதோடு பலவகை இரத்தினக் கற்களும், முத்துக்களும் பதிக்கப்பட்ட விலை மதிப்பற்ற அட்டிகை ஒன்றை ஸ்ரீ மூல ராமருக்கு அணிவிக்கும் பொருட்டு கொடுத்தனுப்பியிருந்தார்.

ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் வஜுரை வரவேற்று அவர் கொண்டு வந்திருந்த அனைத்து வெகுமதிகளையும் ஏற்றுக் கொண்டார். வஜுர் ஆண்டவனுக்கு அணிவிக்கும் பொருட்டு ஷா தந்த அட்டிகையையும் தந்தார். சுவாமிகள் வஜுரை ஆண்டவனுக்கு அட்டிகை வழங்கும் விழாவில் கலந்து கொண்டு, பின் உணவருந்தி செல்லுமாறு கேட்டுக் கொண்டார்.

பூஜையின் போது வேள்வித் தீக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சுவாமிகள் ஹோமம், ஹவனம், பூஜை முதலிய சடங்குகளை முடித்துக் கொண்டு அட்டிகையை அக்னி குண்டத்தில் போட்டு ஆண்டவனுக்கு அணிவித்தார்.

வஜுர் அனைத்தையும் பார்த்தபின் உணவை முடித்துக் கொண்டு நேராக பிஜப்பூர் சென்று ஷா மன்னரிடம் அவர் கண்கூடாகக் கண்ட அனைத்து நிகழ்ச்சிகளையும் கேலியும் இகழ்ச்சியும் கலந்த குரலில் கூறினார்.

ஷா மன்னர் இதை கேட்டு, விலை மதிப்பற்ற உயர்ந்த அட்டிகை இப்படி நெருப்பிலிட்டு எரிக்கப்பட்டதே என்று மிகவும் வருத்தப்பட்டார். தாம் அனுப்பிய வெகுமதிகளை அலட்சியம் செய்து அவரை அவமதித்துவிட்டதாக எண்ணி கோபம்கொண்டார். ஆனால் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தரை உண்மையிலேயே பெரிய மகான் என்றும், கடவுளின் அவதாரம் என்றும் நன்கு அறிந்திருந்தமையால் நேரடியாக அவரை பகைத்துக்கொள்ள அவருக்கு துணிவு ஏற்படவில்லை. எனவே சுவாமிகளை முட்டாளாக்கும் பொருட்டு ஒரு தந்திரத்தை கையாண்டார். மறுநாள் வேறொரு வஜுரை மகானிடம் அனுப்பி வைத்தார்.

வஜுர் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தரை அணுகி அவர் முன் பணிவாக நின்று, "சுவாமி... நம் மன்னர், ஆண்டவனுக்கு தாங்கள் அணிவித்த அட்டிகையை போலவே பேகம் அரசியாருக்கு புதியதாக ஒன்று செய்து தரும்படி பொற்கொல்லரை பணித்தார். ஆனால் பொற்கொல்லரோ அதை ஒரு முறை பார்க்க விரும்புகிறார். எனவே தயவு செய்து ஆண்டவனுக்கு அணிவித்த அந்த அட்டிகையை கொஞ்சம் தர முடியுமா ? நான் அதை பொற்கொல்லரிடம் காட்டிவிட்டு உடனடியாக இன்னும் இரண்டு நாளில் திரும்பத் தந்துவிடுகிறேன்." என்று கேட்டுக்கொண்டார்.

மகான் கண்களை பாதி மூடியவாறு சற்று நேரம் தியாணம் செய்தபோது அவருக்கு அனைத்தும் தெரிய வந்தது. பின் வைர அட்டிகையை திரும்பத் தருவதாகவும் பூஜையின் போது வஜுரை உடன் இருக்கும்படியும் கேட்டுக்கொண்டார். வஜுரும் அதற்கு சம்மதித்தார்.

ஹோம குண்ட தயாரானது. பூஜையும் துவங்கியது ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் அக்னி குண்டத்தின் முன் அமர்ந்து அக்னி தேவன் மூலம் ஸ்ரீ மூல ராமருக்கு அணிவிக்கப்பட்ட அட்டிகையை திரும்பக் கேட்டு பிரார்த்தனை செய்தார். அக்னி தேவனையும் அவ் வட்டிகையை திரும்ப கொடுக்கும்படி பிரார்த்தனை செய்து வழிபட்டார். பூஜை முடிந்த பிறகு சுவாமிகள் தீப் பிழம்புகளுக்கிடையே தன் முழு கையையும் விட்டு ஸ்ரீ மூல ராமருக்கு அளித்த அதே அட்டிகையை எடுத்து வஜுரிடம் கொடுத்தார்.

அனைத்தையும் பார்த்த வஜுர் ஆச்சரியமடைந்து அந்த அட்டிகையை எடுத்துக்கொண்டு அவ்விடத்திலிருந்து பிஜப்பூரை நோக்கி ஓடினார். பிஜப்பூர் ஷா மன்னரிடம் அவ்வட்டிகையை தந்து பூஜையின்போது நடந்த அற்புதங்களையெல்லாம் ஒன்றுவிடாமல் விளக்கினார். அதை கேட்ட உடனேயே ஷா மன்னரின் உடல் பயத்தால் நடுங்க ஆரம்பித்து விட்டது. சுவாமிகளை சந்தேகித்ததற்காக மிகவும் வருத்தமடைந்தார். பிறகு அந்த அட்டிகையுடன் விலையுயர்ந்த நாராயணம், சத்தம், சமாரம் நகரி முதலியவைகளையும், பலவித இனிப்பு வகைகளையும் ஒட்டகத்தின் மீது வைத்து, தன் அந்தரங்க திவானை உடன் அனுப்பி அப்பொருள்களை ஏற்றுக்கொண்டு ஆசிவழங்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளும்படி கூறினார் ஷா.

ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் புன்னகைத்து அந்த வைர அட்டிகையை தவிர மற்ற அனைத்தையும் ஏற்றுக்கொண்டு அருளாசி வழங்கினார்.

10. மாஞ்சாளி

கிருத யுகத்தில் தென்னிந்தியாவை தலைநகராகக் கொண்டு இரணிய கசிபு இவ்வுலகை ஆண்டு வந்தான். தற்போது ஆந்திராவில் நந்தியால் என்ற இடத்திலிருந்து நாற்பது மைல் தொலைவில் உள்ள அகோர்பலா் தான் அரண்மனைகளுடனும், அரண்களுடனும் அவன்வாழ்ந்த இட மாகும். அவ்வூரை சார்ந்த மலைகளில் தான் அவனுடைய அரசியர்களும், உறவினர்களும் வாழ்ந்தனர். இரணிய கசிபுவின் தர்பார் மண்டபத்தின் நடுத் தூணை பிளந்து கொண்டு வெளிப்பட்ட ஸ்ரீ நரசிம்மனின் உருவச்சிலைகொண்ட கோயில் ஒன்றும் அங்கு உள்ளது. இப்போது அவ்விடமும் மலைகளும் அடர்ந்த காடுகளால் சூழப்பட்டு நடுவில் உள்ளது.

இரணிய கசிபுவிற்குப் பிறகு ஸ்ரீ பிரகலாதன் பல்லாண்டுகள் நேர்மையுடன் நாட்டை ஆண்டு வந்தான். இவனுடைய காலத்தில் ராஜ சுயம், அசுவமேதம் போன்ற யாகங்கள் பல வற்றை குறைவின்றி செவ்வனே நடத்தினான். இவ்வளவு யாகங்களும் துங்கபத்ரா நதியின் தென்கரையில் இப்போது ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளின் பிருந்தாவனமாகிய மந்திராலயம் உள்ள இடத்தில் தான் நிகழ்த்தியதாகக் கூறப்படுகிறது.

கிருத யுகம் முதற் கொண்டே தற்போதுள்ள மந்திராலயமும் அதனை சார்ந்த இடங்களும் இடங்களும் மாஞ்சாளி என்றே அழைக்கப்பட்டு வருகிறது. அக்காலத்தில் இது பேரூராக விளங்கியதா அல்லது நகரமாக இருந்ததா என்று நாமறியோம். ஆனால் தற்போது சிற்றூராகத்தான் இருக்கிறது. ஸ்ரீ இரணிய கசிபு (பிரகலாதன்)வின் குல தெய்வமான மஞ்சளம்மா குடிகொண்ட புண்ணிய தலமாகையால் கிருத யுகம் முதற் கொண்டே மாஞ்சாளி முக்கியதுவம் வாய்ந்த

இடமாகக் கருதப்படுகிறது. அப்போது மஞ்சளம்மாவின் கோயிலை எந்த இடத்தில் ஸ்தாபித்திருந்தார்கள் என்று நமக்குத் தெரியாது. ஆனால் ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளி னுடைய மடத்தின் வெளிப்புறத்திலுள்ள பெரிய கதவின் அடியில் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே உட்கார்ந்த நிலையில் அமைக்கப்பட்ட மஞ்சளம்மாவின் உருவச்சிலை கொண்ட கோயில் ஒன்று உள்ளது.

கி.பி. 1960 ஆம் ஆண்டு மந்திராலயத்து மட பீடாதி பதியாக பதவி வகித்த ஸ்ரீ சுயமிந்திர தீர்த்தர், ஸ்ரீ இராக வேந்திர சுவாமிகளின் கோயிலுக்கு அருகில் ஸ்ரீ மஞ்சளம்மா வின் சிறிய அழகான கோயில் ஒன்றை நிறுவினார். இப்போ துள்ள மஞ்சளம்மாவின் கோயில் ஸ்ரீ இராகவேந்திர சுவாமி களின் மடத்தின் நிலைக்கு இணையாக, உயர்ந்த பீடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. எனவே மாஞ்சாளியும், அதனை சார்ந்த இடங்களும் ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளின் முன் அவதாரமான ஸ்ரீ பிரகலாத இராஜாவுக்குச் சொந்தமான புண்ணிய தலமாகும். யாருக்குக் கீழ் வெங்கண்ணா பந்த் திவானாக வேலை பார்த்தாரோ அந்த அஸதுல்லாகானின் சட்டத்தால் தான் மாஞ்சாளி அத்வைணி நாட்டின் ஒரு பகுதியாக சேர்க்கப்பட்டது.

ஸ்ரீ இரர்கவேந்திர தீர்த்தர் மாஞ்சாளிக்கு உரிமையாள ராக மாறுமுன் மாஞ்சாளியை சென்று பார்த்ததாக மடத் தின் அறிக்கை பதிவேடுகளில் குறிப்புகளோ அல்லது வர லாற்றுச் சான்றுகளோ ஏதும் கிடையாது. இருந்தாலும், மூக்காலமும் அறிந்த ஞானியாகயால் முற்பிறவியில் பிரக லாதனாக இருந்தபோது இருந்த இடத்தை அறிந்து எல்லா நடவடிக்கைகளையும் மாஞ்சாளியிலேயே செய்திருக்கிறார். எனவே தான் அவர் முதன் முதலில் அத்வைணியை பார்த்த போது அவருடைய குல தெய்வமான மஞ்சளம்மா வாழ்ந்து வருகின்ற மாஞ்சாளிக்கே சென்று தங்கிவிட முடிவு செய்தார் போலும்.

ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் பிஜப்பூர் இராஜ்யத்தை விட்டு மெல்ல அத்வைணியை நோக்கி பயணத்தைத் தொடர்ந்தார். ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் அத்வைணியை நெருங்கிக் கொண்டிருந்தபோது, அவர் வரவை கேள்விப் பட்ட அத்வைணியின் திவானாகிய வெங்கண்ணா பந்த் அரசரை வரவேற்கும் முறையில் ஆடம்பரத்துடனும், மேள தாளங்களுடனும் மனைவிகள், குழந்தைகள், உறவினர்கள், அரசியல் அதிகாரிகள் மற்றும் வேலையாட்கள் அனைவரும் புடைசூழ குருவை வரவேற்பதற்காக அத்வைணியின் நுழைவு வாயிலில் வந்து காத்திருந்தார்.

ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் நுழைவு வாயிலை அடைந்ததும் வெங்கண்ணா பந்த முன்வந்து அவருடைய பாதங்களில் விழுந்து வணங்கி ஆனந்த கண்ணீருடனும், பய பக்தி நிறைந்த பணிவுடனும் எழுந்து நின்றார். அந்த சமயமே அவர் தூய்மையடைந்தார். ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் வெங்கண்ணாவை அன்பும் ஆதரவும் கலந்த பார்வையால் உற்று நோக்கி ஆசி கூறினார்.

"எல்லாம் நலம் தானே திவான் அவர்களே......" திவான் திகைப்படைந்து "யார் சுவாமி திவான்? உங்கள் முன் நான் திவானா? நான் உங்களின் வேலைக்காரன் உங்களுடைய புனித பாதங்களுக்குப் பணி செய்யும் எளிமையான ஏவலாள்; நான் மாட்டு மந்தை மேய்த்தவன்; ஓரெழுத்தும் படிக்கத் தெரியாத கல்வியறிவு இல்லாத நாடோடி; உங்களுடைய அருளாசியால்தான் அன்று என்னால் அஸதுல்லா கானின் கடிதத்தை படிக்க முடிந்தது. இன்றும் உங்களுடைய கிருபையைதான் ஏந்தியிருக்கின்றேனே தவிர வேறேது மல்ல; உங்களை மிகத்தாழ்மையுடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். என்னை இனியும் தாங்கள் திவானென்று அழைக்காதீர்கள். நான் உங்களுடைய அடிமை, சாதாரணமாக என்னை பெயரிட்டே அழையுங்கள் ...." என்றதும் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் மனநிறைவு கொண்டு

சந்தோஷத்தால் புன்னகைத்தார். வெங்கண்ணு ப அவரை நேரே வீட்டிற்கு போகலாமென்று வேண் கேட்டுக் கொண்டதன் பேரில் மகானும் அதற்கு இசை தந்து வெங்கண்ணுவை தொடர்ந்தார்.

ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தரும் அவருடைய மடத்தை சார்ந்தவர்களும் வெங்கண்ணு பந்தின் மாளிகையில் த சன்னியாசிகள் தினமும் வழக்கமாக செய்யும் பூஜைக செய்தனர். வெங்கண்ணு பந்த அவருடைய தகுதியை கௌரவத்தையும் மறந்து பயபக்தியும், பணிவும், நம்பிக்கை யும் கொண்ட உண்மையான வேலைக்காரனைபோல மகானி அழைப்பிற்காக அவர் பின்னாலேயே காத்துக் கிடந்தார்.

அத்வைனியிலும் அதனை சார்ந்த கிராமங்களிலு வாழ்ந்த அனைத்து பிராமணர்களையும், அவர்களுடை குடும்பத்துடன் பூஜையில் கலந்து கொள்ளும்படி அழைப் விடுத்ததன் பேரில் ஏராளமானோர் பூஜையில் கலந் கொண்டு திவானின் வீட்டில் உணவருந்திச் சென்றனர்.

ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தரின் பூஜையை காண்பதற்கே கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். நான்முக பிரம்ம வழிபட்ட ஸ்ரீ இராமரின் உருவச்சிலையை சுவாதீனமாக ஒரிஸ மாநிலத்தை சேர்ந்த கஜபதி என்பவர் பெற்று அதை வ பட்டுவந்தார். அந்த உருவச்சிலை ஸ்ரீ ஸ்ரீமந்த தீர்த்தருக் அவருடைய சீடரான ஸ்ரீ நரகரி தீர்த்தரால் கொண்டு வந் கொடுக்கப்பட்டு பின் ஸ்ரீ மாதவாச்சாரியாரிடம் போ சேர்ந்த பிறகு அதை அவர் பல்லாண்டுகள் வழிபட்டார் அவருக்குப் பிறகு மடத்தின் பீடாதிபதியாக பதவியேற் ஸ்ரீ விழதீந்திர தீர்த்தர் அந்த இராமரை மடத்திற்கே உரி கடவுளாக ஏற்று வழிபடக் கூறினார். பிறகு அவருக் அடித்தபடியாக மடபீடாதி பதியாகப் பதவியேற்ற ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தரிடம் அதை வழிபடும் உரிமை வந் சேர்ந்தது.

ஸ்ரீ மாதவ ஆச்சாரியாரால் வழிபடப்பட்ட அடுத்த முக்கிய தவும் வாய்ந்த விஹரகம் திக்விஜய ராமர் ஆகும். ஸ்ரீ ஜெயராமர், ஸ்ரீவைகுண்ட வாசுதேவர் போன்ற விஹரகங்கள் தீர்ச்சாரியார் என்று அழைக்கப்படும் ஸ்ரீ ஜெய தீர்த்தரால் வழிபடப்பட்டு மடத்தில் சேர்க்கப்பட்டது. வேதவியாசரால் வழங்கப்பட்ட வியாச மூர்த்தி விஹரசமும் வழிபாட்டிற்குரிய மற்ற விஹரகங்களுள் ஒன்றாகும்.

ஸ்ரீ மாதவ ஆச்சாரியார் இரண்டாவது முறையாக ஹரி பதரிக்குச் சென்று ஸ்ரீ வேதவியாச கடவுளை தரிசனம் செய்த போது ஸ்ரீ வேதவியாசர் சதையும் இரத்தமும் கொண்ட உடலுருவில் தோன்றி ஸ்ரீ மாதவாச்சாரியாரை ஆசிர் வதித்து, பின் அங்கிருந்த மண்ணையெடுத்து ஐந்து உருண்டைகள் செய்து அதில் மூன்றை வழிபடுவதற்காக அவரிடம் ஈந்தார். அப்போது 'அம்மண்ணுருண்டைகளே அவரது உருவம்' எனவும் கூறியருளிர்செய்தார். அவைகளில் ஒன்று ஸ்ரீ வியாசராயர் மடத்திலும், மற்றொன்று சோதி (Sode) மடத்திலும் மூன்றாவது ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளின் மடத்தில் உள்ள விஹரகங்களில் ஒன்றாக விளங்குகிறது. மற்ற இரண்டின் இருப்பிடம் யாதென யாரும் அறிந்தவர். இவைகள் மட்டுமல்லாது இன்னும் பல முக்கியமான விஹரகங்களையும் பூஜையின்போது ஸ்ரீ இராகவேந்திரர் வழிபடுவது வழக்கம். அது மட்டுமல்லாமல் யோக நிலையில் உடலிலும், உள்ளத்திலும் எழும் உணர்வுகளை அடக்கி, மனதில் எந்தவித சலனத்திற்கும், சஞ்சலத்திற்கும் இடம் தராது ஒரு நிலைபடுத்தி ஆண்டவனின் திருவடிகளில் தன்னையே அர்ப்பணித்துக் கொள்வதும் உண்டு. அப்போது கடவுளர்களின் சன்னிதானங்களையே நெஞ்சில் வரவழைத்து நெய் அபிஷேகம் செய்வித்து வழிபடுவார்.

இந்த பெரு நிகழ்ச்சி காண்பவர்களுக்கு ஈடு இணையற்ற சந்தோஷத்தைமட்டுமல்லாமல் சொர்க்கத்து இன்பத்தையே அளிக்க வல்லது. அது தரும் இன்பத்தை எழுதவார்த்தை

களே இல்லே. பூஜை முடிந்த பிறகு தீர்த்தங்கள் வழங்கி
நும் உணவு அளிக்கப்பட்டு விழா முடிய நண்பகலாகிவிடும்.
மாலேயில் நடக்கும் பூஜையும் காலேயில் நிகழ்ந்தது போலவே
தானிருக்கும்.

திவான் வெங்கண்ணு பந்த் உண்மையிலேயே உயர்ந்த
புண்ணியம் கொண்டவர். அவர் பரந்த மனப்பான்மை
கொண்ட, பிறந்த பலனே முழுவதும் உணர்ந்த போற்றற்
குரியவர். வாழ்வை முழுமையாக உயத்துயர்ந்தவர். அவரு
டைய தலேவர் அஸதுல்லாகான் பல விதங்களில் உதவிய
தோடு மட்டு மல்லாமல் திவானுக வேறு பதவியும் தந்து
கௌரவப் படுத்தியிருக்கிருர். எனவே வெங்கண்ணு பந்த்
அஸதுல்லாகானுக்கும் குரு ஆசிகள் வழங்கவேண்டும் என்று
எண்ணியதில் தவறேதுமில்லே. எனவே ஒருநாள் அஸதுல்
லாகானிடம் சென்று,

"கவர்னர் அவர்களே! என்னுடைய குரு நம் தலே
நகருக்கு வருகை தந்துள்ளார். என்னுடைய மாளிகையில்
தான் தங்கியுள்ளார். அவர் பெரும் மகான்; கடவுளின் மறு
அவதாரம்; அவரால் எதையும், எல்லாவற்றையும் செய்ய
வும், செய்யாமலிருக்கவும் முடியும்; எனவே தாங்கள்
அவரை தாங்கள் தரிசிப்பது நாட்டின் நலனுக்கு நல்லது
என யான் கருதுகிறேன்; நீங்கள் அவருடைய தரிசனத்தை
பெற விரும்புவீர்களானுல் நம் தர்பார் மண்டபத்திற்கு
அவரை அழைத்துவர தயாராக உள்ளேன் அல்லது தயவு
செய்து நீங்களாவது என் வீட்டிற்கு வந்து அவரை காணும்
படி கேட்டுக் கொள்கிறேன்........." என்று கேட்டுக்
கொண்டார்.

"ஓ......அப்படியா? நன்று, நாளே மாலே நானே உன்
வீடு வந்து அவரை பார்க்கிறேன்; அவரை தர்பாருக்கு
அழைத்து வரவேண்டியதில்லே," என்று கான் பதிலிறுக்க,

அப் பதிலை கேட்ட வெங்கண்ணா பந்த். மிக்க மகிழ்ச்சி யடைந்து அவ்வருடைய மாளிகைக்குச் சென்று மகானிடம் மறுநாள் மாலை அஸதுல்லாகானின் வருகையை பற்றி கூறினார். மகானும் அவருக்கு தேவையானதை சாதித்துக் கொள்ள இதுவே தக்கதருணம் என்றெண்ணி மகிழ்ச்சி அடைந்தார்.

அஸதுல்லாகான் இயற்கையிலேயே நல்லவரேயாயினும், பிறந்தது முதல் சில கெட்ட புத்தியையும் கொண்டிருந்தார். பொதுவாக இந்துக்கள் மீது ஒருவித வெறுப்புணர்ச்சியிருந்தமையால் மனதிற்குள்ளேயே சில சதிதிட்டங்களை தீட்டிக் கொண்டார். மறுநாள் மாலை, ஒரு தங்கத்தட்டு நிறைய மாட்டிறைச்சியை நிரப்பி மெல்லிய பருத்தித் துணியால் மூடி, இராஜ்ய சபை பிரதிநிதிகள் பலருடனும் வெங்கண்ணாவின் மாளிகைக்கு வந்து சேர்ந்தார்.

மாலையில் அஸதுல்லாகான் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தரை சென்று தரிசிக்க இருக்கிற விஷயம் காட்டுத்தீயென அனைவருக்கும் பரவி விட்டது. ஏராளமான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் பூஜை மண்டபத்தில் அவலுடன் கூடி நின்றனர். வெங்கண்ணா பந்தின் மாளிகை கவர்ச்சியாகவும் அழகாகவும் பல வித மலர்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. மகானின் இருக்கைக்கு சற்று தள்ளி எதிர்புறமாக அஸதுல்லாகான் அமருவதற்காக உயர்ந்த இருக்கை ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது.

மாலையில் பூஜை துவங்க சற்று நேரத்திற்கு முன்தான் அஸதுல்லாகான் வந்தார். வெங்கண்ணா பந்த் வெளிவாயிலேயே அவரை வரவேற்று அவருக்காக அமைக்கப்பட்டிருந்த இருக்கையில் அமரும்படி கேட்டுக்கொண்டார். அஸதுல்லாகான் அவருக்கே உரிய பாணியில் மகானுக்கு வணக்கம் தெரிவித்ததும், மெல்லிய பருத்தியாடையால் மூடப்பட்டிருந்த தங்கத் தட்டை மகான் முன் வைத்து அவர்சார்

பாக அதை ஆண்டவனுக்கு அளிக்கும்படி வேண்டிக் கேட்டு கொண்டார்.

மகானும் அஸ்துல்லாகானை பார்த்து புன்னகைத்து சைகை மூலம் அவருக்காக போடப்பட்டிருந்த இருக்கையில் அமரும்படி இடத்தை சுட்டிக்காட்டினார். வெங்கண்ணு பந்த்தின் கூற்றுப்படி அஸதுல்லா கான் நிமிர்ந்து கம்பீரமாக பெருந்தன்மையுடன் மகான் முன் அமர்ந்தார். மண்டபத்தில் குழுமியிருந்தவர்கள் அனைவருமே அமைதியுடன் நடக்கயிருக்கும் பூஜையை காண்பதிலேயே கருத்தாயிருந்தனர். மகான் அகக்கண்கள் மூலம் தங்கத்தட்டில் உள்ளதை கண்டு கொண்டதும் புன்னகை பூத்தபடி ப்ரண மந்திரத்தை உச்சரித்து கமண்டலத்திலிருந்த நீரை யெடுத்து மூன்று முறை தங்கத்தட்டின் மீது தெளித்ததும், அருகிலிருந்த வேலையாளிடம் மூடியிருந்த அந்த மெல்லிய துணியை அகற்றும்படி கூறினார்.

வேலையாள தங்கத் தட்டின் மீதிருந்த துணியை அகற்றியதும் அஸதுல்லாகானைத் தவிர அங்கே கூடியிருந்த அனைவரும் தங்கத் தட்டிலிருந்த பலவிதமான பழங்களையும், பூக்களையும் கண்டு மகிழ்ச்சியடைந்தனர். அஸதுல்லா கானுக்கு பயத்தால் குளிர் சுரமே வந்துவிட்டது. உடல் வியர்க்க, நடுக்கத்துடன் சாதாரண மனிதனைப் போல மகானின் திருவடிகளில் விழுந்து மன்னித்தருளும்படி கெஞ்ச ஆரம்பித்தார்.

"சுவாமி, நான் பலரும் வெருக்கக் கூடிய அனைத்து கெட்ட குணங்களும் நிறைந்தவன். உங்களை வணங்கி ஆசி பெறுதற் பொருட்டு யான் இங்கு வரவில்லை; என்னுடைய திவான் உங்களை பற்றி பெரியமகான் என்று கூறியிருந்தும் இப்பெருங் கூட்டத்தில் உங்களை அவமதித்து அதனால் உங்கள் மனம் புண்படுவதைக்கண்டு இரசிக்கவே வந்தேன். என்னுடைய திவானின் பேச்சையும் ஒரு பொருட்டாகக் கருதவில்லை; நான் சூது நிறைந்தவன்; தயவு செய்து இந்நிகழ்ச்சி

பிழையை மறந்து என்மீது இரக்கம்காட்டி என்னை மன்னித்தருள கேட்டுக்கொள்கிறேன்.........'' என்று பல முறை கெஞ்சி வணங்கிக் கேட்டுக்கொண்டார்.

யாரும் ஏதும் அறியாவிடினும், அஸதுலலா கான் செய்த பெருந்தவறை மகான் அறிந்திருந்தார். இருந்த'லும் ஆதர வாக கானுடன் கலந்துரையாடி பூஜையை நல்லபடியாக முடித்ததும் மகான் கவர்னருக்கு உரிய தகுதிக்கு ஏற்ப சில அன்பளிப்புகளை தந்து வீட்டிற்கு அனுப்பிவைத்தார்.

வேதனை நிறைந்த உள்ளத்துடன் அஸதுல்லா கான் வீடு வந்து சேர்ந்தார். அன்றிரவு அவரால் நிம்மதியாக தூங்கவே முடியவில்லை. பரமசாதுவுக்கு எதிராகா அவர் மனது புண்படும்படி செய்து விட்ட இந்த இழிசெயலால் என்ன கெடுதல் நிகழுமோ என்று நினைத்து நினைத்து பயந் தார். அந்த தவறுதலுக்காக மிகவும் வருந்தினுர். மறுநாள் காலை வேலையாளை அழைத்து, உடனடியாக வெங்கண்ணுவை அழைத்துவரும்படி கூறினுர்.

வெங்கண்ணு வந்து அஸதுல்லா கானை வணங்கி நின்றுர். அஸதுல்லாகான் வெங்கண்ணுவிடம், "நான் வந்துவிட்ட பிறகு உன்னுடைய குரு என்னைப்பற்றி யாது கூறினுர் ?" என்று வினவினுர். அதோடு நான் அவருக்கு எதிராக பாவம் செய்துவிட்டேன்; என்னை மன்னித்தருளும்படி 'எனக்காக அவரை கேட்டுக்கொள்வாயா ? என்னுடைய செயலால் மனம் வேதனைபட்டு அவர் கோபம் கொண்டிருப்பாராளுல் நான் அழிந்து போவேன்; என் அரசுக்கும் முடிவுகாலம் வந்துவிடும்; என்னுடைய குடும்பம் முழுவதும் அழிந்து பாழாகிவிடும்......'' என்று. வெங்கண்ணுவிடம் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்.

வெங்கண்ணு அந்த வார்த்தைகளை கேட்டு திகைப் படைந்தவராய், "என்ன ஆயிற்று உங்களுக்கு ? ஏன் இப்

படியெல்லாம் பேசுகிறீர்கள் ? என்னுடைய குரு மிகவும் இரக்கமானவர்; கருணை உள்ளம் கொண்டவர்; அவருக்கு கோபமே வராது; அவருக்கு கெடுதல் இழைத்தவர்களைக் கூட கோபம் கொண்டு சபிக்கமாட்டார். என்னுடைய குரு முக்காலமும் அறிந்தவர்; நீங்கள் என்னுடைய பிரபு என்ப தால் அனைத்து பிராமணர்கள் முன்னிலையிலும் தங்களை ஆசீர்வதித்து கௌரவித்தாரே ! அவர் உங்களை கோபித்துக் கொண்டிருக்கவேமாட்டார் என்று என்னால் உறுதியாகக் கூறமுடியும்......'' என்று அறுதல் தருவது போல பதலி ருத்தார்.

"நன்று, எப்படியாயினும் சரி, தயவு செய்து என்னு டைய தவறை மன்னித்து ஆசிவழங்கும்படி கேட்டுக் கொள்: அந்த சாதுவுக்கு விலையுயர்ந்த பொருள்களை பரிசுகளாக அளிக்க வேண்டியது கூட நம்முடைய கடமை. சில கிராமங் களை அவருக்கு அன்பளிப்பாக அளிக்கலாமென்று எனக்குத் தோன்றுகிறது. அவரையே கேள், எந்த கிராமம் அவருக்கு வேண்டும் என்று, என் தவறை மறந்து என்னை மன்னித்து விடுவாரேயானால் அவருக்காக எதையும் கொடுக்கத் தயா ராக உள்ளேன் நான்......''

"வெங்கண்ணா அஸதுல்லாகானின் பெருந் தன்மையை கண்டு பெருமகிழ்ச்சி கொண்டார். வீட்டிற்கு சென்று மகானிடம் அனைத்தையும் விளக்கமாகக் கூறினார்.

ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் புன்னகைத்து, "நன்று வெங்கடேஷ், ஸ்ரீ மூலராமரின் விருப்பப்படி எனக்கு மாஞ் சாளி கிராமம் ஒன்றே போதும், வேறு ஏதும் தேவையில்லை யென்று அஸதுல்லாகானிடம் கூறு......' என்றார்.

வெங்கண்ணா விரைந்து அஸ்துல்லா கானிடம் சென்று," என்னுடைய குரு நேற்று நடந்தவற்றை மறந்துவிட்டார். உண்மையாலுமே உங்களை நல்லெண்ணத்துடன் தான் வாழ்த்

தினர். அவருக்கு மாஞ்சாளி கிராமம் ஒன்று மட்டும்போதுமாம்'' என்றார்

அதை கேட்ட அஸதுல்லா கான் நடு நடுங்கிப்போய் தலை தாழ்த்திக் கொண்டார். மகான் அரசியலிலும் ஆழ்ந்த ஞானம் உடையவர் என்று நன்ருகத் தெரிந்து கொண்டார். சென்ற ஆண்டுதான் அம் மாஞ்சாளி கிராமத்தை ஒரு முகமதியருக்கு இரவலாகத் தந்துவிட்டார். அவரோ அவ்விடத்தில் தர்க்கா ஒன்றை சொந்த செலவிலேயே கட்டிவித்து அங்கேயே தங்கி வாழ்ந்து வருகிறுர்.

"இப்போது அந்த கிராமத்தை ஒரு இந்துவுக்குக் கொடுப்தென்றால்...... அதுவும் பரமசாதுவுக்குக் கொடுப்பதென்றால் எப்படி சாத்தியமாகும்? துன்பத்தில் சிக்க வைக்க செய்கிற செயலாக இருக்குமோ?'' என்று நினைத்தவராக வெங்கண்ணாவை நோக்கி,

''நன்று திவான், மாஞ்சாளி மலைகளும் மணலும் நிறைந்த இடம்; எதுவுமே அங்கு விளையாது. மக்கள் தொகைகூட மிகவும் குறைவு. அந்த கிராமத்திற்கு பதிலாக மக்கள் தொகை அதிகமான நன்கு விளைச்சலை அளிக்க வல்ல வேறு எந்த கிராமத்தையாவது கொடுக்கிறேன்; எந்த கிராமம் வேண்டும் என்று கேட்கச் சொல்; அல்லது நல்ல கிராமம் ஒன்றை நீயே தேர்ந்தெடுத்துக் கொடேன்; நகரமானாலும் பாதகமில்லை நான் கொடுக்கத் தயாராக உள்ளேன் மாஞ்சாளியை தவிர. ஏன் இந்த நாட்டின் தலைநகரான அத்வைணியையே கேட்டாலும் மறுக்காமல் கொடுக்கத் தயாராக உள்ளேன்; இந்த விஷயத்தை இத்துடன் முடித்துக்கொள்......''

வெங்கண்ணா மறுபடியும் மகானிடம் சென்று அஸதுல்லாகானின் விருப்பத்தைக் கூறினார். மகான் ஒளிவு மறைவு இன்றி நேரடியாகவே, "மாஞ்சாளியை கொடுப்ப

தென்றால் கொடுக்கட்டும்; இல்லையேல் அவரிடமிருந்து எதுவுமே நமக்கு வேண்டாம்,'' என்று கூறி விடும்படி கூறினர்.

நெடுநேர சிந்தனைக்குபபின் அஸதுல்லாகான் முல்லா விற்கு ஆளை அனுப்பி வரவழைத்து அவருக்கு வேறு நல்ல செழுமையான விளைநிலத்தை கொண்ட மக்கள் தொகை மிகுந்த கிராமத்தை கொடுத்து மாஞ்சாளியை திரும்பக் கொடுத்து விடும்படி கேட்டுக்கொண்டார். அவரும் அதற்கு

இசைந்து மாஞ்சாளியை திரும்பத் தந்துவிட்டார். ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் மாஞ்சாளி கிடைத்தது பற்றி பெரிதும் மகிழ்ச்சியடைந்தார். குருவை திருப்தி படுத்த முடிந்ததை எண்ணி வெங்கண்ணாவும் பெரு மகிழ்ச்சி கொண்டார்.

நாட்டின நிதியினை கொண்டு வெங்கண்ணா அக்கிராமத்தில் ஒரு பெரிய மடத்தையே கட்டுவித்தார். அதில்தான் மகான் இன்றும் வாழ்ந்து வருகிறார்.

11. திருமணம்

மடான் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தருடைய மடத்தி லிருந்தவர்களை தொழில் முறைபடி பல பிரிவுகளாகப் பிரிக் கப்பட்டிருந்தனர் நீர் கொண்டு வருபவர், உணவு சமைப் வர்கள், உணவு பரிமாறுபவர்கள், உணவிற்கு பிறகு தரையை சுத்தம் செய்பவர்கள், பூக்களும், துளசியும் கொண்டு வரு பவர்கள், பூஜை நேரத்தில் உதவி செய்பவர்கள் இப்படியாக பல பிரிவினர் இருந்தனர். அவர்களில் பலர் மணமாகி மனைவியை இழந்தவர்கள் சிலர் திருமணமாகாத இளை ஞர்கள்.

ஒருநாள் மாலை, மதிய உணவிற்குப்பிறகு தண்ணீர் கொண்டு வரும் இளைஞன் ஒருவன் அதிக உடல் வலியோடு ஒரு பெரிய மரத்தின் நிழலில் இருந்த பாறையின் மீது படுத் திருந்தான். அவனுடைய உபயோகமற்ற மூளை சைத்தானைப் பற்றி எண்ணத் தொடங்கியது. சொந்த ஊருக்குச் சென்று, ஒரு பிராமண பெண்ணைப் பார்த்து உடனே திருமண செய்து கொள்ளவேண்டும் என்கிற அந்த திடீர் எண்ண தான் அது.

சந்தேகமேயில்லை, அவன் ஒரு இளமையான திருமணம் செய்து கொள்ளத் தகுதியுடைய யோக்கிதை உள்ளவன் தான். ஆனால் அவனுக்கோ பெற்றோர்களில்லை. உறவினர் களில்லை. படிப்பு இல்லை. உணவை தேடிக்கொள்ள வழி யேதும் தெரியாதவன். சொந்தமாக வாழ்க்கை நடத்த வீடு கூட இல்லை. திருமண செலவுக்கும் கையில் பணமும் இல்லாத அனாதை. ஆனால் உடனே திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்ற குறிக்கோளில் உறுதியாக இருந் தான்.

அந்த எண்ணம் எழுந்ததோ என்னவோ, உடனே அந்த இளைஞன் மகானிடமிருந்து விடைபெற்றுக் கொள்ளும் பொருட்டு சுவாமிகளுடைய உள்ளறையை நோக்கி ஓடினான். ஆனால் மகானை அவனால் அங்கு காண முடியவில்லை. அங்கு மிங்குமாக தேடிப்பார்த்த பிறகு திறந்த வெளிக்கு வந்த போது மகான் மாலை பூஜைக்கு சென்றுகொண்டிருப்பதை கண்டான். அந்த இளைஞன் அவரிடம் சென்று அவருடைய பாதங்களில் விழுந்து வணங்கி, எழுந்து, "ஐயா... நான் இப்போதே என்னுடைய சொந்த ஊருக்குச் சென்று திரு மணம் செய்துகொள்ள தீர்மானித்து விட்டேன். தயவு செய்து எனக்கு ஆசி கூறி அனுமதியளிக்கவும்." என்று கூறினான்.

ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் அவனைக் கண்டு நகைத்து "நல்லது குழந்தாய். உன்னுடைய ஆனந்தமான திருமணத் திற்கு யாம் ஆசி வழங்குகிறேன். ஆனால் இப்போது மாலை வேலைக்கான பூஜையை நிறைவேற்றும் தருணத்தில் யாம் இருக்கிறோம். உனக்குத்தெரியும் உன் திருமணத்திற்கு கொஞ் சம் பணமும் துணிகளும் தேவையென்று, எனவே நீ மடத் திற்கு சென்று எங்களுக்காக காத்திரு. யாம் திரும்பிவந்ததும் தேவையான சிலவற்றை தந்து அனுப்பி வைக்கிறோம்" என்றார்.

"என்னால் ஒரு நிமிடம் கூட இங்கே காத்திருக்க முடி யாது. நான் இப்போதே புறப்பட்டாகவேண்டும். இப் போது உங்கள் கையில் உள்ளதை கொடுங்கள் அது போதும். என்னுடைய எண்ணம் நிறைவேற உங்களுடைய ஆசீர்வாதம் ஒன்றே கூட போதுமானது. தயவு செய்து என்னை போக அனுமதியுங்களய்யா......"

அந்த தண்ணீர் எடுத்துவரும் இளைஞன் மகான் மீது மிகுந்த பக்தியுடையவன். அவருக்கு மிக்க பணிவுடனும் உண்மையோடும் தொண்டு செய்யக் கூடியவன். இடம் பொருள் அறிந்து பேசக்கூடிய பொது அறிவு சற்றும் இல்லா

தான். அதுதான் அவனிடமிருந்த பெருங்குறை. மகானுக்கு அவன்மீது நல்லெண்ணமும் இரக்கமும் உண்டு. எனவே ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் அவனுடைய அறியாமையை கண்டு புன்னகைத்து, அவன் நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து கொஞ்சம் மண்ணை எடுத்து உருண்டையாக்கி ஏதோ ஒரு மந்திரத்தை உச்சரித்து அவனிடம் தந்தார்..

மிகுந்த பயபக்தியோடு அம் மண்ணுருண்டையை வாங்கி தன் தலைமீது வைத்து எடுத்து உடுத்திபிருந்த ஆடையின் ஒரு மூலையில் முடிந்து கொண்டான் அவ் இளைஞன் பின் இரைந்து கிடந்த அவனுடைய துணிகளை மடத்திலிருந்து எடுத்துக் கொண்டு அவ்விடத்தினின்று கால் நடையாகவே புறப்பட்டான். ஒரு பிராமண பெண்ணாக பார்த்து மணந்து கொள்ள வேண்டும் என்கிற ஒரேஎண்ணத்தோடு நடந்தான். நடந்தான், நடந்து கொண்டேயிருந்தான். சூரியன் மறைந்து இருளாகிக் கொண்டிருப்பதை பற்றிகூட அவன் பொருட் படுத்தவில்லை. இந்த பரந்த பூமியில் நட்சத்திரங்களின் ஒளியில் வழியை கண்டு வேகமாக நடந்தான். அந்த இரவில் சிலமணிநேரங்கள் நடந்த பிறகு நாய்கள் குரைக்கும் சத்தத்தை கேட்டு ஏதோ ஒரு கிராமத்தை நெருங்கிக் கொண்டிருப்பதை யூகித்துக் கொண்டான்.

உண்மைதான், அவன் யூகித்தபடி ஒரு கிராமம் தென்பட்டது. ஒளி விட்டுக் கொண்டிருந்த நட்சத்திரங்களின் மங்கிய ஒளியில் அந்த கிராமத்ினுள் நுழைந்து, பெரிய கதவுகளால் மூடப்பட்டிருந்த மாளிகை ஒன்றை கண்டான். அது அக்கிராமத்தின் தேசாய் வீடாக இருக்கவேண்டும். அவன் அவவீட்டுக் கதவிடுக்குகளின் வழியாக வீட்டினுள் இருப்பவரை கூவி அழைத்தான்.

"ஐயா...... யார் உள்ளே? தயவு செய்து கதவை திறவுங்கள். நீண்ட தூர பயணத்தால் களைத்துப்போய் ஒரு பிராமணன் உங்கள் வீட்டு விருந்தாளியாக வந்திருக்கிறேன்...... ஐயா......" என்று கத்தியவாறு பலமுறை கத

வையும் தட்டினான். ஆனால் பலனில்லை யாரும் அவனுடைய குரலுக்கு மதிப்பு கொடுத்ததாகவோ அன்றி அவனை கவனித்ததாகவோ இல்லை. மறுபடியும் கதவிடுக்கின் வழியாக உள்ளே உற்று நோக்கினான். கையில் விளக்குடன் அனைவரும் விழித்தபடி அங்கு மிங்குமாக போவதும் வருவதுமாக ஏதோ காரணமாக பர பரப்புடன் இருந்தனர்.

ஐந்தாறு மணி நேரமாக தொடர்ந்து நடந்தமையால் அவ்விளைஞன் மிகவும் களைத்து இருந்ததால் உறக்கமும் அவனை தழுவியது. அவனுடன் கொண்டு வந்திருந்த தர்மிர பாத்திரத்தில் இருந்த நீரை குடித்து விட்டு, கையிலிருந்த துணிமூட்டையை வாயிற்படியில் விரித்து போட்டு படுத்தவன் சில நிமிடங்களில் ஆழ்ந்து உறங்கியும் விட்டான்

அவ்வூர் தலைவரான தேசாயின் மனைவி எட்டு முறை கருதரித்து, பிரசவித்த உடனேயே எட்டு குழந்தைகளும் இறந்து போயின. அன்று ஒன்பதாவது முறையாகக் கருதரித்து பிரசவிக்க இருந்தாள், தேசாயும், அவ்ருடைய உறவினர்களும், செவிலியர்களும் குழந்தை உயிரோடு பிறக்க தீவிரமாக முயன்று கொண்டிருந்தனர். எனவே யாரும் இளம் பிராமணின் குரலுக்கு செவி மடுக்கவில்லை.

நடு இரவு கடந்து கொண்டிருந்தபோது தேசாயின் மனைவி உயிருடன் ஓர் ஆண் குழந்தையை ஈன்றெடுத்தாள். அனைவருக்கும் சந்தோஷம் தாளவில்லை. அதே சமயத்தில் வாயில் மனையை தலையணையாகக் கொண்டு ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்த, பிராமண இளைஞன். அப்போது யாரோ மிகுந்த கோபத்துடன் உறுமியவாறு சீறும் சத்தம் அவனது காதில் விழுந்தமையால் விழித்தெழுந்தான். அவன் கண்களுக்கு மிகப் பெரிய பிரமாண்டமான மனிதனைபோன்ற கருப்பு உருவம் நின்று கொண்டிருப்பது தெரிந்தது.

"யார் நீ? ஏன் என்னை எழுப்பினாய்? உனக்கு வேறு வேலையில்லையா?" இளைஞன் கூறினான்.

"தயவு செய்து எனக்கு வழி விடு; நான் உள்ளே போக வேண்டும்.";

"அது சரி, முதலில் நீ யாரென்று கூறு."

"புனித மானவனே? உன்னிடம் நான் பொய்யுரைத்த லாகாது. நான் ஒரு அரக்கன் (பிரம்ம ராக்ஷஸன்) இந்த தேசாய் குடும்பத்திற்கு பகைவன். இந்த குடும்பத்திற்கு வாரிசேயில்லாமல் நிர்மூலமாக்குதற்கே நான் இங்கு வந்தேன். இப்போதுதான் தேசாயின் மனைவி ஒன்பதாவதாக ஓர் ஆண் குழந்தையை பெற்றெடுத்திருக்கிறாள். இதற்கு முன் பிறந்த எட்டு குழந்தைகளையும் கொன்றுவிட்டேன். உன்னுடைய ஆடையில் நீ நெருப்புப் பந்தை வைத்திருக்கின்றாய், எனவே உன்னை கடந்து என்னால் போகமுடியாது," என்றான் அவ்வரக்கன்.

அப்போதுதான் எவ்வளவு மதிப்புமிக்க ஆஸ்தியை அவன் ஆடையினுள் வைத்திருக்கிறான் என்று அவனுக்குத் தெரிய வந்தது. உடனே அவ்விளைஞன் இராணுவ வீரனை போல நின்று கொண்டு, அம் மண்ணுருண்டையை எடுத்து, "ஓம் ஸ்ரீ இராகவேந்திராய நமக," என்று உச்சரித்தபடி அந்த அரக்கன்மீது வீசி எறிந்தான். அம் மண்ணுருண்டை மேலே பட்ட உடனேயே அந்த பிரம்ப இராக்ஷஸன் அந்த இடத்திலேயே பயங்கரமாக அலறியபடி எரிந்து அழிந்தான்.

அந்த இராக்ஷசனின் பயங்கர அலறலைக்கேட்டு வீட்டினுள் இருந்த அனைவரும் விளக்குடன் ஓடிவந்து கதவை திறந்து பார்த்தனர். வாலிப முறுக்கோடு கம்பீரமாக ஒரு இளைஞன் கதாநாயகனை போல நின்று கொண்டிருப்பதை கண்டு அவனிடம் அப்போது ஏற்பட்ட பயங்கரமான அலறலை பற்றியும், அவனைப்பற்றியும் விசாரித்தனர்.

இளைஞன் கூறினான். "நான் ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளின் மடத்தை சேர்ந்த திருமணமாகாத இளைஞன். அங்கு

இருக்கட்டும். சற்று நேரத்திற்கு முன் இந்த வீட்டில் ஆண் குழந்தை பிறந்ததா? முதலில் அதை சொல்லுங்கள் எனக்கு......"

அவன் கேட்ட கேள்விகள் அனைத்திற்கும் எந்தவித மறுப்பில்லாமல் அவர்கள் சொன்ன பதிலை கேட்டதும், தேசாய் குடும்பத்தின் பகைவன் ஒருவன் ராட்சஷவடிவம் கொண்டு வாரிசு இல்லாமல் குடும்பத்தையே நாசமாக்க முடிவு செய்துவிட்டான். இதுவரை எட்டு முறை குழந்தை பிறந்த உடனேயே கொன்று விட்டான். ஒன்பதாவது முறை யாக மறுபடியும் அவன் வந்தான். நான் வாயில் படுத்தி ருந்ததால் நேரடியாக வீட்டினுள் அவனால் நுழைய முடிய வில்லை. எனவே என்னை எழுப்பி வழிவிடும்படி கேட்டான். அவனுடைய கெட்ட நோக்கத்தை அவன் மூலமாகவே தெரிந்து கொண்ட நான் தண்டனையாக அவனை எரித்து சாம்பலாக்கிவிட்டேன். இப்போது உங்களுடைய ஆண் குழந்தை பாதுகாப்பாகவும் நீண்ட ஆயுளும் பெற்று வாழும்," என்றான்.

தேசாயுக்கு சந்தோஷம் தாளமுடியவில்லை அவனுடைய சொற்களை கேட்டதும். அவனை கட்டித் தழுவி மரியாதை யோடு வீட்டிற்குள் அழைத்துச் சென்று கௌரவித்தார். தேசாய் அவனைப் பற்றியும், அவன் சொந்த ஊருக்கு போய் கொண்டிருக்கும் நோக்கம் பற்றியும் கேட்டுத் தெரிந்து கொண்டார். அதிசக்தி கொண்ட புண்ணியவானாகிய ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தருடைய ஆசி பெற்ற அவ்விளைஞனை விட்டு விட விரும்பாமல் அவருடனேயே வைத்துக் கொண் டால் அவருடைய குடும்பமும், பண்ணையும் நல்ல முறையில் நீண்ட நாட்கள் பாதுகாப்பாக இருக்குமென்று நினைத்தார் தேசாய்.

எனவே தேசாய் அவருடைய சகோதரனின் மகளையே மணந்து கொள்ளும்படியும் திருமணத்தை வெகு சிறப்பாக

நடத்தி வைப்பதாகவும் அவ்விளைஞனிடம் கேட்டுக் கொண்டார். பிறகு பெரிய வீடு ஒன்றையும், பண்ணை ஒன்றையும் புதிய மனைவியுடன் சந்தோஷமாக வாழக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல் தேசாயின் கௌரவத்திற்கு இணையாக அவ் விளைஞனையும் நடத்தினர். சாதாரண நீர் கொண்டு வருபவன் புகழ்மிக்க பணக்கார குடும்பத்திலிருந்து அழகான பெண்ணை மனைவியாக அடைந்ததுமல்லாமல் கௌரவ மிக்க ஜகீர்தாராகவும் விளங்கினன். அவன் கண்மூடித் தனமாக நடந்து கொண்டானே யானுலும்,இவ்வளவும் அவனுடைய குருவின் அருளாசியினல் விளைந்த தன் பயனே யாகும்.

12. தீர்த்தம்

தார்வார் மாவட்டத்தை சேர்ந்த சிரகட்டி தாலுக்காவில் உள்ள பிதரகல்லி என்ற கிராமத்தில் கிருஷ்ணுச்சாரியார் என்பவர் திருமலம்பாள் என்ற மனைவியுடன் வாழ்ந்து வந்தார். இந்த தம்பதிகள் ஆழ்ந்த சமய ஈடுபாடுகொண்டவர்கள். தெய்வபக்தி மிகுந்தவர்கள். ஸ்ரீ மாதவரால் உருவாக்கப்பட்ட. சமய சட்டதிட்டங்களை சிறிதும் வழுவாது கடைபிடித்து நடப்பதில் நம்பிக்கை மிக கொண்டவர்கள். அவர்களுடைய குல தெய்வமாண திருப்பதி ஸ்ரீனிவாச பெருமானின் தீவிர பக்தர்கள். அவருடைய ஆசியின் காரணமாக கடைசி காலத்தில் ஓர் ஆண் மகவை பெற்றெடுத்தனர். அவர் களுடைய குல தெய்வத்தின் நினைவாக அக்குழந்தைக்கு ஸ்ரீனிவாசன் என்று பெயரிட்டு அழைத்தனர். அக்குழந்தை வளர்ந்ததும் கிருஷ்ணுச்சாரியார் அடிப்படை கல்வியை கற்றுத் தந்தார். பிறகு ஸ்ரீ மாதவ சித்தாந்தங்களை போதிக்கும் பொருட்டு எக்குண்டியில் வாழ்ந்துவந்த மகான் ஸ்ரீ யாதவராயரிடம் சீனுவாசனை ஒப்படைத்தார் கிருஷ்ணுச்சாரியார். ஸ்ரீ யாதவராயர் மனிதனை போன்ற ஒரு முனிவர்தான். அவர் இல்லற வாழ்க்கையில் பங்கு கொண்ட குடும்பஸ்தர். பழங்கால சன்னியாசிகளுக்கு உரிய முறையில் அவரும் வாழ்ந்து வந்தார். நோன்பு இருப்பதிலும், தியானம் செய்வதிலும், கர்ம அனுஷ்தானங்களை கடை பிடிப்பதிலும் சன்னியாசிகளுக்கு இணையாக விளங்கினார். இவர் வேதியாசருடைய பக்தரும் அவரை வழிபடுபவருமாவார்.

எப்போதெல்லாம் ஸ்ரீ வேதியாசரை பார்க்க வேண்டும் என்று எண்ணுகிறாரோ அப்போதெல்லாம் ஸ்ரீ வேதியாச கடவுள் அவருக்கு காட்சியளிப்பார்.

அத்தகைய சிறப்பு வாய்ந்த மனிதனைபோல வாழ்ந்து வந்த மகான் ஸ்ரீ யாதவராயர் பிதரகல்லியிலிருந்து வந்த

சீனிவாச ஆச்சாரியாரை அவருடைய சீடர்களுள் ஒருவராக ஏற்றுக்கொண்டார். சிறுவன் சீனிவாச ஆச்சாரியாருக்கு இருந்த புரிந்து கொள்ளும் சக்தியையும் ஆவலையும் கண்டு அவனுக்கு ஸ்ரீ மாதவ சித்தாந்தங்கள் முழுவதையும் கற்றுத் தந்து முழுசித்தாந்த வாதியாக மாற்றுவ்தாக ஆசி கூறிய தோடு மட்டுமல்லாமல் அவனிடம் தனி பரிவும் காட்டினார். ஸ்ரீ மாதவ சித்தாந்தங்களை முழுவதும் கற்றுத் தேர்ந்த சீனுவாச ஆச்சாரியர் பிதரகல்லி திரும்பிய பின் குருவை போலவே ஒரு நல்ல குடும்பத்தில் பெண் பார்த்து மணம் செய்து கொண்டு இல்லற வாழ்வை நடத்தலானார்.

பிதரகல்வி சீனுவாச ஆச்சாரியார் குரு எக்குண்டி ஸ்ரீ யாதவராயருடன் தீகாச்சாரியாரையும் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தரையும் போல ஸ்ரீ மதர்னந்த தீர்த்தரின் நூல்கள் அனைத்திற்கும் விளக்க உரை எழுதினார். சீனிவாச ஆச்சாரி யார் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தரை பற்றி அவர் ஒரு கடவு ளின் அவதாரம் என்றும், கடந்த, நடக்கின்ற நடக்க இருக் கின்ற முக்காலங்களை பற்றியும் நன்கறிந்த முக்காலமும் உணர்ந்த ஞானி என்றும், சபிப்பதிலும், அருளாசி வழங்கு வதிலும் சக்தியுள்ளவரென்றும், ஸ்ரீ மாதவ சிந்தாந்தத்தில் அளவிடற் கரிய ஞானமுடையவர் என்றும், அவர் பெற் றுள்ள புண்ணியங்கள் மலைகள் போல குவித்து கிடக்கின்றன வென்றும் அவருடைய மகிமையை பற்றி பலவாறு கேள்விப் பட்டிருந்தார்.

பிதரகல்லி ஸ்ரீனிவாக ஆச்சாரியார் அடிக்கடி மாஞ் சாளிக்குச்சென்று ஸ்ரீ மாவ சித்தாத்தங்கள் பற்றி விவாதிப் பது வழக்கம். சில சமயங்களில் நாள் கணக்காக, மாதக் கணக்காக பல புண்ணியவான்களுடன் மாஞ்சாளியிலேயே தங்கியிருந்து திரும்புவதும் உண்டு. இப்படித்தான் ஒரு முறை பிதரகல்லி சீனுவாச ஆச்சாரியார் மாஞ்சாளியில் தங்கியிருந்தபோது ஒரு நிகழ்ச்சி நடந்தது.

ஒரு முறை ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் அவர் எழுதிய குறிப்புகளை மறுபடி புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்த போது சில திருத்தங்கள் செய்யவேண்டும் என்று தோன்றிய தால் பேனவும், மையும் கொண்டுவர அருகே எவரேனும் இருக்கின்றனரா என்று சுற்றுமுற்றும் பார்த்தார். சற்று தூரத்தில் பிதரகல்லி ஸ்ரீனிவாச ஆச்சாரியார் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தார். அவரை தவிர வேறு யாரும் அங்கு இல்லாமையால் மகான் அவரை அழைத்து பேனவும் மையும் அனுப்பி வைக்கும்படி கூறினர். ஸ்ரீனிவாச ஆச்சாரியார் எழுந்து சென்று அவர் அணிந்திருந்த ஆடையை நீக்கி நனைந்த வேட்டியை, கட்டிக்கொண்டு பிறகு தபறி என்னும் ஒருவகையான மரவுரியை தரித்துக் கொண்டு பேனவையும் மை கூட்டையும் எடுத்து வந்து ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தரிடம் தந்தார்.

மகான் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் அவருடைய செயலை கண்டு ஆச்சரியம் அடைந்தவராக "ஓ ..ஆச்சாரியாரே! உங்களை இந்த பேனவையும் மைக்கூட்டையும் எடுத்து வரும்படி யாம் பணிக்கவில்லையே? அனுப்பி வைக்கும்படிதானே கூறினேன். அது தானிருக்கட்டும், பேனவையும் இந்த மைக் கூட்டை கொண்டு வருதற் பொருட்டுநனைந்த உடையையும் மரவுரியையும் தரித்து ஏன் புனித கோலம் பூணவேண்டும்? எதற்காக இப்படி?" என்று வினவினர்.

"ஆமாம் சுவாமிகளே!

ஆகவே இந்த மை புனிதமானது. தினமும் குளித்து முடித்த பிறகே எழுதுவதற்காக இந்த மைக்கூட்டை எடுப்பேன். அதேபோல எழுதவேண்டியதை எழுதி முடித்த உடனேயே புண்ணிய இடமான கடவுளுக்கு அருகிலேயே வைத்து விடுவேன். வேறுயாரும், ஏன் நான் கூட அதற்குப் பிறகு அதை தொடக்கூடாது; தொடமாட்டேன்......"

"அப்படியா! உங்களுடைய இந்த மையும், பேனவும் அவ்வளவு புனிதமானல் இவைகளால் எழுதப்பட்ட எழுத்து

எவ்வளவு சிறப்புடையதாக இருக்கவேண்டும்? தயவு செய்து இந்த மையால் எழுதப்பட்டவைகளை எடுத்து வாருங்கள்; யாம் படித்துப்பார்க்க விழைகிறோம்......''

சீனுவாச ஆச்சாரியார் மிகுந்த ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் சென்றும் தாம் எழுதிய நோட்டுப் புத்தகங்களை எடுத்து வந்து ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தரின் முன் பணிவாக வைத்தார். ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் அவருடைய விமர்சனங்களை தொடர்ந்து சில நாட்கள் படித்தார். ஸ்ரீ மாதவ சித்தாத்தங்கள் பற்றிய இந்த உயர்ந்த விளக்க உரையை கண்ட்தில் பெருமகிழ்ச்சி கொண்டார்.

அந்த சிறந்த விளக்கங்களை கண்ட ஆனந்தத்தால் கண்களில் கண்ணீர் பெருக்கெடுக்க ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர், "ஆச்சாரியாரே! உண்மையிலேயே மிகவும் உயர்ந்தவர் தாங்கள். மாத்வ சித்தாந்தங்களில் ஈடு இணையற்ற நுண்ணறிவு கொண்டவர். சித்தாந்தங்களை கற்று தேர்ந்தமையால் உங்களுடைய வாழ்க்கை தூய்மையானது; நோன்பு இருப்பதாலும், ஆண்டவனை தியானிப்பதாலும், கர்ம அனுஷ்தானங்களை தினமும் கடை பிடிப்பதாலும் உங்கள் வாழ்க்கை தூய்மையானது நீங்களும் சன்னியாசியை போன்றவர் தான். உங்களுடைய என்றும் அழிவில்லா விளக்க உரையை படித்ததாலும், உங்களுடன் இருப்பதாலும் நான் மிகவும் பெருமகிழ்ச்சி யடைகிறேன்," என்று புகழ்ந்துரைத்தார்.

மறுநாள் கடிதங்கள் மூலம் பலருடன் தொடர்பு கொண்டு ஒரு பெரிய கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார். அந்த சிறந்த வெளி மாநாட்டில் பிதரகல்லி சீனுவாச ஆச்சாரியாரைப் பற்றி இதய பூர்வமாகப் பாராட்டிப்பேசினார். சன்னியாசிகள் மட்டுமே அமர்வதற்காக செய்யப்பட்ட பின்புறம்மரத்தால் ஆன ஆசனத்தில் அமரச்செய்து. "தீர்த்தர்," என்ற பட்டத்தை பெயருடன் இணைத்து கௌரவித்தார்.

அதுமட்டுமல்லாது. ஓரங்களில் தங்க சரிகைகளால் நெய்யப்பட்ட விலையுயர்ந்த கம்பளிப் போர்வை ஒன்றை அவருக்குப் போர்த்தி, வெள்ளித் தட்டு நிறைய காசுகளை நிரப்பி, தட்சணையாக அளித்தார்.

அது முதல் அவர் திருமணமாகி மனைவியுடன் வாழ்ந்து வந்தாலும், பலராலும் பிதரகல்வி சீனுவாச தீர்த்தர் என்று சிறப்பாக அழைக்கப்பட்டு புகழடைந்தார். சீனுவாச தீர்த்தர் எதிர்பாராத விதமாக கிடைத்த இந்த வெகுமதிகளாலும், பெருமைகளாலும் பேரானந்தம் அடைந்தார். இவ்வளவு பெருமையும், மதிப்பும் அவருக்கு கல்வி புகட்டிய குரு ஸ்ரீ யாதவராயரையே சாரும் என்று எண்ணியதால் அவருக்கு தம் நன்றியை தெரிவிக்கும் பொருட்டு மாஞ்சாளியை விட்டு எக்குண்டிக்குச் சென்றுவர சீனிவாச தீர்த்தர் தீர்மானித்தார்.

முக்தியை அடைவதற்கு முன் சஞ்சிதப், அகமி, பிரரபதம் என்கிற மூன்று வித கர்ம வினைகளின் பயனாக மனிதன் துன்பப்படவோ அல்லது இன்பப்படவோ வேண்டியுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

சஞ்சித, அகமி கர்ம வினைகள் சக்தி வாய்ந்த குருக்களின் ஆசீர்வாதங்களாலோ அல்லது புண்ணியங்களை பெறுவதன் மூலமோ நீக்கி அழித்துவிடலாம். ஆனால் எவ்வளவு பெரிய மகானாக இருந்தாலும் சரி, அல்லது எவ்வளவு தான் புண்ணியங்களை குவித்திருந்தாலும் சரி பிரரபதம் என்கிற கர்ம வினையை அனுபவித்து உணர்ந்தாலொழிய முக்தியை அடைய முடியாது.

எவ்வளவுதான் நற்குணங்களும், திறமைகளும் பிதரகல்வி சீனுவாச தீர்த்தர் பெற்றிருந்தாலும் அவருக்குப் பின்னிருந்த பிரரபதம் என்கிற கர்ம வினை கெட்டதாக இருந்தது. பிதரகல்லி சீனுவாச தீர்த்தருடைய குடும்பம்

உத்தராதி மடத்தை சார்ந்ததாக இருந்தது. இப்போது இருக்கின்ற ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளுடைய மடம் தக்ஷிணாதி மடம் என்று பலராலும் அழைக்கப்பட்டு வந்தது.

எல்லா வைஷ்ணவர்களிடையே சமய ரீதியாக விரதம் இருப்பது வழக்கமாக இருந்தது. அதாவது சில உணவு வகைகளை வருடத்தின் சிலமாதங்களில் உண்ணாமல் தவிர்த்து விடுவது. உதாரணமாக, ஆஷாட சுதா துவைதசி மாதம் முதல் ஸிரவண சுதா துவைதசி மாதம் முடிய புளிப்புச் சுவையையும், பச்சை மிளகாயையும், கடுகையும் உணவி சேர்த்துக் கொள்ளாமல் நீக்கி விடுவார்கள். இந்த வகையான சில உணவுப் பொருள்களை தவிர்த்து உன்னும் வழக்கத்திற்கு 'விரதம்' என்றழைப்பார்கள். எல்லா சமயப் பற்றுள்ள வைணவ மடத்தைச் சேர்ந்தவர்கள் இந்த விரத முறையை கடைபிடிப்பது வழக்கம். ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தருடைய காலத்தில் கடுகை தவிர்த்து உண்பது தவிர்க்கப்பட்டது. அதாவது ஆஷாட சுதா மாதம் முதல் ..ரவண் சுதா மாதம் முடிய உள்ள விரத காலங்களில் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தருடைய மடத்தைச் சேர்ந்தவர்கள் கடுகை உணவுடன் சேர்த்து உண்டனர். தக்ஷிணாதி மடத்தை சேர்ந்தவர்கள் கடுகு தவிர்க்காமல் விரதம் மேற்கொள்வதற்கான ஒரு கதை சொல்லப்படுகிறது. பதினைந்தாம் நூற்றாண்டின்போது விஜய நகர அரசர்கள் நாட்டை ஆட்சி செலுத்திய சமயம் ஸ்ரீ வியாசராஜர் அவருடைய ஆசிரியரான ஸ்ரீ வதிராஜ தீர்த்தருடனும், புரந்தர தாஸ் என்கிற பக்திப்பாடல்களை கன்னடத்தில் இயற்றிப் பாடி புகழ் பெற்ற கவிஞருடனும் கலந்து உரையாடுவது வழக்கம். அச் சமயங்களில் இவர்கள் தினமும் சிறிது நேரம் சித்தாந்தங்கள் பற்றியும் ஸ்ரீ ஹரிவாயுக்களினுடைய மாயை பற்றியும் பயனுள்ள வழியில் விவாதிப்பது வழக்கம். ஒரு முறை இப்படி விவாதித்துக் கொண்டிருந்த போது பிறப்பு, மறுபிறப்பு பற்றி பேச்சு எழுந்தது. ஸ்ரீ வியாசராஜ தீர்த்தர் "நம்முடைய வாழ்க்கையின் கடைசிகாலம் வரை

ஸ்ரீ ராமரை வழிபட்டாலும் முழுமையான திருப்தி ஏற் படுவதில்லை.......'' என்றார்.

"அப்படியானால் நீங்கள் மறுபடியும் இவ்வுலகில் பிறப் பெடுப்பீர்கள்,'' என்றார் கனகதாசர்.

''இந்த பிறவி முடிந்ததும் ஸ்ரீ புரந்தர தாஸர் எல்லோ ருடைய நலனுக்காக முக்தி பெறுவார் இல்லையா ?''

"அது எப்படி முடியும் ? இன்னும் அவர் ஆறு பிறவிகள் எடுக்க வேண்டுமே......"

''மகான் வதிராஜ தீர்த்தரின் நிலை என்னவோ ?''

,'ஓ... ... அவர் இன்னும் இளமையானவர். அவர் இவ்வுலகில் இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் வாழ வேண்டி உள்ளது. அவரை பற்றி இப்போது ஏன் நினைக்க வேண்டும்?''

"அதிருக்கட்டும் கனக தாஸரே! நீங்கள் மறுபடியும் ஒரு முறை பிறவி யெடுங்களேன்......''

''எதற்காக ஆட்டிடையனாக இன்னும் ஒரு பிறவி யெடுக்க வேண்டும் ஐயா, எல்லோருடைய நன்மையின் பொருட்டு என்னை போக விடுங்கள்''

"ஆட்டிடையனோ அல்லது தெரு கூட்டுபவனோ ? எங்களுக்குத் தெரியாது. யாம் கூறுகிறோம். நீங்கள் மறு படியும் பிறக்க வேண்டும் கனக தாசரே......'' இப்படியாக வியாசராஜ தீர்த்தர் கட்டளையிட்டார்.

இதுதான் அவர்களிடையே அன்று நடந்த உரையாடல் மகான் வியாச ராஜ தீரத்தர் மறுபடியும் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் என்ற பெயரில் பிறப்பெடுத்தார். ஒரு சமயம் சதுர்மசய விரத நாட்களின்போது மகான் ஒரு கிராமத்தில் இருந்த (கிராமத்தின் பெயர் தெளிவாக தெரியவில்லை! கோயிலில் விரதத்தை மேற் கொண்டிருந்தார். அப்போது

ஒரு தெரு கூட்டுபவன் (தோட்டி) கைநிறைய கடுகுடன் வந்து அவனுக்குக் கிடைத்தது அதுதான் என்று கூறி மகானி டம் தந்தான். அப்போது முற் பிறப்பில் கொடுத்த சத்தி யத்தை நினைவு படுத்திய பின் கடைசி மூச்சையும் விட்டி விட்டான். அவனுடைய ஆத்மா எமலோகம் சென்றது.

ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் அந்த கடுகை எடுத்து கடுகு சேர்க்கா விரதநாளாக இருந்தாலும் பரவாயில்லை யென்று கூறி அன்றய உணவில் சேர்க்கும்படி கூறினர். அப்போது முதல் தக்ஷிணாதி மடத்தில் விரதத்தின் போது கடுகு தவிர்ப்பது கிடையாது.

இந்த கதை எந்த அளவிற்கு உண்மை யென்று நமக்குத் தெரியாது. ஆனல் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தருடைய மட மாகிய தக்ஷிணாதி மடத்தில் கடுகு நீக்கி விரத மிருப்பது நீக்கப்பட்ட தென்னவோ உண்மை.

பிதரகல்லி சீனுவாச தீர்த்தர் ஆஷாட சுதா துவைதாசி நாளில் உணவை முடித்துக் கொண்டு மாஞ்சாளியை விட்டுப் புறப்பட தீர்மானித்தார். உணவின் போது பிதரகல்லி சீனுவாச தீர்த்தர் வழக்கம் போல ஸ்ரீ இராகவேந்திர தீர்த் தருக்கு எதிரில் அமர்ந்தார். எல்லோரும் உணவருந்தத் தொடங்கினர். உணவு பறிமாறுபவன் சைவ ரசம்கொண்டு வந்து அனைவருக்கும் பறிமாறினன். அப்போது ஸ்ரீனிவாச தீர்த்தருக்கும் பறிமாற எத்தனித்த போது, சீனிவாச தீர்த் தர் பரபரப்புடன் உணவு பறிமாறுபவனிடம்,

"இதில் கடுகு கலக்கப்பட்டுள்ளதா?" என்று வினவினர்.

"ஆம் ஐயா..."

"அப்படியானல் யான் இதை உட்கொள்ளேன். விரத நாட்களில் கடுகை சேர்த்துக் கொள்ளல் கூடாது".

ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் இதை கேட்டு இடைமறித்து உணவு பறிமாறுபவனிடம், "சீனுவாச தீர்த்தர் உத்திராதி மடத்தை சேர்ந்த பக்தர் என்று நீ அறியாயோ? கடுகு சேர்க்கப்படாத ரசம் கொண்டுவந்து கொடு,'' என்ருர்.

உணவு பறிமாறுபவன் கடுகு சேர்க்கப்படாத ரசம் கொண்டு வந்து சீனுவாச தீர்த்தருக்குப் பறிமாறினன். உணவு முடிந்த பிறகு சீனிவாச தீர்த்தர் அவராகவே புறப்படதயாராஞர். மகான் பால மந்திராக்ஷம் தந்து மரியாதையுடன் வழியனுப்பி வைத்தார். நான்கைந்து நாட்கள் பயணத்திற்குப் பிறகு சீனிவாச தீர்த்தர் எக்குண்டி வந்து சேர்ந்தார்.

ஸ்ரீ யாதவேந்திர தீர்த்தர் அவருடைய மாணுக்கன் கடவுளுக்கு நிகரான ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தரால் கௌரவிக்கப் பட்டுள்ளார் என்று முதலிலேயே கேள்விப் பட்டிருந்தார். எனவே அவரை மகிழ்வுடன் வரவேற்கும் பொருட்டு அவருடைய வரவை எதிர் நோக்கிக் காத்திருந்தார். சீனுவாச தீர்த்தர் ஸ்ரீ யாதவராய தீர்த்தரை அணுகியதும் அவருடைய பாதங்களில் விழுந்து வணங்கினர். சீனுவாச தீர்த்தர் நீண்ட தூரம் பயணம் செய்து வந்திருந்த போதிலும் அவருடைய முகத்தை பார்த்ததும் ஸ்ரீ யாதவராய தீர்த்தர் கலக்க மடைந்து கூறலானுர்.

"யாது நிகழ்ந்தது? உனக்கு என்னவாயிற்று? தூரவே நில்; என்னை தொடாதே; உன் வீட்டில் யாரேனும் இறந்து விட்டனரா? அன்றி நீ ஏதேனும் குற்றம் புரிந்தனையா? அல்லது ஐந்து மகா பாதகங்களையும் செய்துவிட்டாயா? என்ன விஷயம்? உன் முகத்தை பாவ, கெட்டக்காற்று சூழ்ந்திருப்பதன் காரணம் யாது?''

"ஏதும் நிகழவில்லையே குருதேவா! நான் தூய்மையானவன்; அதுமட்டுமல்ல, ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தரால்

மரியாதையுடன் கௌரவிக்கப்பட்டவன். அவர் பலர் முன்னிலையில் எனக்கு, 'தீர்த்தர்' என்ற சிறப்புப் பெயரையும் சூட்டி கௌரவித்தார். பல பரிசு பொருள்களுடன் மகிழ்வுடன் தான் என்னை வழியனுப்பி வைத்தார் அவர்...."

"நடந்த அனைத்தையும் நான் அறிவேன், ஆனால்...... நன்று நீ மாஞ்சாளியை விட்டு புறப்படுவதற்கு முன் மகானிடமிருந்து பால மந்திராக்ஷத்தை பெற்றனையா ?"

"ஆம் குருதேவா, இதோ பாருங்கள்,'' என்று கூறியபடி அடையின் முனையை அவிழ்த்துக் காட்டினார். சீனுவாச தீர்த்தருக்கு அதை பார்த்தபோது திகிலும் அதிர்ச்சியும் அடைந்தார். அது சிகப்பாக இருப்பதற்கு பதிலாக கருப்பாக மாறியிருந்தது. ஸ்ரீ யாதவேந்திர தீர்த்தர் யூகித்துக் கூறலானார். "நீ மகானிடமிருந்து கெட்டதை சம்பாதித்திருக்கிறாய்; மாஞ்சாளியில் நீ என்ன செய்தாய்? யாது நிகழ்ந்தது ? ஒன்றுவிடாமல் என்னிடம் கூறு. நான் நீ செய்த குற்றத்தை கூறுகிறேன்..."

சீனுவாச தீர்த்தர் கடுகுரசம் வேண்டாம் என்று மறுத்தது உள்பட அனைத்தையும் ஒன்று விடாமல் ஸ்ரீ யாதவராய தீர்த்தரிடம் கூறினார்.

"ஆ...... அது தான், மகான் முன் இப்படி மரியாதையின் நடக்கலாமா ? மகானின் வழியை பின்பற்றாமல் அவர் முன் உன் பிரத்தியோக குணத்தை காட்டியிருக்கிறாய் ? அவா முன்பு நீ உத்திரா்தி மடத்தை சேர்ந்தவன் என்பதை பிரித்துக் காட்டியிருக்கிறாய்; அதோடு விரதத்தின் போது கடுகு சேர்த்துக் கொள்ளல் ஆகாது என்று சுட்டி வேறு காட்டியிருக்கிறாய் ; முட்டாள் தனமாக நடந்து கொண்டாயே ! ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தரை பற்றி நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய் ? மற்றவர்களை போல அவர் என்ன சாதாரண சன்னியாசியா?

அவர் முக்காலும் உணர்ந்த சர்வ ஞானி. அவர் நினைத்தா ரானால் உன்னை எரித்து சாம்பலாக்கக் கூட முடியும். ஆனால் அவர் மிகவும் கருணை உள்ளம் கொண்டவர். நீ அறிவாயா, சர்வ வல்லமை கொண்ட ஆண்டவனே அவருக்குப் பின்னால் இருக்கிறார் என்பதை. இவ்வளவும் ஒரு புறமிருந்தாலும் அவர் ஒரு தூய சன்னியாசி: நீயோ கிரகஸ்தன். சன்னி யாசிகளுக்கு முன் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று உனக்குத் தெரியாதா? இவைகளை யெல்லாம் மறந்து விட்டு நீ நடந்து கொண்ட முறை சரியில்லை; போ...... மாஞ் சாளிக்கு சென்று அவருடைய பாதங்களில் விழுந்து மன்னித் தருளும் படி கெஞ்சிக் கேட்டுக் கொள்; பிறகு என்னிடம் வா......" என்று அறிவுரை கூறி மறுபடி மாஞ்சாளிக்கு அனுப்பிவைத்தார் ஸ்ரீ யாதவரார்ய தீர்த்தர்.

சீனுவாச தீர்த்தர் உண்மையிலேயே மிகவும் நல்லவர்; தூயவர்; நன்நடத்தையாளர்; இரக்கமுள்ள இதயம் கொண்டவர்; அமைதியான வாழ்க்கையை நடத்தி வருப வர்; ஆனால் அவருடைய முற்பிறப்பின் பரரபாத கர்ம வினை யின் பயனால் அவரே அறியா வண்ணம் நிகழ்ந்து விட்ட நிகழ்ச்சி இது. உடனே ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் மாஞ் சாளிக்கு ஓடிச் சென்று மகான் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தரு டைய திருவடிகளில் விழுந்து வணங்கி மன்னிக்கும்படி கெஞ்சி கேட்டபடி வாய் விட்டு அழத் தொடங்கினார்.

ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் அவரை கண்டு புன்னகை புரிந்து எழுந்திருக்கும் படி சைகை செய்து "உன்னுடைய வித்ய குருதான் உன்னை மறுபடியும் இங்கு அனுப்பிவைத் தார் இல்லையா?" என்றார்.

"சுவாமி, முக்காலமும் அறிய வல்ல தாங்கள் அறி யாததா? நான் புத்தியில்லாதவன்; முட்டாள்; என்னு டைய இந்த தவறான நடத்தைக்காக எக்குண்டிக்கு அனுப்பு வதற்கு பதிலாக இங்கேயே எனக்கு தண்டனை அளித்து

விடுங்கள்; தயவு செய்து என் மீது கருணைகாட்டி நடந்ததை மறந்து என்னை மன்னித்தருளுங்கள்......" என்று மீண்டும் மீண்டும் வேண்டி கேட்டுக்கொண்டார்.

அதே நாளில் சீனிவாச தீர்த்தரை மகான் முன்னிலையில் அமரும்படி செய்து உணவு பரிமாறப்பட்டது. ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தருக்கு பரிமாறப் பட்டது போலவே கடுகு சேர்க்கப்பட்ட ரசம் அளிக்கப்பட்டது. உணவு முடிந்த பிறகு சீனிவாச தீர்த்தர் மகான் முன் வந்து பணிவுடன் கை கட்டி நின்றார். ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் சன்னியாசிகளிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பது பற்றி அறிவுரை கூறிய பின் பால மந்திராக்ஷத்தை அவருக்கு அளித்து மகிழ்ச்சியுடன் வழியனுப்பிவைத்தார்.

13. விருந்தினர்கள்

அக்காலங்களில் ஒவ்வொரு சமய வாதியும் கோயில் களுக்கும், புண்ணிய தலங்களுக்கும், புண்ணிய நீராடுதற் பொருட்டு பல புண்ணிய நதிகளுக்கும் யாத்திரை செல்வது வழக்கம். போக்குவரத்து வசதிகள் இல்லாத இடங் களுக்குக்கூட மாட்டு வண்டிகள் மூலமோ அல்லது கால் நடையாகவோ பல வருஷங்கள் பயணம் செய்து சென்றடை வதுண்டு இப்படி பல புண்ணிய தலங்களை நாடி மேற்கொள் ளும் பயணத்திற்கு "தீர்த்த யாத்திரை", என்று பெயர். இப்படியாக, நல்ல புகழ் மிக்க குடும்பத்தில் பிறந்த, மாதவ சித்தாந்தங்களில் தேர்ச்சி பெற்று அந்நெறியினின்று வழு வாது கடுமையாக பின் பற்றுபவர்களும், சமயப்பற்றும் தெய்வ பக்தியும் நிறைந்தவர்களுமாகிய மூவர் தென்னிந்தி யாவிலிருந்து தீர்த்த யாத்திரை மேற் கொண்டனர். அவர்கள் யாத்திரையை தொடர்த்து பெல்லாரியை நெருங் கியபோது ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் என்ற புகழ்மிக்க மாதவ சன்னியாசி ஒருவர் அதவணிக்கு அருகில் உள்ள மஞ்சாளி என்ற இடத்தில் இருப்பதாகக் கேள்விப்பட்டனர். எனவே அவர்கள் துங்கபத்தரை நதியில் புனித நீராடி அவ்விடம் சென்று அம்மகானை கண்டு செல்ல முடிவு செய்து மஞ்சாளி நோக்கி பயணத்தை தொடர்ந்தனர். மஞ் சாளியை நெருங்குவதற்குள் மகானை பற்றி அதிகம் கேட்டுத் தெரிந்து கொண்டனர் மகானின் மகத்துவம் பற்றியும், நோன்பு, தியானம் போன்றவற்றில் அவர் செய்த சாதனைகள் பற்றியும், அருளாசி வழங்குவதில் அவர் பெற்றுள்ள அதிகப் படியான சக்தியை பற்றியும், மாதவ சித்தாந்தங்களில் அவருக்கு இருந்த ஆழ்ந்த ஞானம், எல்லாமறிந்த அப ரோக்ஷ ஞானம்' கொண்டவரென்றும் தெரிந்து கொண் டனர்.

இவைகளனைத்தும் கேள்விப்பட்டு மகான் மீது பக்தி பூர்வமான பயமும், ஆச்சரியமும் அடைந்த போதிலும், அம்மகான் அவ்வளவு உயர்ந்தவராக இருக்க முடியாது, பணம் பறிப்பதற்காக அவரை சார்ந்தவர்கள் பரப்பிவிட்ட வதந்தியாகத்தான் இருக்கும் இது; மக்களிடம் நல்மதிப்பை பெற கூறப்பட்ட பொய்களாக இருக்கக் கூடும் என்று நினைத்தனர்.

"எப்படி இருந்தாலென்ன? அவர் ஒரு மாதவ சன்னியாசி, சென்றுதான் பார்த்து செல்வோமே! என்ன குறைந்து விடப்போகிறது? அதோடு மக்களிடம் பரப்பப் பட்டுள்ள இச் செய்திகள் உண்மையாக இருக்கக் கூடுமா என்று தெரிந்துகொள்ள அவருடைய திறமையை சோதித்துப் பார்க்கவும் ஒரு வாய்ப்பாக இருக்கட்டுமே......" என்ற முடிவோடு மஞ்சாளியை நோக்கி வேகமாக நடை போட்டனர். போகும் போது அம்மகானை சோதிப்பதற்காக ஒரு திட்டம் திட்டினர்." ஆளுக்கு ஒரு ஒரு விதமான உணவை மனதில் நினைத்துக்கொண்டு மஞ்சாளிமடத்தில் நாம் கேட்காமலேயே நாம் நினைத்துள்ளதையே நமக்குப் பரிமாறுகிறார்களா என்று பார்க்கவேண்டும். அப்படி நாம் எண்ணியதை வழங்குவாரானால் சர்வமும் அறிந்த ஞானி என்று ஒப்புக்கொள்வோம். இன்றேல் அதுவே இவ்வுலகில் உள்ள பலரை போல ஒரு போலி சாமியார் என்று நிர்மாணமாகி விடும்.

"ஆமாம்..... ஆமாம்... அதன்படியே செய்து பார்ப்போம்....." என்று மூவரும் ஒருமனதாக தீர்மானம் கொண்டு ஆளுக்கொரு உணவை அவரவர்கள் மனதில் எண்ணிக் கொண்டனர். அவர்கள் மஞ்சாளியை அடையும் போது நன்பகல் வேளை. குளித்து பூஜையை முடித்த பின் சுவாமிகளை பார்ப்பது நல்லதெனக் கருதி தங்களுடன் கொண்டு வந்திருந்த பொருட்களை மடத்தின் ஒரு மூலையில் வைத்து விட்டு நேராக துங்கபத்திரை நதிக்கு வந்து சேர்ந்தனர்.

நதிக்கரையில் நின்று கொண்டிருந்த சுவாமிகளின் ஆடைகளை துவைப்பவன், இப் பெருந்தன்மை மிக்கவர்களை கண்டதும் அவர்களை நோக்கி "மேன்மை மிக்க ஆச்சாரியார் அவர்களே! நீங்கள் விரும்பிய உணவு வகைகள் முதலிலேயே செய்யப்பட்டு தயாராக உள்ளது. விரைவாக குளித்து முடித்து உணவருந்த வாருங்கள்", என்று சொல்லியதும் கையிலிருந்த மகானின் ஆடைகளை படிக்கல்மீது வைத்து விட்டு நின்றான்.

அம்மூன்று யாத்திரிகர்களும் அதிசயத்து ஆச்சரியம் அடைந்ததோடு மட்டுமல்லாமல் பயமும் கொண்டு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பின் அவர்களுள் ஒருவர், "ஆ .. கொஞ்ச நேரத்திற்கு முன் என்ன சொன்னாய்? யார் கூறியது உனக்கு, எங்களுக்கு தனித்தனியேகுறிப்பிட்ட உணவு வேண்டுமென்று?" என்றார் அச் சிறுவனைப் பார்த்து.

ஒன்றுமறியா அப்பாவிபோலத் தோன்றிய அச் சிறுவன், "என்ன ஐயா? நான் என்ன சொன்னேன்? 'நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்? என்று வினவினான்.

அவனுடைய இந்த வார்த்தையை கேட்டதும் யாத்திரீகர்கள் அவனுடைய தோற்றத்தை கொண்டு அவன் அம் மடத்து வேலைக்காரன் என்று தெரிந்து கொண்டு அதற்கு மேல் அவனிடம் பேசவிரும்பாமல், அவனையும் பொருட்படுத்தாமல் குளிப்பதற்காக ஆற்றினுள் இறங்கினர். அம் மடத்து பையன் மீண்டும் மகானின் ஆடைகளை எடுத்து தலையில் வைத்துக் கொண்டு போக எத்தனித்தபோது மீண்டும் அம் மூன்று யாத்திரீகர்களை பார்த்து. "நல்லது ஆச்சாரியார்களே .. உச்சிவேளை கடந்து விட்டது., மகான் குளித்து முடித்து ஆண்டவனை தொழுவதற்காக அவருடைய இருக்கையில் அமர்ந்துள்ளார். எனவே சீக்கிரமாக குளித்து

விட்டு நேரத்தோடு வந்து சேருங்கள். உங்களுடைய விருப்பப் படியே செய்து வைக்கப்பட்டுள்ள நீங்கள் எண்ணியிருக்கிற உணவை மகான் வழங்குவார் ...'' என்று சொல்லிவிட்டு அவர்கள் பதிலுக்குக் கூட காத்திராமல் நடந்து சென்று விட்டான்.

மூன்று யாத்திரிகர்களும் ஒன்று மறியாத துணிதுவைப் பவன் கூறிய புதுமையான வார்த்தைகளை கேட்டு நடுக்கம் கொண்டனர். "கையில் ஒன்று மில்லாது நின்றபோது எதுவுமே அறியாதவன் மகானின் ஆடைகளை தொட்ட மாத்திரத்திலேயே எல்லா மறிந்த அபரக்ஷஞானியை போல பேசுகிறானே...... சன்னிதானத்தில் மகானின் சக்தி எவ் வளவு அபரிமிதமாக இருக்கக்கூடும்! கொழுந்து விட்டெரி யும் நெருப்பு சுவாலைபோன்ற அம்மகானைத் தான் பார்த்துப் போக வந்திருக்கிறோம்'' என்று எண்ணியவாறு குளித்து அங்கேகம் செய்து முடித்துக்கொண்டு பயம் மிகுந்தவர் களாக மடத்தை நோக்கி சென்றனர்.

மகானே அவர்களை முன்னமேயே சந்தித்துப் பழகிய வர்களை போல வரவேற்று, "பிராமணர்களே ..... மதிய உணவிற்காக சரியான நேரத்தில்தான் வந்து சேர்ந்திருக்கி றீர்கள். நீங்கள் எங்களுடைய விருந்தினர்கள். தயவு செய்து உணவிற்காக அமருவீர்களாக!'' என்று கூறி அவர்களை சிறப்பான இருக்கைகளில் அமரச் செய்து அவர்கள் தனித் தனியே எண்ணியிருந்த உணவை உணவு பரிமாறுபவனிடம் கூறி, எப்போதும் மடத்தில் தரப்படும் உணவோடு சேர்த்து தரும்படி கட்டளையிட்டுவிட்டு உணவருந்த அவருடைய இருக்கைக்கு சென்று விட்டார்.

அம்மூவரும் மகானின் உபச்சாரங்களை கண்டு வாய டைத்துப் போயினர். ஏதேனும் கெட்டகாலம் வந்து விட்டதோ என்றுகூட மிகவும் பயந்தனர். உணவை உண்டு முடித்ததும் மகானை நோக்கி ஓடிச்சென்று அவருடைய திரு வடிகளில் விழுந்து "சுவாமி...... நாங்கள் குற்றம் செய்த

குற்றவாளிகள். தயவு செய்து மன்னித் தருள வேண்டும் நாங்கள் தாங்களுக்கு மரியாதை செலுத்தி ஆசி பெற வரவில்லை. உங்களுடைய தகுதியையும், திறமையையும் தவ வலிமையையும் சோதிக்கவே வந்தோம். நாங்கள் செய்து விட்ட தவறுக்காக மிகவும் வருந்துகிறோம். உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம், எங்கள் மீது கருணைகாட்டுங்கள். நாங்கள் வேலைக்காரர்களாக உங்களுக்கு தொண்டு செய்ய விரும்புகிறோம். தயவு செய்து அனுமதித்து ஆசி வழங்கும்படி வேண்டுகிறோம்.'' என்று சொல்லியபடி அழத் தொடங்கிவிட்டனர்.

''நல்லது பிராமணர்களே! யாம் அறிவோம் நீங்கள் நல்லவர்கள்; மேன்மை மிக்கவர்கள் என்று ஏதோ சில கெட்ட சக்திதான் இந்த பரவ செயலை செய்ய நினைக்க வைத்தது. இது எல்லோருக்குமே சர்தாரணமாக நிகழக் கூடியதுதான். அந்த கெட்ட சக்தியால்தான் இப்போது குற்ற வாளியாகிவிட்டீர்கள். வேறொன்றுமல்ல. இப்போது நீங்கள் எண்ணிய எண்ணத்திற்காகவும், செய்த செயலுக் காகவும் உணர்ந்து வருந்துகிறீர்கள். நன்று, யாம் உங்களை ஆசீர்வதிக்கிறேன்; உங்களின் விருப்பப்படியே யாம் உங்களின் பணிவிடைகளை ஏற்றுக்கொள்கிறுரேப்; ஆனுல் இப்போதல்ல இன்னும் சில வருடங்களில் யாம் பிருந்தாவனத்தில் இருப் போம். நீங்கள் மஞ்சாளியில் தங்கியிருந்து வருடம் ஒருவ ராக மாற்றி மாற்றி வழிபாடு செய்வீர்களர்க......'' என்று சொல்லி மகான் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் பால மந்திர தொடர்ந்து யாத்திரை மேற் கொள்ளும்படி அருளிற் செய்தார்.

ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் பிருந்தாவனத்தில் நுழையு முன் அவர்களை பிருந்தாவனத்திற்கு உரிமை உடையவர் களாகவும், புரோகிதராகவும் நியமனம் செய்தார். அவர் அவர்களுக்கு நிலமும், தனித்தனியாக மூன்று வீடுகளையும் கட்டித்தந்து பிருந்தாவன கண்காணிப்பதற்காக இன்றும்

பிற வசதிகளும் செய்துதந்தார். அவர் அவர்களுக்கு ஆராதகர் என்று சிறப்புப்பெயரையும் தந்து அவர்களுக்குப் பிறகு அவர்களுடைய பரம்பரையையே அவர்களுடைய பணியை தொடர்ந்து செய்து வரும்படியும் கட்டளையிட்டார். மேற்கண்ட பணியை சுவாமிகளே அவருடைய கையால் மூன்று உரிமைபத்திரங்கள் அவர்களுடைய பெயருக்கு எழுதி மடத்தினுடைய முத்திரையும் பதித்து மூவரிடமும் ஆளுக்கு ஒவ்வொன்று தந்தார். இப்போது பிருந்தாவன மந்திராலயத்தில் உள்ள புரோகிதர்கள் அந்த மேஜரைப் பொருந்திய பிராமணர்கள் வழிவந்தவர்கள் தான். அவர்களிடம் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் அளித்த உரிமை பத்திரங்கள் இன்னும் இருக்கிறது.

14. சோதிடர்கள்

இக் காலத்தில் கேரளம் என்றழைக்கப்படும் மலையாளம் அக் காலத்திலிருந்தே சோதிடம், கைரேகை, ஆருடம், கடவுள் கொள்கை, பில்லி சூன்யம், மாயம் சூன்யம், மாந்திரீகம், தந்திரம் போன்ற கலைகளில் பேர் பெற்று விளங்கியது. மலையாளத்து பிராமணர்களில் சிலர் இன்றும் மேற் கூறிய கலைகளில் வல்லுணர்களாக விளங்குவது கண்கூடு,

பதினேழாம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் சோதிடக் கலையில் மிகுந்த வல்லுணர்களாகவும், ஜாதகங்களை பார்த்து எதிர்காலத்தை மிகத் துள்ளியமாகக் கணக்கிடுவதில் தேர்ச்சி பெற்றவர்களாகவும் மூன்று மலையாள பிராமணர்கள் வாழ்ந்து வந்தனர் அவர்கள் இந்தியா முழுவதும் பயணம் மேற் கொண்டு தம் பெருமைகளைபறைசாற்றியும், அந்தந்த பகுதிகளில் வாழ்ந்து வந்த அறிஞர்களையும் சோதிட வித்துவான்களையும் விவாதத்திற்கு அழைத்தும், பெரும்பாலும் சொற்போர்களில் அவர்களே வென்றும் வந்தனர்.

இவ்வாறு சோதிடப் புலவர்கள் பயணம் மேற்கொண்டு தக்காணம் வந்த போது மஞ்சாளி மகானின் பெருமைகளை கேள்விப் பட்டு அவரை பார்க்க முடிவுசெய்தனர். அதோடு முடிந்தால் அவருடைய மடத்தில் சோதிட வல்லுவர்கள் எவரேனும் இருப்பின் அவர்களுடன் விவாதிக்கவும் முடிவு செய்தனர். எனவே அவர்கள் நேராக மஞ்சாளிக்கு வந்து ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தரை கண்டு அவர்களாகவே அறிமுகமும் செய்து கொண்டனர்.

ஸ்ரீ ராகவேந்திரர் மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்று தம் மடத்திலுள்ள பண்டிதர்களுடன் விவாதத்திற்கு ஏற்பாடு

செய்வதாகவும், மறுநாள் அவர்கள், சோதிடத்தில் அவர்களுக்குள்ள புலமையை வெளிப் படுத்தலாமென்றும் கூறினர். தம்மைபற்றியும், தாம் அவதரித்திருக்கும் நோக்கம் பற்றியும் மக்களுக்கு சிறு விளக்கமளிக்க இதுவே தக்க தருணம் என்று ஸ்ரீ ராகவேந்திரா நினைத்துக் கொண்டார். இதனால் மக்கள் தம்மை பற்றி ஓரளவு அறிந்து கொள்ளக் கூடுமென்றும், அதன் பின் உலகின் நலனுக்கு எவ்வாறு அவர்களை பயன்படுத்தக் கூடுமோ அதன் வழி நடத்த எளிதாகக் கூடு மென்றும் அவர் கருதினர்.

மறுநாள், உணவருந்திய பின் மஞ்சாளியையும் அதனை சுற்றியும் உள்ள கிராமங்களிலும் வாழ்ந்து கொண்டிருந்த கல்வி கேள்விகளில் சிறந்த அறிஞர் பெருமக்களை—குறிப்பாக சோதிடக் கலைஞர்களை—அழைத்து கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார். அதன்படி அங்கே கூடிய அப் பெருங் கூட்டத்தின் மத்தியில் அம்மூன்று மலையாள சோதிடர்களும் மிகுந்த படோடோபத்துடனும், பகட்டுடனும் அவர்களுடைய பெருந்தன்மை கேற்ப தற்பெருமை மிக்க கம்பீரத்துடன் அமர்ந்திருந்தனர். ஸ்ரீ இராகவேந்திரர் அம் மூன்று வல்லுனர்களையும் கூட்டத்தினர்களுக்கு அறிமுகம் செய்வித்து பின் ஒரு ஜாதகத்தை தருவித்து அதை மூன்று பிரதிகளாக்கி ஒவ்வொன்றினையும் ஒவ்வொர் சோதிட புலவரிடமும் தந்து அந்த ஜாதகத்திற்குரியவனின் ஆயுளை கணக்கிடும்படி கேட்டுக் கொண்டபின் அவர்களை தனித்தனியறைகளில் இருக்கச் செய்து வெளியே பூட்டி விட்டார். சோதிடத்தை கணிக்க அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கால அளவு அரை மணி நேரம்.

அரைமணிக்கும் பிறகு கதவுகளை திறந்து சோதிடர்களை கூட்டத்தினர் முன் வந்து அமரும்படி கூறினர். மலையாள பண்டிதர்கள் உண்மையிலேயே வல்லுனர்களாதலால் அந்த ஜாதகத்தை மிகவும் கவனமாக ஆராய்ந்து மிகத் துள்ளியமாகக் கணக்கிட்டு வைத்திருந்தனர். அவர்கள் ஸ்ரீ இராக

வேந்திர தீர்த்தர் முன் வந்து அமர்ந்ததும் அவரவர்களுடைய சோதிட முடிவுகளை வெளியிட தயாராயினர். முதல் சோதிடர் எழுந்து கூறினார்,

"ஐயன்மீர் ! என்னுடைய கணிப்புப்படி இந்த ஜாதகனுடைய ஆயுள் நூறு ஆண்டுகளாயினும், மக்களின் கண்களுக்கு முன்னால் எழுபத்தி மூன்று ஆண்டுகளே தெரிவான் .. "

இரண்டாவது சோதிடர் இடைமறித்து, "தவறு...... தங்களுடைய கணிப்பு தவறானது. இச்சாதகத்திற் குரியவன் நீண்ட ஆயுள் உடையவன். எழுநூறு ஆண்டுகள் வாழ்வான்." என்று கூறினார்.

"இல்லவே இல்லை; நீங்கள் இருவருமே தவறாகக் கூறுகின்றீர்கள்," என்று கூறிய மூன்றாமவர் சற்று மௌனத்திற்குப் பிறகு,

"இந்த ஜாதகத்திற்குரியவன் முன்னூறு ஆண்டுகள் வரை வாழக்கூடும்," என்றார்.

கூட்டத்தினர் அனைவரும் ஒரு நிமிஷம் பேச்சிழந்து நின்றனர். பின்னர் அனைவரும் இம் மூன்று பண்டிதர்களை பற்றி தமக்குள்ளாகவே நிந்தித்துப் பேசலாயினர். பலர் அவர்களை நோக்கி,

"ஒரே ஜாதகத்திற்கு மூன்று விதமான முடிவுகள் எப்படியிருக்கக் கூடும் ? நீங்கள் சொல்வது தவறு. உங்களை பண்டிதர்கள் என்று எங்களால் ஒப்புக்கொள்ள முடியாது', என்று கத்தினர். அப்போது ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் குறுக்கிட்டு, "அப்படியாரும் கூறலாகாது; அவர்கள் உண்மையான திறமைமிக்க பண்டிதர்களே; அவர்களை வீணே தாக்கலாகாது......" என்று கூறினார்.

"அது எப்படி முடியும் குருவே ?...... நல்லது அது யாருடை ஜாதகமென்று கூறுவீர்களா ?"

"ஸ்ரீ மூலராமரின் எளிய பக்தனான இந்த துறவியினு டையது தான்," என்று ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் அவருடைய நெஞ்சை தொட்டுக் காட்டியபடி கூறினார்.

கூட்டம் முழுவதும் திடுக்கிட்டு ஆச்சரியத்துடனும், பயம் கலந்த பக்தியுடனும் ஸ்ரீ இராகவேந்திரரை நோக்கி இம் மூன்று வகையான கணிப்புகளின் முடிவுகளுக்கான விளக்கங் களை கூறுமாறு கேட்டுக் கொண்டனர்.

சுவாமிகள் கூறலானார்.

"பாருங்கள்...... பொதுவாக மனித இனத்திற்கு வரை யறுக்கப்பட்டுள்ளவாறு முதலாமவர் கூறிய கணிப்புப்படி யாம் உங்கள் முன்னிலையில் சாதாரண மனிதர்களுடைய கடமைகளை நிறைவேற்றும் பொருட்டு மனிதர்களை போல யாமும் குறுகிய காலம் வாழ்வோம். அதன் பின்னர், இரண் டாமவர் கூறியது போல பிருந்தா வனத்தில் எழுநூறு ஆண்டுகள் வாழ்ந்து, நம்மை நாடி வருபவர்களுக்கு அருளா சிகள் வழங்கிக் கொண்டும், அவர்களுடைய உலகியல் துய ரங்களை துடைத்துக் கொண்டும், அவர்களுக்கு அர்த்தம், காமம், மோட்சம், லாபம் என்கிற நான் புருஷார்த்தங்களை வழங்கிக் கொண்டும் தியான பக்தி, வைராக்கியம் ஆகிய வற்றை எம்மை நாடி வரும் பக்தர்களுக்கு அருளி அவர்களை வீடு பேறடைவதற்கான பாதையில் செலுத்திக் கொண்டும் இருப்போம். மூன்றாமவருடைய கணிப்பு யாதெனில் யாம் எழுதிய நூல்கள் அனைத்தும் முன்னூறு ஆண்டுகளில் பிர பலப் படுத்தப்பட்டு பெருமை பெறும் என்பதாம்.....

"ஐயன்மீர் அதன் பிறகு......

"அதன் பிறகு இத்துணையென்று வரையறுத்துக் கூற இயலாத கால அளவிற்கு யாம் இயற்றிய நூல்கள் பக்தியை யும், முக்தியையும் நாடும் மனித இனத்திற்கு வழிகாட்டு

களாக நின்று என்றும் நிலைத்திருக்கும். இவன் குழுமிய ருக்கும் அறிஞர் பெருமக்களே! இச் சோதிட புலவர்களை சாதாரணமானவர்கள் என்று கருதுதல் வேண்டா. இவர் கள், இத்துறையில் ஈடு இணையில்லா திறமை கொண்ட வர்கள்.'' என்று கூறி அவர்களுக்கு விலையுயர்ந்த சால் வையை தந்து கௌரவித்து ஆசிர்வதித்து வழியனுப்பி வைத்தார்.

இவ்வாறு அன்றய கூட்டம் முடிய, அக்கூட்டத்தில் பங்கேற்ற அனைவரும் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் அவர்கள் சாதாரண துறவி யல்லர்; இறைமை தன்மை பெற்ற பெரு மகனார் 'என்றும், அவரால் அளவிடற்கரிய புண்ணியங்களை தாம் பெறுதல் கூடுமென்றும் அறிந்தவர்களாக பலமுறை வணங்கி அவரவர் இல்லம் ஏகினர்.

15. பிருந்தாவனம்

மகான் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் அத்வைணிக்கு அரு கில் உள்ள மாஞ்சாளிக்கு வந்துள்ளார் என்பதை கேள்விப் பட்டதும் வெங்கண்ணா பந்த் மிகவும் மகிழ்ச்சியடைந்தார் அடிக்கடி மாஞ்சாளி சென்று மகானுக்கு சேவை செய்வதை வழக்கமாகக் கொண்டார். இதனால் இவர் மகானின் உள் ளத்தில் தனியிடத்தையே பெற்ற தோடல்லாமல் அன் பார்ந்த நம்பிக்கைக் குரிய ஆப்த பக்தனாகவும் திகழ்ந்தார் இதனால் வெங்கண்ணா பந்த் வாழ்க்கையில் எல்லா நலன்க ளும் பெற்றதோடு மட்டுமல்லாமல் முக்த ஜீவமும் எய்தினர்.

ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தரால் மிகவும் கவரப்பட்ட மற்றொரு நபர் பிராமண குலத்தில் உதித்த பெரியார் அப் பண்ணாச்சாரியார் ஆவார். உதிர்ந்த குணங்கள் கொண்ட அவர் தூய்மையானவர்; சாந்தமானவர்; சமயத் துறை யில் மிகவும் ஈடுபாடு கொண்டவர்; ஸ்ரீ மாதவ சித்தாந் தங்களை நெறிவழுவாது கடைபிடிப்பவர்; துவைத்த தத்து வத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றவர்; சமஸ்கிருதத்தில் பிறவிக் கவிஞர் மகானுடன் மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்ட செல்வாக்குடையவர், துங்கபத்திரை நதியின் கரையில் மாஞ்சாளி கிராமத்திற்கு நேர் எதிரில் அமைந் துள்ள பிச்சாலே என்ற கிராமத்தில் பிறந்தவரானாலும் அவர் மகானுக்கு தொண்டு செய்தற்காகவே ஒவ்வொரு நாளும் அதிகப்படியான நேரத்தை மாஞ்சாளியிலேயே செலவிடுவதை வழக்கமாகக் கொண்டார்.

கிருத யுகத்தின் போது வெங்கண்ணா பந்தும், அப்பண் ணாச்சாரியாரும் ஸ்ரீ பிரகலாத ராஜாவின் இளமை நண்பர் கள் என்றும், நேரடி உபதேசங்களை பெற்றவர்கள் என்றும் பலராலும் கூறப்படுகிறது. கலியுகத்திலும் அவர்களுடைய மகானுக்கு அதாவது ஸ்ரீ பிரகலாத இராஜாவின் அவதார

மான ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தருக்கு அவருடனேயே இருந்து சேவை செய்யும் பொருட்டு பிறவி யெடுத்ததாக வும் கூறப்படுகிறது.

சங்கு கர்ணன் இந்த பிறவியை எடுத்ததன் நோக்கமே அவருடைய அனுஷ்ட புண்ணியங்களை இந்த அவதாரத்தி லேயே பக்தர்களுக்கு அளித்து தீர்த்துவிட வேண்டும் என்ப தற்காகத்தான். இப்படி அவரை அணுகி அவருடைய பாதங்களை தொட்டு வழிபடுபவர்களுக்கு புண்ணியங்கள் அனைத்தையும் அறிந்த பிறகுதான். அவர் பிரம்மணிடம் பழைய இடத்தை சென்றடைவார், அவரிடம் குவிந்துள்ள அந்த அனுஷ்ட புண்ணியங்களை தீர்ப்பதற்காகவே மறுபடி யும் பூமியில் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தராக பிறப்பெடுத்து சர்வதிகாச்சர்ய பீடத்தில் ஐம்பத்தி ஏழு ஆண்டுகள் அமர்ந்து, உடலாலும் உள்ளத்தாலும் ஸ்ரீ மூலராமரை வணங்கி, வழிபட்டு அவரை நாடி வரும் பக்தர்களுக்கு புண்ணியங்களை வழங்கியபடி இன்னும் இருக்கிறார். ஸ்ரீ தீகாச்சாரியாரின் விமர்சனங்களுக்கு படித்து புரிந்து கொண்டு அதன் வழி நடந்து முக்தி பெறும் வழியை எளிதாக பல விளக்கங்களுடன் எழுதியதோடு மட்டுமல்லாமல் ஸ்ரீ ஹரி வாயுகளின் பரிபூரண நிலையையும் அவர்களை பற்றிய தெளிந்த அறிவையும் பலரும் அறிந்து கொள்ளும் பொருட்டு எளிய முறையில் ஸ்ரீ தீகாச்சாரியாரின் சேவ மோத கிரந்த ஸ்ரீமச்சாந்த தீர்த்த சர்யகா பற்றி விளக்கங்களும் எழுதி யுள்ளார்.

மக்களுடைய கண்களுக்கு தெரியும்படியாக இருந்து செய்த தொண்டு முடிவு பெறும் நிலைக்கு வந்து விட்டதாக வும், இனிமேல் பிருந்தாவனத்தினுள்ளிருந்து செய்ய வேண்டியதே மீதிமிருப்பதாகவும், மகான் உணர்ந்தார் பிருந்தாவனத்திற்குள் இருந்து செய்ய வேண்டிய இந்த தொண்டு எழுநூறு ஆண்டுகள் நீடிக்கும் என கணக்கிட்

டார். எனவே பிருந்தாவனம் அமைத்தற் பொருட்டு வெங்கண்ணு பந்தை ஆளனுப்பி வரவழைத்தார்.

திவான் வெங்கண்ணு பந்த் மகான் முன் வந்து பணிவுடன் கைகட்டி நின்றார்.

"நல்லது வெங்கடேஷ், இவ்வுலகினின்று நான் மறையும் காலம் நெருங்கி விட்டது எனவே பிருந்தாவனம் அமைப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்வாயாக......"

வெங்கண்ணு பந்த் அது கேட்டு அழத்தொடங்கி விட்டார். "தாங்கள் இவ்வுலகை விட்டு மறைந்த பின் யான் எப்படி வாழ்வேன் சுவாமி?", என்றார்.

"ஓ .. ஏன் அழுகிறாய்? நான் இறக்கமாட்டேன்; யாம் தொடர்ந்து வாழ்வோம்! யாம் சொல்வது யாதென்று சற்று கவனமாகக்கேள்... நன்று. முதலில் பிருந்தாவனம் அமைப்பதற்கு நல்ல கற்களை சேகரிக்க வேண்டும். துவாதஷ ஷேத்ர சாலிகிராம கற்களாலும், நாராயன், வாசுதேவன், நரசிம்மன், ஹக்கியவதனு போன்ற வேறு எழுநூறு வகை சாலிகிராம கற்களையும் கண்டக நதியிலிருந்து எடுத்து வரவேண்டும். மற்ற பொருள்கள் யாவும் அத்வைவனியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்....."

"இவைகளெல்லாம் உண்மையில் தாங்களுக்கு எப்போது தேவை குருதேவா?......"

"எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக....."

வெங்கண்ணு பந்த் வேதனை நிறைந்த உள்ளத்துடன் மாஞ்சாலியை விட்டுப் புறப்பட்டுச் சென்றார். அவருடைய குரு அவரை விட்டு கூடிய விரைவிலேயே பிரிந்துவிடுவார் என்று நினைத்தார். அதற்காகவே மிகவும் வேதனைப்பட்

டார். கடமையின் உந்துதல் காரணமாக சாலிகிராம கற்களைபற்றி நன்கு அறிந்த சில பிராமணர்களை இம்மலையில் ஓடுகின்ற கண்டக நதிக்கு அனுப்பி தேர்ந்தெடுத்த நல்ல சாலிகிராம கற்களை கொண்டு வரும்படி செய்தார். சிறந்த கைதேர்ந்த கல்லுடைப்பவர்களை கொண்டு அழகிய வேலைபாட்டுடன் பெரிய பிருந்தாவனம் ஒன்றை அமைத்தார். கூடிய விரைவிலேயே பிருந்தாவன வேலை முடிவு பெற்று விட்டது. வெங்கண்ணு பந்த் அதை அவருடைய மகானுக்கு காண்பித்தார்.

"ஓ...... எவ்வளவு அழகாக அமைத்திருக்கிறாய்? அருமையாகவும் பிரகாசமாகவும் உள்ளது; இதுவும் யமக்காக இருக்கட்டும்," என்று கூறிய ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் வெங்கண்ணு பந்தை அழைத்துக் கொண்டு துங்கபத்திரை நதிக்கரையில், மாஞ்சாளியில் இருந்து ஐந்தாறு மைல் தொலைவில் இருந்த மாதவர் என்ற கிராமத்திற்குச் சென்றார். இருவருச் ஆற்றை அடைந்தனர். ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் கரையிலிருந்து ஆற்றினுள் சற்று தொலைவில் இருந்த பிரகாசமில்லாத மங்கிய சிறிய பாறை ஒன்றை காண்பித்தார்.

"நம்முடைய பிருந்தாவனமும், ஸ்ரீ மாருதி விஹரகமும் இந்த கல்லில் செதுக்கி எமக்கு முன் அமைக்கப்பட வேண்டும......", என்று ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் கூறியதை முடிக்குமுன்னே,

"சுவாமி; ! முதலில் செதுக்கி அமைக்கப்பட்டுள்ளவற்றை என்ன செய்வது?", என்று வெங்கண்ணு பந்த் இடை மறித்தார்.

"அதுவும் எமக்குத்தேவை! அது எமக்குப்பின் வர இருக்கிற ஐந்தாவது பீடாதிபதிக்குப் பயன்படும்", என்றார்.

வெங்கண்ணு பந்த் இரண்டு மூன்று முறை அந்த மங்கிய கல்லை சுற்றிப்பார்த்தபின்.

"ஐயா... இந்த பாறை பிருந்தாவனம் அமைப்பதற்கு போதுமான கனம் இல்லையே ... அதோடு பிராகாசிக்கத் தக்க கருமை நிறமின்றி மங்களாக அல்லவா இருக்கிறது! இருந்தாலும் இந்த பாறையில்தான் பிருந்தாவனம் அமைக்க வேண்டும் என்கிறீர்கள் காரணத்தை யான் அறியலாமா? நம்மிடம்தான் இதை விட பெரிய பிரகாசிக்கத் தக்க கருமை நிறம் கொண்ட வேறு பாறை இருக்கிறதே ....."

"இல்லை வெங்கடேஷ்; யாம் இந்த பாறையில்தான் பிருந்தாவனம் அமைக்க விழைகின்றோம். உனக்குத் தெரியுமா? திருதயுகத்தில் ஸ்ரீ இராமரும் இலட்சுமணரும் சீதையை தேடி இவ்வழியாகத்தான் வந்தனர். பல மணி நேரங்கள் இடைவிடாமல் நடந்ததால் களைத்துப் போன அவர்கள் சற்று நேரம் இப்பாறை மீது அமர்ந்து இளைப் பாறினர். ஆகையால் இப்பாறை மிகவும் புனிதமானது. எனவேதான் பிருந்தாவனத்தின் மேல்தளமாக இதனை அமைக்க யாம் விழைகின்றோம் ....."

வெங்கண்ணு பந்த் இக் கதை கேட்டு மிகவும் ஆச்சரியம் அடைந்தார். அதோடு அவருடைய குருவின் மீது கொண்ட பக்தியின் காரணமாக அவருடைய திருவடிகளின் மீது தலை பதித்து வணங்கி கட்டளையை சிரமேற் கொண்டார்.

பிருந்தாவனமும், மாருதி விஹரகமும் அந்த பாறையில் செதுக்கப்பட்டு தயாரனது. ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் பூர்வாசிரம சகோதரனுடைய அதாவது குருராஜ ஆச்சாரியாருடைய மூன்றுவதும் கடைசியுமான மகன் வெங்கண்ணாச்சாரியாரை வரவழைத்து சன்னியாசத்தை அவரிடம் தந்து ஸ்ரீ யாகேந்திர தீர்த்தர் என்ற பெயரில் பீடாதிபதியாக்கி ஸ்ரீ மூலராமரையும், ஏனைய மற்ற விஹ்ரகங்களையும் பூஜை

செய்யும் உரிமையையும் அவருக்கே உரிய தென பலரும் அறியும்படி பிரகடனப்படுத்தினர்.

இதை கேள்வியுற்றதும் குருவின் கடைசிநாள் நெருங்கி விட்டதென வெங்கண்ண பந்த் தெரிந்து கொண்டார். ஆகவே அவருடைய குடும்பத்துடன் மாஞ்சாளியிலேயே தங்கியிருந்து மகானுக்கு தொண்டு செய்ய தீர்மானித்தார்.

மகான் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் வெங்கண்ண பந்தை அழைத்து இரகசியமாக, பிருந்தாவனத்திற்குள் பூமிக்கடியில் அமர்ந்து தியானம் செய்தற்கு ஒரு அறை அமைக்கும்படி கேட்டுக்கொண்டார். அந்த இடம் தான் ஸ்ரீ பிரகலாத இராஜா கிருதயுகத்தில் புண்ணியங்களை சேர்க்க யாகம் போன்ற பல நிகழ்ச்சிகள் நடத்திய இட மாகும். மகான் கூறியபடியே பூமிக்கடியில் பிருந்தாவனத் திற்குள் உள்ளறை ஒன்று கட்டப்பட்டது எல்லாவேலை களும் முடிக்கப்பட்டு பிருந்தாவனம் குறைகளேதுமின்றி தயாரான நிலையில் இருந்தது.

விரோதி நமசம் வட்சர் ஷாவணபகுல துவித்ய ஷா. ஷ ஆண்டு 1593 செவ்வாய் கிழமை (ஆகஸ்ட் மாதம் கி. பி. 1671 இல்) விடியற்காலை மகான் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் அவருடைய பக்தர்களையும் சிஷ்யர்களையும் அழைத்து உயிருடன் பிருந்தாவனத்தில் நுழைய இருப்பதை கூறினர்.

வெங்கண்ண பந்த் குழந்தையைபோல அழத் தொடங்கி விட்டார் அது கேட்டு மகான் அவருக்கு துணிவையும், நெஞ்சில் திடமும் கொண்டு இருக்கும்படியும், எப்போதெல் லாம் மகானுடன் பேசவிரும்புகிறாரோ அப்போதெல்லாம் கனவில் தோன்றி பேசுவதாகவும் உறுதியளித்து ஆறுதல் கூறினர். பிறகு கடைசி முறையாக மகான் அவருடைய பக்தர்களுக்கு தனித்தனியே அவரவர்களுடைய தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ப உபதேசங்கள் வழங்கியதோடு மட்டு மல்லாமல் பால மந்திராக்ஷத்தையும் அருளிச் செய்தார்.

பின், மகான் ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் குளித்து முடித்து ஸ்ரீ மூலராமரை முழுமனதுடனும், மனத் திருப்தியுடனும் வழிபட்டார். பின் ஜபமாலையை கையில் ஏந்தியபடி பிருந்தாவனத்தின் உள் அமைக்கப்பட்டுள்ள உள்ளறையின் பத்மாசனத்தில் சென்று அமர்ந்து தியானம் செய்யத் தொடங்கினர். அவர் தியானம் செய்யத் தொடங்கிய அடுத்த வினடியே அசம்பிரதன சமாதி நிலையை அடைந்தார். உடனடியாக உள்ளறையை கற்பலகையால் மூடி சாந்திட்டு பூசினர். துவாதஷ ஷேத்ர சாலிகிராமங்களாலும், வேறு பல வகைப்பட்ட எழுநூறு சாலிகிராம கற்களாலும் அமைக்கப்பட்ட மற்ற தெய்வங்களை உள்ளறையை சுற்றி வைத்து பிருந்தாவனத்தை ம்ருத்திகா (Mruttika) வால் முத்திரையிட்டனர்.

அங்கு குழுமி இருந்த அனைத்து பிராமணர்களும் வேதங்களை ஓதினர்; மணியோசை காதை பிளந்த நகரி, நவபதிகள் அதிர்ந்தன. காஞ்சி ஊதப்பட்டன. இவைகளின் ஒலிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து சொர்கத்தை எட்டுவனவாக இருந்தன

புதியதாக நியமிக்கப்பட்ட சன்னியாசி ஸ்ரீ யோகேந்திர தீர்த்தர் முன் வந்து பதினறு வகை பூஜைகளை செய்வித்து பிருந்தாவனத்தை வழிபட்டார். பிறகு ஸ்ரீ மூலராமரையும், மற்ற கடவுட் சிலைகளையும் பிருந்தாவனத்தின் மீது வைத்து பஞ்சாமிர்த அபிஷேகங்களையும், ஜல் அபிஷேகங்களையும் பக்தியோடும் வேதனை யோடும் ஸ்ரீ குரு இராகவேந்திர சுவாமிகளுர்கு ஸ்ரீ யோகேந்திர தீர்த்தர் செய்வித்தார். பிறகு நெய்வேதம் (பிரசாதம் வழங்குதல்) முடித்துக் கொண்டு அனைவருக்கும் ஹஸ்டோலகம் அளித்தார். மிகவும் உயர்ந்த பிராமணர்களை அமர்ந்து "அலங்கார் பஜனை," நடத்தும்படி கேட்டுக் கொண்டார். அனைத்து குழுமியிருந்த பிராமணர்களுக்கும், பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் சிறப்பான விருந்து அளிக்கப்பட்டது. சிறந்த

முறையில் தக்ஷிணைகள் காட்டப்பட்டன. இப்படியாக அந்திய நிகழ்ச்சி நிறைவுற்றது.

திவான் வெங்கண்ணு பந்த் வேதனை நிறைந்த இதயத்துடன் பொங்கி வந்த அழுகையை அடக்க முடியாமல் அத்வைனி வந்து சேர்ந்தார்.

ஆனல் உண்மையிலேயே பெரியவர் அப்பண்ணுச்சாரியார் அந்த நிகழ்ச்சிக்கு அங்கு இல்லாதது பெருங்குறைமட்டுமல்லாமல் வேதனையையும் ஏற்படுத்திய தென்றல் அது விதியின் விளையாட்டு என்றுதான் சொல்லவேண்டும்.

அந்நிகழ்ச்சியின் போது அவர் அவருடைய ஊரை விட்டு வீட்டு வேலைகாரணமாக வெளியே சென்றிருந்தார். நிகழ்ச்சி முடிந்த நான்காம் நாளன்றுதான் வீடு திரும்பினர். வீடு திரும்பியவர் ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் உயிருடன் பிருந்தாவனத்தில் புகுந்ததை கேள்விபட்டு இடியால் தாக்குண்டதுபோலானர்.

"ஓ...... என்னுடைய நம்பிக்கைக்குறிய குருவே எப்படி என்னிடம் உரைக்காமலே தங்களால் செல்லமுடிந்தது? எனக்கு தாங்கள் தங்களுடைய கடைசி தரிசனத்தையும், உபதேசத்தையும் தாராமலே சென்று விட்டீர்களே...," என்றபடி குழந்தையை போல அழத் தொடங்கி விட்டார். கடைசியாக, அவரை காணத்தான் பாக்கியம் செய்திருக்கவில்லை; அவருடைய பிருந்தாவனத்தை யாவது சென்று தரிசித்து வரலாம் என்ற நோக்கத்துடன் கால் நடையாகவே மாஞ்சாளியை நோக்கி ஓடிவந்தார்.

அவர் மாஞ்சாளியை நெருங்கிக் கொண்டிருந்த சமயம், ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளை புகழ்ந்து புனையப்பட்ட சமஸ்கிருத செய்யுளை பாடியபடி வழிபாடு நடந்து கொண்டிருந்தது அப்பண்ணுச்சாரியார் பிருந்தாவனத்தில் நுழைந்த

போது அச் செய்யுளின் முப்பத்தி ஒராவது பத்தியின் மூன்றாவது வழியை உச்சரித்தவண்ணம் இருந்தனர். அப்பண்ணாச் சாரியார் ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளின் பிருந்தாவனத்தின் முன் வந்து நெடுஞ்சடையாக விழுந்து வணங்கி மரியாதையுடன் கையை மார்போடு கட்டியபடி எழுந்து நின்றார். கண்களிலிருந்து கண்ணீர் அருவியென பெருக் கெடுத்துக் கொண்டிருந்தது.

சிறிது நேரத்திற்குப் பிறகு தன்னைத்தானே தேற்றிக் கொண்டு ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளின் உருவத்தை தலை முதல் பாதம் வரை நினைத்து ஒரு மனதாக வழிபட்டார். அப்போது திடீரென்று, அவருடைய மூளையில், "இந்த வழிபாட்டில் முதலடி முதல் கடைசி வரையில் இப்போது நான் கூறி வழிபடும் அனைத்து விஷயங்களும் எந்த அளவிற்கு உண்மையோ அல்லது ...," என்ற எண்ணம் தோன்றியது.

இந்த எண்ணம் எழுந்த அடுத்த வினாடியே பிருந்தாவனத்தினுள்ளிருந்து (சரக்ஷி ஹய ஷோத்ராகி) அசரீரியின் குரல் அனைவருக்கும் கேட்கும் படியாக (கடவுள் ஹயவதனே வழிபாட்டின் போது கூறப்பட்ட ஒவ்வொரு வார்த்தையின் உண்மைக்கும் நம்பத்தகுந்த சாட்சியாவார்) ஒலித்தது. அந்த அடிதான் முப்பத்தி ஒராவது பத்தியின் நான்காவது அடியாக அமைந்து விட்டது. மேலும் ஒரு பத்தியை பாடி முப்பத்திரண்டு பத்திகள் கொண்டதாக அப்பண்ணாச் சாரியார் வழிபாட்டை முடித்தார்.

அன்றுமுதல், ஏன் இன்றுகூட ஸ்ரீ அப்பண்ணாச் சாரியாரால் பாடப்பட்ட அந்த சமஸ்கிருத செய்யுள் வழிபாடு பலராலும் பாடப்பட்டு பிரசித்தி பெற்றதோடு மட்டுமல்லாமல் ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளுடைய சிறப்பு வழிபாட்டிற்குரிய செய்யுளாகவும் அமைந்து இருக்கிறது.

இப்படியாக, ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் பிருந்தாவனத்தினுள் நுழைந்தபோது அப்பண்ணாச்சாரியார் இல்லாத குறையைப் போக்க, அப்பண்ணாச்சாரியாரால் பாடப்பட்ட பாடலை பலரும் தொடர்ந்து பாடி வழிபட்டு அவருடைய பெயரை பலரும் நினைவு கூறும் படியாக அமைந்ததும் நன்மையே!

16. ஸ்தோத்திரங்கள்

ஸ்ரீ இராகவேந்திர தீர்த்தர் இந்த பிறவியில் மட்டுமல்லாது முந்தய அவதாரங்களின் போதும் ஸ்ரீ ஹரி, வாயுக்களில் நிறைந்த வாழ்த்துக்களும் ஆசிகளும் பெற்றிருந்தார். ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளிடம் கொண்ட ஆழ்ந்த ஈடுபாட்டின் காரணமாக ஸ்ரீ ஹரியும், வாயுவும் அவர்களுடைய சந்நிதானங்களை ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளுடனேயே அமைத்துக் கொண்டனர். அதாவது, மேலுலகிலிருந்து ஒருவித அம்சமாக உரு மாறி அவர்களாகவே பிருந்தாவனத்தில் வந்து நிலையாகத் தங்கியுள்ளனர். சர்வ வல்லமை பொருந்திய முதற் கடவுள் எப்போது எங்கு செல்கிறாரோ அப்போது அவர் பின்னாலேயே முதற் கடவுளுக்கு தொண்டு செய்தற் பொருட்டு மற்ற கடவுளர்களும் சென்றாகவேண்டுமில்லையா? எனவே எந்த வித நிர்பந்தமும், நிபந்தனையும் இன்றி கடவுள் பரிவாரங்கள் பிருந்தாவனத்திற்கு வந்து தங்கி தரவாரியாக முதற் கடவுளுக்கு உபாசனம் (ஜரத்மியா) செய்தே யாக வேண்டும் என்பதை இன்னும் தெளிவாக இங்கு விளக்கத் தேவையில்லை. இந்த செய்தி ஸ்ரீ கோபால தாஸர் அவருடைய நீண்ட கவிதையில் சிறப்பாகவே எடுத்துக் கூறியுள்ளார்.

அப்பண்ணாச்சாரியார் பிருந்தாவனத்தையாவது தரிசிக்க வேண்டும் என்ற நோக்கமுடன் வீட்டைவிட்டு ஓடோடி பிருந்தாவனம் வந்து சேர்ந்தபோது, பிருந்தாவனத்தில் குழுமியிருந்த பலராலும் வழிபாட்டின் போது கூறப்பட்ட தோத்திரங்களின் ஒவ்வொரு வார்த்தையும் எந்த அளவிற்கு உண்மையோ என்ற சந்தேகம் அப்பண்ணாச் சாரியாருக்கு எழுந்தது. அப்போது பிருந்தா வனத்திற்குள்ளிருந்து எழுந்த சத்தம் அதாவது, "தோத்திரங்களில் கூறப்பட்ட ஒவ்வொரு வார்த்தையின் உண்மைக்கும் கடவுள் ஹயவதன

சாட்சியாவார்." என்ற வாசகம் அங்கு குழுமியிருந்த பலருக்கும் கேட்டது. ஆனால் யார்தான் அதை உரைத்திருக்க முடியும்? என்ற இந்த வினா இயற்கையாகவே அனைவருக்கும் எழக்கூடியதுதான். ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள், அவருக்காக அங்கு நடந்த வழிபாட்டினால் பெரு மகிழ்ச்சி அடைந்தவராகக் கூறியிருக்கலாமோ? இருக்காது நிச்சயமாக இருக்க முடியாது. அவரை பற்றி சிறிதேனும் அறிந்தவர்கள் அப்படி கூறவே மாட்டார்கள். ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளின் மனோபாவம் பலரும் அறிந்ததே! அவர் தன்னலமற்றவர்; வழிபடுதல், நிந்தித்தல், மகிழ்ச்சியடைதல், மகிழ்வின்னம், பெருந்தன்மை, பெருந்தன்மையின்மை, புகழ்தல், இகழ்தல் போன்ற அனைத்து மனித குணங்களுக்கு அப்பாற்பட்டவர். அண்ட சராசரங்கள் பற்றி நன்கு அறிந்த வேதாந்தி இந்த உலகில் அடங்கிய எல்லா பொருள்களின் சர்வ வல்லமைகளை பற்றி அறிந்தவர் இவர் ஒருவரே. இப்படிப்பட்ட கடவுளின் மறு அவதாரமான இப் பெரிய மகான் புகழுக்காக ஆசைப்பட்டு அவ்வாறு கூறியிருக்கவே மாட்டார். ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளுக்கு மிகவும் பிடித்த சிஷ்யரான அப்பண்ணாச்சாரியார், "ஷஹஷி ஹயாஷத்ரா ஹி," என்று கூறியிருப்பது மட்டுமே தனமாகும். அதையே நாமும் தொடர்ந்து சொல்லி வருவது நம்முடைய அறியாமையையே குறிக்கும்.

ஸ்ரீ வாயுவின் உபாசனைக் கடவுளான கடவுள் ஹயவதனை மட்டுமே சிறந்த அறிவையும், ஆழ்ந்த பக்தியையும், தன்னலமின்மையையும் அளிக்க வல்லவர் ஆவார். ஒலி, ஒளி, காற்று போன்றவற்றின் மூல இயக்கமான அப்ஹினி தேவதைதான் கடவுள் ஸ்ரீ வாயு ஆகும். இந்த கடவுள் வாயுதான் பிருந்தாவனத்தை எப்பொழுதும் சூழ்ந்துள்ளார். பிருந்தாவனத்திலுள்ளிருந்து எழுந்த அந்த "ஷக்ஷி ஹயஸ்தோத்ர ஹி," என்ற ஒலி கடவுள் வாயுவால் ஏற்படுத்தப் பட்டதாகத்தான் இருக்கவேண்டும். நிச்சயம்

ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளோ அல்லது வேறு யாருமோ அல்லர்.

ஸ்ரீ அப்பண்ணாச் சாரியாரால் பாடப்பட்ட இம் முக்கிய வழிபாட்டுத் தோத்திரம் பலராலும், "ஸ்ரீ இராகவேந்திர தோத்திரம்," என்றே வழங்கப்படுகிறது. ஒவ்வொரு பிராமணரும் குளித்து முடித்த பிறகு பிருந்தாவனத்திற்கு முன்னே அல்லது மகானின் புகைப்படத்திற்கு முன்னே அல்லது மந்திரிகா அடங்கிய சிமிழை கையில் வைத்துக் கொண்டோ பக்திப் பரவசத்துடன் நூற்றி எட்டு முறை முழுமனதுடன் உச்சரிப்பார்களே யானால் அவர்கள் எண்ணிய எண்ணம் நிறைவேறும். மனதை ஒரு நிலைப்படுத்தி இந்த தோத்திரங்களை நூற்று எட்டு முறை உச்சரிப்பார்களே யாயின் பிணிகள், பேய், பிசாசு போன்ற துர் தேவதைகளினால் எழுகிற பயம், இன்னும் தேவையில்லாத வேறு பல பயங்களெல்லாம் நீங்கப்பெற்று சுகவாழ்வு கிட்டும். இத்தோத்திரங்களை தொடர்ந்து உச்சரித்து வருவார்களே யானால் எல்லா வகையிலும் பயனடைவது உறுதி. யார் ஒருவர் குளித்து முடித்த பிறகு ஆழ்ந்த பக்திப் பரவசத்துடன் "ஓம் ஸ்ரீ இராகவேந்திராய நமக," என்று நூற்று எட்டு முறை தினமும் கூறிவருகிறார்களோ," அவர்களுடைய விருப்பங்கள் யாவும் நிறைவு பெறும் என்று அப்பண்ணாச் சாரியார் வெளிப்படையாகவே கூறியுள்ளார். இதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

சுருங்கக் கூறின், இந்த தோத்திரங்களை ஜபம் செய்கிற ஒவ்வொரு பக்தனும் எல்லா தேவைகளும் கிடைக்கப்பெற்று மகிழ்ச்சியடைவதோடு மட்டுமல்லாமல் மெல்ல மெல்ல தானாகவே வேதாந்தங்களை கற்றுத் தேர்ந்து சர்வ வல்லமை பெறும் ஞானியாகவும் அடைகிறான்.

"ஸ்ரீ வாயுஸ்துதி," என்ற ஸ்ரீ நாராயணபண்டித ஆச்சாரியார் இயற்றிய செய்யுளின் முதலிரண்டு பத்திகள்

ஸ்ரீ லட்சுமி நரசிம்மாவைப்பற்றி கூறுகிறது. இது போலவே ஸ்ரீ அப்பண்ணாச் சாரியார் இயற்றிய ஸ்ரீ இராக வேந்திர தோத்திரத்தின முதலிரண்டுபத்திகள் ஸ்ரீ வாயுவை பற்றி விளக்குகின்றது.

இந்த தோத்திரங்கள் புண்ணியங்களை மலைமலையாக கொண்டு வந்து குவிப்பதால் பலரும் போற்றும் படியாக சிறப்புடன் நிகழ்கிறது. உத்ராதி மடத்தை சேர்ந்த ஸ்ரீ பீதாஸ்த சுவாமிகள் என்கிற மகான் ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளின் மீது மிகுந்த ஈடுபாடும், பக்தியும் கொண்ட தன் காரணமாக அவருடைய பிருந்தாவனத்தில் வழிபாட் டின் போது ஸ்ரீ இராகவேந்திர தோத்திரங்களை உச்சரிக்க வேண்டும் என்று ஸ்ரீ சத்யாதர்ம தீர்த்தருக்கு கட்டளையிட் டார். அவருடைய விருப்பம் இன்றும் நிறை வேற்றப்பட்டு வருகிறது.

ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளுக்குப் பிறகு அவரது வழி வந்த எட்டாவது பீடாதிபதியான ஸ்ரீ தீரேந்திர தீர்த்தர் தார்வார் மாவட்டத்தில் ஹோசரித்தி என்ற கிராமத்தில் அமைந்துள்ள அவரது பிருந்தாவனத்திலும் ஸ்ரீ இராக வேந்திர தோத்திரங்கள் வழிபாட்டின் போது உச்சரிக்கப் பட்டு வருகிறது. இந்த தீரேந்திர தீர்த்தர் அவருடைய வாழ்நாளின்போது உயர்ந்த தியானங்கள் பல செய்து பேறு பெற்ற பெரிய மகானுவார்; புண்ணியங்களை மலை மலையாகக் குவித்தவர். இன்றும் ஒரு அம்மோக இருந்து கொண்டு அவருடைய பிருந்தாவனத்தை நாடிவரும் பக்தர்களுக்கு அருளாசி வழங்கிக் கொண்டிருக்கிறார். இவர் ஸ்ரீ இராக வேந்திர சுவாமிகளின் மீது மிகுந்த நம்பிக்கை கொண்ட பக்தராவார். ஸ்ரீ தீரேந்திர சுவாமிகளின் பிருந்தாவனத் தில் ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் ஒரு அம்சமாக வந்து தங்கியுள்ளார். ஹோஸ்ரத்திக்கு சேவை செய்ய செல்லும் பக்தர்களின் கனவுகளில் பிராமணர் வடிவில் இருவர் தோன்றி ஆசிர் வதிப்பதை அறியலாம். ஒருவர் மெல்லிய,

வெண்மை நிறம் கொண்ட, நீண்ட உருவம் கொண்ட ஸ்ரீ
ந்ரேந்திர தீர்த்தராவார். மற்றொருவர் கருமை நிறம்
கொண்ட உடல் பருத்த நெட்டையான ஸ்ரீ இராகவேந்திர
சுவாமிகளாவார்.

மற்றொரு உத்திராதி மடத்தை சேர்ந்த சன்னியாசி
ஸ்ரீ சத்யசந்த தீர்த்தர்; சாந்தமே உருவாய் கொண்ட தூய
மகானுவார். ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளின் ஏகாந்த
பக்தராவார். அவருடைய பிருந்தாவனம் பிஜப்பூருக்கு
அருகில் உள்ளது. ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் மீது அவர்
கொண்ட சிறந்த ஈடுபாடு காரணமாக மகான் அவருடைய
பிருந்தாவனத்திலும் சில அம்சமாக வந்து தங்கியுள்ளார்.
ஸ்ரீ சத்யசந்த் தீர்த்தருடைய பிருந்தாவனத்திலும் ஸ்ரீ
இராகவேந்திர தோத்திரங்களை சொல்லி வழிபடும் வழக்கம்
உள்ளது. இந்த பிருந்தாவனத்தின் சந்நிதானம் மிகவும்
பிரசித்தி பெற்றது. ஸ்ரீ சத்யசந்த தீர்த்தரை ஸ்ரீ இராக
வேந்திர சுவாமி II என்றும் பலராலும் அழைக்கப்படுகிறது.
ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளின் மறு அவதாரமே ஸ்ரீ சத்ய
சந்த தீர்த்தர் என உத்ராதி மடத்தை சேர்ந்த பல பக்தர்
கள் நம்புகிறார்கள். (இது உண்மையாக இருக்கமுடியா
இப்படியாக ஸ்ரீ இராகவேந்திர தோத்திரம் வைஷ்ண
சன்னியாசிகளினிடையே பரவி பெருமை பெற்றுத் தி
கிறது.

தற்போது ஸ்ரீ இராகவேந்திர தோத்திரம் முக்கிய
மந்திரமாகி விட்டது. இவ்வுலகில் கனவிலும் காண முடி
யாத நன்மைகள் பல ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளை வழி
படுவதன் மூலம் கிட்டுகிறது. ஆகவே ஒவ்வொரு ஆணும்
பெண்ணும் இந்த தோத்திரங்களை உச்சரிப்பதன் மூலம் பயன்
பெறுவார்களாக இந்த தோத்திரங்களை உச்சரிப்பதன்
மூலம் நம்முடைய முழு பக்தியையும் ஸ்ரீ இராகவேந்திர
சுவாமிகளின் திருவடிகளுக்கு அர்பணம் செய்வோமாக.
சோதி மடத்தை சேர்ந்த ஸ்ரீ வதிராஜ சுவாமிகளும், மாஞ்

சாலியை சேர்ந்த ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளும் ஏனையோரைக்காட்டிலும் சக்தி வாய்ந்த மாபெரும் சன்னியாசிகளாவர். இவ்விருவர் மட்டுமே பிருந்தாவனத்திற்குள் உயிருடன் புகுந்து, இன்றும் அவர்களை நாடிவரும் பக்தர்களுக்கு பொதுமக்களின் கண்களுக்கு தெரிந்தபோது எப்படி அருளாசி வழங்கினார்களோ அதை போலவே அருளாசிகள் வழங்கியபடி வாழ்ந்து வருகிறார்கள். பக்தர்களின் கனவுகளிலும் தோற்றமளிக்கிறார்கள். மெச்சத்தக்க தகுதிவாய்ந்த பக்தர்கள் அவர்களின் பிருந்தாவனத்திற்கு முன்னின்று பேசவும் செய்யலாம்.

ஸ்ரீ வதிராஜ சுவாமிகள் கடவுள் வாயுவின் மறு அவதாரமாகும். அடுத்த கல்பா யுகத்தில் வாயுவின் பீடத்தில் அமர இருப்பவர். கடவுள் வாயு ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளின் பிருந்தாவனத்திற்குள்ளும் வெளியிலும் நீக்கமின்றி சூழ்ந்திருக்கின்றார். துவாதஷா ஷேத்ர சாலிகிராம கல் இன்றும் ஏழு நூறு வகைபட்ட சாலிகிராம கற்களை கொண்டு அமைக்கப்பட்ட கடவுளர்களின் தனித்தனி சிலைகளை பிருந்தாவனத்திற்குள் வைத்து மூடி முத்திரையிட்டுள்ளனர். முப்பத்து மூன்று கோடி தெய்வங்களும் வந்து ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளின் பிருந்தாவனத்தில் நிலையாகத் தங்கியுள்ளனர். ஏனெனில் அவர்களுடைய பக்தரான ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் என்றும் இந்த பூமியில் வாழ்ந்து பலரும் போற்றும்படியான பெரிய மகானாகத் திகழவேண்டுமென்பதற்காகத்தான். (கோபால தாஸ்) ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் கர்மஜ தேவதையாக இருந்தாலுங்கூட தற்போது தாத்விக தேவதையாக மாறிக்கொண்டிருக்கிறார். இவர் சர்வ வல்லமையுடையவர் மட்டுமல்ல; சர்வ வியாபியுங்கூட. இந்த இருவகை சிறப்பையும் ஸ்ரீ ஹரி, வாயு மட்டுமே இவருக்கு நந்திருக்க முடியும். எப்போது மெச்சத்தக்க, தகுதியுடைய பக்தன் அவனுடைய தேவைகளை கிட்டப்பெற்று நலமடைய விரும்பி ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளை நாடி தரிசிக்கிறானோ அப்போது அவனுடைய விருப்பங்கள்

நிறைவேற. ஸ்ரீ ஹரியும் வாயுமே பிருந்தாவனத்திற்கு முன் வந்து அருளிச் செய்கின்றனர். இதனால் பக்தர்களுடைய விருப்பங்கள் நிறைவேறி, ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் தான் அவர்களுடைய விருப்பங்களை பூர்த்தி செய்வதாக பலருடைய நம்பிக்கை தோன்றச்செய்கின்றனர். ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் சர்வ வல்லமையுடையவராக உலகின் கண்களுக்குத் தோன்றச் செய்கின்றனர். (சர்வதந்த்ர ஸ்வதந்த்ர)

அப்பண்ணாச்சாரியார் ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளை 'கற்பவிருக்ஷம்' என விளிக்கிறார். ஏனெனில் மாஞ்சாலியிலுள்ள பிருந்தாவனத்திற்கு சென்று சேவை செய்யும் பக்தன் நிச்சயம் பயனடைகிறான். எங்கெல்லாம் காமதேனுவின் பக்தர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் சென்று தேவையானதை அளிப்பது போல ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளும் அவருடைய பக்தர்களின் குரலுக்கு செவிமடுத்து அவர்களிருக்கும் இடம் சென்று கேட்பதை தருவதால் அவரை 'காமதேனு' என்றும் கூறலாம். மாஞ்சாலியிலுள்ள பிருந்தாவனத்திலிருந்து சிமிழில் ம்ராத்திகத்தை எடுத்துச் சென்று அமைக்கப்பட்ட பிருந்தாவனங்கள் இந்தியாவில் பல நகரங்களிலும் பரவலாக உள்ளன. ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் அப்படிப்பட்ட பிருந்தாவனங்களில் சில அம்சமாக சென்று தங்கி அவருடைய பக்தர்களுக்கு புண்ணியங்களையும் அருளாசியையும் வழங்கிக் கொண்டிருக்கிறார்.

மாஞ்சாலியிலிருந்து ம்ராத்திகத்தை சிறு சிமிழ்களில் எடுத்துச் சென்று வீடுகளில் வைத்து வணங்கி பயனடைபவர்களும் பலர். சுவாமிகளின் புகைப்படங்களையும், அச்சிடப்பட்ட அவருடைய உருவங்களையும் வீட்டில் வைத்து வழிபடும் பக்தர்கள் வாழ்நாள் முழுவதும் அருளாசிகள் பெற்றபடியிருக்கிறார்கள். ஆகவே யாம் கூறுவது யாதெனில் ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் தாத்வீக தேவதையாக எங்கும் நிறைந்த சர்வவியாபியாக திகழ்கிறார் என்பதாகும்.

17. தாமஸ் மன்ரோ

ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் பிருந்தாவனத்தில் நுழைந்தது முதல் நூற்று நாற்பது ஆண்டுகளுக்குள் இந் நாட்டில் பல மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. மத வேறு பாட்டாலும், உட்பகை காரணமாகவும், பழி தீர்த்துக் கொள்ளுதற் பொருட்டும் கணக்கிலடங்கா குதிரை வீரர் கள் அவர்களுக்குள்ளேயே எப்போதும் போரிட்டபடியே இருந்தனர். நாட்டில் எங்கும் அமைதி குலைந்து, ஒவ்வொரு வருடைய குடும்ப வாழ்க்கையும் சீர்குலைந்து இருந்தன.

வியாபாரத்தையே முக்கிய நோக்கமாகக் கொண்டு இந்தியாவிற்குள் புகுந்த ஆங்கிலேய வர்த்தகர்கள் ஒன் றிணைந்து கிழக்கிந்திய கம்பெனி என்ற ஒரு அமைப்பை உறு வாக்கிக் கொண்டு நாட்டையே அவர்களுடைய ஆதிக்கத் திற்குக் கீழ் கொண்டு வந்து ஆட்சி புரியத் தலைப்பட்டனர். இந்த வியாபாரக்கூட்டமைப்பு 'கம்பெனி அரசாங்கம்' என்று பலரும் அறியும்படியாயிற்று. இந்த கம்பெனி அரசு சூழ்ச்சி யால் மைசூர் திப்பு சுல்தானை கொன்ற பிறகு தென்னிந்தி யாவில் அசைக்க முடியாத வலுவான நிலையான அரசை அமைத்துக் கொண்டது. தக்காணத்தை சேர்ந்த பீஷ்வாக் களும், நிஜாம் மன்னர்களும் அந்த கம்பெனி அரசுக்கு அடங்கிய கைபொம்மைகளாக ஆட்சி செலுத்தினர்.

இந்த கம்பெனி அரசு இங்கிலாந்திலிருந்து இராணுவ அதிகாரிகளை வரவழைத்து அவர்களுக்கு முழு சுதந்திரமும் அளித்து நாட்டை ஆட்சி செலுத்தினர். அவர்கள் சாதி சமய சண்டைகளை அகற்றி குடும்பங்களில் அமைதி நிலவச் செய்தனர். கி.பி. 1800 ஆம் ஆண்டில் இங்கிலாந்திலிருந்து மேஜர் தாமஸ் மன்ரோ என்ற இராணுவ அதிகாரியை வர வழைத்து பெல்லாரி மாவட்டத்தின் கலெக்டராக நியமனம்

செய்து ஆட்சிப்பொருப்பை ஒப்படைத்தனர். கி.பி. 1820 ஆம் ஆண்டு சென்னையின் கவர்னராக பதவி உயர்வு பெற்று, கி.பி. 1827 ஆம் ஆண்டு சென்னையிலேயே உயிர் நீத்தார்.

கி.பி. 1812 ஆம் ஆண்டு கம்பெனி அரசு இந்து முஸ்லீம்களின் ஆதிக்கத்தில் உள்ள சொத்துக்களையும், நிலங்களையும் தேவையானது போக மீதமுள்ளதை சட்டபடி கம்பெனி அரசுக்கு கொடுத்து விடவேண்டும் என்றும், அவைகளை ஏற்று நிர்வகிக்கும் பொறுப்பு கம்பெனி அரசுக்கே உண்டு என்றும் ஒரு தீர்மாணத்தை நிறைவேற்றியது.

பெல்லாரி மாவட்ட ஆட்சியாளரான மேஜர் தாமஸ் மன்ரோ அந்த தீர்மாணத்தை சட்டப்படி அமுலாக்கும் பொருட்டு அனைத்து கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் சென்று அன்பளிப்பாக கொடுத்ததென்ரோ சன்மானமாகக் கொடுத்ததென்ரோ பாராமல் கண்மூடித்தனமாக சட்டத்தை நிறைவேற்றி பலருடைய சொத்துக்களை கம்பெனி அரசின் பொறுப்பில் ஒப்படைத்தார். இப்படி வரிசையாக வந்தபோது மாஞ்சாளிக்கும் வந்து அங்கு நான்கு நாட்கள் தங்கியதாகக் கூறப்படுகிறது. இது 1819 ஆம் ஆண்டின் கடைசி மாதமாக அல்லது 1820 ஆம் ஆண்டின் முதல் மாதமாக இருக்கக் கூடும். அவ்வூரில் ஒரு பிராமண சன்னியாசிக்கு சமாதி கட்டப்பட்டிருப்பதும், ஆண்டு முழுவதும் இரவு பகல் எந்நேரமும் நெய்விளக்கும், எண்ணெய் விளக்கும் ஏற்றப்பட்டு மதகுருமார்களால் பராமரித்து வரப் படுவதாகவும், அந்த சமாதிக்கு மாஞ்சாளி கிராமம் முழுவதும் சொந்த முடையது என்றும் அரசாங்க பத்திரங்களின் மூலம் அவருக்குத் தெரியவந்தது.

மந்திராலயம் கர்நாடகமாநிலத்தைச் சேர்ந்த பெல்லாரி மாவட்டத்தில் உள்ள அதோனி தாலுக்காவில் இருந்தது. இப்போது அலூர் தாலுக்காவில் சேர்க்கப்பட்டு ஆந்திர மாநிலத்திற்கு சொந்தமாகிவிட்டது. மேஜர் தாமஸ்

மன்ரோ உடனடியாக அத்வைணி தாலுக்காவின் நிர்வாகியை அழைத்து அச் சமாதியின் முன் விளக்குகள் எரிப்பதற்கும், அதை பராமரிப்பதற்கும் முழு கிராமத்தையும் அளிப்பதற்கு பதிலாக குறிப்பிட்ட தொகைக்கு அங்கிகாரம் அளிக்க ஏற்பாடு செய்யும்படி உத்தரவிட்டார். அத்வைணி தாலுக்காவின் நிர்வாகி சமயப்பற்று மிக்க பிராமணராதலால் ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளுடைய மகத்துவத்தைப் பற்றியும், அவருடைய அபரிமிதமான சக்திவாய்ந்த அருளாசியை பற்றியும், உயிருடன் பிருந்தாவனத்தில் நுழைந்தது பற்றியும் விளக்கிக் கூறினார். அதோடு ஆட்சியாளரிடம் ஒரு வேண்டுதலையும் கேட்டுக்கொண்டார். ''ஐயா தனிப்பட்ட முறையில் அனைத்தையும் அளிந்த அத்வைணி அஸதுல்லா கானின் திவானாக விளங்கிய வெங்கண்ணா என்பவருடைய விருப்பப்படி இந்த முழு கிராமமும் ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளுக்கு அஸதுல்லா கானின் ஒப்புதலுடன் உரிமையாக்கப்பட்டது. நம்முடைய குரு ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் இன்னும் பிருந்தாவனத்தில் வாழ்ந்து கொண்டு தானிருக்கிறார்.''

அவர் கூற்றை உறுதிபடுத்துவதன் பொருட்டு அத்வைணியின் நிர்வாகி மாஞ்சாளியில் பேரும் புகழுடனும் வாழ்ந்து கொண்டிருந்த சிலரை ஆட்சியாளரிடம் அழைத்து வந்து மந்திராலயத்திற்கு சொந்தமான எந்த சொத்தையும் கம்பெனி அரசுக்கு சொந்தமாக்கக் கூடாது; சொந்தமாக்க முடியாது என்று எதிர்ப்பு தெரிவிக்க வைத்தார். மேஜர் தாமஸ்மன்ரோ பிறப்பில் ஆங்கிலேயராக இருந்தாலும், அவருடைய உடலில் ஓடும் இரத்தம் பிரிட்டிஷ் இரத்தமாக இருந்தாலும், அதிகாரத்தை பயன்படுத்துவதில் இராணுவ முறையை கடைபிடிப்பவராக இருந்தாலும் கெட்ட எண்ணம் கொண்டவரல்லர். ஆண்டவனிடம் பக்தி கொண்டவர், கடவுளுக்கு பயந்தவர். எனவே சிறிது நேரம் மௌனமாக அமர்ந்திருந்தார். பிறகு,

''நன்று நிர்வாகி; உங்களுடைய குரு இந்த சமாதியில் இன்னும் உயிருடன் வாழ்வதாகக் கூறுகிறீர்கள்; அப்படி அவர் இச் சமாதியில் இருப்பதாகச் நீங்களெல்லாம் கூறுவதால் நாளை நான் அச் சமாதியை பார்க்க விரும்புகிறேன். பிறகு இது பற்றி யோசிக்கலாம்,'' என்று கூறி அவருடன் வாதிட்ட நிர்வாகக் குழுவை கலைந்து போகும்படி கூறினார்.

கலெக்டர் மடத்தை பார்க்க இருக்கிற அந்த செய்தி உடனடியாக மாஞ்சாளி முழுவதும் பரவிவிட்டது. மறு நாள் அதிகாலை, ஆண்களும், பெண்களும் குழந்தைகளுடன் கலெக்டர் மடத்தை பார்க்க வருவதை பார்க்க மிகுந்த ஆவலுடன் குழுமினர். மேஜர் தாமஸ் மன்ரோ அந்வைனி தாலுக்கா நிர்வாகியுடனும், வேறு பல அலுவலக அதிகாரிகளுடனும் குறித்த நேரப்படி மடத்திற்கு வந்து சேர்ந்த போது மந்திராலய குருக்களால் அன்பாக வரவேற்கப்பட்டார். தலையிலணிந்திருந்த தொப்பியையும், காலணியையும் அகற்றிய பிறகு தாமஸ் மன்ரோ அலுவலக அதிகாரிகளுடன் மடத்தினுள் நுழைந்து பிருந்தாவனத்தின் முன் சென்று நின்றார்.

''இதுதான் உங்களுடைய குருவின் சமாதியா?''

''ஆமாம் ஐயா,'' நிர்வாகி பதிலிறுத்தார்.

உடனடியாக ஸ்ரீ இராகவேந்திர சுவாமி பிருந்தாவனத்தாவனத்திலிருந்து வெளி வந்து மன்ரோவுடன் ஆங்கிலத்தில் பேசினார். அவர்களுக்கிடையே நடந்த உரையாடல் மாஞ்சாளியையும், அதனை சார்ந்த சொத்துக்களையும் கம்பெனி அரசுடன் சேர்த்துக் கொள்வது பற்றியதாக இருந்தது. மகான் மன்ரோவுடன் ''மாஞ்சாளி அவருக்குச் சொந்தமான தென்றும், அதன் மீது அவருக்குப் பிறப்புரிமை உண்டு என்றும் விவாதித்தார்.

ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் தாமஸ் மன்ரோவுக்குத் காட்சி அளித்து பேசினரேயாயினும், அங்கு குழுமியிருந்த

வர்கள் கண்களுக்கு அவர் காட்சி அளிக்கவில்லை. அவர்களு டைய உரையாடலையும் கேட்டாரில்லை.

அவர்களுக்குள் உரையாடல் முடிந்ததும் உடனடியாக மகான் மறைந்து விட்டார். தாமஸ் மன்ரோ மிகுந்த ஆச்சரியமும் அதிசயமும் அடைந்தார். மேஜர் மன்ரோ நிர்வாகியிடம் ''இவர்தானு அந்த பெருந்தன்மையானவர்! மஞ்சள் நிற ஆடைஅணிந்து கையில் ஒரு கோலும், சந்தனக் கட்டையாளான பாதராட்சையும் உடையவராக இருந் தாரே அவர்தானு உங்கள் குரு?''

''ஆம் ஐயா, எங்கே இருக்கிருர் அவர்?''

''சற்று நேரத்திற்கு முன் என் முன் இருந்தாரே...... அவருக்குப் பின்புறம் சமாதியின் பீடம் இருந்ததே அவரை நீங்கள் காணவில்லையா? அவர் என்னுடன் பேசியதை கேட்க வில்லையா?''

''இல்லையே ஐயா, நாங்கள் அவரையும் காணவில்லை. அவருடைய பேச்சையும் கேட்கவில்லையே! நீங்கள் பேசிக் கொண்டிருந்ததைதான் எங்களால் கேட்க முடிந்தது...''

மேஜர் மன்ரோ நிர்வாகியின் பேச்சைக்கேட்டு திகைத்த தோடு மட்டுமல்லாமல் மந்திரத்தால் கட்டுண்டவர் போலா ஞர். அவருள் புரிந்து கொள்ள முடியாத ஏதோ ஒரு மாற் றம் நிகழ்வதை உணர்ந்தார். அந்த சமாதி மீது அவரையும் மீறிய பக்தி எழுவதையும் அவரால் உணர்ந்து கொள்ள முடிந்தது. பிறகு முட்டிபோட்டவாறு ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளுக்கு வணக்கம் செய்து வழிபட்டார். மந்திராலய குருக்கள் சில மந்திராக்ஷத்தைத் தந்து கௌரவமுடன் வழி யனுப்பி வைத்தனர். மன்ரோ மிகுந்த பணிவுடனும் நம்பிக் கையுடனும் அவர்கள் தந்த மந்திராக்ஷத்தை பெற்றுக் கொண்டார்.

மேஜர் மன்ரோ அவருடைய பாசறைக்குச் சென்றதும் மாஞ்சாளி கிராமத்தை கம்பெனி அரசுக்கு சொந்த மாக்க முடியாது என்றும், அக்கிராமத்திற்கு உரிமைபானவர் உண்மையிலேயே சக்தி வாய்ந்த மகான் என்றும், அவர் இன்னும் சமாதியில் வாழ்ந்து வருகிறர் என்றும், அவர் கடவுளின் அவதார புருஷர் என்றும், ஒரு நீண்ட அறிக்கையை தயாரித்து அரசு அனுமதிக்காக சென்னைக்கு அனுப்பி வைத்தார்.

அம்மடத்தை சார்ந்த பிராமணர்களுக்கிடையே மகானை பார்க்க முடிய வில்லையே என்றும், அவருடன் பேச முடிய வில்லையே என்றும் பெருங் கிளர்ச்சியே எழுந்நது. இதனுல் வருத்தமும் கலக்கமும் கொண்டு அமைதியின்றி பிருந்தாவனத்தின் முன் அமர்ந்து உண்ணு நோன்பு இருக்கத் தலைப் பட்டனர்.

''சுவாமி... அந்த அதிகாரி பிராமணனும் அல்ல, இந்தும் அல்ல ஏன் இந்தியனே அல்ல; அவன் ஒரு ஆங்கிலேயன்; அப்படிப்பட்டவனுக்கு தரிசனம் தந்து அவனுடன் பேசியிருக்கிறீர்களே; நாங்கள்...... உங்களுடைய பக்தர்கள்; உங்கள் ஜாதியில் பிறந்தவர்கள். உங்கள் மதத்தைச்சார்ந்தவர்கள்; இந்தியர்கள். எப்போதும் உங்களையே வழிபட்டு, உங்களுக்காகவே சேவை செய்து வருகிறோம். இருந்தாலும் உங்கள் தரிசனம் எங்களுக்குக் கிடைக்கவில்லை; எங்களுடன் நீங்கள் பேச வில்லை. இது என்ன அழகு? உங்களை கண்டு பேசாத வரை நாங்கள் எழுந்து உணவைருந்த போவதில்லை...''

அன்றிரவு ஒரு வாலிபனுடைய கனவில் ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் தோன்றி, ''என்னுடைய பக்தர்களே; வருந்தற்க யாம் உங்களை மிகுந்த கருணையுடன் பார்த்து வருகிறேன். எனவே என்னை கண்டு பேசவேண்டுமென்று வற்புறுத்த வேண்டாம். இப்போது நீங்கள் கூறினீர்களே

அயல் நாட்டவன் என்று... அது ஒரு விதத்தில் உண்மை தான். இருந்தாலும் யாம் கூறுவதை கேளுங்கள் கிருத யுகத்தின் முடிவில் அனைவரும் ஸ்ரீமன் நாராயணனை முழு திருப்தியுடன் வழிபட்டனர். அதோடு அவர்கலுடைய வேண்டுகோளுக் கிணங்க ஸ்ரீ ஹரி அவர்களை கலியுகத்தில் மேஞ்சலர்களாக (அயல் நாட்டவர்களாக) பிறக்க அருளிற் செய்தார். இங்கே இப்போதுள்ள ஆங்கிலேயர்கள் அனை வரும் கிருதயுகத்து மக்களே ஆவர். தாமஸ் மன்ரோ கிருத யுகத்தில் மிகுந்த பக்தியுள்ள ஒரு மாபெரும் அரசன். எனவே அவருக்கு தரிசனம் தந்து பேசினோம், எனவே தவறான அபிப்ராயம் கொள்ளற்க...'' என்று கூறி மறைந் தார். பிறகுதான் அந்த பிராமணர்கள் கொண்ட சபதத்தை மாற்றிக் கொண்டனர்.

அதே சமயத்தில் சென்னை கவர்னருடைய மனைவி கரு வுற்று பிரசவிக்கும நிலையில் இருந்தமையால் பிரசவத்திற் காக அவர் இங்கிலாந்து புறப்பட்டபோது கவர்னரும் நீண்டநாட்கள் விடுமுறை எடுத்துக் கொண்டு உடன் செல்ல வேண்டியதாயிற்று. எனவே சாலியாக இருந்த கவர்னர் பதவியை ஏற்றுக்கொள்ளும்படி மேஜர் தாமஸ மன்ரோ வுக்கு கம்பெனியரசு உத்தரவு இட்டது. பெல்லாரி மாவட் டத்தின் கலெக்டரான தாமஸ மன்ரோ மாநில கவர்னராக உயர் பதவிவைய ஏற்றுக்கொண்டார்.

கவர்னர் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டதும், கவர்ன ராக அவருடைய அலுவலகத்திற்குள் நுழைந்த முதல்நாளே அவருடைய மேஜைமீது மாஞ்சாளி கிராமம்பற்றி அவர் அனுப்பிய அறிக்கை யிருப்பதை கண்டார். மாஞ்சாளி மகானின் தரசணத்தால் தான் இந்த பதவி உயர்வு; வேறு யாது காரணமும் இல்லை என்று திட்ட வட்டமான ஒரு நம்பிக்கை உணர்வு அவர் நெஞ்சில் எழுந்தது. உடனே தலையிலணிந்திருந்த தொப்பியை கழற்றிவிட்டு ஸ்ரீ இராக வேந்திர சுவாமிகளின் உருவத்தை கண்முன் நிறுத்தி பய

பக்தியோடு வணங்கினர். அதோடு அந்த அறிக்கை சரியானது என்று ஒப்புதலும் அளித்தார்.

தாமஸ் மன்ரோ பெற்ற இந்த அனுபவம் பற்றி சென்னை சிறப்பிதழில் (Gazette) குறிப்பிடப்பட்டுள்ளது. அதனுடைய ஒரு பகுதி இதோ :—

சென்னை அரசு சிறப்பிதழ் :—

அத்தியாயம் XI பக்கம் 213 மாஞ்சாளி (அதோணி தாலுக்கா)

சென்னை அரசு சிறப்பிதழ் :—

பாடம் XI ! பத்தி 213. மாஞ்சாளி (அதோணி வட்டம்)

ஆயிரத்து நூற்றுப் பன்னியிரண்டு மக்கள் தொகை கொண்ட மாஞ்சாளி என்கிற சிறிய கிராமம் அதோணி தாலுக்காவின் வடபகுதியில் துங்கபத்தரை நதிக் கரையில் அமைந்துள்ளது. மாதவ சன்னியாசியாகிய ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளின் சமாதி அங்கு இருப்பது பலரும் அறிந்ததே. ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதத்தில் அங்கு விழாக்கள் நடைபெறும். நிஜாமின் ஆதிக்கம் உள்ள இடங்களினின்றும், மைசூர் மாநிலங்களிலிருந்தும் ஏன் பம்பாயிலிருந்து லிங்கியர்கள் உட்பட கணக்கிலடங்கா யாத்திரீகர்கள் வந்து அவ்விழாவில் கலந்து கொள்கிறார்கள். இந்த பிருந்தாவனம் (சமாதி) எந்தவித தொல்பொருள் சிறப்பும் வாய்ந்ததல்ல. அந்த பிருந்தாவனத்திற்கு அதோணியின் கவர்னராயிருந்த அஸதுல்லாகானின் (கி.பி. 1662-1682) புகழ்பெற்ற திவான் வெங்கண்ணு பந்த் என்பவரால் ஏக பட்ட நிலங்கள் மானியமாக அளிக்கப்பட்டது என்று M.S.S. என்ற பட்டயம் கூறுகிறது.

அந்த இடம் பற்றி மன்ரோ ஒரு விநோதமான கதையை கூறியுள்ளார். பிருந்தாவனத்திற்கு அளிக்கப்பட்ட மானிய சொத்துக்களை கம்பெனி அரசுக்கு கொடுத்து விடவேண்டும் என்று அதிகாரத்தால் பயமுறுத்தினர். இது தொடர்பாக மன்ரோ மாஞ்சாளிக்கு விசாரணைக்கு (சென்னை விமர்சன பத்திரிக்கை VII) வந்தார். காலணியையும், தொப்பி யையும் கழற்றிய பின் சமாதிமுன் சென்று நின்றார். மகான் சமாதியிலிருந்து வெளிப்பட்டு அவரை சந்தித்துப் பேசினர். அவர்களுக்குள் நடந்த உரையாடல் பிருந்தாவனத்திற்கு சொந்தமான மானிய சொத்துக்களை கம்பெனி அரசுடன் சேர்த்துக் கொள்வது பற்றியதாகும். மகான் மன்ரோவின் முன் தோன்றி பேசியதை அங்கு சூழ்ந்திருந்த மக்கள் எவரு டைய கண்களுக்கும் அவர் தோன்றினரில்லை; அவருடைய குரலையும் கேட்டாரில்லை. விவாதம் முடிந்ததும் மன்ரோ அவருடைய கூடாரத்திற்கு திரும்பி வந்து மான்யங்களை திரும்பப் பெறும் பிரேரணையை ரத்து செய்தார். மந்திரா லயத்தில் அளிக்கப்பட்ட புண்ணிய அரிசியை பெற்று அதை அவருடைய அன்றய உணவாக சமைக்கும்படி உத்தர விட்டார்.

18. முடிவுரை

கற்றறிந்த அறிவுள்ள மக்கள் ஸ்ரீ இராகவேந்திர சுவாமி களுடைய புத்தகங்களை நம்பிக்கையோடும், பக்தியோடும் பயில்வார்களானுல் உலக பிடிப்புகளிலிருந்து விலகி ஸ்ரீ ஹரி, வாயு போன்ற தெய்வங்களை பற்றிய மெய்ஞானம் பெற்று முடிவில் முக்தி எய்துவார்கள். மகானுடைய திரு வடிகளை பக்தி சிரத்தையோடு வழிபடுவார்களானுல் அனைத்து ஆசைகளும் நிறைவேறி வாழ்க்கையில் முழுபயனை எய்துவார்கள்.

ஸ்ரீ ஹரியை தொடர்ந்து உபாசனம் செய்வார்களானுல் இந்திரனுடைய காமதேனு, கர்பக விருக்ஷம் போல ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் அவருடைய பக்தர்களுக்கு அதி சயிக்கத்தக்க சக்திகளை தந்து குடும்ப கஷ்டங்களிலிருந்து விடுவித்து தந்தையை போல காத்தருள்வார்.

பேய், பிசாசு போன்ற கெட்ட துர்தேவதைகளினுல் பிடிக்கப்பட்டு அவதியுருவதினின்றும், காமம் குரோதம், மதம் போன்ற கெட்ட எண்ணங்களினின்றும் ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் அருளாசி வழங்குவதன் மூலம் தம்மை விலகி யிருக்க துணைபுரிந்து காத்தருளுகிருர்.

ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் மெய்யறிவு, ஆழ்ந்த பக்தி, தன்னலமின்மை, தகுதிக்கு மீறிய திறமை, நல்ல உடல் வன்மை, எண்ண எழுச்சிகளை கட்டுப்படுத்தும் திறன், ஏன் அபராக்ஷ ஞானத்தைக்கூட நமக்கு அருளிச் செய் கிருர்.

ஊமைகளுக்கு பேசும் ஆற்றலையும், காது கேளா தவர்களுக்கு ஆற்றலையும், பலவீனமானவர்களுக்கு கேட்கும் நடக்கும் சக்தியையும் கொடுக்கிருர். அவருடைய பக்தர் களுக்கு நட்சத்திரங்களால் ஏற்படும் கெட்ட பலனை

நீக்கி மகிழ்ச்சியடையச் செய்கிறார். அவருடைய உண்மை யான பக்தர்களுக்கு புண்ணியங்களை குவியல் குவியலாகத் தந்து முக்தியை அடையும் வழியை கூட காட்டுகிறார்.

ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் மக்களுக்கு அருளுவதற் காக மட்டுமே இம் மண்ணில் அவதரித்தாரே தவிர சபிப்ப தற்காக அல்ல. இம் மண்ணில்வாழும் எல்லா உயிரினங்களுக் கும் நல்வாழ்வு கொடுக்கும்படி அவர் ஆண்டவனை பிரார்த் திக்கிறார். அவர் என்றும் யாருக்கும் துன்பம் தர மாட்டார். ''ஸ்ரீ இராகவேந்திரய நமக, என்று தினமும் ஒருவன் ஜபம் செய்வானானால் அவனுடைய வாழ்வில் முடியாத காரியங்கள் கூட நல்லபடியாக முடிந்து பலனளிக்கும்.

ஒருவன் பிருந்தாவனம் சென்று பிரதக்ஷிணகளும், வணக்கங்களும் செய்வானானால் அவனுடைய உடல் நல னுக்கு ஏற்றவாறு எல்லா புனித தலங்களையும் சென்று தரிசித்த பேறு பெறுவான். மகானுடைய ஜல அபிஷேக நீரை (பாதஉதகம்) ஒருவன் தலையில் தெளித்துக் கொள் வானானால் கங்கை யமுனை போன்ற புனித ஆறுகளில் நீராடி யது போன்ற பலனை அடைவார்கள்.

ஸ்ரீ இராகவேந்திர சூத்திரங்களை தினமும் ஓதுவார்களா னால் மனிதர்களால் குணப்படுத்த முடியாத நோய்கள் கூட குணமாகிவிடும்.

தினமும் குளித்து முடித்த பிறகு பிருந்தாவன திரு உருவப் படத்திற்கு முன் விளக்கும் பத்தியையும் ஏற்றி யார் தொழுது வருகிறார்களோ அவர்களுக்கு பலராலும் மதிக்கத் தக்க ஸ்ரீ ஹரி, வாயு தெய்வங்களை பற்றி மெய்யறிவு பெற்று பெருமை பெறக்கூடிய ஆண் குழந்தை பெறும் பாக்கியம் பெறுவார்கள்.

சருங்கக் கூறின், பகைவர்கள், கொடிய விலங்குகள், விஷஜந்துக்கள் முதலியவைகளினால் ஏற்படும் பயங்களி

லிருந்து நம்மை காத்தருளும் சக்தி மகானுக்கு உண்டு. சம்சார துன்பத்திலிருந்து எல்லோரையும் விடுவித்து நல்வாழ்வளிப்பார்.

இவ்வளவு சக்தி வாய்ந்த கடவுளின் அவதாரபுருஷ ராகிய ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் நம் எல்லோருடைய நன்மைகாகவே இங்கு இருக்கிறார். அவர் மீது நம்பிக்கையும் பக்தியும் கொண்டவர்கள் அவருக்கு தொண்டு செய்யட்டும் இல்லையேல் வேண்டாம். இந்நூலை நம்பிக்கையோடு படித்தவர்களுக்கும், இனி படிக்க இருப்பவர்களுக்கும் ஸ்ரீ ஹரி, வாயு மற்றும் ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளின் கிருபை கிடைக்கப்பெறுமாக.

1. ஸ்ரீ குரு இராகவேந்திர தோத்திரம்

ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளின் பக்தரும், சிஷ்யருமான ஸ்ரீ அப்பண்ணாச்சாரியார் தொகுத்த கிரந்தங்களுக்கு இராகவேந்திர தோத்திரம் என்று பெயர். இது முப்பத்தி இரண்டு பத்திகள் கொண்ட சமஸ்கிருத நூலாகும் மகான் குருவின் மனித சக்தியை மீறிய தெய்வ சக்தியை இது விளக்குகிறது. அசைக்க முடியாத பக்தியுடன் ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளை மனதில் நிறுத்தி இத் தோத்திரங்களை ஒப்பிப்போமானால் நம்முடைய விருப்பங்கள் பூர்ணமாக நிறைவேறும்.

ஆகையால், சமஸ்கிருதத்தில் உள்ள தோத்திரங்களில் பூஜிக்கத் தக்க முக்கிய புண்ணிய தோத்திரமாக இந்த இராகவேந்திர தோத்திரம் விளங்குகிறது. ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளின் புனித வார்த்தைகளை புனித கங்கையுடனும், மற்ற தகுதிகளுடனும், நல்லொழுக்கங்களுடனும் ஒப்பிட்டு முதல் பத்தியில் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் இரகசிய முறையில் புண்ணியங்களை பக்தர்களுக்கு அளிப்பதன் மூலம் மனவலிமையுடன் எதிரிகளை வாதத்தில் வெற்றி கொள்ளும் தகுதியையும் பக்தர்கள் என்றும் ஆர்வமும் சுருசுருப்பும் உள்ளவராகத் திகழவும் மலடிகளுக்குக் கூட மகப்பேறு அளித்து அதனால் ஆனந்தத்தையும் துர்தேவதைகளையும் அதனால் வரும் கேடுகளை நீக்கியும் அருள வல்லவர். மேலும் கடவுளுக்குரிய தெய்வீக விஷேஷ குணங்களனைத்தையும் கொண்டவர் ஸ்ரீ குருராஜ் என அப்பண்ணாச்சாரியார் அவருடைய தன்மைகளை தன்மையாக விளக்குகிறார்.

சுருங்கக்கூறின், ஸ்ரீ மாதவருடைய கடல் போன்ற சித்தாந்தங்கள் பொங்கி வழிந்து பால் போன்ற வெண்மையை நிலவுக்கு அளிக்கிறது என்ற பொருள் கொண்ட,

''ஸ்ரீ சுவாமிகளே அவருடைய பக்தரான ஸ்ரீ அப்பண்ணாச் சாரியார் வாயிலாக புகழுகிறார்.

மதிப்பு மிக்க புண்ணிய ஸ்தோத்திரங்கள் விளக்கும் உண்மையின் முக்கிய துவத்தை பக்தர்கள் கிரகித்துக் கொள்ளும் வகையில் வரிசைகிரமமாக சமஸ்கிருத மூலத்தை தமிழில் மொழி பெயர்த்து. கீழே தரப்பட்டுள்ளது.

ஸ்தோத்திரங்கள் : 1 & 2.

இந்த இரு ஸ்தோத்திரங்களையும் இணைத்துப் படிக்க வேண்டும். இவ்வாறான இணை ஸ்தோத்திரங்கள் சமஸ்கிருதத்தில் ''யுக்மாஸ்'' (Yugmas) என்றழைக்கப் படுகிறது. தான் எடுத்துக் கொண்ட வினை இடையில் உறுகள் இன்றி வெற்றிகரமாக முடிக்கப்படல வேண்டும் என்பதற்காக ஸ்ரீ குருராஜ் அவர்களின் புண்ணிய சொற்களை புனித கங்கை யுடன் ஒப்பிட்டு மங்கலகரமாக ஸ்ரீ அப்பண்ணாச்சாரியா. தொடங்குகிறார்.

ஸ்தோத்திரங்கள் : 1 & 2. மொழி பெயர்ப்பு விளக்கம்.

''காமம், குரோதம் போன்ற உணர்ச்சிகள் பலவற்றையும் வேரறுத்த முற்றும் அறிந்த (பூர்ண போதம்), பேறு அளிக்கவல்ல, துவைத்த சாஸ்திரங்களில் குறைவின்றிபெற்ற அறிவுடைய தீர்க்க தரிசியாகிய, யோகிகளால் (பரஹம்சர்கள்) அவர்கள் இதயத்தில் தோன்றியதை இஷ்டப்படி வாழ்த்திப் பாடப்படுகின்ற ஞானம் எனும் மூன்றாவது கண்ணை பெற்றவரும், தாமரை மலர்போன்ற பாதங்களை உடைய கடவுள் விஷ்ணுவிற்கு பூர்ண விசுவாசத்தை அர் பணித்தவரும், பூர்வம், உத்தரங்கள் அடங்கிய மாரிசைகளை இயற்றியவரும், பிரம்மாவாலும், சிறு கடவுளர்களாலும் அனுக்கலமாக ஏற்கப்பட்டவரும், மாயைகளை அகற்றி மத தத்துவங்களை ஆதரிக்கத்தக்க தத்துவை பெறும் பத

செய்தவரும், உயிர்களின் பன்மை நிலையை தரவாரியாகப் பிரித்து விருத்தி செய்கிற அதிசக்தி வாய்ந்த உயர்ந்த ஸ்தானத்தையுடைய கடவுள் ஸ்ரீ விஷ்ணுவின் பக்தரும், பல வேறுபட்ட உலக உண்மைக்கும், தனிப்பட்ட உயிர்களுக்கும் இடைபட்ட நிலைகளை படிப்படியாக விளக்கியவரும், நாடி வருகின்ற பக்தனை புனிதமடையச் செய்கிறவருமான வரும் ஆவார் ஸ்ரீ மாதவர் என்று விளக்கும் ஸ்ரீ குருராஜருடைய புனித மொழிகள் கடலின் கரை கண்டவை.''

தோத்திரங்கள் : 1 & 2. விளக்கம் II

'பிரம்மாவாலும், மற்றும் பலசிறு கடவுளர்கள் வண்டு உருவம் கொண்டு வழிபட்டு, வணங்குகின்ற தாமரை மலர் போன்ற பாதங்களை உடைய கடவுள் விஷ்ணு கொன்ற பெரிய யானைகளையும் கடித்து கிழிக்கவும், ஆடுகள் போன்ற சிறு விலங்குகளை விழுங்கவும் வல்ல அச்ச மூட்டும் கோரை பற்களை கொண்ட தாடைகளை உடைய பெரு முதலைகளை உடையதுமானதும் மூன்றாவது கண்ணை கொண்டுள்ள கடவுள் சங்கரரில் தலையிலிருந்து தோன்றி கீழிறங்கி பூமிக்கு வந்து தன் மனம்போன போக்கில் அலைந்து திரிவதும், கிழக்கேயும, வடக்கேயும் உக்கிரமாக எழும் கோப அலைகளை உடையதும், கடலில் பிரகாசமான நிலவு தோன்றுமிடத்தே சென்று கலப்பதுமான புனிதகங்கை அவனுடைய புண்ணிய நீரால் பக்தர்களை புனிதமடையச் செய்கிறாள்.''

. . . . :

ஸ்ரீ குருராஜருடைய புனிதமொழிகளை புனித கங்கை ஒப்பிட்டு கங்கைக்கு உள்ள சக்திக்கு இணையான சக்தியும், சிறப்பும் அவருடைய மொழிகளுக்கு உண்டு என ஆசிரியர் அப்பண்ணாச்சாரியார் விளக்குகின்றார், நு சீர் வ ர த ம் அளிக்கக் கூடிய பாட்டாக இவ்விண்ணரடையும் கொள்ளலாம்.

அடுத்த பாடல்களில் ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளின் சக்திகளை (மகிமைகளை) ஆசிரியர் விளக்குகிறார்.

பாடல் 3

"தாமரை மலர் போன்ற அவருடைய பாதங்களில் பக்தியை யார் அர்ப்பணம் செய்கிறார்களோ அந்த பக்தருடைய விருப்பப்படி வேண்டிவனவெல்லாம் தந்து, பெருமலைகளை பிளக்க வல்ல வைரம் போன்ற தகுதியுடைய கடவுள் இந்திரானை போல, பக்தர்களின் பாவ மலைகளை பிளந்து புனித குணமாகிய கருணை உள்ளம் கொண்டவரான ஸ்ரீ குருராஜ சுவாமிகள் எப்போதும், எவ்விடத்திலும் நம்மையெல்லாம் காத்தருள்கிறார்."

கடவுள் இந்திரா அவருடைய பேரிடிகளால் பெரு மலைகளை பிளந்தெரிவது போல நம்முடைய பாவங்கள் எல்லாவற்றையும் ஸ்ரீ குருராஜ் களைந்தெரிகிறார் என ஆசிரியர் விளக்குகிறார்.

அடுத்த பாடலில், ஸ்ரீ விஷ்ணுவின் உயரிய பக்தனாக அவதாரமெடுத்த ஸ்ரீ பக்த பிரகலாதனை குறிப்பிட்டு, ஸ்ரீ குருராஜ் புனித அறிவும், கடவுளின் விசேஷ குணங் களையும் கொண்டவரென அவருடைய பெருமைகளை ஆசிரியர் விளக்கிக் காட்டுகிறார்.

பாடல் 4

ஸ்ரீ குருராஜ், ஸ்ரீ ஹரியின் தாமரை பாதங்களுக்கு பக்திப் பரவசத்துடன் அர்ப்பணித்து செய்த தொண்டு காரணமாக தலைசிறந்த தெய்வீக ஆற்றல்களை பெற்றவர். அவருடைய பக்தர்களின் சிந்தையில் தோன்றுகிற விருப்பங் கள் நிறைவேற கற்பகதருவை போல ஆசிகள் அளித்த வண்ணம் இருக்கிறார்.

உள்ளத்தாலும், உடலாலும் வலியை சிறிதும் பொருட் படுத்தாது ஸ்ரீ குருராஜ் அவர்களுக்கு யார் யார் தொண்டு

செய்கிறார்களோ அவர்கள் எங்கும் நிறைந்துள்ள முற்றும் அறிந்த கடவுளின் கிருபையை பெறுவார்கள். இப்பாடலை பாராயணம் செய்வதன் மூலம் அவர்களுடைய விருப்பங்கள் நிறைவேறுவதோடு மட்டுமல்லாமல் ஆத்மீக அறிவும் பெறுவர் என்று ஆசிரியர் இப்பாடலின் பயனை விளக்குகின்றார்.

அடுத்த மூன்று பாடல்களில் ஆசிரியர், ஸ்ரீ குருராஜரின் நற்பெருமைகளை விளக்குகின்றார்.

பாடல் 5

''மனிதனின் மன அமைதியை கெடுக்க வல்ல இன்ப துன்பங்களினாலும் ஆபத்துகளாலும் ஏற்படுகின்ற பாபங்களின் சேர்க்கையை நெருப்பிட்ட பஞ்செனை எரித்துப் பொசுக்குகிற நல்நிமித்தங்களை பக்தர்களின் வாழ்வில் உண்டாக்குகிறார். எந்தவிதமான வலியையும் சகித்து பொறுத்துக் கொள்ளக்கூடிய மன வலிமையை தருவதோடு மட்டுமல்லாமல், பூதம், பேய், பிசாசு போன்ற துர் உயிர்களை அடியோடு களைதற்கும், வெற்றி பெற இயலாத வேதனை கடலை கடக்கவல்ல ஆற்றலையும் அளிக்க வல்லவர்.''

பாடல் 6

''உணர்ச்சிகளை வேரறுத்தவர்; மாசுமருவற்ற தூய்மையானவர்; போக்கிரித்தனமாக எதிர்ப்பவர்களையும் வாதத்தால் தோல்வியடையச் செய்கிற தகுதியுடையவர்; ஒளி பொருந்திய புனித வாழ்வை மேற்கொண்டவர்; தெய்வீக குணாதிசயங்களை கொண்ட அவருடைய தலை சிறந்த பேச்சுக்கு கடவுள் ஆதிசேடரும் தலைவணங்கக் கூடியவர்.''

பாடல் 7

''ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் மனித சக்திக்கு அப்பாற்பட்ட மகத்துவம் பெற்ற நற்குணங்களை கொண்டவர்.

பக்தர்கள் மகப்பேறு பெற்று சந்ததிகளுடன் வேறு பல செல்வங்களனைத்தையும் பெற்று வளமாக வாழவும், அவர்களுடைய உள்ளத்தில் உறுதியான பக்தியையும், ஆழ்ந்த நல்லறிவும், உடல் நலனையும் அருளிச் செய்து பேணிக்காப்பவாராகவும் திகழ்கிறார். அதோடு உடலிலும், உள்ளத்திலும் வியாதிகளின்றிக்காக்க வல்லவர்,''

பக்தர்களின் உள்ளத்தில் திடமான பக்தி ஏற்படச் செய்தற் பொருட்டு ஸ்ரீ குருராஜருடைய முக்கியமான தெய்வீக குணங்களை ஆசிரியர் மேலே உள்ள மூன்று பாடல்களில் விளக்கும் தருகிறார்.

இப்பாடல்களை பாராயணம் செய்வதால் கெட்ட செயல்கள் நிகழாவண்ணம் அழிக்கப்பட்டு, ஸ்ரீ குருராஜருடைய அருளால் பக்தர்களுடைய ஆசைகள் நிறைவேற்றப் படுகின்றன.

பாடல் 8

''பூஜையின்போது பிருந்தாவனத்திற்கு அபிஷேகம் செய்து வழிந்து வந்த புனிதநீர் (பாதோதகம்) கங்கை, மற்றும் வேறு பல புனித நதிகளில் நீராடுவதால் கிடைக்கும் தூய்மையை விட அதிக தூய்மை அளிக்க வல்லது. அதோடு அதிப்ஹியுதிகா, அதிதவிஹா, அத்ஹயஸ்த்மிகா என்ற முப்பெரும் துயரங்களை நீக்குகிறது. மலடிகளுக்கும் சந்ததிகள் அளிக்க வல்ல சக்தி வாய்ந்தது. தாகினிகள், சங்கினிகள் போன்ற சிறு தூர்தேவதைகளினால் ஏற்படுகின்ற கேடுகளை வருமுன்னே அழிக்க வல்லது. பாவங்களை வேருடன் களைந்து பக்தனை புனிதப்படுத்துகிறது.''

இந்த பாடலை பாராயணம் செய்து அதன்படி நடந்தால் புனித கங்கையில் நீராடுவதால் பாவங்கள் அடியோடு

களையப்படுதல்போல பாவங்கள் நீக்கப்படும் என்பது குறிப்பு

அடுத்த பாடலில் ஆசிரியர் ஸ்ரீ குருராஜருடைய பக்தர்களின் இயல்புகளை விளக்கி, அவர்கள் மகானுடன் தொடர்பு கொள்வதால் நல்கும் பயனை விளக்குகிறார்.

பாடல்: 9

''தாமரை மலர் போன்ற பாதங்களை உடைய ஸ்ரீகுருராஜரை அழகுபட அலங்கரித்து, அவருடைய திருவடிகளையே அடைக்கலமாகக் கொண்டு, எப்போதும் அவருடைய சக்தியின் பெருமைகளை பாடிக் கொண்டிருக்கும் அவருன்டைய பக்தருடைய தரிசனத்தை கண்ட பொழுதிலேயே கலகங்கள் உண்டாக்குகின்ற நம்முடைய பாவங்கள் அழியும்.''

ஸ்ரீகுருராஜருடைய பக்தர்களை காணும் பொழுதிலேயே நம்முடைய பாவங்கள் அழிக்கப்படுகின்றன என்று ஆசிரியர் விளக்கம் தருகிறார்.

இந்த பாடலை மனனம் செய்வதால் அனைத்து பாவங்களும் நீக்கப்படுகின்றன என்பது சுருக்கம். அடுத்து வரும் 10, 11, 12. 13, 14 ஆகிய ஐந்து பாடல்களிலும் ஸ்ரீகுருராஜருடைய நற்குணங்கள் தெளிவாக்கப்படுகின்றன.

பாடல் 10

''ஸ்ரீஇராகவேந்திர சுவாமிகள் குருவின் உதவியின்றியே அனைத்து சாஸ்திரங்களையும் கற்றுத்தேர்ந்தவர்: ஸ்ரீமாதவருடைய சித்தாந்தங்களாகிய ஸ்ரீ விஷ்ணுவின் மேன்மை புகழ்; உலக உண்மை, கடவுளுக்கும் தனிப்பட்ட உயிருக்கும் உள்ள தேறுபாடு போன்ற பலவற்றிற்கு விளக்கங்கள் தந்து விமர்சித்துப் பரவச் செய்தவர். ஸ்ரீசுதீந்திர சுவாமிகளின்

கைகளால் உருவாக்கப்பட்டு, இணையிலா கீர்த்தியை உடைய யோகி ஸ்ரீவிஜயேந்திரா சுவாமிகளால் வளர்க்கப் பட்டவர்.

பாடல் 11

''புனித அறிவு, நிலையான பக்தி, வம்சம் பெருக மகப்பேறு, நீண்ட ஆயுள், இம்மை புகழ், ஆத்மீகத்திலும், வாழ்க்கையிலும் சிறந்த செல்வத்தையும் அளித்து, அவர் மீது கொண்ட பக்தி காரணமாக பயங்களை போக்கி என்னை வாழ்த்தி அருள வல்ல ஸ்ரீ குருராஜ் ஒருவரே என்னுடைய ஆத்மீகத்தலைவர் ஆவார்.''

இப்பாடலை பாராயணம் செய்து ஒப்பிப்பதால் புனித அறிவு, மகப்பேறு போன்ற பல செல்வங்களும் குறைவின்றி பெறலாம்.

பாடல் 12

''ஆழ்ந்த அறிவால் முக்கிய விஷயங்களனைத்தையும் கற்றுத் தேர்ந்து விவாதத்தால் எந்த எதிரியையும் வெற்றி கொள்ளும் தலைசிறந்த ஆத்மீகத் தலைவரான ஸ்ரீகுருராஜருக்கு இணையாக இம்மண்ணில் வேறிலர்.''

குறிப்பு: ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் மட்டுமே மனிதத் தன்மைக்கும் அப்பாற்பட்ட மேலான குணங்கள் கொண்ட அவதார குரு என ஆசிரியர் அழுத்தம் திருத்தமாக கூறுகிறார்.

இப்பாடலை பாராயணம் செய்வதால் அறிவும், விவாதிக்கும் ஆற்றலும் பெற ஏதுவாகும்.

அடுத்த பாடலில் ஆசிரியர் உடல் நோய்களை ஸ்ரீ குரு ராஜர் அவருடைய கிருபையால் களைவதுபற்றி விவரிக்கிறார்.

பாடல் 15

''அறியாமை, மறதி தன்மை, ஐயம், தகுதி, புரிந்து கொள்ளும் ஆற்றலின்மை, மந்த நிலை, பேசுவதில் குறை பாடு, திக்கிப் பேசுதல் போன்ற வேறு பல உடற்குறை பாடுகள் ஸ்ரீ குருராஜருடைய கிருபையால் நீங்குகின்றன.''

இப்பாடலை பாராயணம் செய்வதால் நோய்களினின்று காக்கப்படுகிறோம். அடுத்த பாடலில் ''அஸ்தஹஸர மந்திர' மாகிய ''ஓம், ஸ்ரீஇராகவேந்திராயு நமக'', எனும் ஸ்ரீஇராக வேந்திரருடைய தலைவணக்கச் சொல்லை உச்சரிப்பதன்மூலம் கிட்டும் பயனை விளக்குகிறார் ஆசிரியர்.

பாடல் 16

''எட்டு வார்த்தை கொண்ட மந்திரமான ''ஓம் ஸ்ரீ இராகவேந்திராய நமக'' எனும் நாமத்தை பக்தியுடன் உச்சரிப்பாயேயானால் உன்னுடைய விருப்பங்கள் யாவும் நிறைவேறும் என்பது நிச்சயம்.''

நெறி தவறாமல் தினமும் காலை, மதியம், மாலை ஆகிய மூன்று வேளைகளிலும் ஸ்ரீ குருராஜரை இதயபூர்வமாக வழிபட்டு வருவோமானால் நினைப்பது நிறைவேறும் என அடுத்து வரும் 17 & 18 பாடல்களில் ஆசிரியர் விளக்குகிறார்.

பாடல் 17

ஸ்ரீ குருராஜ் புனித அறிவை பெற அருளிச் செய்கிறார். நாம் உடலாலும், உள்ளத்தாலும், சொல்லாலும் செய்கிற பாவங்கள் அனைத்தையும் அழிக்கிறார். நான்கு வகை கர்மங்

களான புருஷார்த்தம், அர்ததம், காமம், மோட்சம் ஆகிய வற்றை அளிக்கவல்லவர்.''

பாடல் 18

''யார் ஒருவர் ஸ்ரீ குருராஜருக்கு ஐயமேதுமின்றி எப்போதும் மனதால் எண்ணி வழிபட்டு வருகிறார்களோ அவர்களுக்கு இவ்வுலகிலும், அடுத்து வரும் உலகிலும் இன்பங்களே கிட்டும்.''

இந்த பாடலின் நோக்கம் யாதெனின் ஸ்ரீ குருராஜ் புருஷார்த்தங்களடங்கிய நான்கு வித கர்மங்களை அருளிச் செய்து பணிவும், பக்தியும், தந்து நம்மை எப்போதும் காத்தருளுகிறார் என்பதாகும்.

ஆசிரியர் அடுத்து வரும் பாடலில் ஸ்ரீ குருராஜ் அளவிடற்கரிய ஆழம் கொண்ட சக்திகளை யுடையவர் என்றுரைக்கிறார்.

பாடல் 19

''ஆழம் காணற்கரிய தெய்வீக சக்தியும், அளவிற்கு மிஞ்சிய அறிவும் கொண்டு, சாஸ்திரங்களில் இணையிலா அறிஞருமாக ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் விளங்குகிறார்.''

ஸ்ரீ குருராஜ் பாவங்களின் கேடுகளுக்கு அப்பாற்பட்டவர். ஸ்ரீ மாதவருடைய சித்தாந்தக்கடல் பொங்கிப்பெருபால்போல் காயும் நிலவே காரணம். அப்படிப்பட்ட தத்துவங்களை கற்ற ஸ்ரீ குருவே என்னை காப்பாயாக.''

குறிப்பு:

ஸ்ரீ குருராஜர் முன்னதாகவே, ஸ்ரீ ஜெயதீர்த்த சுவாமி களின .33 நூல் தொகுதிகளில் ஒன்றான, துவைத

தத்துவங்களை அமைத்த ஸ்ரீ மாதவரால் தொகுக்கப்பெற்ற ஸ்ரீ நியாய சுதாவை, மூல நூலிலிருந்து படித்து எளிமையான விளக்கம் தந்து எழுதிய ''பரிமளம்'' என்கிற விமர்சனத்தின் காரணமாக, ''பரிமளாச்சாரியார்'' என்னும் பட்டப் பெயரைப் பெற்றவர். தத்துவ மாணவனொருவன் ஒளி பொருந்திய இந்த பரிமளத்தின் உதவியில்லாமல் ஸ்ரீ நியாயசுதாவை படித்து புரிந்து கொள்ளுதல் கடினம், ஆகவே ஸ்ரீ குருராஜருக்கு, ''ஸ்ரீ மாதவமத துஹ்தபதி சந்தரம'', என சிறப்புப் பெயரிட்டு அழைப்பது பொருந்தும்.

இந்த 18ம் 19-வது பாடல்களும் இம்மை பயன் ஆத்மீக ஆசிகளை வழங்குவன.

அடுத்து வரும் 20, 21-வது பாடல்களில் பிருந்தாவனத்திற்கு செய்யும் பிரதக்ஷணம், நமஸ்காரம் ஆகியவைகளினுல் எழும் பயனை நல்குவன.

பாடல் 20ம், 21ம்

''அனைத்து சாஸ்திரங்களும் கூறும் பயனை பெறவும், புண்ணிய தலங்களுக்கு யாத்திரை செய்து செய்து பெறும் பயனைவிட பெரும் பயன் பெறும் பொருட்டும் ஸ்ரீகுருதேவருடைய பிருந்தாவனத்தை எத்தனை முறை வலம் வர முடியுமோ அத்தனை முறை வலம் வருவேன். பிருநதாவனத்திலிருந்து வழிந்து வரும் அபிஷேக நீரை, என் சிந்தையில் எழுகின்ற விருப்பங்கள் நிறைவேறும் பொருட்டு உடல்மீது தெளித்துக் கொள்வேன்; அவருடைய திருநாமத்தை உளமாற வாயால் உச்சரித்துக் கொண்டே இருப்பேன்.''

குறிப்பு;

இந்த பாடல்களின் மூலம் ஆசிரியரின் ஆழ்ந்த பக்தி வெளிப்படுகிறது. 1. பிருந்தாவனத்தை வழிபடுதல்,

2. அபிஷேக நீரை உடல் மீது தெளித்துக் கொள்ளுதல், 3. ஸ்ரீ குருராஜருடைய பாதங்களுக்கு பணிவான வணக்கங்களை சமர்ப்பித்தல், 4. நான்கு கர்மங்களை பூர்வமாக அடைதற்பொருட்டு அவருடைய நாமகாணத்தை சொல்லுதல். இந்நான்கையும் முறை தவறாது செய்வோமானால் 1. புண்ணிய தலங்களை தரிசித்தவன் பலனையும், 2. கங்கை போன்ற புனித நதிகளில் நீராடிப் பெறும் புண்ணியமும், 3. ஆழ்ந்த தத்துவ அறிவும், 4. நாம் எண்ணிய எண்ணங்கள் பூர்ணமாக நிவைவேறியும் பலன்கள் கிடைக்கப்பெறும் என்கிறார் ஆசிரியர்.

இப்பாடலை பாராயணம் செய்வதன்மூலம் மேற்கூறிய அனைத்து நலன்களும் குறைவறப் பெறுகிறோம்.

அடுத்த பாடலில் ஆசிரியர் சம்சாரக் கடலிலிருந்து கரையேறும் வழியை விளக்குகிறார்.

பாடல் 22

''காதல், ஆசை, கோபம் போன்ற குடும்பம் எனும் குட்டையில் எழும் நீர் சூழலாகிய சம்சாரக் கடலிருந்து, ஓ.... என் குருதேவா என்னை காத்தருள்வாயாக. நீர்குமிழ் போன்ற போலி இன்பங்கள் தரும் வேதனை நிறைந்த கொல்லும் தன்மையுடைய குணங்களினின்றும், பல தரப்பட்ட வேறு வேதனைகளினின்றும் என்னை காத்தருள்வாயாக.''

ஸ்ரீ குருராஜை சிந்தையில் நிறுத்தி எந்த பக்தன் இந்த பாடலை பாராயணம் செய்கிறானோ அவன் சம்சாரக் கடலிலிருந்து மீறும் ஆற்றலை பெறத்தக்கவனாவான்.

23 பாடல் முதலாக 32 பாடல்கல் வரையில் தோத்திரங்களை பாடுவதன் மூலம் கிட்டும் ''பாலருத்தி'' என்கிற பெருமையை ஆசிரியர் விளக்குகிறார்.

பாடல் 23

''ஆழ்ந்த பக்தியுடன் யார் ஒருவர் ஸ்ரீ குருராஜரை பூஜிக்கிறார்களோ அவர்களை தொழு நோய் போன்ற கொடிய தொற்று நோய்கள் நாடா வண்ணம் மகான் காத்தருள்வார்.''

இந்த பாடல் தொழுநோய் போன்ற தொற்று நோய்களை அழிக்கும் ஆற்றல் கொண்டது.

பாடல் 24

''இத் தோத்திரத்தை பாராயணம் செய்வதன்மூலம் அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் மனிதன் அறிவாகிய பார்வையையும், பிறக்கும்போதே ஊமையாய் பிறந்தோர் பேசும் ஆற்றலையும், சிறந்த செல்வங்கள் பெற்று நூறாண்டுகள் வாழவும் ஆசி கிடைக்கிறது.''

இப்பாடலை பாராயணம் செய்வதன்மூலம் நீண்ட ஆயுளும், சிறந்த செல்வமும் கிடைக்கும் என்பதே இதன் சுருக்கம்.

பாடல் 25

''இந்த தோத்திரத்தை பக்தி சிரத்தையுடன் சொல்லி ஸ்ரீ குருதேவருடைய அபிஷேக நீரை யார் ஒருவர் குடிக்கிறார்களோ அவர்கள் எந்தவித வயிற்று நோய்களும் இன்றி சுகவாழ்வு பெறுவர்.''

பாடல் 26

''இதயபூர்வமான உறுதியுடன் ஸ்ரீ குருதேவருடைய பாதங்களுக்கு பக்தியை அர்ப்பணிக்கும் முடவன் ஸ்ரீ குரு

தேவரின் கிருபையால் கால்கள் பெற்று விரைவாக நடக்கும் ஆற்றலையும் பெறுகிறான்."

பாடல் 27, 28

"சூரிய, சந்திர கிரஹணங்களின்போது இந்த புண்ணிய தோத்திரங்களை உச்சரிக்கும் பக்தர்கள் பூதம், பேய், பிசாசு போன்ற துர்தேவதைகளால் நிகழும் தீமைகள் நீங்கப் பெற்று சுகவாழ்வு பெறுவார்கள்."

இப்பாடல் தரும் சுருக்கம் பக்தர்கள் துர்தேவதைகளி லின்று காக்கப்படுவர் என்பதாம்.

பாடல் 29

"பிருந்தாவனத்திற்கு நெய்விளக்கேற்றி தீபாராதனை செய்து இந்த தோத்திரத்தை பக்திப் பரவசத்துடன் வழி படுகிறார்களோ அவர்கள் ஆழ்ந்த அறிவும், வாரிசும் கிடைக்கப் பெறுகிறார்கள்"

இப்பாடலின் பொருள் மகப்பேறு பெறுவோம் என்ப தாகும்.

பாடல் 30

இந்த தோத்திரத்தை சொல்வதன் மூலம் ஸ்ரீ குருராஜ ருடைய கிருபையால் கடவுளை பற்றிய உயர்ந்த அறிவும் கடவுளிடம் ஆழ்ந்த பக்தி ஏற்படவும், எதிரிகளை விவாதத் தால் வெல்லக் கூடிய ஆறறலும் சந்தேகமின்றி கிடைக்கப் பெற்று நிறைவு கிட்டுகிறது "

இந்த பாடல் 'வாதத்தினுல் எதிரிகளை தோற்கடிக்க வல்ல அறிவும், அதோடு எல்லா விருப்பங்களும் கிடைக்க அருளுவார் என உரைக்கிறது.

பாடல் 31

:"இந்த் தோத்திரத்தை உச்சரிப்பதன் மூலம் அதிகாரி களாலும், திருடர்களாலும், புலி, நாகம், முதலே போன்ற கொடிய விலங்குகளாலும் எழும் பயங்கள் நீக்கப்படுகின்றன என்பது உறுதி.''

இப்பாடல் அனைதது பயங்களும் நீங்கி துணிவு கிடைக்கி றது என விளம்புகிறது.

தோத்திரங்களை பாராயணம் செய்து பணிவுடன் ஸ்ரீ குருதேவரை வணங்கும் பக்தனுக்கு இந்த உலகிலும். அடுத்த உலகிலும் எப்போதும் மகிழ்ச்சி கிடைக்கும் என உறுதியாகக் கூறுகிறார் அப்பண்ணாச்சாரியார் அடுத்து வரும் பாடலில். இப்பாடலின் கடைசிவரியாக, ஸ்ரீ குருராஜர் அப்போது வணங்கிய ஸ்ரீ கடவுள் ஹயவதனுவே உண்மை தத்துவங்களின் சாட்சியாக உள்ளார் என பிருந்தாவனத்தில் இருந்தபோது ஆசிரியர் அப்பண்ணாச்சாரியார் சொல்லி யதை அமைக்கப்பட்டுள்ளது.

பாடல்: 32

''யார் ஒருவர் ஸ்ரீ குருராஜரின் புண்ணியபாதங்களுக்கு இத் தோத்திரங்களை சொல்லி பக்தியை அர்பணிக்கிறார் களோ அவர்களை எந்தவித ஆபத்தும், துர்அதிர்ஷ்டமும் சூழாவண்ணம் தடுத்து, எப்போதும் மகிழ்ச்சியாகவே இருக் கவும் அவருடைய பெயர் பலவிடங்களிலும் பரவி (புகழு டன்) நற் செல்வமும் பெற்று வாழவும் ஸ்ரீ கடவுள் நாராய ணன் கிருபையளிக்கிறார்.

ஸ்ரீ அப்பண்ணாச்சாரியார் ஒன்று முதல் கடைசிவரை ஸ்ரீ குருராஜ தோத்திரங்களை தொகுத்தபோது கடைசி பத்தி யின்போது மிகையான பக்திகாரணமாக பிருந்தாவனத்தின்

முன் ஏதும் சொல்ல வார்த்தை வராமையால் நின்று விட்டார் அப்போது ஸ்ரீ குருராஜ் கடைசி பத்தியின் கடைசி வரியை இணைத்தார். கடவுள் ஸ்ரீ ஹயவதன அப்பண்ணாச்சாரியாரின் நெஞ்சில் இருந்து கொண்டு அவ்வரியின் உண்மைக்கு சாட்சியாக அமைந்தார். ஸ்ரீ குருராஜ தோத்திரத்தை அமைத்த ஸ்ரீ அப்பண்ணாச்சாரியாரைப் பற்றி எடைபோடவோ விளக்கவோ வேறு வார்த்தைகளே இல்லை. அந்த அளவிற்கு உயர்வாக அந்த தோத்திரங்களை அமைத்துள்ளார். ஆயிரக்கணக்கான பக்தர்கள் அவர்களுடைய ஆசைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றனர். இப்போதும் கணக்கிலடங்கா பல தரப்பட்ட பக்தர்கள் பம்பாயிலிருந்தும் வந்து நூற்றெட்டு முறை தோத்திரங்களை சொல்லி மந்திராலய சுவாமிகளுக்கு தொண்டுசெய்து பிருந்தவனத்தை வலம் வந்து பயனடைகிறார்கள்.

கடைசியாக இத்தோத்திரங்களை அமைத்தவரை பற்றி, கடைசி தோத்திரங்கள் கூறுகின்றன.

பாடல் 33

இந்த புண்ணிய தோத்திரங்களை ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளின் ஆசியால் நன்கு கற்றுத்தேர்ந்த ஸ்ரீ அப்பண்ணாச்சாரியார் தொகுத்தார்.''

பாடல் 34

'கருணை உள்ளம் கொண்ட, எப்போதும் உண்மைக்கும் மதத்திற்கும் வளைந்து கொடுக்கவல்ல ஸ்ரீ இராகவேந்திர குருவை வழிபடுவோமானால் பக்தர்களுக்கு கற்பக தருவை போலவும், காமதேனுவை போலவும் அவர்கள் விரும்பியது கிடைக்கும்படியாக ஸ்ரீ சுவாமிகள் அருளிச் செய்வார்."

ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளை வழிபடுவதால் கிட்டும் பயனையே மேற்கூறிய தோத்திரங்களில் சுருக்கமாகக் கூறி யுள்ளார் ஆசிரியர்.

கடைசியில் உள்ள மூன்று பாடல்களும் தோத்திரங் களுடன் சேர்க்கப்பட்டதல்ல, ஸ்ரீ குருராஜரை சென்று வழி பட பக்தர்களுக்கு அளிக்கப்பட்ட தோத்திரங்களின் ஒரு பகுதியாகக் கொள்ளப்பட்ட சுருக்கமாகும், ஆகவே இந்த மூன்று பாடல்களையும் தோத்திரங்களின் முடிவில் அமைக்க அவசியமாயிற்று, இந்த ஸ்ரீ இராகவேந்திர தோத்திரங்களை தொகுத்தமைத்தவர் ஸ்ரீ அப்பண்ணாச்சாரியார் என்பது அனைவருக்கும் தெரிந்ததே !

2. ஸ்ரீ இராகவேந்திர மடத்தை

சார்ந்த பரம்பரை குருக்கள்

— :: —

1.	ஸ்ரீ	மாதவ ஆச்சாரியார்	கி.பி. 1238-1307
2.	,,	பத்மநாப தீர்த்தர்	1307-1314
3.	,,	நரகரி தீர்த்தர்	1314-1323
4.	,,	மாதவ தீர்த்தர்	1323-1340
5.	,,	அக்லோபய தீர்த்தர்	1340-1355
6.	,,	ஜெய தீர்த்தர்	1355-1388
7.	,,	வித்யாதி தீர்த்தர்	1388-1392
8.	,,	கவீந்திர தீர்த்தர்	1392-1399
9.	,,	வகேஷ தீர்த்தர்	1399-1407
10.	,,	இராம சந்திர தீர்த்தர்	1407-1436
11.	,,	விபுதீந்திர தீர்த்தர்	1436-1486
12.	,,	ஜெய்மித்ரர்	1486-1498
13.	,,	ரகுநாத தீர்த்தர்	1498-1533
14.	,,	சுரேந்திர தீர்த்தர்	1533-1539
15.	,,	விஜயேந்திர தீர்த்தர்	1539-1595
16.	,,	சுதீந்திர தீர்த்தர்	1595-1623
17.	,,	இராக வேந்திர தீர்த்தர்	1623-1671
18.	,,	யோகேந்திர தீர்த்தர்	1671-1688

19.	,,	சுரேந்திர தீர்த்தர்	1688-169.
20.	,,	சுமதீந்திர தீர்த்தர்	1692-1725
21.	,,	உபேந்திர தீர்த்தர்	1725-1728
22.	,,	வதிந்திர தீர்த்தர்	1728-1750
23.	,,	வசுதீந்திர தீர்த்தர்	1751-1785
24.	,,	வரதீந்திர தீர்த்தர்	1761-1785
25.	,,	தீரேந்தர தீர்த்தர்	1785
26.	,,	புவனேந்திர தீர்த்தர்	1785-1799
27.	,,	சுபோதீந்திர தீர்த்தர்	1799-1835
28.	,,	சுஜனேந்திர தீர்த்தர்	1835-1861
29.	,,	சுதர்மேந்திர தீர்த்தர்	1861-1872
30.	,,	சுகுநேந்திர தீர்த்தர்	1872-1884.
31.	,,	சுப்ரத்மஞந்திர தீர்த்தர்	1884-1903
32.	,,	சுக்ரதிந்தர தீர்த்தர்	1903-1912
33.	,,	சுசிலேந்திர தீர்த்தர்	1912-1926
34.	,,	சுவ்ரதிந்தர தீர்த்தர்	1926-1933
35.	,,	சுயமிந்ர தீர்த்தர்	1933-1963
36.	,,	சுஜயேந்திர தீர்த்தர்	1963இருந்து

3. ஸ்ரீ மூல ராமர் வரலாறு

ஸ்ரீ இராமரின் உருவசிலையை ஸ்ரீ மூல ராமர் என்று அழைப்பதன் காரணத்தையும்) மந்திராலய பிருந்தாவனத்து மதகுருவாகிய ஸ்ரீராகவேந்திர சுவாமிகளுக்கு முன்னால் ஸ்ரீ மாதவாச்சாரியார் முதற்கொண்டு ஸ்ரீ சுதீந்திர தீர்த்தர் வரையிலும், அவருக்குப் பினனால் வந்த வந்து கொண்டிருந்த ஏனைய மதகுருமார்களாலும் வழிவழியாக வழிபட்டு வருவதன் சிறப்பும் ஸ்ரீ இராக வேந்திர சுவாமிகளின் பக்தர்களுக்கு நன்கு தெரிந்ததே !

இது தொடர்பாக பலரும் அறிந்த வரலாற்று தொடர்பு மிக்க கதை ஒன்று வழங்கப் பட்டு வருகிறது. வைவஸ்வாத மநுவின் மகனாகிய இக்ஷ்வாகு என்பவர் பிரம்மாவை நோக்கி கடும் தவமிருந்தார். இதனால் பெருமகிழ்ச்சியடைந்த பிரம்மா இக்ரவாகு வழிபடுதற் பொருட்டு ஸ்ரீ இராமரின் உருவச்சிலை ஒன்றை தந்தருளினார். இந்த விஹரகம் இக்ஷ்வாகுவிற்குப்பிறகு வழிவழியாக அவருடைய குடும்பத்தாரால் வழிபடப்பட்டு கடைசியில் கஜபதி மன்னரின் கருவூலத்திற்கு எப்படியே வந்து சேர்ந்து விட்டது. இந்த சமயத்தில் கஜபதி அரசையாண்ட அரசர் இறந்துபடவே அவருடைய மகன் சிறுவயதினனாகையால் அரசபொறுப்பை ஏற்க முடியாமல் போய்விட்டது. இதனால் பெரிதும் குழப்பமடைந்த அரசவை பிரதானிகள் ஏகமனதாக முடிவெடுத்து பட்டத்து யானையிடம் ஒரு நீர் நிறைந்த குடத்தையும் ஒரு பூமாலையையும் தந்து நகரில் செல்ல விட்டனர். நகரமக்கள் யாவரும் பெருநடையிட்டு வந்த களிறு கண்டு வீதியோரம் ஒதுங்கி நின்றனர். பொதுமக்களை போலவே ஸ்ரீ நரகரி தீர்த்தரும் ஒருபுறம் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்து கொண்டிருந்தார் பட்டத்து யானையோ அவரிடம் நெருங்கி குடத்து நீரை அவர் மீது ஊற்றி பூமாலையையும் போட்டு முதுகின் மீது ஏற்றி கொண்டு அரண்மனை வந்து சேர்ந்தது. இந்த

நரகரி தீர்த்தர்தான் கஜபதி அரசை நேர்மையுடன் திறம்படவும் பன்னிரண்டு ஆண்டுகள் ஆட்சிசெய்தபின் அரச பொறுப்பிற்கு உரியவனுக வளர்ந்த மன்னர் மகனிடம் அரசை ஒப்படைத்து, கருவூலத்தில் இருந்த ஸ்ரீ மூலராமரின் விஹ்ரகத்... ...டும் அவருடன் எடுத்துக் கொண்ட வெளியேறினுர் ...குப்பிறகு அந்த விஹ்ரகத்தை ஸ்ரீ மாதவாச்சாரியாருக்குத் ...ார்.

மேலே கூறப்பட்ட உண்மைக்கு சான்று பகர ஸ்ரீ இராகாவந்திர சுவாமிகளின் சகோதரி மகனுகிய மகாகவி நாராயண ஆச்சாரியார் இயற்றிய இராகவேந்திர விஜயம் என்ற செய்யுளின் தோத்திரங்களிலிருந்து எடுத்துக்காட்டு கூறலாம். காண்டம் : 11 தோத்திரம் : 7

பத்பனுப தீர்த்தரின் மகனுகிய நரகரிதீர்த்தர் குருவின் கட்டளைபடி ஸ்ரீ மூல ராம விஹ்ரகத்தை ஸ்ரீ மாதவரிடம் வழிபடுதல் பொருட்டு ஒப்படைத்தார்.

ஸ்ரீ மூலராம விஹ்ரகத்தை வழிபடுதலினுல் விளையக் கூடிய நன்மைகள் பற்றி தோத்திரம் 8 காண்டம் 11 இல் விளக்கியுள்ளார்.

''எங்கே இந்த விஹ்ரகதகை வைத்து பூஜித்து வழிபடுகிருர்களோ அங்கே வாழ்க்கையில் ஏற்படக்கூடிய நான்கு வகை செயல்களினின்று விடுவிக்கப்பட்டு தூய்மை அடைகின்ருேம்.''

இவ்வாறு ஸ்ரீ மாதவாச்சாரியாரின் குரு ஸ்ரீ நரஹரி தீர்த்தர் கூறி (அக்ஷோபய தீர்த்தர்) தொடர்ந்து வழிபட்டு பேறு பெறும்படி கூறியருளினுர்

தொடர்ந்து, மகாகவி நாராயண ஆச்சாரியார் தோத்திரம் 18, காண்டம் 11 இலும், தோத்திரம் 73, காண்டம்

VI இலும் ஸ்ரீ இராமருடைய உருவச்சிலை ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளின் கைக்கு வந்த முறையை விளக்குகின்றார்.

தோத்திரம் 18, காண்டம் 11

''மாதவ சித்தாந்தங்கள் பரவுவதற்குக் காரணமாயிருந்த ஸ்ரீ மூல ராம விஹ்ரகம் அக்ஷோபாய தீர்த்தரிடமிருந்து வித்யாதிராஜ தீர்த்தரிடமும், அவரிடமிருந்து கவீந்திர தீர்த்தரிடமும், கவீந்திர தீர்த்தரிடமிருந்து ஸ்ரீ வகேஷ தீர்த்தரிடமும், பின் இராமச்சந்திர தீர்த்தரிடமும் வந்து சேர்ந்தது.

தோத்திரம் 73 காண்டம் VI

கடைசியாக தோத்திரம் 73 இல் ஸ்ரீ நாராயண ஆச்சாரியார், ஸ்ரீ சுதீந்திர தீர்த்தரிடம் ஒப்படைத்து பீடாதிபதியாக்கிய போது ஸ்ரீ மூலராமரையும் தந்து அதனை வழி படுதற்குரிய உரிமையையும் தந்து வாழ்த்தியருளியதோடு மட்டுமல்லாமல் வியாசருடைய இரு விஹ்ரகங்களையும், சாத்திரங்களை விளக்குகின்ற புத்தகங்களையும்,' மைவிறகால் செய்யப்பட்ட இரு விசிறிகளையும், ஒரு வெண்ணிற குடையையும் தங்கத்தாலான பல்லக்கு ஒன்றையும், காஞ்சி தமதி, மத்தளம். காளி போன்ற இசைகருவிகளையும் தந்தருளினார்.

ஸ்ரீ மூல ராமருடைய வழிபாடுகளனைத்தையும் நிறைவேற்றக்கூடிய முழு உரிமையும் மந்திராலய ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகளின் மடத்தை சார்ந்த பிரதிகளின் பிரதான பீடாதிபதியையே சாரும். மந்திராலத்தை விட்டு வெளியே செல்லும்போது கூட மதகுரு அதனை மிகுந்த பாதுகாப்புடன் உடன் எடுத்துச் செல்வது வழக்கம்.

ஸ்ரீ மூல ராமருடைய புனித சிலைக்கு எப்படி பூஜை செய்கிறார்கள் 'என்பதை இங்கே தெளிவாகக் கூறவிரும்பா

விடினும், சுருக்கமாகவும் வரிசை கிரமமாகவும் வழி பாட்டு முறையை (விதாணம்) பக்தர்கள் அவர்களுடைய அறிவுக்கு ஏற்ப புரிந்து கொள்ளும்படியாக கீழே தரப்பட்டுள்ளன.

ஷோடஸோபசார பூஜை

பதினாறு வகைபட்ட பூஜைகள்

1. த்யாநம் சமர்பயாமி:— பூஜை செய்யப் போகிற தேவதையை மனக்கண்முன் நிறுத்தி தியானம் செய்தல்

2. ஆவாஹநம் சமர்பயாமி :— பூஜை செய்யப் போகும் தேவதையை அதற்கு பிரதிநதியாக வைத்திருக்கும் விக்ரஹம், படம், கலசம் முதலியகளின் மீது புஷ்பம், அக்ஷதை இவைகளை சேர்த்து அந்த தேவதை தங்கும்படி பிரார்த்திப்பதாகும்.

3. ஆஸநம் சமர்பயாமி :— ஆஸநத்தில் அமர்த்திய தேவதைக்கு, புஷ்பங்களை கையில் எடுத்துக் கொண்டு சுலோகம்சொல்லி மூர்த்தி மீது சேர்த்து அஸநனத்தில் அமர்த்தியதாக பாவனை செய்தல்.

4. பாத்யம் சமர்பயாமி : தேவதையின் திருவடிகளை அலம்புதல்

5. அர்க்யம் சமர்பயாமி !— உத்திரிணியில் தீர்த்தம் எடுத்து தேவதையின் இருகைகளிலும் அளிப்பதுபோல பாவனை செய்து வேறு பாத்திரத்தில் சேர்ப்பது.

6. ஆசமநீயம் சமர்பயாமி :— உத்தரிணியில் தீர்த்தம் எடுத்து தேவதையின் வாய்க்கு நேராகக் மூன்று முறை காட்டி வேறுபாத்திரத்தில் சேர்த்தல்.

7. மது பர்க்கம் சமர்பயாமி :— தயிர், பால், தேன். நெய். இவைகளை சமமாகக் கலந்தது மதுபர்க்கம். இதை பகவானுடைய முகத்தெதிரே காண்பிக்கவேண்டும்.

8. பஞ்சாம்ருதம் சமர்பயாமி :— தேன், நெய், சர்க்கரை, தயிர், பால் இவை ஐந்தும் சேர்ந்தது சஞ்சாமிர்தம். (வாழைப் பழமும்' சேர்ப்பதுண்டு) விக்ரஹமானல் இதனல் அபிஷேகம் செய்யலாம் படமானல் புஷ்பத்தால் துளியெடுத்து புரோக்ஷிக்க வேண்டும்.

9. சுத்தோதக ஸ்நாநம் சமர்பயாமி :— சுத்தமான தீர்த்தத்தால் அபிஷேகம் செய்தல். படமானல் புஷ்பத்தால் துளியெடுத்து புரோக்ஷிக்க வேண்டும்.

10. வஸ்த்ரம் சமர்ப்யாமி :— வசதியுள்ளவர்கள் தேவதைக்கு இரண்டு வஸ்திரங்கள் சமர்ப்பிக்கலாம். வஸ்திரத்திற்குப் பிரதிநிதியாக இலவம் பஞ்சை மாலைப் போல் நீட்டி, நடுநடுவே குங்கும தீர்த்தத்தால் நெருடி மாலை போல சமர்ப்பிக்கலாம்,

11. உபவீதம் சமர்பயாமி :— பூணூல் அணிவிப்பது, அல்லது முன்போல் பஞ்சினுல் செய்த மாலையை அணிவிப்பது, அதுவும் இயலாவிடில் அக்ஷதை சேர்க்கலாம்.

12. ஆபர்ணம் சமர்பயாமி :— நகைகளை பூட்டி மகிழ்தல்.

13. கந்தம் சமர்ப்யாமி :— அரைத்த சந்தனத்தை மார்பிலும், சிரஸிலும் அளித்தல்.

14. அக்ஷதை சமர்பயாமி :— மஞ்சள் அல்லது குங்குமம் கலந்த அக்ஷதையை சமர்ப்பித்தல்.

15. புஷ்பம் சமர்பயாமி :— பலவகை புஷ்பங்கள், மாலை இவைகளை சிரஸு, கழுத்து, தோள் திருவடி இவைகள்மீது சமர்ப்பித்தல்.

16. தீபம் சமர்பயாமி :— பலவகை தீபங்களை ஏற்றி அதை பகவானுடைய முகத்திலிருந்து பாதம்வரை பிரதக்ஷிணமாகப் பல முறை சுற்றுதல்.

மேலே கூறியதை தொடர்ந்து கீழே குறிப்பிட்டுள்ளதையும் செய்தல் வேண்டும்.

1. நைவேத்தியம் :— அன்னம், பாயாசம், பக்ஷயம் முதலிய சமைத்த பொருள்களை பகவானுக்கு நிவேத்தியமாக அளித்தல்.

2. [illegible] ப்ரதக்ஷிணம் சமர்பயாமி :— தெய்வத்தின் [illegible] அங்கங்களை அலம்புதல்

3. தாம்பூலம் சமர்பயாமி :— வெற்றிலை, பாக்கு தாம்பூலம் அளித்தல்.

4. சுவர்ண புஷ்பம் சமர்பயாமி :— பொற்காசுகளையும், புஷ்பங்களையும் தட்சணமாக அளிக்கல்.

6. மந்தர புஷ்பம் சமர்பயாமி :— எல்லோருடைய கைகளிலும் மலர்களை அளித்து சேர்ந்தர்போல கடவுளுக்கு அளித்தல்.

6. நீலாஞ்சனம் சமர்பயாமி :— கற்பூர ஆராத்தி செய்தல்

7. பிரதக்ஷணம் சமர்பயாமி :— தெய்வத்தை வலம் வந்து வணங்குதல்.

பூஜையை முடித்தலின்போது செய்யவேண்டியன :—

1. ச்சத்ரம் சமர்பயாமி :— குடை அளித்தல்.

2. சாமாரம் சமர்பயாமி :— சாமரத்தால் வீசுதல்.

3. வ்யஜநம் சமர்பயாமி .— விசிறியால் வீசுதல்.

4. கீதம் சமர்பயாமி :— பாட்டு பாடுதல்.

5. ந்ருத்யம் சமர்பயாமி :— நடனம் புரிதல்.

6. வாத்யம் கோஷயாமி :— வாத்தியம் வாசித்தல்.

7. ஆந்தோளிகாம் ஸமர்பயாமி :— ஊஞ்சலில் ஆட்டுதல்.

ஸமஸ்த் ராஜோபசாராந் ஸமர்பயாமி :

8. கிருஷ்ணார்பணம் : கடைசி முறையாக வணங்குதல்.

அனைத்து பூஜைகளும் முடிந்த பிறகு தலைமை மதகுரு வால் தெய்வத்தை கையிலெடுத்து வந்து தரிசனத்திற்காக பக்தர்களுக்கு முன் காண்பிப்பார்.

தோத்திரம் 28. காண்டம் VIII.

ஸ்ரீ இராகவேந்திர தோத்திரத்தின் 28 வது தோத்திரம் காண்டம் VIII த்தை படிக்கும்போது நம் உடல் பக்திப் பரவசத்தால் புல்லரிக்கச் செய்கிறது. ஸ்ரீ ராமநவமி தினத் தன்று ஸ்ரீ இராகவேந்திர சுவாமிகள் அவருடைய அபிமான கடவுளாகிய ஸ்ரீ மூலராம விஹரகத்திற்கு பால், தயிர், நெய், தேன், வாழைபழம் ஆகியவைகள் கலந்த பஞ்சாமிர் தத்தால் அபிஷேகம் செய்தார்.



A. M. KARADI & SONS

Book Seller Station Road, HUBLI